ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மேதை

தொகுதி - 2

பாபநாசம் குறள்பித்தன்

இவ்வொரு நாளும் இவ்வொரு மேதை...

(இரண்டாம் தொகுதி)

தமிழக அரசின் விருதுபெற்ற எழுத்தாளர்

பாபநாசம் குறள்பித்தன்

ஜோதி புத்தக நிலையம்

9A, மேக்மில்லன் காலனி,
நங்கநல்லூர், சென்னை - 600 061.
☎ 22245253

நூல் குறிப்பு

நூலின் தலைப்பு:	ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மேதை தொகுதி-2
நூலாசிரியர்	பாபநாசம் குறள்பித்தன்
நூலுரிமை	ஆசிரியருக்கே.
வெளியீடு	முதல் பதிப்பு - 2006
விலை	ரூ.90.00
நூல் அளவு	டெம்மி
பக்கங்கள்	192 பக்கங்கள்
எழுத்து	12 புள்ளிகள்
ஒளி அச்சு	குகன் கம்ப்யூட்டர்ஸ், சென்னை-78 (94442 92899)
ஓவியம்	ஓவியர் இராஜா
அச்சிட்டோர்	அம்சா ஆப்செட், சென்னை.
வெளியீடு	**ஜோதி புத்தக நிலையம்** 9A, மேக்மில்லன் காலனி, நங்கநல்லூர், சென்னை - 600 061. ☎ 22245253

என்னுரையாக...

இந்நூலிற்கான தேடலின்போது...
சிலரைப் பார்த்தேன்; சிலரைப் படித்தேன்;
சிலரைப் பகுத்தேன்; சிலரை வகுத்தேன்;
சிலர் வழி நடக்க நினைத்தேன்...!

சிலர் கவிதையாக இனித்தார்கள்;
சிலர் புதையலாக கிடைத்தார்கள்;
சிலர் விதையாகச் சேர்ந்தார்கள்;
சிலர் என்னுள் விளைந்தார்கள்!

சிலர் கைதொழ வைத்தார்கள்;
சிலர் விழிகசிய செய்தார்கள்;
பலர் இதயத்தில் நிலைத்தார்கள்;
நின்றார்கள்...!



அப்படி இனித்தவர்களை;
கிடைத்தவர்களை;
என்னுள் நின்று நிலைத்தவர்களை எல்லாம்
இந்நூலிலே பதியன் போட்டிருக்கிறேன்;
பதிவு செய்திருக்கிறேன்...

இது ஒரு காலக் கண்ணாடி -
எல்லோரும் முகம் பார்க்கலாம்...
இது ஒரு வழிகாட்டி -
எல்லோரும் இதன்வழி நடக்கலாம்...!

இது ஒரு தொகுப்பு நூல் என்றாலும்
கடினமான உழைப்பு நூல்...!
படிப்பவர் உணரலாம்!

ஒரு துளி தேனிற்காக
ஒரு நூறு மைல் பயணிக்கும்
தேனீயின் தேடலில் எழுந்த
தேன்கூடு இது...!

நான்...
பல ஆண்டுகளாய்
பாதுகாத்த செய்திகள்;
பலரது படைப்புகளின் வழியே
எடுத்த குறிப்புகள்...
இந்நூலிற்காக பல நூறு

நூல்களின் தேடலில்
கிடைத்த விபரங்கள்...
எல்லாமும் இங்கே... இங்கே...
இடம் பிடித்துள்ளன!

பதிப்பாளர்; பாவலர்;
திரு.பெ.மயிலவேலன்
என் நன்றிக்குரியவர்!

திண்டுக்கல்லில் உள்ள
தன்னார்வத் தொண்டு நிறுவனமான
'அமைதி அறக்கட்டளை'க்கும்

எனது முயற்சியிலும்
வளர்ச்சியிலும்
மலர்ச்சியிலும்
மகிழ்வு பெறுகின்ற...
ஏழை எளியவர்களுக்கு - சென்னையில்
இலவச ஆம்புலன்ஸ்
சேவை செய்துவரும்
திரு.டாக்டர் பி.ஆர்.எம்.எம்.
சாந்தகுமார் லலிதா
தம்பதியினருக்கும்
இந்நூலை காணிக்கையாக்கி
மகிழ்கிறேன்!

எப்போதும் போல்
எனது எழுத்திற்கும்
இதயத்திற்கும்
துணை நிற்கின்ற - என் உயிர்
துணைவியார்
நீலா கண்ணனுக்கு - என்
வாழ்த்தும், வணக்கமும்!

நட்புடன்,
குறள்பித்தன்.

13/1, 2-வது குறுக்குச் சந்து,
வெள்ளாளர் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
செல்: 94444 54335.

பொருளடக்கம்

ஜூலை

1. தாய்மை 9
2. காதற்கீதங்கள் 10
3. 'த டிரயல்' 11
4. வீரர் கரிபால்டி 12
5. பெண்ணுரிமை 13
6. எண்டிமியன் 14
7. 'காதல்' ஆசிரியர் 15
8. ஓர் உதவி 16
9. ராவ்பகதூர் 17
10. இதழியல் 18
11. நாவலர் 19
12. பொதுப்பாடல் 20
13. சகோதரர் ஜீரோவின் வழக்கு 21
14. மஸ்கட் குடும்பம் 22
15. கர்ம வீரர் 23
16. இசை 24
17. நேற்று முந்தின நாளை' 25
18. தனித்தமிழ் தவப்புதல்வர் 26
19. ஓவிய மன்னன் 27
20. காதல் பாடல்கள் 28
21. வேட்டையாடும் எழுத்தாளர் 29
22. கவியின் கனவு 30
23. பாலகங்கா 31
24. லக்கி-பீர் 32
25. கூட்டமும் ஆற்றலும் 33
26. நயமான நாடகாசிரியர் 34
27. 'ரைம்ஸ்' 35
28. பிரமானந்தரெட்டி 36
29. இருளில் ஒரு நகரம் 37
30. ஃபோர்டு கார்! 38
31. மகாமதி 39

ஆகஸ்டு

1. பிரிகேடி 40
2. பி.சி.ராய் 41
3. 10 வயதிலேயே 42
4. படிக்காத மேதை 43
5. முப்பதாயிரம் 44
6. பென்சிலின்! 45
7. எ வேல்டு வியூ ஆப் ரேஸ் 46
8. புத்த சரிதம் 47
9. நூலக தந்தை 48
10. கூவர் 49
11. மாபெரும் தலைவர் 50
12. அடுத்தவரின் கூடு 51
13. வண்ணத்தொலைக் காட்சி 52
14. சாரளங்கள் 53
15. புரட்சி எழுத்தாளர் 54
16. இளைஞர் சங்கம் 55
17. 5-10 அடி 56
18. பூகோளம் 57
19. கரண்டு மாதிரி 58
20. கிரேக்கப் பாடல்கள் 59
21. சுமைதாங்கி 60
22. மோட்சப்பயணம் 61
23. சிவஞான போதம் 62
24. தேசியப் பேராசிரியர் 63
25. இசைமேதை 64
26. அன்பாலயம் 65
27. வசந்தமும் பின்பனியும் 66

28. தம்பி... 67
29. முதல் பெண் மருத்துவர் 68
30. நேரம் வந்துவிட்டது 69
31. மூளை வளர்ச்சி 70

செப்டம்பர்

1. 12 வயதினிலே 71
2. அணுகுண்டு 72
3. சுந்தர்சிங் 73
4. இந்தியாவின் குரல் 74
5. தத்துவமேதை 75
6. வாயுமண்டல... 76
7. வீராங்கனை 77
8. ஆன்மிக மருத்துவர் 78
9. ஹென்றி 79
10. வரைபடக்கலைஞர் 80
11. கொள்ளைக்காரனாக... 81
12. யாழ்ப்பாணம் அறிஞர் 82
13. போர்ப்படை 83
14. நரம்பு மண்டலம் 84
15. பேரறிஞர் 85
16. கோடை இரவில் மக்கள் 86
17. பூணூலைத் துறந்தார் 87
18. அகராதி 88
19. பித்தளைப் பட்டாம்பூச்சி 89
20. பாட்டும் - பரிசும் 90
21. கால இயந்திரம் 91
22. 'பசிகோவிந்தம்' 92
23. குயில் தவறாகப் பாடுகிறது 93
24. பழனிக்குமார் 94
25. உடுமலை கவி 95
26. 'வேஸ்ட் லேண்டு' 96
27. தினத்தந்தி 97
28. தொழில்மேதை 98
29. அணுஆய்வு 99
30. பாரசீகக்கல்வி 100

அக்டோபர்

1. கொடியேற்றிய பெண் 101
2. உறுதி! 102
3. சிங்கம்... 103
4. திருப்பூர் வீரர் 104
5. அருட்பெருஞ்சோதி 105
6. சாகா 106
7. புரட்சி! 107
8. உழைப்பே உயர்வு 108
9. புகலிடம்... 109
10. நெமிரி 110
11. 'சித்தாந்த சங்கிரகம்' 111
12. நாட்குறிப்பு 112
13. நேக்கட் ப்ரே... 113
14. சிவா 114
15. மன்னித்துவிடுங்கள் 115
16. மனிதக்குரங்கு... 116
17. விண்மீன் 117

18. சிரிப்பு 118
19. அவர் மகாகவி 119
20. சாட்விக் 120
21. மாமனிதர் 121
22. உலகின் விளிம்பில் 122
23. இலக்கிய மலர்கள் 123
24. மித்ரா 124
25. காந்திமகான் கதை 125
26. ஐயர் 126
27. கடலாய்வு 127
28. நிவேதிதை 128
29. கீட்ஸ் 129
30. பசும்பொன் 130
31. இரும்பு மனிதர் 131

நவம்பர்

1. 8 வயதிலேயே 132
2. முதல் கவிதை 133
3. தமிழ்த்தொண்டு 134
4. காந்தி படம் 135
5. குருநானக் 136
6. களஞ்சியம் 137
7. பொதுநலம் 138
8. தமிழ் இலத்தின் அகராதி139
9. தகவல் 140
10. முத்தமிழ்க்காவலர் 141
11. இறைபணி 142
12. பறவை மனிதர் 143
13. நீண்டநாள் வாழ... 144
14. குழந்தை மாமா 145
15. விடிவுக்கு முன் 146
16. 'பென்குவின்' 147
17. தமிழ்நாடு டாக்கிஸ் 148
18. பெண்களும் யோகா... 149
19. மீள்வது 150
20. திப்பு 151
21. பாட்டுப்பறவை 152
22. காதலரின் முயற்சி 153
23. உவமைக்கவிஞர் 154
24. நிரந்தர உலகம்! 155
25. முன்னோடி 156
26. குளிர்சாதனம் 157
27. ரோல்ஸ்-ராய்ஸ் 158
28. திறனாய்வு மேதை 159
29. இசையும் பசியும் 160
30. முன்பே தெரியும் 161

டிசம்பர்

1. சாமி சிதம்பரனார் 162
2. காகிதம் 163
3. என் வரலாறு 164
4. வெப்பமானது... 165
5. டிஸ்னிலேண்டு 166
6. ருக்மணி லட்சுமிபதி 167
7. மனிதரும் மிருகமும் 168

8. நாம் இந்த பூமியை நேசிக்கிறோம் 169
9. விண்ணக நீக்கம் 170
10. உடம்பெல்லாம் மூளை 171
11. இளைத்தல் நிகழ்ச்சி 172
12. குழந்தைகள் 173
13. மனைவிக்கு... 174
14. 'சேனம்' 175
15. வீரரும் தீரரும் 176
16. 11 வயதிலேயே 177
17. சிரிக்க வைக்கும் வாயு 178
18. 'ஹவுண்டு ஆஃப் ஹெவன் 179
19. ஒலி அலையின் நீளம் 180
20. பெரிய தோட்டம் 181
21. நையாண்டிக்காரன் 182
22. மனைவியும் தெய்வம் 183
23. பாதாளத்தில் ஒரு விளங்கு 184
24. நேதாஜி பாராட்டியவர் 185
25. வால் நட்சத்திரம்... 186
26. இரங்கற்பா... 187
27. நாயும் நோயும் 188
28. நாட்டின் முன்னேற்றம் 189
29. உருகாத... 190
30. ஒளியிழந்த விளக்கு 191
31. உடலும் உண்மையும் 192

ஜூலை-1 தாய்மை



நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு மகப்பேறு மருத்துவம் இன்றைய வளர்ச்சி யில் இல்லை. மகப்பேறு அடைந்த பெண்கள் பிரசவ ஜன்னி நோய்க்கு ஆளாகி இறக்கும் நிலையில் அதிகம் இருந்தார்கள். இந்த நிலையில் தன்னுயிரைக் கொடுத்து மாற்றியமைத்த பெருமைக் குரியவர் செமல்வியிஸ் என்ற மருத்துவர் தான். இவர், 1844-இல் வியன்னா பல்கலைக் கழகத்தில் மகப்பேறு மருத்துவத்தில் பட்டம் பெற்றார்.

அங்கே மகப்பேறுக்கு வரும் பெண்களில் பலர் பிரசவ ஜன்னி நோய்க்கு உள்ளாகி இறந்து கொண்டு இருந்ததைக் கண்டார் இவர். ஏன், இவர்கள் இந்த நிலைக்கு ஆளாகிறார்கள்? என்று தன் மேலாளரைக் கேட்டார். அதற்கு அவர், 'விண்வெளிச் சார்ந்த, காற்றுமண்டலம் சார்ந்த, நிலஞ்சார்ந்த மாற்றங்களால் இந்நோய் வருகிறது…'' என்று பொறுப்பற்றத் தன்மையில் கூறினார். காரணம் அதுமட்டுமல்ல என்பதில் செமல்வியிஸ் உறுதியாக இருந்தார். அவர் சொல்லியதை ஏற்க மறுத்தார். இவர் கவலைப்பட வில்லை. பெண்களின் பேறுகாலம் வேதனையின்றி அமையவும், பிரசவ ஜன்னி யிலிருந்து அவர்களைக் காக்க வேண்டி ஆய்வில் ஈடுபட்டார். மருத்துவமனைகளில் ஜன்னிநோய் கண்டு இறப்புப் பரிசோதனைக்குப் பின்னரும் நோயாளிகளைத் தொட்டுப் பரிசோதனை செய்த பின்னரும் தங்கள் கைகளையும் உடை களையும் கருவிகளையும் நுண்ணுயிர்க் கொல்லி கொண்டு தூய்மை செய்ததில்லை.

மகப்பேறு காய்ச்சலால் இறந்த ஒருவரின் உடலிலிருந்து சீழ் கலந்த குருதியை எடுத்து தன் உடலினுள் செலுத்திக் கொண்டார். பிரசவ ஜன்னி என்னும் நோய் தன்னைத் தாக்கிக் கொண்டு வருவதை தன்னோடு இருந்தவர்களுக்கு விளக்கிக் காட்டினார். சாவு தன்னைச் சாகடித்துக் கொண்டு வரும் ஒவ்வொரு நிலையையும் அவர்களுக்கு விளக்கினார். பிரசவ ஜன்னி சாவினை ஒழிக்கச் சென்றவரை அச்சாவு சாகடித்தது. செமல்வியிஸுக்கும் பிரசவ ஜன்னி என்ற மகப்பேறு, காய்ச்சல் நோய்க்கும் நடந்த தொடர் போராட்டத்தில் பிரசவ ஜன்னி இவரையே கொன்று வெற்றி கொண்டது.

இந்த அறிவியல் மேதை, ஐரோப்பாவிலுள்ள கங்கேரி நாட்டில் புடா என்னும் நகரில் இன்றுதான் (01-07-1818) பிறந்தார். ☐

ஜூலை-2 காதற்கீதங்கள்

ஹெர்மன் ஹெஸ்ஸி, ஜெர்மானிய நாவலாசிரியர், அவர் ஜெர்மனியில் பிறந்தபோதிலும் இளமையிலேயே சுவிட்ஸர்லாந்துக்குக் குடிபெயர்ந்தார். அங்குதான் பள்ளி படிப்பு. மீண்டும் பிறந்த மண்ணிற்கு வந்தார். அவர் தந்தை மதபோதகர் என்பதால் அவரைப்போல் ஆக எண்ணி 1890-இல் இலத்தீன் இலக்கணப் பள்ளியில் சேர்த்துவிடப் பட்டார். அது அவருக்குப் பிடிக்கவில்லைதான். இருந்தாலும், சில காலம் தந்தைக்குத் துணையாக இருந்ததோடு, புத்தகக் கடையிலும், கடிகாரக் கடையிலும் வேலை செய்தார்.

புத்தக விற்பனையாளர் பணி அவருக்குப் பிடித்திருந்த தால் 1895-இல் அப்பணியை ஏற்றார். காரணம், பல புத்தகங்கள் அவரது மனதை கவர்ந்ததுதான். நிரம்பப் படித்ததோடு அவர்களைப்போல் புகழ்பெற வேண்டும் என்றும் ஆவல் கொண்டார்.

1899-இல் முதன் முதலாக 'நள்ளிரவுக்கு ஒரு மணி நேரத்திற்கு அப்பால்' 'காதற் கீதங்கள்' என்ற த்லைப்புகளில் கவிதைத் தொகுப்புகள் வெளிவந்தன. இதையடுத்து 1901-இல் நாவல் மலர்ந்தது.

1904-இல் இரண்டாவது நாவலாக, 'பீட்டர் காம்ன்ஸிண்ட்' வெளிவந்த பின்பே இவர் பெயரும் வெளியே தெரிந்தது. நாடறிந்தவராக உயர்ந்தார். 1906-இல் 'அண்டெர்ம் ராட்' என்ற நாவல் வெளிவந்ததும், அவர் புகழ் ஐரோப்பிய நாடுகளிலும் பேசப்பட்டது. 1914-இல் வந்த 'ரோஷால்டி' அவரின் புகழை நிலைநிறுத்தியது. பல்வேறு பட்ட பரிசுகளை பெற்றதோடு, நோபல் பரிசையும் 1946-இல் பெற்றார், ஹெர்மன்.

இவர், ஜெர்மனியைச் சேர்ந்த ஊட்டன்பர்க் மாநிலத்தின், கறுப்புப்பட்டணத்தில் இன்றுதான் (02-07-1877) பிறந்தார்.

❑

அமெரிக்க நாட்டு இசையமைப்பாளர் கிறிஸ்டேர்ப்கிளக் என்பவரும் இன்றுதான் (02-07-1714) பிறந்தார்.

❑

ஸர்.வில்லியம் பிராக் என்னும் ஆங்கில நாட்டு பௌதிக விஞ்ஞானியும் இன்றுதான் (02-07-1862) பிறந்தார்.

❑

ஜூலை-3 ‘த டிரயல்’

பிரான்ஸ் கேஃப்கா என்பவர், உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர். இவர் 20-ஆம் நூற்றாண்டில் ஜெர்மனில் புகழ் பெற்றவராக இருந்தவர். இவர் சிறுகதைகளும், நாவல்களும் எழுதியிருக்கிறார். ‘த மெட்டா மாபோஃஸிஸ், ‘த டிரயல்’ இரண்டு சிறுகதைகளும் இவருக்கு பெரும் புகழினை ஈட்டித் தந்தது.

இவரது படைப்புகள் நகைச்சுவையோடு சமூதாய அவலங்களையும், மனித நேயத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவர் சட்டத்துறையில் பட்டம் பெற்றவர். பொகினயா என்ற ஊரில் இந்த எழுத்தாளர் இன்றுதான் *(03.07.1883)* பிறந்தார்.

பிரான்ஸ் கேஃப்கா என்பவர், உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர். இவர் 20-ஆம் நூற்றாண்டில் ஜெர்மனில் புகழ் பெற்றவராக இருந்தவர். இவர் சிறுகதைகளும், நாவலும் எழுதியிருக்கிறார். ‘த மெட்டா மாபோஃஸிஸ், ‘த டிரயல்’ இரண்டு சிறுகதைகளும் இவருக்கு பெரும் புகழினை ஈட்டித் தந்தது.

இவரது படைப்புகள் நகைச்சுவையோடு, சமூதாய அவலங்களையும், மனித நேயத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவர் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றவர்.

பொகினயா என்ற ஊரில் இந்த எழுத்தாளர் இன்றுதான் *(03.07.1883)* பிறந்தார்.

❑

புகழ்பெற்ற ஓவியரான ஜான் எஸ்.கோப்லே அமெரிக்காவில் இன்றுதான் *(03.07.1738)* பிறந்தார்.

❑

இராஜதந்திரியான ஹென்றிகிராட்டன் என்பவர் அயர்லாந்து நாட்டில் இன்றுதான் *(03.07.1746)* பிறந்தார்.

❑

இசைமேதை ஜார்ஜ் எம்.கோகன் என்பவர் அமெரிக்கா வில் இன்றுதான் *(03.07.1878)* பிறந்தார்.

❑

கட்டடக் கலைஞரும், புகழ்பெற்ற ஓவியருமான ராபர்ட் ஆடம் என்னும் கலைஞர் ஸ்காட்லாந்தில் இன்றுதான் *(03.07.1728)* பிறந்தார்.

❑

ஜுலை-4 வீரர் கரிபால்டு

கரிபால்டி, மன்னராட்சியை எதிர்த்து குடியரசை உருவாக்க போராடியவர். அந்த போராட்டத்தில் அவரும் அவருடைய படைகளும் ஒருமுறை மன்னரிடம் தோற்றுப் போனது. அதில் கரிபால்டியின் படைக்கு மிகுதியான பொருட்சேதமும், ஆட்சேதமும் ஏற்பட்டதோடு, உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு மிகவும் அல்லல் பட நேர்ந்தது.

எஞ்சியிருந்த போர்வீரர்களை மீண்டும் போர் பயிற்சியில் ஈடுபடுத்தி ஊக்கமளித்து, காலமும் நேரமும் பார்த்து தக்க நேரத்தில் மீண்டும் மன்னரை எதிர்த்தார். வெற்றியும் பெற்றார். நல்லாட்சியும் அமைத்தார்.

இந்த இத்தாலிய நாட்டு வீரர் கரிபால்டி மரணப் படுக்கையில் இருந்தார். ஒரு நாள் தம் படுக்கையில் இருந்தபடி, அவர் ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது திடீரென்று இரு பறவைகள் ஜன்னல் ஓரத்தில் வந்து உட்கார்ந்தன. உடனே அவைகளை விரட்ட முற்பட்ட பணியாளரிடம் கூறினார், கரிபால்டி...

''அவைகள் அங்கேயே இருக்கட்டும். அவற்றைத் துரத்தாதீர்கள். இறந்துபோன என் இரு குழந்தைகளின் ஆவிகளாக அவை இருக்கலாம். அவை என்னை அழைத்துக் கொண்டு போக வந்திருக்கலாம்... என்று கூறிய அவர், சில நிமிடங்களில் இவ்வுலகை விட்டும் பிரிந்தார்.

இந்த ஈடில்லா வீரப் பெருமகன் இத்தாலி நாட்டிலுள்ள நைஸ் என்ற ஊரில் இன்றுதான் (04-07-1807) பிறந்தார்.

❑

'தொடர்ந்து முயற்சி செய்' என்ற தாரக மந்திரம் மட்டுமே மனிதஇனத்தின் பிரச்சினையைத் தீர்க்கும்; இனியும் தீர்க்கும் என்று வாழ்க்கையில் முன்னேற விரும்புகிற ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய இந்த அரிய கருத்தைச் சொன்ன அமெரிக்காவின் 30-வது ஜனாதிபதியான கால்வின் கூலிஜும் இன்றுதான் (04.07.1872) பிறந்தார்.

❑

ஜூலை-5 பெண்ணுரிமை

மேலை நாடுகளில், சமூகப் பொருளாதாரச் சமத்துவ இயக்கங்கள் முளைத்தன. அவ்வியக்கங்கள் மூலமாக ஆண்களும் பெண்களும் போராடினர்; அவர்தம் உயிரையும் பொருளையும் கொடுத்தனர்; சிறந்தனர். அந்நிலையில் ஜெர்மனியில் தோன்றிய காரல்மார்க்சு, சமூகப் பொருளாதாரச் சமத்துவக் கொள்கைக்குப் பொதுவுடைமைப் பொருளா தாரத்தை முன்வைத்து, 'மூலதனம்' என்னும் பொருளாதாரச் சித்தாந்தத்தை நூல் வடிவில் வழங்கினார்.

அவர்தம் கொள்கையை, உழைக்கும் மக்கள் ஏற்றனர். கிளர்ச்சியும் போராட்டமும் வன்மை பெற்றன. அப்போராட் டங்களில் பங்கு கொண்டவருள் ஒருவரே, ஜெர்மனியில் பிறந்த கிளாரா செட்கின் அம்மையார்.

அவர் ஜெர்மானியப் பெண்ணுரிமை இயக்கத் தலைவி யாக இருந்து இறுதிவரை பாடுபட்டவர். அதனால், கிளாராவுக்கு இயல்பாகவே இருந்தவுணர்வு, மேலும் வலிமை பெற்றது.

கிளாரா, ஜெர்மனியில் சோசலிச இயக்கத்தில் 1870-இல் முதல் முனைப்பாக ஈடுபட்டார். மேலும், பிரான்சு, ஆஸ்திரியா, இத்தாலி முதலிய நாடுகளில் இயங்கிய சோசலிச கட்சிகளின் இயக்கங்களில் பங்கேற்றார்.

அவர் சுவிட்சர்லாந்து நாட்டில் தங்கியிருந்தார். அப்போது 'சமூக ஜனநாயகவாதி' என்ற சட்டவிரோத செய்தித்தாளுக்கு ஆசிரியராக இருந்தார்.

மகளிரின் மேம்பாட்டிற்காகவே வாழ்நாளெல்லாம் பாடுபட்ட கிளாரா, 1910-ஆம் ஆண்டு கோபன் எகன் நகரில் இரண்டாவது உலகின் பேராய மாநாடு நடந்தபோது, அம்மையார் அதில் மார்ச்சு எட்டாம் நாளை அனைத்துல மகளிர் நாளாகக் கொண்டாட வேண்டும் என்னும் அறிக் கையைத் தீர்மானமாகக் கொண்டு வந்து நிறைவேற்றினார். மார்ச்சு 8 இன்றும் மகளிர் நாளாகக் கொண்டாடப்படுகிறது என்றால், அது இவரால்தான்.

பல்வேறு பெண்ணுரிமை இயக்கங்களில் பொறுப்பேற்று செயல்பட்ட கிளாரா செட்கின் இன்றுதான் (05-07-1857) பிறந்தார்.

ஜூலை-6 எண்டிமியன்

வெர்னர் வான் ஹெய் டென்ஸ்டாம் இளமையில் மிகவும் மெலிந்து இருந்ததோடு அடிக்கடி நோய்வாய்ப்பட்டுக் கொண்டும் இருந்தார். இடமாற்றமிருந்தால் உடல்நலம் பெறும் என்று எண்ணி அவரை வெளிநாட்டுக்கு, பெற்றோர்கள் அனுப்பி வைத்தனர். அப்போது வெர்னருக்கு வயது பதினாறு.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின் தன் தாய்நாட்டிற்கு வந்த அவரின் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்பட வில்லை. ஆனால், மேல்நாட்டு பயணத்தின்போது அவருள் ஓவியக்கலையின் தாக்கம் இருந்தது. அதை அறிந்த அவர் தந்தை பாரிசுக்கு வெர்னரை அனுப்பி வைத்தார்.

அங்கு தங்கியிருந்தபோது, பிரபல சுவீடிஷ் நாடக ஆசிரியரான அகஸ்ட் ஸ்ட்ரிண்ட்பர்க் இவர் தங்கியிருந்த கோட்டைக்கு வருவார். அப்போது அவரோடு நட்பானார். வயதில் முதியவராக நாடக ஆசிரியர் இருந்தும் இருவரும் நல்ல நட்பினராக பழகினார்கள்.

அதன் பயனாய் ஓவியத்தை விட, கவிதை, மற்றும் நாடகம் சம்பந்தமான விசயங்களே அவருக்கு இப்போது பிடித்துப் போனது. 1887-இல் சுவீடன் திரும்பியது அவர் இதயம் முழுதும் கவிதைகளால் நிரம்பியது. 'அலைந்து திரிந்த அனுபவங்கள்' என்னும் கவிதைத் தொகுப்பாக அது வெளிவந்தது. இது முதல் கவிதைத் தொகுப்பு. வெர்னரின் கவிதை நயம் இலக்கியவாதிகளின் இதயத்தைத் தொட்டன.

அவரது அடுத்த படைப்பு நாவலாக வெளிவந்தது. 'எண்டிமியன்' என்னும் அந்த நாவல் 1889-இல் வெளிவந்து அவரது புகழை நீட்டியது. தேசிய பற்றோடு கூடிய சிறுகதையும் எழுதினார்.

'ஹெலிகா பிர்கித்தாஸ் பில்கிரிம்ஸ் பார்டு' என்ற இவரது நாவல் ஸ்ட்ரிண்ட்பர்க்குடன் ஒப்பிட்டு இலக்கியவாதிகள் பேசும் அளவில் உயர்ந்து நின்றார், வெர்னர். நோபல்பரிசும் பெற்றார்.

இந்த மாபெரும் கலை வித்தகர், சுவீடனிலுள்ள வாட்டர்ன் எனும் இடத்தில் இன்றுதான் (06-07-1859) பிறந்தார்.

❑

ஜூலை-7 'காதல்' ஆசிரியர்

'காதல்', 'கலைமணி' எனும் பத்திரிகைகளை நடத்திய இவர், 5 நாவல்களும், சிறுகதைகளும் எழுதி, இலக்கிய வாதியாக விளங்கிய இவரது 'அசோகன் காதலி எனும் நாவல் இந்தியாவின் ஆட்சிமொழிகளான 14 மொழிகளிலும் வானொலி மூலம் ஒலிபரப்பானது.

இவர் எழுதிய மிகப்பெரிய 'வீரபாண்டியன் மனைவி' எனும் மூன்று பாகங்களைக் கொண்ட நாவல் தமிழகத்தில் 10 ஆண்டுகள் தொடர்கதையாக வெளிவந்து சாதனை படைத்தது.

தனது பிரேமா பதிப்பகத்தின் மூலம் எண்ணற்ற தரமான நூல்களை வெளியிட்டுள்ளார். இவர் வடுவூர் ஆரணியாரோடு அழிந்துபோன துப்பறியும் நாவல் துறையைப் புதுப்பித்து பலரின் உதவியோடு புதுயுக்தி யோடும் 150-க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுச் சாதனைப் படைத்தார்.

விஞ்ஞான விசித்திர நாவல்களைக்கூட இவர் வெளி யிட்டார். அவர்தான் அரு.இராமநாதன்.

இவரது நிறுவனம் வெளியிட்ட சிந்தனையாளர் வரிசை, அரசியல் நூல் வரிசை, பொன்மொழிகள் வரிசை, துப்பறியும் நாவல்கள், எழுத்துத்துறையிலும், பதிப்பகத்துறையிலும் புதிய முயற்சியாகும்.

அரும்பெரும் சாதனையாளரான இவர், 1943-இல் பச்சையப்பன் கல்லூரியில் இன்டர்மீடியட் படித்தார்.

இந்த எழுத்து வேந்தர் இன்றுதான் (07-07-1924) பிறந்தார்.

❑

புகழ்பெற்ற ஓபரா இசையமைப்பாளர் ஜியான் கார்லோ மெனோட்டி என்பவரும் அமெரிக்காவில் இன்றுதான் (07-07-1917) பிறந்தார்.

❑

ஜூலை-8 ஓர் உதவி

அமெரிக்காவின் மிகப்பெரிய தொழிலதிபர்களுள் ஒருவர் ஜான்.டி.ராக்பெல்லர். இவர் பத்து கோடி பவுன்களுக்கு மேல் தர்ம செயல்களுக்கு செலவிட்ட கோடீஸ்வரர், கொடை வள்ளல்.

அவர் எவரிடத்திலும் எளிதில் ஏமாறமாட்டார். குறிப்பாகத் தம்மை அதிகமாகப் பாராட்டியும், போற்றியும் பேசுபவர்களை சிறிதும் நம்பமாட்டார்.

ஒருமுறை பொருளுதவி பெற வேண்டி அவரிடம் வந்த ஒருவர் கூறினார். ‘‘தங்களைப் பார்ப்பதற்காக இருபது மைல் நடந்து வந்திருக்கிறேன்’’ என்று.

‘‘அப்படியா?’’ என்றார் வள்ளல்.

‘‘ஆம். வழியில் சந்தித்தவர்களிடம் எல்லாம் தங்களைப் போல் தாராள மனது படைத்தவர்கள் உலகில் வேறு எவருமில்லை என்று கூறி வந்தேன்.’’

‘‘நன்றி. மிகுந்த மகிழ்ச்சி. நீங்கள் எனக்கு ஒரு உதவி செய்வீர்களா?’’ கேட்டார், ராக்பெல்லர்.

‘‘கூறுங்கள், எதைச் சொன்னாலும் செய்யக் காத்திருக்கிறேன்’’ என்றார், வந்தவர்.

‘‘அப்படி ஒன்றும் கடினமான வேலை இல்லை. தாங்கள் திரும்பிச் செல்லும்போது, ஏற்கெனவே பார்த்துப் பேசியவர் களிடமெல்லாம் நீங்கள் என்னைப் பற்றி புகழ்ந்து கூறியது தவறு என்று கூறினால் போதும்’’ என்றார், ராக்பெல்லர்.

வந்தவர் வாயடைத்துப் போனார்.

இந்தக் கொடைவள்ளல் ராக்பெல்லர் இன்றுதான் (08-07-1839) பிறந்தார்.

❑

ஆகாயக் கப்பலை ஜெப்ளின் என்று வழங்குகிறோம். இத்தகைய ஆகாயக் கப்பலைக் கண்டுபிடித்த ஜெர்மானியக் கண்டுபிடிப்பாளரான கவுன்ட் வான்ஜெப்ளின் என்பவரும் இன்றுதான் (08-07-1838) பிறந்தார்.

❑

ஜூலை-9 ராவ்பகதூர்

பேராசிரியர் சி.எஸ்.சீனிவாசாச்சாரியார், சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் படித்துவிட்டு பச்சையப்பன் கல்லூரில் சேர்ந்து 1909-இல் பி.ஏ.ஆனர்ஸ் வரலாறு பட்டம் பெற்றார்.

பள்ளியாசிரியராக பணியைத் தொடங்கிய இவர், படிப்படியாக பல கல்லூரிகளில் பேராசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றியுள்ளார்.

மேலும் அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

1941-ஆம் ஆண்டு அகில இந்திய வரலாற்றுப் பேரவையின் கருத்தரங்கம் இவரது தலையில் தான் நடந்தது.

தமிழ்நாடு பாடப் புத்தகக்குழு உறுப்பினராக 25 ஆண்டுகள் செயல்பட்டார்.

'இந்திய வரலாற்று இதழுக்கும் கல்வி விமர்சனம் எனும் இதழுக்கும் ஆசிரியராக விளங்கியுள்ளார்.

இவர் செஞ்சியின் வரலாறு, பல்லவர்களின் நிர்வாக வரலாறு, இந்திய வரலாறு, சென்னை மாநகர் வரலாறு ஆகிய நூல்கள் எழுதியுள்ளார்.

செஞ்சிக்கோட்டை பற்றிய இவரது நூல் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

கௌரவ நீதிபதி யாக இருந்துள்ள இவர் 1942-இல் ராவ்பகதூர், 1946-இல் திவான் பகதூர் பட்டமும் வழங்கி சிறப்பிக்கப் பட்டார்.

இவர் சிதம்பரத்தில் இன்றுதான் (09-07-1890) பிறந்தார்.

❑

தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்த எலியாஸ்ஹௌ என்னும் அமெரிக்கக் கண்டுபிடிப்பாளரும் இன்றுதான் (09-07-1890) பிறந்தார்.

❑

ஜூலை-10 இதழியல்

டேவிட் பிரிங்கிலி, இவர் ஒரு பத்திரிகையாளர். தொகுப்பாளர்.

இவர் இளமையில் இருந்தே எழுத்தின் மீதும் பத்திரிகை மீதும் மிகுந்த காதல் கொண்டிருந்ததால், பள்ளி நாட்களிலேயே பத்திரிகைகளுக்கு செய்திகளைத் தொகுத்து அனுப்பத் தொடங்கிவிட்டாராம்.

இதழியல் குறித்து மூன்று பல்கலைக் கழகங்களில் படித்து பட்டம் பெற்றார்.

இவர் படித்து முடித்ததும் அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்தார். 1943-இல் அங்கிருந்து விலகி, வானொலியில் செய்தி தொகுப்பாளராகவும் அதன் பின் வெள்ளை மாளிகையில் சிறப்பு செய்தி தொடர்பாளராகவும் சேர்ந்தார்.

இவர் வடக்கு கரோலினா என்ற இடத்தில் இன்றுதான் (10.7.1920) பிறந்தார்.

❑

புராட்டஸ்டண்ட் தலைவரான ஜான் கால்வின் என்பவர் அமெரிக்காவில் இன்றுதான் (10.7.1509) பிறந்தார்.

❑

புகழ்பெற்ற ஓவியரான ஜே.எ.எம்.விஸ்ட்லர் அமெரிக்காவில் இன்றுதான் (10.07.1834) பிறந்தார்.

❑

அமெரிக்க நாட்டுக் கல்வியாளரான மேரி பெதுன் என்பவர் இன்றுதான் (10.07.1875) பிறந்தார்.

❑

ஜுலை-11 நாவலர்

பச்சையப்பன் கல்லூரியில் படித்தபோது, தந்தை பெரியாரின் சுயமரியாதை கருத்துக்களில் ஈர்க்கப்பட்டு திராவிடர் கழகத்தில் சேர்ந்து பணியாற்றினார். அண்ணா 1949-இல் தி.மு.க.வைத் தோற்றுவித்தபோது அதன் துணைப் பொதுச் செயலாளராக - நாவலர் இரா.நெடுஞ்செழியன் இருந்தார். 1955 முதல் 1977 வரை தி.மு.க.வின் பொதுச் செயலாளராகவும், பொதுக்குழுவின் தலைவராகவும் இருந்தார். பிறகு எம்.ஜி.ஆர். தலைமையில் அ.தி.மு.க.வில் சேர்ந்தார். ஆறுமுறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு 25 ஆண்டுகள் தமிழக சட்டமன்றத்தில் பணியாற்றிய பழுத்த அரசியல் தலைவர் இவர். பல அமைச்சரவையில் கல்வி அமைச்சராகவும், நிதியமைச்சராகவும் இருந்திருக்கிறார்.

தமிழகத்தில் பல்கலைக் கழகங்கள் ஏற்படவும், உலகத் தமிழ் மாநாடுகள் சிறப்பாக நடைபெறவும், இவர் அமைச்சராக இருந்தபோது ஆணையிட்டார். நடமாடும் பல்கலைக் கழகம் என்று பேரறிஞர் அண்ணாவால் அழைக்கப்பட்ட நாவலருக்கு மதுரை காமராசர் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் தந்து சிறப்பித்துள்ளது. இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார்.

தியாகம், அனுபவம், அறிவுப்புலமை, நிர்வாக ஆற்றல், அரசியல் நேர்மை, பேச்சாற்றல், எழுத்தாற்றல் மிகுந்தவர் இவர். 18-நூல்கள் எழுதியுள்ளார். 18-நாடுகளுக்குச் சென்று சுற்றுப்பயணம் செய்து வந்துள்ளார்.

இந்த நடமாடும் பல்கலைக் கழகம் தஞ்சை மாவட்டம் நன்னிலம் - திருக்கண்ணபுரத்தில் இன்றுதான் (11-07-1920) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் ஆறாவது ஜனாதிபதியான ஜான்கியூ. ஆடம்ஸும் இன்றுதான் (11-07-1767) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ் பெற்ற வர்த்தகர் ஜான்வான் மேக்கர் என்பவரும் இன்றுதான் (11-07-1838) பிறந்தார்.

❑

ஜூலை-12 பொதுப்பாடல்

ஒரு ரயில்வே ஊழியரின் மகனாகப் பிறந்தார், பெருங் கவிஞர் பப்ளோ நாருடா. அவர் பத்து வயதுச் சிறுவனாக இருந்தபோதே கவிதை எழுதத் தொடங்கிவிட்டார். சிலி மாணவர் பெடரேஷன் சார்பில் நடைபெற்ற இலக்கியப் போட்டியில் கலந்து கொண்டு, 'விருந்துப் பாடல்' என்னும் தலைப்பில் ஒரு கவிதை எழுதி முதற் பரிசு பெற்றார். அவ்வெற்றியே அவரது கவிதை ஆற்றலுக்கு உரம் போட்டது. முழு மூச்சாக கவிதைப் பணியில் இறங்கினார்.

தன் படைப்புகள் புத்தக வடிவில் வெளிவந்து பலரது பாராட்டைப் பெற வேண்டும் என்ற பேராவலால், தன் சொத்தை எல்லாம் விற்று, அந்தப் பணத்தில் எழுதி வைத்திருந்த கவிதைகளை எல்லாம் தொகுத்து 1923-இல் 'மங்கியதோர் ஒளியினிலே' என்ற தலைப்பில் வெளியிட்டார்.

இந்நூல் வெளிவந்த சிறிது நாளிலேயே இலக்கிய அந்தஸ்தை அவருக்குப் பெற்றுத் தந்தது. பதிப்பாளர்கள் அவரை நோக்கி படையெடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

நாருடா இருபது வயதிலேயே பெருங்கவிஞர் என்று போற்றும் வகையில் புகழ்பெற்றார். அமெரிக்காவில் ஒரு வழக்கம் இருந்து வருகிறது. பெருங்கவிஞர்களைப் பெருமைப் படுத்தும் வகையில் அவர்களுக்கு வெளிநாட்டுத் தூதர் பதவி அளிப்பார்கள். அந்த வகையில் 1927-இல் பப்ளோ நாருடாவுக்கு தூதர் பதவி அளிக்கப் பட்டது.

அதன் தொடர்பால், பர்மா, சிலோ, டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகள், இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளிலும், அதன் பின்பு 1941-1944-இல் மெக்சிகோவிலும் நாருடா காலம் கழித்தார். அரசியலிலும் ஈடுபட்டார். அதனால் தலைமறைவாக வேண்டிய நிலையில் மெக்சிகோவுக்குச் சென்றார். அங்கு 340 கவிதைகள் கொண்ட தொகுப்பை 'பொதுப்பாடல்' எனும் பெயரில் வெளியிட்டார். உலகப் புகழ் பெற்றதோடு நோபல் பரிசும் பெற்றார்.

தென் அமெரிக்காவைச் சேர்ந்த சிலி நாட்டில் இக்கவிஞர் இன்றுதான் (12-07-1904) பிறந்தார்.

ஜூலை-13 சகோதரர் ஜீரோவின் வழக்கு

சோயிங்கா தமது பள்ளிப் படிப்பை உள்ளூரில் பயின்றார். கல்லூரிக் கல்வியை இங்கிலாந்தில் கற்றார். 1954-இல் லீட்ஸ் பல்கலைக் கழகத்தில் இலக்கியம் பயின்றார். பி.ஏ.பட்டம் பெற்றார்.

இவ்வேளையில் அவர் ஜி.வில்ஸன் நைட் என்ற புலவருடன் தொடர்பு கொண்டதால், நாடகக் கலையில் நாட்டம் ஏற்பட்டது. இதற்கிடையே எம்.ஏ.வைத் தொடர்ந்தார். இவ்வேளையில் சோயிங்காவின் எண்ணம் ஓ நீலின் நாடகத்தின் பால் ஈடுபட்டது. அதனால் அவர் நாடகங்களைத் தேடிப் படித்தார். அதனால் நாடகம் எழுதும் ஆர்வம் தோன்றியது.

'THE SWAMP DWELLERS' என்ற நாடகத்தை முதன் முதலில் எழுதினார். இதைத் தொடர்ந்து 'THE LION AND THE JEWEL' என்ற தலைப்பிலும் வெளியிட்டார். இவரது படைப்பாற்றல் இலண்டனில் பேசப்பட்டதோடு, நாடகத்துறையில் நன்கு பயன்படுத்திக் கொள்ளவும் வாசகர்கள் விரும்பினர். இதனால் இவரது எம்.ஏ.பட்டப் படிப்பு பாதியிலேயே நின்று போனது. 1958-இல் இலண்டனுக்குச் சென்று அங்குள்ள ராயல் கோர்ட் தியேட்டரில் நாடக வாசிப்பாளராக பணியில் சேர்ந்தார்.

அங்கே நாடகங்களின் நுணுக்கங்களையும், நாடகங்களை இயக்கவும், தனது நாடகங்களை அரங்கேற்றும் வாய்ப்பினைப் பெற்றார். 1960-இல் அமெச்சூர் நாடகப்பள்ளி ஒன்றைச் சொந்தமாக அமைத்தார்.

1960-இல் அரங்கேறிய சோயிங்காவின் 'சகோதரர் ஜீரோவின் வழக்கு' என்ற நாடகம் இவருக்கு உலகப் புகழைத் தந்ததோடு, 1986-இல் நோபல் பரிசையும் தந்து சிறப்பித்தது.

இந்த நாடகப் பேராசிரியர் ஆப்பிரிக்காவைச் சார்ந்த நைஜீரியா நாட்டில் இன்றுதான் (13-07-1934) பிறந்தார்.

❑

மேரி எம்மா உல்லி என்ற அமெரிக்க நாட்டுக் கல்வியாளரும் இன்றுதான் (13-07-1862) பிறந்தார்.

❑

ஆங்கிலக் கவிஞர் ஜான் கிளேர் என்பவரும் இன்றுதான் (13-07-1973) பிறந்தார்.

❑

ஜூலை-14 மஸ்கட் குடும்பம்

ஐசாக் பஷீவிஸ் சிங்கர். ஒரு மத குருவிற்கு மகனாக இருந்தபோதும், இவரது சிந்தனை மாறுபட்டிருந்தது. அரசியல் மற்றும் பொருளாதாரத்தையும் ஆழ்ந்து கற்கத் தொடங்கினார்.

அத்தோடு ரஷ்ய மொழியில் சிறந்த படைப்புகளையும் தேடிப் படித்தார். அவருடைய மூத்த சகோதரர் ஒரு நாவலாசிரியராக இருந்ததால் அவரைப்போல் தானும் எழுத்துத் துறையில் ஈடுபட வேண்டும் என்று எண்ணினார்.

அதன் பயனாய் அண்ணனின் உதவியால் 'இலக்கிய ஏடுகள்' என்ற இதழில் பிழை திருத்துவோராய் அமர்த்தப் பெற்றார், ஐசாக். அங்கே அவரது இலக்கிய பசிக்கு ஏராளமான செய்திகள் கிடைத்தன. தான் பணியாற்றிய பத்திரிகை யிலேயே சிறுகதைகள் எழுதி, எழுத்துத்துறையில் காலடி எடுத்து வைத்தார். கதைகள் வாசகர்கள் இடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

அதனால் உற்சாகமடைந்த ஐசாக், 1927-இல் எழுதிய முதல் கதையான 'முதிய பருவத்தில்' எனும் கதையோடு, தொடர்ந்து, அடுத்த ஆண்டில் "மங்கையர்" என்ற சிறுகதையும் எழுதினார், ஐசாக். பரபரப்பாகி நிறைய எழுதினார்.

வாசகர் இடையே பெயர் பெற்றார். அதனால் அமெரிக்கா விலுள்ள பிரபல யூத நாளிதழில் அழைப்பு வரவே அங்கு சென்று பணியேற்றார்.

அதில் பல்வேறு படைப்புகளை எழுதிக் குவித்தார். ஒரு தொடர் நாவலையும் அதில் எழுதினார். அத்தொடர் 'கோரேயில் சாத்தான்' என்ற தலைப்பில் 1934-இல் நாவலாக வெளிவந்து, அவரது படைப்பாற்றலை பறைசாற்றி நின்றது.

1937-இல் 'மெஸியா தி சின்னர்' வெளியானது. இவரது மிகச்சிறந்த நாவலான 'மஸ்கட் குடும்பம்' எனும் நாவல் - 1945-இல் வெளியாக அவரை உலகப்புகழ் எழுத்து வேந்தராக்கியது. 1978-இல் நோபல் பரிசும் கிடைத்தது.

ஐசாக், போலந்தில் பிறந்து, அமெரிக்க குடிமகனாக வாழ்ந்த இந்த அறிஞர், இன்று தான் (14-07-1904) பிறந்தார்.

ஜூலை-15 கர்ம வீரர்

எட்டயபுரத்தில் இலவச மதிய உணவுத் திட்டத் துவக்கம். எட்டயபுரம் அரசர் முன்னிலையில் கர்ம வீரர் காமராசர் பார் போற்றும் அத்திட்டத்தைத் துவக்கப் போய்க் கொண்டிருந்தார்.

அப்போது அவருடன் சென்றவர்களில் ஒருவர்,

''மதிய உணவுத் திட்டத்திற்கு நம் நிதி நிலை சரியாக வருமா? பல இலட்சம் குழந்தைகளுக்கு சோறு போட முடியுமா...?'' என்று கேட்டார்.

அதற்கு, அன்றைய முதலமைச்சராக இருந்த காமராசர் சொன்ன பதில் அங்கு கூடியிருந்த அரசு அதிகாரிகளை வியப்பில் ஆழ்த்திவிட்டது.

காமராசர் அப்படி என்ன சொன்னார்? அவர் சொன்னது இதுதான்...

''பிள்ளைப்பசி கொள்ளித்தேள்' என்பார்கள். தேளை வைத்திலே வைத்துக்கொண்டு எப்படி படிப்பது? சோறு போடு, கல்வி தானாக வரும். இலவச மதிய உணவுத் திட்டமே காந்தி கண்ட வழி.

நம் ஏழைப் பிள்ளைகள் கல்வி ஏணியில் ஏற நாம் கை கொடுக்க வேண்டும். இத்திட்டம் தேவையா, இதற்கு பணம் இருக்கிறதா என மேட்டுக்குடி மக்கள் நிச்சயம் கேட்பார்கள்.

அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்... நான் இந்தத் திட்டத்தை யார் எதைச் சொன்னாலும் கைவிடப் போவதில்லை.

நாட்டு மக்களிடம் வீடு வீடாகச் சென்று கையேந்தி பிச்சைக் கேட்டாவது நிதி பெற்று இத்திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி ஏழை மாணவர்களுக்கு மதிய உணவு தந்தே தீருவேன்...'' என்றார்.

அந்த கர்மவீரர் இன்றுதான் (**15-07-1903**) பிறந்தார்.

ஜூலை-16 இசை

இசை, செவிக்குணவு என்பதை நாம் அறிவோம். அது மட்டும்தானா இசையின் பயன்...? அதற்கு மேலும் அது மனிதருக்கு உதவுகிறது.

அமெரிக்காவில் வாழ்ந்த பெண்டர் என்னும் மருத்துவர் பலநூறு குழந்தைகளின் நோய்களைப் போக்கப் பயன் படுத்திய மருந்து இசை.

எர்டுமால் என்னும் அமெரிக்க மருத்துவர் மயக்க மருந்திற்குப் பதிலாக இன்னிசை ஒலிகளை நோயாளி கேட்டு இன்புற்றிருக்கச் செய்து அந்த நேரத்தில் கட்டிகளை அறுத்து சிகிச்சை செய்வாராம்.

பிரெஞ்சு அறிவியல் மேதையான வில்லியம் வால் என்பவரோ உடல் நோய்களை மட்டுமல்ல; உள்ள நோய்களையும் சில காலம் இசை கேட்கச் செய்வதன் மூலம் நல்ல மன நிலைக்குக் கொண்டு வரலாம் என்று நிரூபித்திருக்கிறார்.

இந்த அறிவியல் மேதை பிரெஞ்சு நாட்டில் இன்றுதான் **(16.07.1816)** பிறந்தார்.

❑

அருணா ஆசாப் சமூக சேவகி. டில்லியின் முதல் மேயர். 19-வயதில் தன்னைவிட 20-வயது மூத்தவரான ஆசாப் அலியை பலத்த எதிர்ப்புக்கிடையே திருமணம் செய்து கொண்டார். இவர் இன்று தான் **(16-07-1909)** பிறந்தார்.

❑

நார்வே நாட்டு ஆய்வுப் பயண வீரரான அமுட்சன் என்பவரும் இன்றுதான் **(16-07-1872)** பிறந்தார்.

❑

ஜுலை-17 'நேற்று முந்தின நாளை'

எஸ்.ஒய்.அக்னானின் இயற்பெயர் சாமுவேல் யூசுப் ஜாக்கஸ் என்பதாகும். அக்னான் என்பது புனைப்பெயர். இவர் யூத குடும்பத்தில் பிறந்தவராகையால் ஹீப்ரு மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார்.

அக்னான் இளமையில் இருந்தே இலக்கிய ஆர்வளராக இருந்தார். தமது பதினைந்தாவது வயதில் உள்ளூரில் வெளிவந்த இதழ் ஒன்றில் கவிதை எழுதி வந்தார்.

முதல் கவிதை வெளிவந்தபோது சுற்று வட்டாரத்தில் இவர் பெயர் பேசப்பட்டது. அதன் பிறகு லூவாவிலிருந்து வெளிவந்த செய்தித்தாளில் பணியில் சேர்ந்தார்.

'அகுனாட்' எனும் பெயரில் அவர் எழுதிய நாவல் ஒன்று 1908-இல் வெளிவந்தது. இந்நாவல் நாடு முழுதும் பேசப்பட்டது. இந்நாவல் அக்னானுக்கு 'சிறந்த படைப்பாளர்' என்ற பெயரினைத் தட்டித் தந்தது.

1912-இல் அக்னான் ஜெர்மனிக்குச் சென்று பெர்லினில் இலக்கிய ஆய்வில் ஈடுபட்டார்.

ஹீப்ரு மொழியில் வல்லுனராக இருந்ததால் அங்கிருந்த கல்லூரியில் பேராசிரியர் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றார்.

பன்னிரண்டு ஆண்டுகள் பெர்லினில் தங்கியிருந்தபோது, அவருடைய பல படைப்புகள் வெளிவந்ததால் அக்னானின் புகழ் யூதர் வாழும் நாடுகளில் பரவியது.

இருந்தாலும் அவர் புகழ் உலகில் பரவிது 1920-இல் தான். அப்போதுதான் அவரின் எழுத்தோவியமான 'மணமகளின் அலங்காரப் படுக்கை' வெளிவந்தது. அந்த மாபெரும் படைப்பு பொருளோடு புகழையும் ஈட்டித் தந்தது. அத்தோடு, 'இரவு விருந்தாளி'யும், 'நேற்று முந்தின நாளை'யும் சேர்த்துக் கொள்ளலாம்.

இவர், இன்றைய போலந்தின் ஒரு பகுதியான கலீஸியாவிலுள்ள பக்ஜாக்ஸ் எனும் நகரில் இன்றுதான் (17-07-1888) பிறந்தார்.

☐

ஜூலை-18 தனித்தமிழ் தவப்புதல்வர்

செந்த மொழியாம் செந்தமிழ் மொழியை அந்நிய மொழிகளின்றி அருமையாக கைக்கொண்டு பேசலாம் எழுதலாம் என்பதற்காக - தன் வாழ்நாளெல்லாம் எழுத்தாலும் பேச்சாலும் தூயத் தமிழுக்காக தொண்டாற்றியவர், மறைமலை அடிகளார்.

இவர் படித்தது, நாகை வெஸ்லியன் மிஷன் பள்ளியில். அவ்வேளையில் புத்தகக்கடை வெ.நாராயணசாமி பிள்ளை யிடம் இலக்கண இலக்கியங்களை பழுதறக் கற்றுத் தேர்ந்தார்.

அப்போதே முருகவேள் என்ற புனை பெயரில் எழுதத் தொடங்கினார்.

சூளை சோமசுந்தர நாயகரின் தொடர்பும், மனோன் மணியம் பி.சுந்தரம்பிள்ளை தொடர்பும் இவரது மொழி யுணர்வையும், இலக்கியத் தூண்டுதலையும் வளர்த்தன.

1893-இல் தமிழாசிரியர் பணியில் திருவனந்தபுரத்தில் சேர்ந்தார். பின்னர் - 1898-இல் சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக பொறுப்பேற்றார்.

அங்கும் இவரது அறிவுத் தேடலுக்கு பரிதிமாற் கலைஞர் கிடைத்தார். மேலும் அவருள் தனித்தமிழ் ஆர்வமும், உற்சாகமும் தோன்றியது. வேதாச்சலம் - மறைமலையனார்.

ஞானசாகரம் மாத இதழை (1902) தோற்றுவித்ததோடு, சைவ சித்தாந்த மகா சமாஜத்தையும் ஏற்படுத்தினார்.

1911-இல் பணியிலிருந்து விலகி, துறவு கொண்டார். இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்கு 1939-இல் தலைமை தாங்கினார்.

திருக்குறள், திருவாசகம் போல சில இலக்கியங்களுக்கும் உரை எழுதினார்.

வாழ்நாள் முழுதும் தனித்தமிழ் சிறந்தோங்க பாடுபட்ட மறைமலையார் தமது 75-ஆவது வயதில் இயற்கை எய்தினார்.

இந்த தனித்தமிழ் தவப் புதல்வர், தஞ்சை மாவட்டம் - காடம்பாடி என்னும் கிராமத்தில் இன்றுதான் (18-07-1876) பிறந்தார்.

❑

ஜூலை-19 ஓவிய மன்னன்

ஈகர் புகாஸ் - இவர் புகழ்பெற்ற ஓவியக்கலைஞர். பலதரப்பட்ட வாழ்க்கையில் இவர் பயணம் செய்து இருக்கிறார். அதனால், வாழ்வு முறை குறித்து அனுபவங்களை நிரம்பப் பெற்றார்.

அந்த அனுபவங்கள் தந்த பாடமே இவரது ஓவியங்களாக வெளிப்பட்டதால் மக்களின் மனங்களில் எளிதாக இடம் பெற்றார்.

இவர் நடுத்தர குடும்பத்தில் பிறந்தவர். *11*-வயதில் இவர் கலைப் பள்ளிக்குச் செல்கிறார். அப்போது இருந்தே இவர் தூரிகையைப் பிடிக்கத் தொடங்கிவிட்டார்.

அந்தக் காலத்தில் பணக்காரர்கள் மட்டுமே சட்டம் படிக்கின்ற நிலையிருந்தது. இவரது குடும்பத்தார் இவர் சட்டம் படிக்கவே விரும்பி சட்டக் கல்லூரியில் சேர்த்தார்கள். அவரது இதயம் ஓவியத்திலிருந்ததால், அங்கிருந்து சில நாள்களிலேயே வெளியேறி வந்துவிட்டார்.

பின்னர் யுயிஸ்லாமோத் என்ற ஓவியக் கலைஞரிடம் பயிற்சி பெற்று தேர்ச்சிப் பெற்றார்.

இவர் நவின ஓவியங்களை வரைந்ததோடு, பழங்கால ஓவியங்களையும் பின்பற்றி வரைந்ததால் இவர் உலகப்புகழ் பெற்றார்.

இந்த ஓவியக் கலைஞர் பாரிஸ் நகரில் இன்றுதான் *(19.07.1834)* பிறந்தார்.

❑

துப்பாக்கியைக் கண்டுபிடித்தவர்களுள் ஒருவரான சாமுவேல் கோல்ட் என்னும் அமெரிக்கக் கண்டபிடிப்பாளரும் இன்றுதான் *(19.07.1814)* பிறந்தார்.

❑

புகழ்பெற்ற ஓவியரான எட்கார்டெகாஸ் என்பவர் பிரெஞ்சு நாட்டில் இன்றுதான் *(19.07.1834)* பிறந்தார்.

❑

ஜூலை-20 காதல் பாடல்கள்

எரிக்காரல் பெல்ட், படிக்கும் காலத்திலேயே அவரது தந்தை இறந்துவிட்ட போதிலும், கல்லூரிப் படிப்பை நிறுத்தி விடாமல் ஆசிரியர் பணியை செய்து கொண்டே 1902-இல் பட்டம் பெற்றார்.

ஓராண்டு காலம் ஆசிரியர் பணி ஆற்றிய பின், ஸ்டாக் ஹோம் விவசாய அகாதமியின் நூலகராகப் பணியேற்றார்.

இளமையிலேயே கவிதை எழுதும் ஆற்றலை ஏரிக் பெற்றிருந்ததால், ஏழ்மையிலும் அவருக்குத் துணையாய் - நம்பிக்கையாய் இருந்தது கவிதையே என்று சொன்னால் மிகையன்று.

அவ்வேளையில் அவர் எண்ணற்ற கவிதைகளை எழுதிக் குவித்தார். 1895-இல் எரிக்கின் முதல் கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. 'வனாந்திரம் - காதல்' பாடல்கள்' என்ற தலைப்பில் வந்த நூலால் அவரின் ஆற்றல் போற்றப் பட்டது.

அத்தொகுப்பில் சுவிடனின் இயற்கை எழிலும், விவசாயி களின் வியர்வையும் நிறைந்திருந்ததால் மக்கள் மனங்களில் எல்லாம் அரங்கேறியது.

1898-இல் இரண்டாவது படைப்பாக 'பிரைதோலின் கீதங்கள்' வெளிப்பட்டது. 1901-இல் 'பிரைதோலின் இன்பத் தோட்டம்' கண் விழித்தது.

எரிக் கவிதைச் சிறப்பு என்ன வெனில், படைப்புகளில் தன்னை பாத்திரமாக்கிக் கொண்டு, அவரே கூறுவது போல கூறுவதுதான். அக்கலையில் அவர் சிறந்து விளங்கினார்.

1931-ஆம் ஆண்டில் சுவீடிஷ் அகாதமியின் உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது எரிக்கின் கவிதையாற்ற லுக்குக் கிடைத்த மரியாதையாகும். 1907-இல் அவருக்கு நோபல் பரிசும் கிடைத்தது.

இந்த எழுச்சிமிக்கக் கவிஞர், மத்திய சுவீடனைச் சேர்ந்த டெலிகாரிலியா என்ற சிற்றூரில் இன்றுதான் (20-07-1864) பிறந்தார்.

□

ஜூலை-21 வேட்டையாடும் எழுத்தாளர்

எர்னெஸ்ட் ஹெமிங்வே - இவர் பத்திகையாளராகவும், சிறுகதை எழுத்தாளராகவும் நாவலாசிரியராகவும் இருந்தார். இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

இவர் தந்தை மருத்துவராகவும், தாய் இசை மேதை யாகவும் இருந்தார்கள்.

ஹெமிங்கே, செல்வச் செழிப்பான குடும்பத்திலேயே பிறந்தார்.

ஓய்வு நேரங்களில் தந்தையோடு சேர்ந்து கொண்டு காட்டிற்குச் சென்று வேட்டையாடுவதில் விருப்பம் கொண்டவராக இந்த எழுத்தாளர் இருந்திருக்கிறார்.

ரிவர் பாரஸ்ட், ஒக் பார்க்' என்று இரு பள்ளிகளில் படித்தார்.

பள்ளி நாட்களில் எல்லா விளையாட்டுகளிலும் முதன்மை பெற்றதோடு, கால்பந்து விளையாட்டில் பெரும் ஆர்வம் கொண்டு இருந்திருக்கிறார். படிப்பிலும் முதல் நிலையிலேயே இருந்திருக்கிறார்.

1917-இல் இவர் 'கேன்ஸ்சாய் சிட்டிஸ்டார்' என்ற இலக்கிய பத்திரிகையை நடத்தினார்.

பொதுநலத்தில் ஈடுபாடு என்றுமே கொண்ட இவர் செஞ்சிலுவை சங்கத்தில் இணைந்து தொண்டும் செய்தார்.

இவர் ஆப்பிரிக்க நாட்டு மக்களைக் கருப்பொருளாக வைத்து எழுதிய சிறுகதை தொகுப்பு இவரை உலகப் புகழ்பெற வைத்தது.

நோபல் பரிசையும் இந்த நாவலாசிரியர் பெற்றிருக்கிறார்.

சிக்காகோவிலுள்ள இலிநாய்ஸ் என்ற ஊரில் இந்த எழுத்தாளர் இன்றுதான் (21.07.1899) பிறந்தார்.

ஜூலை-22 கவியின் கனவு

கவிஞர் எஸ்.டி.சுந்தரம், பல்வேறு சிறப்புகள் பெற்றவர்... விடுதலை வீரர், எழுத்தாளர்; பத்திரிகையாளர்; நாடகாசிரியர். திரைப்படப் பாடலாசிரியர்; வசனகர்த்தா, நடிகர். இதற்கெல்லாம் மேலாக நல்ல தமிழ்கற்ற பண்பாளர்.

சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்த இவர், சாத்தூரில் எட்டாவது வரை படித்தவர்... 1940-இல் திருவையாறு அரசு கல்லூரியில் தமிழ் கற்றார். 1942-இல் விடுதலைப் போரில் ஈடுபட்டார். சிறை சென்றார். சிறை வாழ்வில் கண்டதுதான் இவரது நாடகமான 'கவியின் கனவு.' இந்த நாடகமே இவரை புகழின் உச்சிக்கே கொண்டு சென்றது என்பதற்கு உதாரண மாக, இந்த நாடகம் 25-வாரங்கள் நடத்தப்பட்டதையும், தஞ்சையிலிருந்து தனி இரயில் விடப்பட்டதையும் கூறலாம்.

''காலமென்னும் சிற்பி செய்யும் கவிதைத் தாய்க் கோயிலடா'' - 'மனிதனும் மிருகமும்' திரைப்படத்தில் இவர் எழுதிய பாடல்தான் மேலே குறிப்பிட்டு உள்ள பாடல் வரிகள்.

'கள்வனின் காதலி'; 'கப்பலோட்டிய தமிழன்' போன்ற படங்களுக்கு வசனம் எழுதியதோடு, 'தாயுள்ளம்' 'சாரங்கதாரா' போன்ற படங்களுக்கு கதை, வசனமும் எழுதினார். சீனப் போரின்போது, 'சங்கநாதம் கேட்குது' என்கிற பிரசாரப் படத்தையும் தயாரித்தார். அக்காலத்தில் சிறப்பாகப் பேசப்பட்ட படம் இது.

இவர், இயல் இசை நாடக மன்றத் தலைவராக பல ஆண்டுகள் இருந்தார். இவர் இயற்றிய நாடகங்கள் இருபது என்றாலும், மேடை ஏறியவை ஏழு மட்டுமே. 'உலக நாடகம்', 'நடிகன் குரல்' போன்ற இரு பத்திரிகைகளை நடத்தினார். இவரின் நாடகங்களில் புகழ் பெற்றது. 'கவியின் கனவு.'

விடுதலைக் கவிஞர், தேசியக் கவிஞர், கவிதாமணி, கலைமாமணி போன்ற விருதுகளைப் பெற்றார்.

தேசிய பற்றுகொண்ட கவிஞர், வாழ்நாள் இறுதியில் காந்தியைப் பற்றியும் காமராசரைப் பற்றியும் திரைப்படம் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு எல்லா சொத்தையும் இழந்தார்.

இந்த எழுச்சிக் கவிஞர், சேலம் - ஆத்தூரில் இன்றுதான் (22-07-1924) பிறந்தார்.

❑

ஜூலை-23 பாலகங்கா

திலகருக்கு, அவர் தந்தையே வீட்டில் சமஸ்கிருதம் மற்றும் கணிதத்தைக் கற்பித்தார். பூனாவில் 'ஸிடிஸ்கூலில்' படிப்பைத் தொடர்ந்த திலகர் சமஸ்கிருதத்திலும் கணக்கிலும் மிகுந்த திறமையுடையவராய் திகழ்ந்தார். பின் பூனா டெக்கான் கல்லூரியில் சேர்ந்தார். உடற்பயிற்சியிலும், நீச்சலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

கல்லூரியில், வடமொழி இலக்கியம், மேலை நாட்டுத் தத்துவம், சோதிடம் என அவரின் அறிவுத்தேடல் படர்ந்தது.

எப்போதும் எளிமையின் சின்னமாகவே இருந்தார். 1879-இல் எல்.எல்.பி. தேர்வில் வெற்றி பெற்று தேச விடுதலைப் போரில் ஈடுபாடு கொண்டார்.

அந்நியர்களாய் உள்ள ஆங்கிலேயரிடம் வேலை செய்யக் கூடாது என்ற எண்ணத்தினால் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். ஒவ்வொருவர் வாழ்விலும் திருப்புமுனை வரும். அப்படித் தான் திலகர் வாழ்விலும் வந்தது. திருப்புமுனையாக இருந்தவர்.

'நிபந்த மாலா' ஆசிரியரும், தேசபக்தருமான எழுத்தாளர் விஷ்ணு சாஸ்திரி சிப்லூங்கர்தான். இவரின் 'நியூ இங்கிலீஸ் ஸ்கூல்' பள்ளியில் பணியாற்றிய திலகர், விடுதலைப் போரின் தாக்கத்தால், பள்ளிப் பணியை விட்டு, மராட்டிய மொழியில் 'கேசரி' என்ற இதழையும் ஆங்கிலத்தில் 'மராட்டியா' என்ற இதழையும் நண்பரின் உதவியுடன் தொடங்கி, தேசத் தொண்டைத் தொடர்ந்தார்.

தவறான செய்தியை வெளியிட்டார் என்பதற்காக ஆங்கில அரசு சிறையில் அடைத்தது.

பலமுறை சிறை சென்றார். துன்பத்தின் துணை யுடனேயே வாழ்நாள் முழுதும் இருந்தார்.

தன் செல்வம் முழுவதையும் தேசத்திற்கே அர்ப்பணித்து மகிழ்ந்தார். தனது குடும்பத்தை மறந்து தேசமே எனது குடும்பம் என உயிர் மூச்சுள்ளவரை, இந்த விடுதலை வீரர் வாழ்ந்தார்.

'கீதா ரகசியம்' என்ற உயரிய நூலை எழுதிய இந்த வீர சிங்கம் மகாராஷ்டிராவில் இன்றுதான் (23-07-1856) பிறந்தார்.

❒

ஜூலை-24 லக்கி-பீர்

ஹென்றி பாண்ட்டாபிடான். பள்ளிப்படிப்பை முடித்ததும் பொறியியல் படிக்க விரும்பினார். அதன்படியே பாலிடெக்னிக் பள்ளியில் சேர்ந்தார். இதற்கிடையில் அவர் இதயம் இலக்கியத்தில் திரும்பியதால் பொறியியலை பாதியிலேயே நிறுத்தி, இலக்கியம் தொட்டு, எழுத்துத் துறையில் ஈடுபட்டார்.

ஹென்றி முதன் முதலாக எழுதப் புகுந்ததும், 1880-இல் ஊடிக் ஜெம்பி என்ற வார இதழில் 'ஒரு வாழ்க்கையின் முடிவு' என்ற தலைப்பில் தொடர் கதை எழுதினார். அதே ஆண்டில் ஒரு சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டார். இதுவே முதல் நூல். இருந்தும் இலக்கியவாதிகளின் இதயங்களில் இடம் போடவில்லை. அதற்காக அவர் சோர்ந்துபோகவில்லை.

ஹென்றியின் திருமணத்திற்குப்பின், எழுத்துத்துறையில் முழுமையாக ஈடுபட்டார். சிறுகதை, நாவல் என்று எழுதிக் குவித்தார். அவற்றுள் நாடறிந்த படைப்பாக 'த ஃபார்ஜீட்டெட் லாண்ட்' நீண்ட நெடுங்கதையாகும். இயல்பியல் இலக்கியத்தின் முழுத் தன்மையும் துல்லியமாக எடுத்துக் காட்டியது அந்த நாவல். டேனிஷ் மக்களின் வாழ்க்கை முறை, அவர்களது மனவோட்டம் எல்லாவற்றையும் படம்பிடித்து காட்டியிருந்தது.

இந்த நாவல் பரபரப்பாகப் பேசப்பட்டதோடு விற்பனையிலும் விறுவிறுப்புக் காட்டியது. இலக்கியவாதிகளின் இதயங்களிலும் இடம் போட்டது. இந்த நாவலைப் போலவே 'லிக்கி-பீர்' என்ற நாவலும் மக்களிடையே பாராட்டு பெற்றது. அவர் வாழ்நாள் முழுதும் எழுதிக் கொண்டே இருந்தார். அவர் இறுதியாக எழுதிய நூல் 'எனது பாதையில்' என்பதாகும். 1917-இல் நோபல் பரிசும் பெற்றார்.

இவர் இன்றுதான் (24-07-1857) டென்மார்க்கிலுள்ள பிரட்ரிக்காவில் பிறந்தார்.

❑

ஸ்பெயின் நாட்டிடமிருந்து தென் அமெரிக்காவின் பெரும்பகுதியை மீட்டுத்தந்த விடுதலைப் போராட்ட வீரர் சைமண் பொலிவாரும் இன்றுதான் (24-07-1783) பிறந்தார்.

❑

ஜூலை-25 கூட்டமும் ஆற்றலும்

1916 முதல் 1921-வரையில் ஜூரிச்சில் கல்வி பயின்ற காலத்தில்தான் எலியாஸ் கனெட்டி இலக்கியத்தின் பால் ஈடுபாடு ஏற்பட்டது எனலாம்.

அதுவே அவரை ஓர் எழுத்தாளராகவும் மாற்றியிருக்கிறது.

முதலில் அவர் எழுதியது நாடகம் தான். அந்த நாடகம் கவிதை நடையில் 'ஜூனியஸ் புருட்டஸ்' என்ற தலைப்பில் மலர்ந்தது.

தன் மகனின் இலக்கிய ஆற்றலைக் கண்ட தாய், சிறந்த இலக்கிய கர்த்தாவாக மகனை ஆக்க வேண்டும் என்ற காரணத்தால், கனெட்டியை ஜெர்மனிக்கு அனுப்பி வைத்தார்.

அங்கு பழம்பெரும் எழுத்தாளர்களை சந்திக்கும் வாய்ப்பு கனெட்டிக்குக் கிடைத்தது.

1930-இல் இரண்டு நாடகங்கள் எழுதினார். 'திருமணம்', 'தி காமெடி ஆஃப் வேனிட்டி' என்ற தலைப்பில் அவை இருந்தன.

இரண்டுமே அவருக்குப் புகழைச் சேர்த்தன. அதைத் தொடர்ந்து 'கூட்டமும் ஆற்றலும்' என்ற அவரது நாவல் அவரின் சிந்தனைக்கு சிகரம் அமைத்துக் கொடுத்தது.

அவர் பெயர் உலக அரங்கில் பேசப்பட்டது. உலகோராலும் இலக்கிய கர்த்தாக்களாலும் பேசப்பட்ட படைப்பில் 'டை பிளெண்டங்'கும் அடங்கும்.

எழுத்தாளரும், நாடக ஆசிரியருமான எலியாஸ் கனெட்டி, பல்கேரியாவைச் சேர்ந்த ரூஸி எனும் பகுதியில், ஒரு யூதக் குடும்பத்தில் இன்றுதான் (25-07-1905) பிறந்தார்.

❑

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இராஜதந்திரியான ஆர்தரி பால்ஃபோர் என்பவர் இன்றுதான் (25-07-1848) பிறந்தார்.

❑

ஜூலை-26 நயமான நாடகாசிரியர்

இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த நாடக ஆசிரியருள் தலைசிறந்தவர், அவர். ஷேக்ஸ்பியருக்குப் பின்பு ஆங்கிலம் அறிந்தோர் அனைவரும் கொண்டாடும் இலக்கிய மேதை அவரே.

அவர் எழுதிய நாடகங்கள் உலக மக்கள் சிந்தனையைக் கவர்கின்றன; எண்ணத்தைக் கிளருகின்றன. கருத்துப் புரட்சியை உண்டாக்கியவை அவரது எழுத்துக்கள். அவரது எழுத்தில் குத்தல், கேலி, நையாண்டி ஆகியவை இருக்கும்.

அவர் வெறும் நாடக ஆசிரியர் மட்டுமல்ல; உரையாடலிலும் வல்லவர். அவர் பேச்சும் நகைச்சுவையோடு எண்ண அலைகளை எழுப்பும் அவை மென் காற்றாகவும் வீசிக் கொண்டு இருக்கும்; நகைச்சுவை ததும்பப் பேசுவதில் அவருக்குள்ள ஆற்றலை விளக்கப் பல நிகழ்ச்சிகளைச் சொல்லலாம். அவர் சிந்தனைப் பொக்கிஷம். நகைச்சுவை களஞ்சியம்.ஒருமுறை பத்திரிகை நிருபர் ஒருவர் அவரைக் கண்டு, ''உலகின் மூன்று பெரிய மனிதரின் பெயர்களைத் தாங்கள் சொல்ல வேண்டும்'' என்று வேண்டினார்.

உடனே அவர் அந்த நிருபரைக் கூர்ந்து நோக்கி, ''ஐன்ஸ்டீன், ஸ்டாலின்...'' என்று இருவர் பெயரை மட்டும் கூறிச் சிறிது நேரம் நிறுத்தினார்.... பின் நிருபரைப் பார்த்து ''அடக்க உணர்ச்சி என்னைத் தடுக்கிறது. ஆயினும் நான் உண்மையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். மூன்றாவது பெரிய மனிதர் நான்தான்...'' என்றார்.

அதைக்கேட்ட நிருபரால் சிரிப்பை அடக்க முடியவில்லை. அவர் கூற்று அவர்தம் தகுதியையும், தன்னம்பிக்கை யையும் தெள்ளிதின் தெரியப்படுத்துகிறது.

சுமார் நாற்பது கிலோ மீட்டர் தொலைவிலுள்ள 'அயாட்டி'ல் தாம் வாழ்ந்த வீட்டில் தொலைபேசி வைத்துக் கொண்டு அவ்வப்போது தமக்கு வேண்டிய நூல்களை தொலைபேசி மூலம் கேட்டறிந்து உடனுக்குடன் ஆள் அனுப்பி அவைகளைப் பெற்றுப் படித்து வந்தார் என்றால், நூல்களைப் படிப்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தை அறியலாம்.

அந்த மாபெரும் அறிஞர் - நாடக ஆசிரியர் - அயர்லாந்தில் இன்றுதான் (26-07-1856) பிறந்தார். அவர்தான் ஜார்ஜ் பெர்னாட்ஷா.

□

ஜூலை-27 'ரைம்ஸ்'

கவிஞர் கியாஸுகாரடுக்கி, ஒரு மருத்துவரின் மகனாகப் பிறந்தார். வயிற்றுப் பிழைப்புக்காக இவர் தந்தை ஊர்ஊராக செல்ல வேண்டியிருந்தது. கடைசியில் 1849-இல் பிளாரன்ஸில் நிரந்தரமாகத் தங்கினார்.

கியாஸுவுக்கு தந்தை ஆரம்பக் கல்வியை வீட்டிலேயே கற்பித்தார். படிப்பில் சுட்டியாக இருந்தது கண்டு அனைவருமே வியந்தனர். அந்த வயதிலேயே அவர் பைரன், ஷில்லர் போன்றவர்களின் எழுத்தோவியங்களை ஆழ்ந்து படித்தார்.

காலப்போக்கில் வரலாற்றுப் பின்னணியில் கவிதை களையும் எழுதத் தொடங்கினார். கிரேக்கக் கவிஞர் ஹோமரின் புகழ்பெற்ற 'இலியாத்'தின் ஒன்பதாவது பாகத்தை மொழிபெயர்த்தார், இளம் கியாஸு.

அந்த வயதில் சொந்தமாக 'என் அன்னைக்கு' என்ற தலைப்பில் ஒரு கவிதைத் தொகுப்பையும் வெளிக் கொண்டு வந்தது அந்த கால கட்டத்தில் பெரும் சாதனை என்றே கூறவேண்டும்.

இவரது ஆற்றலைக்கண்டு பைஸா நகரிலுள்ள பள்ளி ஒன்று சம்பளமின்றி படிக்க சலுகை வழங்கியது என்பது பெரிய விசயமாகும்.

சிறந்த கவிஞராக விளங்கியதால் பிரபலமான பத்திரிகைகள் இவரது கவிதைக்காக ஏங்கினார்கள். 'ரைம்ஸ்' என்னும் பெயரில் பெரிய கவிதைத் தொகுப்பு வெளிவந்து அவரது புகழை வெளிச்சம் ஆக்கியது.

1859-க்கு பின்பு மிகவும் புகழ்பெற்ற போலாக்னா பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக கியாஸு நியமிக்கப் பட்டார். பதவியில் இருந்தபடியே கவிதைப் பணியும் தொடர்ந்தது. அந்த காலகட்டத்தில் எழுதிய 'புதிய பாடல்கள்' என்ற தொகுப்பு நூல் வெளிவந்து பெரும் புகழை அவருக்கு ஈட்டித் தந்தது.

கியாஸு கார்டுக்கி, இத்தாலியின் - டஸ்கனி மாநிலத்தில் வால் டி காஸ்டிலோ என்ற சிற்றூரில் இன்றுதான் **(27-07-1835)** பிறந்தார்.

ஜுலை-28 பிரமானந்தரெட்டி

தேசபக்தரும் இந்தியப் பண்பாட்டின் எடுத்துக்காட்டு மனிதருமான ஆந்திர முதலமைச்சர் பிரமானந்த ரெட்டி, பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. படித்தார். அதன் பிறகு சட்டம் படித்து வழக்கறிஞரானார்.

தேசபந்துலு டி.பிரகாசம், மகரிஷி புலுசு ஆகிய தலைவர்களைப் பின்பற்றி அரசியலில் ஈடுபட்ட இவர் தனது 27-வது வயதிலேயே குண்டூர் மாவட்ட சபையின் தலைவரானார்.

1942-இல் காந்தியின் தலைமையில் நடந்த போராட்டத்தில் பங்கேற்று கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் ராஜமுந்திரி, வேலூர், தஞ்சாவூர் சிறைகளில் அடைக்கப்பட்டு, 1945-இல் விடுதலை செய்யப்பட்டார்.

ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிந்து அமைக்கப்பட்டதில் இருந்து 1956 முதல் 1971-ஆம் ஆண்டு வரை காசு பிரமானந்த ரெட்டி தொடர்ந்து அம்மாநிலத்தின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். அவ்வேளையில் கோயில் திருப்பணிகளில் தம்மை இணைத்துக் கொண்டார்.

நாகார்ஜுனா திட்டம், இரயில் மற்றும் சாலைகள், பாலங்கள் அமைக்கும் திட்டங்கள் போன்ற பல முக்கியத் திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி அரசிற்கும், கட்சிக்கும் நற்பெயர் ஈட்டித் தந்ததோடு, மக்களுக்கும் நன்மை செய்தார்.

மாநில அரசியலோடு நில்லாமல் 1974-இல் மத்திய அரசின் தகவல் தொடர்புத்துறை அமைச்சராகவும், 1974-77-இல் விவசாய மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சராகவும் பதவி வகித்தார்.

இவர், குண்டூர் மாவட்டம் திருமல்லி எனும் கிராமத்தில் இன்றுதான் (28-07-1909) பிறந்தார்.

❑

பீட்டிரிக்ஸ் பாட்டர் என்பவர் புகழ்பெற்ற பீட்டர் ராபிட் என்னும் கதாபாத்திரத்தை உருவாக்கியவர். இந்த இங்கிலாந்து எழுத்தாளரும் இன்றுதான் (28-07-1866) பிறந்தார்.

❑

ஜூலை-29 இருளில் ஒரு நகரம்

ஐவிண்ட் யான்ஸன், ஒரு கூலித் தொழிலாளியின் மகனாகப் பிறந்தார். பதின்மூன்று வயதில் பள்ளிப்படிப்பு நிறுத்தப்பட்டு, ஒரு பட்டறையில் கூலிப் பையனாய் வேலையில் சேர்ந்தார். அதுதான் குடும்ப நிலை.

இந்த உழைப்பிற்கு இடையேயும் இலக்கியங்களைப் படிப்பதில் ஆர்வம் கொண்டார். கூலியாள் பணியிலிருந்து உயர்ந்து, நுகர்பொருள் விற்பனையாளராகவும், திரைப்பட இயந்திரம் இயக்கும் பணியிலும் சேர்ந்தார், ஐவிண்ட்.

தன் நாட்டை விட்டுப் பிரிந்து, பெர்லின் பாரிஸ் முதலிய நாடுகளுக்குச் சென்று பணியாற்றினார். அங்கே முதலில் ஒரு இதழில் நிருபராகவும், பின்னர் பாரிஸிலுள்ள பிரபல செய்தித்தாள்களில் கட்டுரைகளும் எழுதி தன் வறுமையைப் போக்கிக் கொண்டார்.அடிப்படை கல்வி அதிகமில்லாத போதிலும், ஐவிண்ட் தன் முயற்சியால் கல்வியறிவை வளர்த்துக் கொண்டு கதை எழுதும் அளவில் உயர்ந்தார். 1925-இல் 'டிமான்ஸும் நீதியும்' என்ற நாவல் வெளிவந்து மக்களிளைடயே பரபரப்பை ஏற்படுத்தியது.

அதைத் தொடர்ந்து 'இருளில் ஒரு நகரம்' என்ற நாவலும் (1927) அதை அடுத்து அவர் எழுதிய 'வெளிச்சத்தின் நகரம்' (1928) என்ற நாவலும் வெளிவந்தன. மூன்று நாவல்களுமே ஐவிண்ட்டுக்கு பெயரையும் புகழையும், இலக்கிய வித்தகர்களுடைய அளவிற்கு உயர்த்தி யும் நின்றது.

இதைத் தொடர்ந்து, ஐவிண்ட்டிற்கு மேலும் புகழ் சேர்த்த 'மின்னாஸ், 'எரி நட்சத்திரம் பற்றிய அறிவிப்பு', 'ஹாம்லெட்டுக்குப் பிரிவுபசாரம்', 'ஆலோபின் நாவல்' போன்ற நாவல்களாகும்.

பல்வேறு படைப்புகளை எழுதிக்குவித்து உலகப் புகழ் பெற்ற ஐவிண்ட் யான்ஸன், 1974-இல் நோபல்பரிசையும் பெற்றார்.

இந்த மாபெரும் படைப்பாளி, சுவீடனைச் சேர்ந்த நார்பாட்டனிலுள்ள் சால்ட்ஸ் ஜோடேன் எனும் கிராமத்தில் இன்றுதான் (29-07-1900) பிறந்தார்.

❑

ஜூலை-30 ஃபோர்டு கார்!

அமெரிக்காவின் புகழ் வாய்ந்த போர்டுகார் தயாரிப்பாளரான ஹென்றிஃபோர்டு, ஒரு முறை இங்கிலாந்து சென்றிருந்தார். அங்கே அவர் 'ரோல்ஸ் ராய்ஸ்' காரைப் பயன்படுத்தி கொண்டிருப்பதைக் கண்ட பிரிட்டிஷ்காரர்கள் வியப்புற்றார்கள்.

அன்றிரவு இங்கிலாந்து அரசர் ஏற்பாடு செய்திருந்த விருந்தில் கலந்து கொண்ட 'போர்டு'வை அரசர் கேட்டார்: "நீங்கள் உங்கள் தயாரிப்பான போர்டுகாரில் செல்லாமல் ரோல்ஸ் ராய்ஸ் காரில் செல்கின்றீர்களே, காரணம் என்ன?" என்று.

அதற்குப் போர்டு, "என் சொந்த உபயோகத்திற்காக எனது போர்டு கார் ஒன்று வேண்டுமென்று என் மேனேஜரிடம் சொல்லியிருந்தேன்.

ஆனால், ஒவ்வொரு கார் தயாராகி வெளியே வருவதற்கு முன்னாலேயே விற்பனையாகிவிடுகிறது.

என் மேனேஜர் மிகவும் கண்டிப்பானவர். வாடிக்கை யாளர்களுக்கு அனுப்பிய பிறகுதான் மற்றவர்க்குத் தருவார்.

அதனால்தான் இன்னும் சொந்தத்திற்கு 'போர்டு' கார் கிடைக்கவில்லை.

ஆதலால், அதற்கு அடுத்த சிறந்த காரான ரோல்ஸ் ராய்சைப் பயன்படுத்துகிறேன்" என்று அமைதியாகக் கூறினார்.

அவரின் பதிலைக் கேட்டு அரசர், வியப்பில் நின்றிருந்தார்.

இப்படி உலகப்புகழ் பெற்ற ஹென்றிஃபோர்டு இன்றுதான் (30-07-1863) பிறந்தார்.

❑

மிக இளம் வயதில் உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பதவி யேற்ற பிரசாந்த் பெஹாரி முகர்ஜி என்பவரும் இன்றுதான் (30-07-1910) பிறந்தார்.

❑

ஜூலை-31 மகாமதி

அக்காலத்தில் திருவிதாங்கூர் மன்னர் ஆட்சியின் நாஞ்சில் நாட்டில் மலையாளப் பள்ளிகளே நடந்து வந்தன. மிகச் சிறந்த தமிழ்ப் பாவலரான, செய்குதம்பி பாவலர். மலையாளப் பள்ளியில்தான் படித்தார். ஆனால், காலத்தா அழியாத பாடல்களை வடித்தார். இவரது குடும்பம் வறுமை பள்ளத்தில் விழுந்ததால், கல்விச் செல்வத்தைத் தொடர முடியாது நின்று போனார். தந்தையின் தொழிலான நெசவில் இவரும் துணையானார்.

கைகள் பாவில் இருந்தாலும் அவர் சிந்தை முழுதும் தமிழ் மேலேயே இருந்தது. அதனால், சங்கரநாராயண அண்ணா ரிடம் பழுதறப் பைந்தமிழைக் கற்றார். அந்தாதியாகவும், சிலேடையாகவும், யமகம், திரிபுகளாகவும் கவியேற்றும், ஆற்றலைப் பெற்றார். கற்றோர் வியக்கும் வண்ணம் கவி புனைந்தார்.

இருபத்தியொரு வயதில் சென்னையில் இருந்த ஸ்ரீபத்ம விலாசப் பதிப்பகத்தில் இவரது ஆற்றலை அறிந்து அழைத்துப் பணி கொடுத்தனர். இந்த வேளையில்தான் சீறாப்புராண காவியத்திற்கு உரை எழுதிப் பதிப்பித்தார். சீறா நாடகமும், நபிகளின் ஜீவிய சரித்திரம் என்னும் நூலும் அப்போதுதான் மலர்ந்தது.

'யதார்த்த வாதி' - 'இஸ்லாமிய மித்திரன்' என்ற இரு பத்திரிகையின் வழியே சமூகத்தொண்டையும், சமயத் தொண்டையும் செய்து வந்தார். நாடெங்கும் இவர் புகழ் ஓங்கிற்று.

பத்திரிகை ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் இருந்த பாவலர், சிறந்த சொற்பொழிவாளராகவும் இருந்தார். பாவலர், 1907-இல் சென்னை விக்டோரியா மண்டபத்தில் நூறு சதாவதானத்தை முதுபெரும் அறிஞர்கள் பத்திரிகையாளர்கள் முன்னே அரங்கேற்றி சிறப்பு பெற்றார். சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் 'மகாமதி' எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தார். இவர் விடுதலைப் போராட்ட வீரரும் கூட. இவர் இயற்றிய நூல்கள், தமிழுக்கும், இஸ்லாமுக்கும் சிறப்பு சேர்ப்பனவாகும்.

இந்த மாபெரும் கவிஞர், நாஞ்சில் - இடலாக்குடியில் இன்றுதான் (31-07-1874) பிறந்தார்.

❑



பிரிகேடி

புதியன கண்டுபிடிக்கும் நோக்கோடு இவரது வாழ்க்கைப் பயணம் தொடங்குகிறது. இவர் பெயர், வில்லியம் கிளார்க்.

1792-இல் இராணுவத்தில் சேர்ந்து லெப்டினண்டாக பணி செய்தார். நான்கு ஆண்டுக்குப்பின், பூகோள கண்டுபிடிப்பில் ஈடு பட்டார்.

ஒவ்வொரு நாட்டிலும் எங்கே மலை இருக்கிறது. எங்கே காடு இருக்கிறது, எங்கே என்னென்ன விலங்குகள் வசிக்கின்றன, புதிய நாடுகள் என்னென்ன எங்கே உள்ளன என்பதை எல்லாம் குறித்துக் கொண்டு, பின் அதை நூல் வடிவில் கொண்டு வந்தார். இந்த குறிப்பு நூல் நாடுகளைச் சுற்றுபவர்களுக்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைந்தது எனலாம்.

இவரது ஆற்றலை அறிந்த அந்த நாட்டு இராணுவத்துறை, இந்தியாவில் இராணுவத்தொடர்பான விவகாரங்களை கவனிக்க, 'பிரிகேடி' என்ற உயர் பதவியைக் கொடுத்து அனுப்பி வைத்தது. பின்நாளில் இவர் கவர்னராகவும் இருந்தார்.

இவர் வெர்ஸினியாவில் இன்றுதான் (01.08.1770) பிறந்தார்.

❑

"மாநிலங்களில் தாய்மொழிப் பற்று இருக்க வேண்டும். அதே நேரத்தில் வேற்று மாநில - நாடுகளின் மொழிகளையும் கற்றுக் கொண்டு, அவற்றைப் பயன்படுத்திச் சிறப்பான வாழ்க்கையை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்'' என்று சொன்னவரும், அவ்வாறே வாழ்ந்து காட்டிய செயல் வீரருமான புருஷோத்தமதாஸ் தண்டன் என்னும் சுதந்திரப் போராட்ட வீரரும், காந்தியடிகளால் 'ராஜரிஷி' என்று வழங்கப்பட்ட இந்தப் பெரியவர் தம் தாய் மொழியான இந்தியைப் போலவே உருது, பெர்சியின் ஆகிய மொழிகளிலும் நன்கு புலமை பெற்ற இந்த விடுதலை வீரர் உத்திரபிரதேசத்தில் இன்றுதான் (01.08.1882) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-2 பி.சி.ராய்

பிரபுல்ல சந்திரா ராய் (பி.சி.ராய்) கொல்கத்தாவில் பட்டப்படிப்பை முடித்த இவர், கில்கிரிஸ்ட் உதவித்தொகை பெற்று 1882-இல் இங்கிலாந்து சென்றார்.

அங்கு எடின்பரோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பி.எஸ்.சி.பட்டமும், 1887-இல் டி.எஸ்.சி.பட்டமும் பெற்றார். ஹோப் பரிசும், உதவித் தொகையும் அங்கு பெற்றார். பிறகு எடின்பர்க் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் பட்டம் பெற்றார்.

டாக்டர் பட்டம் பெற்று இந்தியா திரும்பி வந்த ராய் - கொல்கத்தா மாநிலக் கல்லூரியில் வேதியியல் துணைப் பேராசிரியர் பணியில் சேர்ந்தார். பிறகு படிப்படியாக உயர்ந்து, அறிவியல் கல்லூரியின் முதல்வரானார்.

பின், நைட்ரேட்டுகள் - வெடியுப்பு சம்பந்தமாக பல ஆய்வுகள் செய்து வெற்றி பெற்றார்.

மருந்து தயாரித்து விற்பனை செய்யும் தொழிற்சாலையை முதன் முதலில் இந்தியாவில் தோற்றுவித்தவர் இவரே. இந்திய வேதியல் கழகத்தின் முதல் தலைவரும் இவரே.

மனித நேயம்மிக்க மாமனிதராக வாழ்ந்த இந்த அறிவியல் மேதை, பிரம்ம சமாஜத்தில் உறுப்பினராக இருந்தார். திருமணமே செய்து கொள்ளாது நாட்டுக்காக உழைத்தார். சமூகம், தேசப்பற்று என்று தொண்டு செய்தார்.

தான் சம்பாதித்தத் தொகையில் தனக்கு வேண்டியது போக மீதித் தொகையை சாலையோர தொழிலாளர்களுக்கும், ஏழை எளியவர், ஆதரவற்றோர் மற்றும் விதவைகளுக்கும் கொடுத்து மகிழ்ந்தார்.

அறிவியலாளரும், சமூக நலன் கருதியவருமான பி.சி.ராய், வங்கம் - கத்திபாரா என்ற சிற்றூரில் இன்றுதான் - (02-08-1861) பிறந்தார்.

❑

பிரிட்டிஷ் நாட்டு பௌதீக விஞ்ஞானியான ஜான்டைன்டால் என்பவரும் இன்றுதான் (02-08-1820) பிறந்தார்.

ஆகஸ்டு-3 10 வயதிலேயே

கோனி பென்னட், ஜாஸ் இசைக் கலைஞர். இவர் நியூயார்க்கைச் சேர்ந்தவர்.

தந்தை மளிகைக்கடை வைத்திருந்தார். தாய் வீட்டில் இருந்தபடியே தையல் வேலைகளைச் செய்து வந்தார்.

இவரது இசை ஆர்வத்தை வளர்த்தவர் இவரது மாமாவே. அவர் வழி நடத்துதலாலேயே இவர் இசை மேடைகளையும், இசை மேதைகளையும் கண்டறிந்தார். இளமையிலேயே இப்படி இருந்ததால் -

பத்து வயது இவருக்கு ஆனபோது, திறந்த வெளியில் மேடையில்லாது இவரே பாடத் தொடங்கினார். அப்போதே இவரது இசை அறிவைக் கண்டு மக்கள் பாராட்டினர்.

தொழில் கலைப் பள்ளியில் இவர் இசையும், ஓவியமும் கற்று பட்டம் பெற்றார்.

ஒரு காலகட்டத்தில் இவரே குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டபோது -

பெரிய நட்சத்திர ஓட்டல்களிலும், அரங்குகளிலும் ஓய்வின்றி இசை நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்.

ஒரு கட்டத்தில் இராணுவத்தில் சேர்ந்து பணியும் ஆற்றினார். பிறகு, நாடகக்கலையும் பயின்று தேர்ந்தார். அதன்வழியாகவும் பொருள் தேடினார்.

தன்னிடம் இசை பயில வந்த மாணவியையே 1952-இல் காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

திருமணம் கூட, இவர் நடத்திய இசை நிகழ்ச்சியின் இறுதியில் ஆயிரக்கணக்கான ரசிகர்களின் முன்பே புதுமையாக நடந்தது.

இந்த இசைக் கலைஞர் நியூயார்க்கிலுள்ள அஸ்டோரியா குவின்ஸ் என்ற இடத்தில் இன்றுதான் (03.08.1926) பிறந்தார்.

❑

கவிஞர் ரூபர்ட் புருக் என்பவரும் இங்கிலாந்தில் இன்றுதான் (03.08.1887) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-4 படிக்காத மேதை

நட்ஹாம்ஸன், விவசாயி குடும்பத்தில் பிறந்தார். இவரோடு பிறந்தவர்கள் ஐந்து பேர். அதனால் இளமையிலேயே வறுமை இவரைத் தொட்டதால், இவர் பண்ணையில் வேலை செய்தார்; செருப்புத் தொழில் செய்தார். ஹார்டுலாந்துப் பக்கம் உள்ள போடாவில் இவர் செருப்புத் தொழில் செய்தபோதுதான் அவருக்கு இலக்கியத்தில் நாட்டம் சென்றது. அப்போது ஒரு குறுநாவலை எழுதினார். *1877*-இல் இந்நூல் கண்விழிக்கும் போது அவருக்கு வயது பதினெட்டே.

படிக்காத மேதை ஒரு படைப்பாளியாய் அறிமுகமானதில் ஹாம்ஸனுக்கு ஒரு புறம் மகிழ்வு என்றாலும், படிக்கவில்லையே எனும் ஏக்கமும் ஒருபுறம் அவரைத் தாக்கத் தொடங்கியது. ஆகவே, ஹாம்ஸன் பள்ளியில் சேர்ந்து படிக்கலானார். போதிய கல்வி கற்றதும் ஒரு மாவட்ட அரசு அதிகாரியிடம் உதவியாளராகச் சேர்ந்தார். நூலகத்திலும் பணியாற்றக்கூடிய வாய்ப்புக் கிடைத்ததால், நிறைய படிக்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றார். இந்த நிலையில் அவர் கவிதை எழுதும் ஆற்றலையும் பெற்றார்.

1878-இல் பியார்கர் என்ற நாவலைக் கவிதை வடிவில் படைத்தார். எழுத்துத்துறை அவருக்கு வறுமையைத் தந்ததே தவிர, நல வாழ்வைத் தரவில்லை. இந்நிலையில் அங்கிருந்து அமெரிக்காச் சென்றார். அமெரிக்கச் சூழல் அவர் உடலுக்கு ஒத்துக் கொள்ளாததால், மீண்டும் நார்வேயிக்குத் திரும்பி ஆஸ்லோவில் தங்கினார். அந்த நிலையில் மார்க்டுவைன் பற்றிய சிறப்பான கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டார். என்னதான் எழுதியும் அவரது பட்டினியும், பஞ்சமும் தீர்ந்தபாடில்லை. இந்த நிலையில்தான் அவர் ஒரு நாவலை டேனிஷ் இலக்கிய இதழில் தொடராக எழுதினார். இந்த நாவல் *1890*-இல் சல்ட்(பசி) என்ற பெயரில் வெளிவந்தது. ஹாம்சனுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. நாடறிந்த மாபெரும் எழுத்தாளராக அவர் உயர்ந்தார்.

'பான் நாவல்', அரசின் தலைவாசல்', 'வாழ்க்கையில் விளையாட்டு', 'சூரியனின் மறைவு' போன்ற நாவலையும் எழுதிய இவருக்கு *1920*-இல் நோபல் பரிசும் கிடைத்தது.

இளமையில் வறுமையில் வாடி, முதுமை ஒரு பெரிய எஸ்டேட்டுக்கே சொந்தக்காரரான நாட் ஹாம்ஸன் இன்றுதான் *(04-08-1859)* பிறந்தார்.

❑

ஆகஸ்டு-5 முப்பதாயிரம்

மாப்பசான் செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்தார். பத்து வயதில் மாப்பசான் பள்ளி சென்றார். இலத்தின், பிரஞ்சு, இலக்கணம், கணிதம் ஆகிய பாடங்களிலும் அவரே முதன்மையாக இருந்தார்.

1869-இல் மாப்பசான் பாரீஸில் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். அங்கே புரட்சி ஏற்பட்டதால் அவர் படிப்பைத் தொடர முடியவில்லை. அதன் பின்னர் அவர் தீவிரமாக கவிதை, சிறுகதை, நாடகம், நாவல் என்று இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் ஆழ்ந்து ஈடுபட்டார்.

ஒவ்வொரு நாட்டிலும் சிறுகதை இலக்கியத்தை வளமையாக்கியவர் பலர் இருந்திருக்கிறார்கள். அந்நிலையில் பிரான்சு நாட்டை எடுத்துக் கொண்டால் மாப்பசானே நம்முன் நிற்கிறார்.

இளமையிலேயே இலக்கியத்துறையில் இதயத்தைப் பதித்து இருந்ததால் விரைவிலேயே எழுத்துத்துறையில் வெளிச்சப்பட்டார். இவரது REVUE என்ற நாவல்தான் இவருக்கு இலக்கிய பீடத்தை அமைத்துத் தந்தது. நூல் வெளியான சில நாள்களிலேயே 30,000 பிரதிகள் விற்றுப் போயின.

ஆடம்பரப் பிரியராகவும், நட்பு வட்டமும் பெரிய அளவிலே இருந்ததால் செலவுகள் அதிகம் ஆயின. எழுத்தே ஜீவன், ஜீவனமும் அதுவே என்றாகி பொழுதும் எழுதிக் கொண்டே இருந்தார்.

கடுமையான உழைப்பாலும் வரைமுறையற்ற வாழ்க்கை யாலும் அவர் உடல்நலத்தையும், உள்ள வளத்தையும் இழந்தார். 1890-க்குப் பிறகு 'என்னடா வாழ்க்கை' என்றாகி, சோர்ந்து போய் தற்கொலை எண்ணத்திற்கும் ஆளானார்.

அவரது முயற்சி, வளர்ச்சி; புகழ் எல்லாமே பத்தாண்டிற் குள்ளேயே முடங்கிப் போயிற்று. அவர் படைத்த படைப்புகள் உயிரோடு இன்றும் உலகில் உலவிக் கொண்டிருக்கிறது.

இந்த சிறுகதை மன்னன் பிரஞ்சு நாட்டில் இன்றுதான் (05-08-1850) பிறந்தார்.

□

ஆகஸ்டு-6 பென்சிலின்!

அலெக்சாண்டர் ப்ளெமிங், ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். பள்ளிப் படிப்பின் போதே இவரை உழவுத் தொழிலுக்கு அனுப்பிவிட எண்ணினர் குடும்பத்தினர். பதினாறு வயதில் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்தார். எனினும் மேற்கொண்டு படிக்க இயலாத நிலையில் கப்பல் கம்பெனி ஒன்றில், நான்காண்டு காலம் எழுத்தராய்ப் பணியாற்றினார்.

இவரது இருபதாவது வயதில் அதிர்ஷ்டம் ஒன்று வந்தது. இவர் உறவினர் ஒருவர் தமது சொத்தில் ஒரு பங்கை இவருக்கு எழுதி வைத்தார். வந்த அதிர்ஷ்ட தேவதையின் துணையுடன் கல்லூரியில் சேர்ந்து மேற்படிப்புப் படிக்க விரும்பினார். அதன்படியே படித்தார்.

அங்கு இவருக்குப் பேராசிரியராய் இருந்தவர் டைபாய்டு நோய்க்குத் தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து உதவிய சர் ஆல்ம்ராத் எட்வர்ட் ரைட். அலெக்சாண்டர் *1906*-இல் பட்டம் பெற்று, தான் படித்த கல்லூரியிலேயே தம் பேராசிரியரிடமே உதவியாளராகச் சேர்ந்தார். இங்குதான் இவர் பாக்டீரிய எதிர்ப்புப் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சியில் கவனம் செலுத்தினார்.

1941-இன் இறுதியில் அமெரிக்க விஞ்ஞானிகளுடன் சேர்ந்து பென்சிலினைத் தனிமைப்படுத்தும் முறைகளை ஆராய்ந்து, பெருமளவில் பென்சிலின் மருந்தைத் தயாரிக்க உதவினார். இந்த மருந்தை ஊசி மூலம் செலுத்தி பல நோய்களைக் குணப்படுத்த முனைந்தனர் மருத்துவர்கள். பென்சிலின் மருந்தின் பயன்பாட்டை இன்று நாம் அறிந்திருக்கிறோம். *1945*-இல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இந்த அறிவியல் மேதை ஸ்காட்லாந்தில் இன்றுதான் *(06.08.1881)* பிறந்தார்.

❑

இங்கிலாந்து நாட்டின் அரசவைக் கவிஞரான வார்டு டென்னிசன் ஆல்பிரட் பிறந்ததும் இன்றுதான் *(06.08.1809)* பிறந்தார்.

❑

ஆகஸ்டு-7 எ வேல்டு வியூ ஆப் ரேஸ்

ரால்ஃப் பஞ்ச், இவர் அரசியல் விஞ்ஞானியாகவும் போதுவராகவும் அமெரிக்காவில் இருந்தவர்.

ஆப்பிரிக்க, அமெரிக்க தாய் - தந்தைக்குப் பிறந்தவர் இவர்.

தாய் நல்ல ஒரு மேடைப்பாடகியாக இருந்தார். தந்தை முடிவெட்டும் கலைஞராக இருந்தார்.

பள்ளியில் படிக்கும் காலத்திலேயே அறிவு நுட்பத்தோடு இருந்தவர் பஞ்ச். படிப்பிலும் ஒழுக்கத்திலும் முதன்மையாக இருந்திருக்கிறார். அப்போதே சிறந்த பேச்சாளராகவும் இருந்ததோடு, மொழி, இன வேறுபாடு இன்றி வாழ்ந்திருக்கிறார்.

அதனால், கறுப்பர் இன மக்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபடத் தொடங்கிவிட்டார்.

லாஸ் ஏஞ்சல் பல்கலைக் கழகத்திலும், கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலும் பட்டம் பெற்றதோடு, ஹார்டுவேடு பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் முதுகலைப் பட்டமும் பெற்றார்.

பின்னர் அதே பல்கலைக் கழகத்தில் 1928 முதல் 1950 வரை பேராசிரியராகவும் பணியாற்றினார்.

இவர் தம் வரலாற்றை 'ஏ வேல்டு வியூ ஆஃப் ரேஸ் என்ற தலைப்பில் மிக அற்புதமாக எழுதி, அமெரிக்க நாட்டில் உயர்ந்தார்.

இந்த அறிவுலக மேதை மெக்சிகன் நகரில் இன்றுதான் (07.08.1904) பிறந்தார்.

❑

பிரிட்டிஷ் நாட்டு மனித நேயக் தலைவரான லூயிஸ் எஸ்.பி.லீக்கே என்பவரும் இன்றுதான் (07-08-1903) பிறந்தார்.

❑

அமெரிக்க இராஜதந்திரி ரால்ப் ஜே.புஞ்ச் என்பவரும் இன்றுதான் (07-08-1904) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-8 புத்த சரிதம்

வேங்கட சாஸ்திரியும், திருப்பதி சாஸ்திரியும் சமஸ் கிருதம் தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் புலமை பெற்ற கவிகள் ஆவார்கள்.

கவிபாடும் ஆற்றல் பெற்ற குடும்பத்தில் பிறந்தவர் வேங்கட சாஸ்திரி. இக்கவிஞர் வீட்டில் ஏராளமான ஓலைச் சுவடிகள் அடங்கிய பெரிய நூலகம் ஒன்று இருந்தது.

வேங்கட சாஸ்திரி தமது ஏழாவது வயதில் கல்வி கற்கத் தொடங்கினார். உபநயனம் ஒன்பதாவது வயதில் நடந்தது. ஏனாம் நகரில் சில காலம் வேங்கட சரஸ்வதி தெலுங்கும் ஆங்கிலமும் கற்றார்.

அவர் வேதங்கள் கற்கவும் விரும்பினார். பதினாறாம் வயதில் இசையில் நாட்டம் கொண்டு மிருதங்கம் கற்றார். அத்துடன் குஸ்தியும் கற்றுக் கொண்டார்.

வேங்கட சாஸ்திரி கல்வித் தேடலில் அதிகம் நாட்டம் கொண்டு அலைந்தார் என்றே சொல்லலாம். அதனால் அல்லம் ராஜு சுப்ரமணிய கவிராஜு என்பவரிடம், தங்கியிருந்து பயின்றார்... கீர்த்தனைகளை இயற்றக் கற்றுக் கொண்டார்.

சதுரங்க ஆட்டம் ஆடவும் கற்றுக் கொண்டார். அவர் கவிதை எழுதுவதை கண்டித்து ஆசிரியர் எச்சரிக்கை செய்து, நிறுத்தினால்தான் பாடம் சொல்லித் தருவேன் என்று கூறியும் அவரின் கவிதையூற்று நிற்கவில்லை.

1897-க்கும் 1901-க்கும் இடையே ஸ்ரவணானந்தம், தேவி பாகவதம், ஸ்ரீநிவாச விலாசம், புத்த சரிதம், ஜாதக சர்ய ஆகிய இலக்கியப் படைப்புக்கள் உருவாயின.

1904-1915 காலக்கட்டத்தில் மச்சிலிப்பட்டினம் நோபிள் ஹைஸ்கூலில் தெலுங்குப் பண்டிதராக வேங்கடசாஸ்திரி வேலையிலும் இருந்தார்.

இக்கவிஞர் ஆந்திரம், கடியம் என்ற கிராமத்தில் இன்றுதான் (08.08.1870) பிறந்தார்.

ஆகஸ்டு-9 நூலக தந்தை

இன்று இந்தியாவில் நூலக இயக்கம் சிறப்பாக இருப்பதற்குக் காரணமாக இருந்தவர்; 'நூலக இயக்கத் தந்தை' என்று இந்தியர்கள் மட்டுமல்ல கற்றறிந்த மேலைநாட்டினரும் உச்சிமீது வைத்து மெச்சிப் பேசுகின்றனர் என்றால், டாக்டர் எஸ்.ஆர்.ரங்கநாதனின் சிந்தனையும் உழைப்பும் எத்தகையது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

'நூலகங்களின் நாடு' என்று போற்றப்படுகின்ற அமெரிக்கா. ஆயிரக்கணக்கான நூலகர்களை உடைய நாடு - இந்தியாவில் ஒரு சிற்றூரில், ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த, நன்கு கற்றறிந்த, உழைப்பில் நம்பிக்கை கொண்ட ஒரு நூலகரை அங்குள்ள 'லைப்ரரி ஆப் காங்கிரஸ்' அழைத்து போற்றுகிறது என்றால், அது எவ்வளவு பெருமைப்படத்தக்க விஷயம்...?

'டாக்டர் ஆப் லெட்டர்ஸ்' என்ற டி.லிட், பட்டத்தை அவருக்கு வழங்கிச் சிறப்பித்திருக்கிறது என்பதற்காக இந்தியர் ஒவ்வொருவரும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

இந்தப் பட்டத்தைக் கொடுத்தது, பிஸ் பர்க் பல்கலைக் கழகம். இப்படி இவரது தகுதியை அமெரிக்கா மட்டுமல்ல பல மேலை நாடுகள் பாராட்டியுள்ளன.

இன்று இந்தியாவில் நூலகம் இல்லாத ஊரே இல்லை என்று சொல்லுமளவில், நூலக இயக்கம் முறையாக வளர்ந்தோங்கவும், நூலக இயல் ஒரு துறையாகவே இயங்கவும் காரணமாக இருந்தவர் 'இந்திய நூலகத் தந்தை' என்றும் போற்றப்பட்டவர், இவரே!

இவரது தொடக்கக் கல்வியை சொந்த ஊரிலும், பின்னர் சீர்காழியில் உயர்கல்வியும், பட்டக் கல்வியை சென்னை கிறித்துவக் கல்லூரியிலும் படித்து முடித்தார்; ஆசிரியர் பயிற்சியும் முடித்து மங்களூர் அரசு கலைக்கல்லூரியில் கணிதத் துறையில் விரிவுரையாளர் பணியில் 1917-இல் சேர்ந்தார். பின்னர் படிப்படியாக உயர்ந்தார்; உலகம் போற்றத் திகழ்ந்தார்; நம் இதயங்களில் நிறைந்தார்.

இந்த நூலகமேதை, தஞ்சை மாவட்டம் உபய வேதாந்தம் எனும் சிற்றூரில் இன்றுதான் (09-08-1892) பிறந்தார்.

ஆகஸ்டு-10 கூவர்

ஹெர்பர்ட் கூவர் அமெரிக்காவின் 31-வது ஜனாதிபதியாக (1929-33) இருந்தவர்.

இவர் நல்ல நிர்வாகி, மனித நேயமிக்க மாமணி, சுரங்கப் பொறியாளர்.

இவரது ஆட்சியில் திறமைக்கும், வளர்ச்சிப் பணிக்கும் முக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை வகுத்தார்.

சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தொழில் நுட்ப ரீதியாக தீர்வு கண்டார்.

இவர் பதவியில் இருந்த காலத்தில் எவ்வளவோ மன இறுக்கத்தைக் கொடுக்கக்கூடிய சவால்களை எல்லாம் - தன் அறிவாற்றலால் எளிதாக சமாளித்தார்.

இவர் இளமையிலேயே பெற்றோரை இழந்ததால், இவர் மருத்துவராக இருந்த மாமாவிடம் வளர்ந்தார்.

தன்னுடைய முன்னேற்றம் தன்னாலேயேதான் நடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தார் இவர்.

அதனால், இவரது மாமாவின் அலுவலகத்தில் இருக்கும் போதே புக் கீப்பிங், டைப் போன்றவற்றை தனித்தே கற்றுக் கொண்டார். மாலை வேளையில் தொழில் கல்வியும் பயின்றார்.

இதற்கெல்லாம் காரணம் இவரது பள்ளி ஆசிரியை என்றே இவர் குறிப்பிடகிறார்.

மேலும், சார்லஸ் டிக்கன்ஸ், வால்டர் ஸ்காட் போன்ற ஆசிரியர்கள் எழுதிய நூல்களே இவரை நல்வழிக்கு இட்டுச் சென்றதாம்.

இந்த ஜனாதிபதி அமெரிக்காவில் இன்றுதான் (10.08.1874) பிறந்தார்.

❑

ஆங்கிலக் கவிஞரான லாரன்ஸ் பின்யான் என்பவரும் இன்றுதான் (10.08.1896) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-11 மாபெரும் தலைவர்

இங்கர்சாலின் இரண்டாவது வயதில் தாயார் காலமாகி விட்டார். தந்தை ஜான் கிறிஸ்துவ மதத்தில் அதிக நம்பிக்கைக் கொண்டிருந்தார். சிறுவயதில் இங்கர்சால் தன் தந்தையின் நூலகத்திலிருந்த வேத நூல் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் மற்றும் மதசம்பந்தமான நூல்களைப் படித்தார்.

இளமை முதலே இங்கர்சாலின் மனதில் மதக் கோட்பாடு களில் சிறிதும் நம்பிக்கையற்றவராக இருந்தார். மதவாதிகள் அச்சுறுத்தி அச்சுறுத்தியே, மதத்தை மக்களிடையே பரப்பி வருகின்றனர் என்ற சிந்தனை அவர் மனதில் எழுந்தது.

நரகம் பற்றி மதாச்சாரிகளின் பயங்கர வர்ணனைகள் சிறுவனான இங்கர்சாலின் மனதில் வேரூன்றிப் பதிந்து விட்டன. அச்சுறுத்தியே மதவாதிகள் மதத்தைப் பரப்பியதும், நரக வர்ணனையும் இங்கர்சாலின் வாழ்வில் திருப்புமுனையாக அமைந்துவிட்டன. இவற்றையெல்லாம் கண்டு தந்தை மிகவும் வேதனைப்பட்டார்.

பல நேரங்களில் தந்தைக்கும் மகனுக்கும் இடையே கடவுள் நம்பிக்கை, ஆத்மாவின் அழியாத் தன்மை போன்ற தத்துவங்களில் நீண்ட நேரம் வாக்கு வாதங்கள் நிகழ்வதுண்டு.

தாம் போற்றிப் புகழ்ந்து பிரச்சாரம் செய்து வந்த வேத நூலில் சிறுகச்சிறுக அவருக்கும் நம்பிக்கை குறைந்துபோனது. ஆத்திகரான தந்தை, நாத்திகரான மகனின் பகுத்தறிவுப் பேச்சால் அடிபட்டுப் போனார். இங்கர்சால், பள்ளி ஆசிரியராகவும், வழக்கறிஞராகவும், போர் வீரராகவும், அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார்.

இங்கர்சால் தனது வாழ்வின் இறுதி இருபத்தைந்து ஆண்டுகளை மூட நம்பிக்கைகளினின்று மக்களை மீட்கவும் பகுத்தறிவுப் பிரச்சாரத்திலேயும் கழித்தார். பணம் சேர்க்கும் எண்ணமே அவருக்கு இருந்ததில்லை. 'இன்பமாய் வாழ பணம் தேவையே அன்றி, பெட்டியில் பூட்டி வைக்க அல்ல' என்று இங்கர்சால் கருதினார்.

இந்த மாபெரும் தலைவர் அமெரிக்க நாட்டின் நியூயார்க் மாவட்டத்தில் உள்ள ட்ரெஸ்டென் நகரில் இன்றுதான் (11-08-1833) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-12 அடுத்தவரின் கூடு

ஜெஸிந்தோ பெனவெந்தே, பாரம்பரியமிக்க குடும்பத்தில் பிறந்ததால் என்னவோ சிறுவயதிலேயே நாடகக் கலையில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார்.

இவர் சிறுவனாக இருந்தபோதே பக்கத்து வீட்டுப் பிள்ளைகளை அழைத்து வைத்துக் கொண்டு, ஒரு சீலையைக் கட்டி பொம்மளாட்டம் நடத்திக் காட்டுவதில் கைதேர்ந்தவராக இருந்தார்.

இப்படி இளமையிலேயே நாடகப் பித்துப் பிடித்திருந்த தால், சட்டப்படிப்பைக்கூட தூக்கி எறிந்துவிட்டு நாடகத் துறையில் ஈடுபட்டார்.

இலக்கியத்துறையில் நாட்டம் கொண்டார். 1892 - முதல் நாடகத்துறையில் முழு மூச்சாக நுழைந்தார்.

'மங்கையரின் மடல்கள்' என்ற பெயரில் கவிதைத் தொகுப்பு நூலைப் படைத்தார். இதில் பெண்களின் மனவோட்டத்தைச் சித்தரித்திருந்தார்.

இவர் தம் வாழ்நாளில் 150 நாடகங்கள் படைத்திருக்கிறார். நாடக ஆசிரியராக இருந்ததோடு இயக்குநராகவும் இருந்தார்; தயாரிப்பாளராகவும் இருந்தார்.

'அடுத்தவரின் கூடு' என்ற நாடகம்தான் முதன் முதலாக 1894-இல் மேடையில் அரங்கேற்றமானது.

இவர் எழுதிய நாடகங்களுள் சிறந்தவையாகப் போற்றப் படுபவை. 'சனிக்கிழமை இரவு' நல்லதைச் செய்யும் தீயவர்கள்', செனோரா அமா', 'நூல்களிலிருந்து சகலமும் கற்ற இளவரசன்', 'நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொண்ட நகரம்'.

'சனிக்கிழமை இரவு' நாடகம் ஸ்பெயின் நாடெங்கும் மேடையேறியதால் ஒருவித பரபரப்பு ஏற்பட்டது. எங்கும் அந்த நாடகம் குறித்து மக்கள் பேசினர்.

இவர், வாழ்நாளில் திருமணமே செய்து கொள்ளாமல் பிரம்மச்சரியாக வாழ்ந்த பெனவெந்தே 1954 வரையிலும் அயராது நாடகமெழுதிக் குவித்தார்.

நாடெல்லாம் போற்றும் இந்த நாடகாசிரியர் இன்றுதான் (12-08-1866) பிறந்தார்.

❒

ஆகஸ்டு-13 வண்ணத்தொலைக்காட்சி

விஞ்ஞானி ஜான்லோகி பெய்ர்டினின் தந்தை ஒரு பாதிரியார். இவர் அறிவியலையே பனிரெண்டு வயதில் விரும்பினார். 17-வது வயதில் க்ளாஸ்கோவின் ராயல் தொழில்நுட்பக் கல்லூரியில் மின் பொறியியல் படிக்கச் சேர்ந்தார் - தேர்ந்தார். அவருடைய சிந்தனை முழுதும் தொலைக்காட்சியைக் கண்டுபிடிப்பதிலேயே இருந்தது. பலவித ஆய்வில் ஈடுபட்டார்.

ஒரு சமயம் வீட்டில் இருந்த அலம்பும் தட்டுத்தாங்கியை ஆதாரமாகக் கொண்டார். பழைய கடையில் வாங்கிய தேயிலைப் பெட்டகத்தை அதில் இணைத்தார். மின் பொருள் கடையின் குப்பைகளில் கிடந்த பழைய மின்சார மோட்டாரைப் பொருத்தினார். ஒரு காலி பிஸ்கட் டின்னில் நான்கு பென்னி விலையுள்ள லென்சுகளால் பொருத்தப்பட்ட ப்ரொஜக்டர் விளக்கு வைக்கப்பட்டது. அங்கு வேறுசில போர்ப் படையினரால் கைவிடப்பட்ட கம்பி இல்லாத் தந்திக் கருவிகள், தைக்கும் ஊசிகள், டார்ச் பாட்டரிகள் மரத்துண்டுகள் எல்லாம் இருந்தன. இவையாவும் பிசின், கயிறு, அரக்கு, மின்கம்பிகளால் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டிருந்தன. இந்தக் கருவிகளை மாதக் கணக்கில் முறைப்படுத்தல், மாறுபடுத்தல், மேம்படுத்தல் என்று பலவகைகளில் ஆய்வு செய்து தொலைக்காட்சி அனுப்பும் கருவியும் பெறும் கருவியையும் அமைத்தார். இறுதியில் 1924-இல் கம்பியின் மூலம் மூன்று கஜத் தொலைவிலிருந்து சிலுவையின் உருவப் படத்தை ஒளி பரப்பினார்.

இன்று நாம் காணும் வண்ணத் தொலைக்காட்சிக் கெல்லாம் அடித்தளமிட்டவர் பெய்ர்டிக்கே ஆவார். இந்த வெற்றியை அடைய அவர் பட்ட பாடுகள் கொஞ்சமல்ல. வேலையற்ற நிலையில் வறுமையில் தேன், சோப்பு என்று வீதிவீதியாய் விற்று அலைந்தார். வறுமை அவரை வறுத் தெடுத்தது. நோயால் நொம்பலப்பட்டார். ஆனால் மனவலிமை யால், உறுதியான நம்பிக்கையால் சாதனை சரித்திரம் படைத்தார். இந்தத் தொலைக்காட்சியைத் தொல்லுலகிற்கு அறிமுகம் செய்து வைத்த இந்த அறிவியல் மேதை இன்றுதான் (13-08-1888) பிறந்தார். ❑

பழவியாபாரி ஒருவரின் மகனாகப் பிறந்து, தம் வாழ்நாளில் தாம் இயக்கிய 72-படங்களையும் வெற்றிப் படங்களாக்கிய, திகில்பட மன்னனான ஆல்பர்ட் ஹிச்சாக் என்ற உலகப் புகழ்பெற்ற திரைப்பட இயக்குநரும் இன்றுதான் (13-08-1899) பிறந்தார். ❑

ஆகஸ்டு-14 சாரளங்கள்

ஜான் கால்ஸ்வொர்த்தி, ஹாரோ மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்ற பின் வழக்கறிஞர் ஆனார். ஆனால், அத்தொழிலில் ஈடுபட விரும்பாமல் இலக்கியத் துறையில் தன்னை இணைத்துக் கொண்டார். இருபத்து எட்டு வயதில்தான் அத்துறையில் எழுத்தாளராக அறிமுகம் ஆனார்.

அவரின் முதல் நூல் 'நான்கு திசைக் காற்றுகளிலிருந்து' இது சிறுகதைத் தொகுப்பு. 1897-இல் 'ஜாஸிலின்' என்ற பெயரில் நாவல் வெளிவந்தது.

இந்த நாவல் இவர் பெயரை பிரபலப்படுத்தியது. 1904-இல் வெளியான 'குருமார்களின் தீவு' என்ற நூல் இலக்கிய உலகில் இவர் பெயரை குறிப்பிடத்தக்கவராக ஆக்கியது. ஜான் நாடகத்தைப் பொறுத்தமட்டில் 27 படைத்துள்ளார். அவர் முதன் முதலாக எழுதிய 'வெள்ளிப் பெட்டி' 1906-இல் வெளிப்பட்டது. இந்த நாடகத்தின் கதை அமைப்பும், காட்சி அமைப்பும், சமூக மேம்பாட்டுக் கருத்தும், இவரின் நாடகப் புலமையை வெளிப்படுத்தியது.

ஓகோவென்று அவர் புகழை உயர்த்தியது. சிறுகதை உலகிலும், நாவல் உலகிலும் கிட்டாத புகழ் நாடகத்தில் மட்டுமே அவருக்குக் கிடைத்தது. 'வெள்ளிப் பெட்டி' வெளிவந்த அதே 1909-இல் 'ஸ்ட்ரைஃப்' என்ற நாவலும் வெளிவந்தது.

'மக்கள் கூட்டம்', 'அடித்தளங்கள்', 'தி ஸ்கின் கேம்', 'நம்பிக்கைகள்', 'தப்பித்தல்', 'ஒரு குடும்பஸ்தன்', 'சாளரங்கள்', 'வனம்', 'நாடு கடத்தப்பட்டவன்', 'ஐந்து கதைகள்', 'உத்தரம்', 'சின்னவன்' போன்ற நாடகங்களும் அவர் புகழ் மகுடத்தில் வைரங்களைப் பதித்தன.

மனித நேயமும், சமூக நோக்கமும் கொண்ட அவர், நோபல்பரிசில் கிடைத்த எல்லாப் பணத்தையும் கவிஞர்கள், எழுத்தாளர்களுக்கான நிறுவனத்திற்கு அன்பளிப்பாக கொடுத்துவிட்டார்.

இந்த மனித நேயமிக்க எழுத்தாளர், இங்கிலாந்தின் சர்ரே மாநிலத்திலுள்ள கோம்பீயில் இன்றுதான் (14-08-1867) பிறந்தார்.

ஆகஸ்டு-15 புரட்சி எழுத்தாளர்

வங்காள மாநிலம் இந்திய விடுதலைக்கு அளித்த எண்ணற்ற தேசத் தலைவர்களில் அரவிந்தகோஷ் முக்கிய மானவர்.

ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலிய மொழி களிலும் புலமை பெற்றிருந்த அரவிந்தர், ஐ.சி.எப்.தேர்வின் ஒரு அங்கமான குதிரை ஏற்றத்தைப் புறக்கணித்து, தேர்வில் வெற்றி பெறாமலேயே 1883-இல் இந்தியா திரும்பி, பரோடா மன்னரின் அரசவையில் பதின்மூன்று ஆண்டுகள் பணிபுரிந்து வந்தார். வங்கமொழி, சமஸ்கிருதம் ஆகியவற்றைக் கற்றதோடு, தேச பக்திக்கு ஆட்பட்டு அரசரிடம் பணி செய்வதை உதறிவிட்டு, இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

அரவிந்தர் மிகச்சிறந்த பத்திரிகையாளர், தீவிர எழுத்தாளர், அவரது கனல் கக்கும் எழுத்தும், புரட்சிகரமான செயல் பாடுகளும் அவரை இந்திய சுதந்திரப் போராட்டத்தின் சிறந்த தலைவராக மாற்றின. விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதிதை மூலம் பரோடா மன்னரை அணுகி புரட்சி யாளர்களுக்கு ஆயுத உதவியும், பண உதவியும் அளிக்க வேண்டுமென அரவிந்தர் கேட்டுக் கொண்டார். பரம சாதுவாக காணப்பட்ட அரவிந்தர் ஒரு பெரிய புரட்சிக்காரர் என அறிந்த மன்னர் ஆச்சரியப் பட்டார்.

அரவிந்தரை ஒழித்துக்கட்ட ஆங்கில அரசு தீர்மானித்து வெடிகுண்டு சதிவழக்கு ஒன்றில் அரவிந்தரைப் பொய்யாக இணைத்து தேச துரோக குற்றம் சாட்டி அளிப்பூர் சிறையில் ஓராண்டு அடைத்தது. பின் வழக்கில் நிரபராதி என்ற நிலையில் விடுதலை ஆனார்.

1910-ஆம் ஆண்டு கொல்கத்தாவிலிருந்து பிரெஞ்சு நாட்டின் ஆதிக்கத்திலிருந்த புதுச்சேரிக்கு அரவிந்தர் வந்தார். அங்கே ஆசிரமம் அமைத்து ஆன்மிகத்தைப் பரப்பி வந்த போதும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஆலோசனை களையும், உதவிகளையும் செய்யத் தவறியதில்லை. அவரது ஆன்மிக மையங்கள் இன்று உலக முழுதும் பரவியுள்ளன.

தேச விடுதலைக்காகவும், மக்களின் ஆன்மிக விடுதலைக்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அரவிந்தர் கொல்கத்தாவில் இன்றுதான் (15-08-1872) பிறந்தார்.

□

ஆகஸ்டு-16 இளைஞர் சங்கம்

மெனக்கம் பிக்கின். இவர் ஒரு சட்ட நிபுணர்.

வால்டினிர் என்ற மேதையிடம்தான் இவர் சட்ட நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார்.

இவர் இளமையில், 'இளைஞர் சங்கம்' ஒன்றைத் தோற்றுவித்து, அதன் வழியே பொதுநலச் செயல்களைச் செய்தார்.

ஜெர்மன் படையெடுப்பின்போது அந்தப் போரிலிருந்து தப்பித்து சோவியத் நாட்டிற்கு ஓடிவிட்டார்.

அங்கு இவரை இங்கிலாந்து நாட்டு உளவாளி என்று சந்தேகம் கொண்டு, பிடித்து சைபீரியாவுக்கு அனுப்பி, அங்கே இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையை அனுபவித்தார்.

இவரது வாழ்க்கை வரலாற்றை பின் நாளில் எழுதும் போது, சிறை தண்டனையை விளக்கமாக எழுதினார்.

1941-இல் சிறையில் இருந்து விடுதலையாகி பாலிஸ் நாட்டு இராணுவத்தில் சேருகிறார். அங்கிருந்தபடியே பாலஸ்தீனம் சென்றுவிடுகிறார்.

இந்த வேளையில் யூதர் தேசிய இயக்கத்தைத் தோற்று விக்கிறார்.

இதன்வழியே உலகில் சமாதானத்தைத் தேட முயல்கிறார். அதில் வெற்றியும் பெறுகிறார்.

இவரது தொண்டினைப் பாராட்டி பிற்காலத்தில் அமைதிக்கான நோபல் பரிசே கிடைத்தது.

இவர், இஸ்ரேல் நாட்டின் பிரதமராகவும் இருந்திருக்கிறார்.

இந்த மேதை பிரிஸ் நாட்டில் இன்றுதான் (*16.08.1913*) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-17 5-10 அடி

டேவிட் குரோகெட். இவர் நாட்டுப்புறப் பாடல்களில் தேர்ச்சி பெற்றவர்.

இவர் எழுதிய நாட்டுப்புறப் பாடலில், 'கிங் ஆஃப் த ஒயில்டு பிராண்டியர்' என்ற பாடல் உலகப் புகழ் பெற்றது.

எக்ஸாஸ் என்ற நகரில் புரட்சி ஏற்பட்டபோது, அதில் கலந்து கொண்டார். டெனிசி என்னும் ஊரில் இவர் பிறந்தார்.

இவரது பெற்றோர் ஜான்-ரெபெக்கா. இவர்களுக்குப் பிறந்த குழந்தைகளில் இவர் ஐந்தாவதாகப் பிறந்தவர். இவர் குடும்பத்தில் இவரே அதிகமான உயரம் (5.10 அடி) கொண்டவர்.

இவரது திருமண நிகழ்ச்சியே விநோதமாக இருந்திருக்கிறது.

ஆமாம். இவருக்கு மனைவியாகப்போகும் மார்க்ரெட் எல்டர், மணமேடையில் அமர்ந்திருக்க, மேடையை நோக்கி நடந்து வந்த டேவியைப் பார்த்த பெண், மேடையில் இருந்து எழுந்தே ஓடியிருக்கிறாள்.

1826-இல் அமெரிக்க நாட்டு பிரதிநிதிகளில் ஒருவராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நிலச்சுவான்தார்களை ஒடுக்கினார். அரசின் ஊழல்களை எதிர்த்துக் கேட்டார்.

அரசு மக்களின் வரிப்பணத்தை வீண் செலவு செய்யக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்.

இவர், டெனிஸி என்ற ஊரில் இன்றுதான் (17.08.1786) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-18 பூகோளம்

மெரி விதர்லிவிஸ். இவர் அமெரிக்க அரசியல்வாதி, படைவீரர். பூகோள கண்டுபிடிப்பாளர். பொது நிர்வாகத்தில் சிறந்தவர்.

இவர் வெர்ஜினியாவில் கல்வி கற்றார். இராணுவத்தில் பணியாற்றியதோடு, பெலடெல்பியா நாட்டின் தலைவருக்கு அந்தரங்கக் காரியதரிசியாக இருந்தார்.

இவர் கடல் கடந்து சென்று பூகோள ஆய்வில் ஈடுபட்டார். இதைப் பாராட்டி *1500* ஏக்கர் நிலம் பரிசாக வழங்கப்பட்டது இவருக்கு.

மிசோரியில் கவர்னராக ஆனார். இராணுவத்தில் சேர்ந்து பணி செய்து கொண்டிருந்தபோது, தளபதி பதவி கிடைக்கும் வேளையில் பணியை விட்டு வெளியேறிவிட்ட அதிர்ஷ்டம் இல்லாத மனிதர் இவர்.

இவர், வெர்ஜினியாவில் இன்றுதான் *(18.08.1774)* பிறந்தார்.

❏

புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் ஆண்ட்ரூ மார்வெல் என்பவரும் இன்றுதான் *(18.08.1678)* பிறந்தார்.

❏

ஐ.நா. பொதுச்சபைத் தலைவர் பதவி வகித்த முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவருமான திருமதி.விஜய லெட்சுமி பண்டிட்டும் இன்றுதான் *(18.08.1900)* பிறந்தார்.

❏

ஆகஸ்டு-19 கரண்டு மாதிரி

சென்னை கிடங்குத் தெருவில், 1931-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், தீரர் சத்திய மூர்த்தி தலைமையில், அந்நிய துணி பகிஷ்காரம் நடந்தது.

வெற்றிலைப் பிரியரான தீரர், போராட்டத்தினிடையே வெற்றிலைபோட அருகேயுள்ள அய்யாவுச் செட்டியார் பெட்டிக் கடைக்குச் சென்றார்.

அப்போது கடைக்காரர், "ஐயா! எனக்கொரு சந்தேகம். நீங்கள் இங்கே நடத்துகிற போராட்டம் இலண்டனிலே இருக்கிற வெள்ளைக்காரர்களுக்கு எப்படித் தெரியப் போகிறது?" எனக் கேட்டார்.

சத்தயமூர்த்தியோ வெற்றிலையை மென்றவாறே, "உங்கள் கடைக்கு மேலே அமைத்திருக்கிற விளக்கு அழகாய் இருக்கிறதே, அது எரியுமா?" என்று கேட்டார்.

"நன்றாய் எரியுமே!" எனக் கடைக்காரர் கூறி, சுவிட்ச்சை அழுத்தியதும், கடைக்கு மேலே இருந்த விளங்கும் பளிச்சென்று எரிந்தது. உடனே சத்தியமூர்த்தி, "கடைக்கு வெளியே உயரத்திலேதானே அந்த பல்பு இருக்கிறது. அது எப்படிச் சட்டென்று எரிந்தது?" என்று ஒன்றும் தெரியாதவர் போல் கேட்டார்.

"என்னங்க இது! இந்த ஸ்விட்ச்லே கரண்ட் இருக்கிறது. இதை இங்கே அழுத்தியதும் அங்கே பல்பு எரியும். இதுகூடத் தெரியாதுங்களா?" என்று பதில் சொன்னார், செட்டியார்.

உடனே சத்தியமூர்த்தி, "அது மாதிரிதான் இதுவும். இங்கே போராட்டம் செய்தால், 'கரண்ட்' மாதிரி இலண்டனில் இருக்கிற வெள்ளைக்காரன்களுக்கு மத்தியில் உடனே விளைவு ஏற்படும்" என்றார்.

தீரரின் தீர்க்க தரிசனமான வார்த்தைகள் பின்நாளில் வெற்றி பெற்றதை, நாடே அறியுமே! திலகரின் தீவிரவாதக் கொள்கையும், அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயராஜ்ய கருத்தும், காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போர்முறையும் சத்தியமூர்த்தியை தேசத் தொண்டராக்கியது.

தீரர் சத்தியமூர்த்தி புதுக்கோட்டையில் இன்றுதான் (19-08-1887) பிறந்தார்.

ஆகஸ்டு-20 கிரேக்கப் பாடல்கள்

கணிதமும் பொறியியலும் பயின்ற சல்வத்தோர் குவாஸி மோடோ பட்டப் படிப்புக்காக ரோமுக்குச் சென்றார்.

அங்கு பட்டம் பெற்றவர் இத்தாலிய அரசு அலுவலகங்களில் பத்து ஆண்டுகள் பணியாற்றினார். அந்த நேரத்தில் தான் அவர் கவிதை எழுதுவதிலும் ஈடுபட்டு இருந்தார்.

'பிளாரண்டைன் இதழான சோலாரியாவில் தான் இவரின் கவிதைகள் முதன் முதலாக வெளிவந்தன. தன்னுடைய கவிதைகள் அச்சில் வர வேண்டும் என்ற ஆவலில் நண்பர்களுடன் சேர்ந்து செய்தித்தாள் ஒன்றைச் சொந்தமாகத் தொடங்கினார். அதன் வழியே தன் கவிதைகளை வெளியிட்டு மகிழ்ந்தார். ஆனால், அந்த இதழ் நீண்ட நாள் மலரவில்லை. அதனால் நேரடியாக இலக்கியத்துறையில் இறங்கினார்.

1930-இல் 'நிலமும் நீரும்' என்ற கவிதைத் தொகுப்பு முதல் முதலில் முகிழ்த்தது. அத்தொகுப்பு அவரை நல்ல கவிஞராக அறிமுகப்படுத்தியது.

இதைத் தொடர்ந்து, 'மூழ்கிய ஓபோ', 'ஈக்லிப்டஸ்', 'ஏராட்டோவும் அப்போலியானும்' கவிதைத் தொகுப்போடு 1938-இல் 'கவிதைகள்' என்று அடுத்தடுத்து கவிதைத் தொகுப்புகள் வெளிவந்து அவரின் கவித்திறனை உலகிற்குக் காட்டி - அவர் புகழையும் கூட்டியது.

இந்தப் புகழ் அவருக்கு ஒரு பத்திரிகையில் துணை யாசிரியர் பணியையும் தேடித் தந்தது. அடுத்த ஆண்டே பிரதான ஆசிரியர் பணியிலும் அமர்த்தியது.

ஆசிரியர் பணியில் இருந்த போதும் அவர் இலக்யிப் பணியை மறந்துவிடவில்லை. கிரேக்க கவிதைகளை இத்தாலிய மொழியில் ஆக்கி 'கிரேக்கப் பாடல்கள்' எனும் தலைப்பிட்டு வெளியிட்டார். நாடகங்களும், விமர்சனக் கட்டுரைகளும் எழுதினார். புகழ்க்கொடி நாட்டினார். 1959-இல் நோபல் பரிசும் அவருக்குக் கிடைத்தது.

இந்த எழுச்சிமிக்க எழுத்தாளர் இத்தாலியில் இன்றுதான் (20-08-1901) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-21 சுமைதாங்கி

ஜீவா இயல்பிலேயே அன்பான சுபாவம் உடையவர். கொட்டும் தேளைக் கண்டாலும் கொல்லாமல் அதை அப்புறப்படுத்துபவர். ஆனால், நெஞ்சுரமும், நேர்மையும், நாவன்மையும் கொண்டவர்.

தீண்டாமை, சாதி, மூடப்பழக்க வழக்கங்களை எதுர்த்து, சமதர்மத்திற்காக, தன்னை இளம் வயதிலேயே அர்ப் பணித்தும் கொண்ட மாபெரும் தியாகி, ஜீவா, இதற்காக நாச்சியார்புரம் என்ற ஊரில் 'உண்ணும் விளக்க நிலையம்' ஒன்றையும், காந்தி ஆசிரமத்தையும் தொடங்கினார்.

இளம் வயதிலேயே தேசத் தொண்டிற்காக காந்தி யடிகளையும், சமூகத் தொண்டிற்காக பெரியாரையும் வழிகாட்டியாகக் கொண்ட ஜீவா, அந்நியர் ஆட்சியின் அடக்குமுறைகளை எதிர்த்து பலமுறை சிறை சென்றிருக்கிறார்.

'மனிதன் மேன்மைப்பட வாழ்வதற்கு சமூக சீர்திருத்தம் மட்டுமே போதாது; சமூகப் பொருளாதார அமைப்பையே மாற்ற வேண்டும்' என்ற நோக்கத்துடன் கம்யூனிஸ்டாக மாறினார், ஜீவா. ஜீவா மிகச் சிறந்த தமிழறிஞர், 'தாமரை' என்ற இலக்கிய இதழை ஆரம்பித்து சிறப்பாக நடத்தினார்.

ஒருமுறை அணிந்த துணியையே மறுமுறையும் தோய்த்துக் கட்டும் அளவுக்கு மாற்றுத்துணி இல்லாத நிலையில் ஏழ்மையாகவும், எளிமையாகவும், ஓட்டை குடிசையிலும் வாழ்ந்தவர். கதராடை கிடைக்கவில்லை என்பதற்காக தாய்க்கு ஈமச்சடங்கு செய்ய மறுத்தவர்.

பெருந்தலைவர் காமராசருக்கு நெருங்கிய நண்பராக இருந்தவர், ஜீவா எம்.எல்.ஏ.வாக இருந்தபோதும் செல்வாக்கு களைப் பயன்படுத்தி கொள்ளையடிக்கத் தெரியாதவர். அதனால்தான், 'மாசற்ற பொதுஜன ஊழியர்' என்று காமராசரும்,, 'துன்பச் சுமைதாங்கி, அன்புச்சுமை தாங்கும் ஆண்' என்று பாரதிதாசனும் போற்றும் பெருமைக்குரியவராக விளங்கினார், ஜீவானந்தம்.

இத்தியாகத் திருமகன் குமரி மாவட்டம் - பூதப்பாண்டி என்ற கிராமத்தில் இன்றுதான் (21-08-1907) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-22 மோட்சப்பயணம்

இந்தியாவிற்கு சமயத் தொண்டாற்ற மேலை நாட்டில் இருந்து பலர் வந்துள்ளனர். வந்தவர்கள், இங்கே தமிழையும் கற்று, நூல்கள் பல எழுதியுள்ளனர்.

இவர், டார்ட்ஸ் மௌத் கல்லூரியில் *1818*-இல் பட்டக் கல்வியை முடித்தபோதே அதே ஆண்டில், அண்டோவர் இறையியற் கல்லூரியிலும் பட்டம் பெற்றார், ஸ்பால்டிங்.

சமயத்தொண்டு ஆற்றுவதற்காக *1819*-ஆம் ஆண்டு கப்பலில் பயணம் தொடங்கிய இவர், *1820*-இல் இலங்கை வந்தடைந்தார். அங்கே மணப்பை எனும் ஊரில் பல ஆண்டுகள் மனைவியோடு இருந்தார்.

1833-இல் உடுவில் என்னும் ஊருக்குக் குடியேறி அங்கு இருந்த மகளிர் பள்ளியினையும், அதைச் சார்ந்த மாணவர் விடுதியையும் தன் மனைவியுடன் சேர்ந்து பொறுப்பேற்று நடத்தி வந்தார். மிகச்சிறந்த முறையில் அப்பணியை நாற்பதாண்டுகள் நடத்தி வந்தனர்.

இவர் இலண்டன் மிஷன் சொசைட்டியைச் சேர்ந்தவர். இடையில் இரண்டு ஆண்டகள் அமெரிக்காச் சென்று மீண்டும் இலங்கைக்கே திரும்பினார். கிறித்துவ சமயத்தைப் பற்றி தமிழில் இருபது நூல்களுக்கு மேல் எழுதியுள்ளார். பாடல்கள் பலவும் புனைந்துள்ளார்.

மறைதிரு.ஜான் பன்யன் எழுதிய 'மோட்சப் பயணம்' எனும் நூலை தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார்.

சமயத் தொண்டோடு, தமிழ்த் தொண்டும் செய்த இவர் உடுவில் *1874*-ஜூன் *8*-இல் இயற்கை எய்தினார்.

சாதிமத பேதமற்று எல்லோருக்கும் உதவி வந்த இம்மறையாளர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இன்றுதான் *(22-08-1791)* பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற இசையமைப்பாளரான கிளாடி டெம்பஸ் என்ற கலைஞரும் இன்றுதான் *(22-08-1862)* பிறந்தார்.

ஆகஸ்டு-23 சிவஞான போதம்

தமிழ் இனிய மொழிமட்டுமல்ல, அந்நியரையும் தன்பால் இழுத்து இணைத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றது...

எச்.ஆர்.ஹாய்சிங்டன் பதினைந்து வயதிலேயே அச்சுக்கலை இயல் பயின்று தேர்ந்தார். இதே தொழிலை நியூயார்க் நகரில் ப்ளும்ஃபீல்ட் கல்லூரியில் மேற்கொண்டும் படித்தார். பின்னர் வில்லியம்ஸ் கல்லூரியில் 1828-இல் பட்டம் பெற்றார். ஆபர்ன் இறையியற் கல்லூரியில் சேர்ந்து 1831-இல் சமய குருவாகவும் ஆனார்.

குருநிலையில்; அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்து சேர்ந்தார். சேர்ந்தவர், இலங்கை யிலுள்ள பட்டிக்கோட்டா இயற்பியற் கல்லூரியில் பத்தாண்டுகள் பணியாற்றினார், ஹாய்சிங்டன்.

இதே கல்லூரியில், இறையியற்துறைத் தலைவராக பொறுப்பேற்றார். 1842-இல் உடல்நிலை காரணமாக சொந்த ஊர் சென்ற இவர் மீண்டும் ஓர் ஆண்டிலேயே திரும்பி வந்தார். விடா முயற்சியோடும், வெறிபிடித்த நிலையிலும் தமிழைக் கற்றுப் புலமை பெற்றார்.

ஆழ்ந்து தமிழ்க் கற்றதால், சைவநெறியில் பற்றுதல் அதிகமாயிற்று அவருக்கு. பின் சைவத்தையும் கற்றுத் தேர்ந்தார். அதன் பயனாக கந்தபுராணத்தை தாம் பணியாற்றும் இறையியற் கல்லூரியில் பாடமாகவே வைத்தார். கிறித்துவப் பள்ளிகளில் கூட கந்தபுராணம் பாடநூலாயிற்று.

சைவப்பற்று காரணமாக ஹாய்சிங்டன், 1854-இல் சைவம் பற்றிய தத்துவ விளக்கங்களோடு மூன்று நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார்.

இவரது தமிழ்த் தொண்டை அறிந்த, தமிழறிஞர் நல்லுசாமிப்பிள்ளை பெரிதும் பாராட்டி மகிழ்ந்தார். அதன் பயனாக 'சிவஞான போதம்' என்னும் தமிழ் சைவ சமய மதத்தை ஹாய்சிங்டன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். தமிழ் - சைவத் தொண்டாற்றிய அறிஞர் ஹாய்சிங்டன், 1858-ஆம் ஆண்டு மே 16-இல் அமரரானார்.

பன்மொழி கற்ற இந்தப் பண்பாளர் அமெரிக்க ஐக்கிய நாட்டில் இன்றுதான் (23-08-1801) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-24 தேசியப் பேராசிரியர்

பேராசிரியர் டி.எம்.பி.மகாதேவன், பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ.தத்துவம் படித்தார். *1937*-முதல் *41*-வரை தத்துவப் பேராசிரியராகப் பணிபுரிந்த இவர் *1943*-இல் சென்னை பல்கலைக்கழக தத்துவத்துறைத் தலைவராக சேர்ந்தார்.

உலகின் பல பல்கலைக் கழகங்களுக்கும் சிறப்பு விருந்தினராக சென்று இந்திய தத்துவங்களின் சாரம், வேதாந்தம் ஆகியவை பற்றி உரையாற்றியுள்ளார். உலக தத்துவம் பற்றி பத்து நாள் தொடர் கருத்தரங்கம் ஒன்றை சென்னையில் நடத்தியுள்ளார். ஆதிசங்கரரின் அத்வைதத் தத்துவத்தில் ஆழ்ந்த புலமையுள்ள மகாதேவனிடம் பாடம் கற்பதற்காக கிரேக்க நாட்டு அரசி 'இராணி பிரடெரிகா' சென்னைக்கே வந்து தங்கியிருந்து இவரிடம் தத்துவம் கற்றுச் சென்றார்.

'தேசியப் பேராசிரியர்' என்ற உயர்ந்த பதவியை வழங்கி இவரை சிறப்பித்த இந்திய அரசு 'பத்மபூஷன்' எனும் நாட்டின் உயர்ந்த பட்டத்தையும் வழங்கி சிறப்பித்தது. இந்தியக் குடியரசுத் தலைவரும் தத்துவத்துறையில் தலைசிறந்த வருமான டாக்டர் இராதாகிருஷ்ணனுக்கு அடுத்து இந்தியாவின் தலைசிறந்த தத்துவப் பேரறிஞராக விளங்கியவர் மகாதேவன் அவர்கள்தான்.

1971-இல் பாரீஸ் மாநகரில் பன்னாட்டு தத்துவ நிறுவனத்தின் உறுப்பினராக இருந்த இவருக்கு, கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இவரை கௌரவித்தது. 'வேதாந்த வித்தகர்' என்ற பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. சங்கரரின் பக்தரான இவர் சங்கரருக்கு சென்னையில் ஒரு நினைவு மண்டபமும் கட்டியுள்ளார்.

இந்தத் தத்துவமேதை சென்னையில் இன்றுதான் *(24-08-1911)* பிறந்தார்.

❒

இங்கிலாந்தில் அடிமைமுறை ஒழிப்புக்குப் பாடுபட்ட போராட்ட வீரரும், அரசியல்வாதியுமான வில்லியம் வில்பர்ஃபோர்ஸ் என்பவரும் இன்றுதான் *(24-08-1759)* பிறந்தார்.

❒

ஆகஸ்டு-25 இசைமேதை

அச்சிறுவனுக்கு படிப்பில் பிடிப்பு இல்லை. ஆனால் புறாக்கள் போட்டி, கோழிச் சண்டை, குத்துச்சண்டை என்று அவன் அறிவு அலைந்தது. அவ்வேளையில்தான் காஞ்சி கோயிலுக்கு காவியுடை சாமியார் வந்தார். வீட்டருகே கோயில் இருந்ததால் கூட்டத்தோடு கூட்டமாக அங்கே சென்றிருந் தவனை அருகில் அழைத்துப் பேசினார். திருநீறு பூசிவிட்டார். 'இனி உங்கள் சொல்படி நடப்பேன்' என்று அவன் மனம் மாறினான்.

அவனுக்கு இசை பயிற்சியளித்தார். அவனும் பயிற்சியைத் தனியே அமர்ந்து தொடர்ந்தான். விரைவிலேயே இசையுலகில் அடி எடுத்து வைத்தான். அந்தச் சிறுவன்தான் 'லயஞான சிரேஷ்டர் நாயனாப் பிள்ளை (சுப்ரமணியம்) அவர்கள். இவர் இசையில் உயர்வு பெற்றபோது, ஒரு நாள் கோனேரி ராஜபுரம் வைத்தியநாத அய்யரின் கக்சேரியை சென்னையில் கேட்கும் வாய்ப்புப் பெற்றார்.

அவர் இசையிலும், அவர் பல்லவி பாடும் பாணியிலும் மனதை பறிகொடுத்தவர், அவர் முறையை தீவிரப்பயிற்சி கொண்டு லய மேதையானார். திருப்புகழை எத்தனை உணர்ச்சியோடு பாடுவாரோ, அதே உணர்வோடு தியாகராஜ கீர்த்தனைகளும் பாடுவார். தியாகராஜ கிருதிகள் நானூருக்கும் மேல் அவருக்குப் பாடம். பல்லவி பாடுவதில் 'சூரர்' என்று பெயர் பெற்றதோடு, ரக்திராகங்களைப் பாடுவதோடு அபூர்வ ராகங்களையும் அழகாகக் கையாண்டார். கச்சேரிகள் அதிகமாயின.

அந்த காலத்திலேயே ரூ.5000 - ரூ.6000 என்று வாங்கப் பட்டதாம். அப்படி சம்பாதித்தை எல்லாம் பிறருக்காகவே அதிகம் செலவிட்டு, பின்னர் கஷ்டப்பட்டிருக்கிறார். கடைசி வரை 'கிராமபோன் இசைத்தட்டுக்குப் பாடக்கூடாது' என்று இருந்தார். 'இசை தெய்வீகமானது. இசைத்தட்டுக்களை டீக்கடை, முடிதிருத்தகம் போன்ற இடங்களில் ஒலிபரப்பி, இசையின் தரத்தைத் தாழ்த்திவிடுவார்கள். பாடகருக்கும் சரி, இசைக்கும் சரி, இது கௌரவக் குறைவான விஷயம்' என்பது அவர் கருத்து.

இந்த இசைமேதை இன்றுதான் (25-08-1889) பிறந்தார். ❑

ஆகஸ்டு-26 அன்பாலயம்

அன்னை தெரசாவின் இயற்பெயர். ஆக்னஸ்கோன்சா பொஜாஹிபு என்பதாகும். ஏசு மீது கொண்ட ஈர்ப்பினால் இறைப் பணியாற்ற இந்தியாவிற்கு வந்தார். அன்னை தனது 19-வயதில் கப்பல் வழியே கொல்கத்தா வந்தடைந்தார். கொல்கத்த்வை வந்தடைந்த அன்னை லோரேட்டரா கன்னியர் நடத்திய புனித மரியன்னை உயர்நிலைப் பள்ளியில் புவியியல் கற்பிக்கும் ஆசிரியர் பணியில் சேர்ந்தார்.

1939-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் நாள் தனது இறுதி உறுதிமொழியை டார்ஜிலிங்கில் எடுத்து முழு கன்னியானார். அப்போது தான் தன் பெயரை 'தெரசா' என்று மாற்றிக் கொண்டார். கொல்கத்தாவிலிருந்து டார்ஜிலிங்கிற்கு ரயிலில் செல்லும் போதுதான் அன்னையின் ஈர இதயம் ஏழைகளுக்கு, ஆதரவற்றோர்க்கு உதவ வேண்டும் என்று எண்ணியது. உடனே செயலிலும் இறங்கினார்.

முதன்முதலில் கொல்கத்தாவில் மோதிஜ் சேரியில் ஐந்து ரூபாயில் ஒரு குடிசையை வாடகைக்கு எடுத்து ஏழைகளுக்கும் தொழு நோயாளிகளுக்கும் தொண்டு செய்யத் தொடங்கினார். இவர் முதன் முதலில் தொடங்கிய பள்ளி எப்படி அமைந்தது தெரியுமா...? அப்பள்ளிக்குக் கூரை கிடையாது. சுற்றுச்சுவர் கிடையாது... எழுத கரும்பலகைக் கிடையாது. அன்னை உட்கார கூட நாற்காலி கிடையாது. மரத்தடியில் தான் பள்ளி! சிறுவர்களோ... ஐந்துபேர்.

1950-ஆம் ஆண்டு அன்னையின் அறப்பணி இயக்கம் கொல்கத்தா உயர்நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டது. ஐந்து பேர்களுடன் தொடங்கப்பட்ட அன்னையின் புனித, மனித நேயப் பணி இன்று நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளில் விரிந்து பரந்து விழுதுவிட்டிருக்கிறது. மொத்த சேவை மையங்கள் ஐநூறுக்கும் மேலாக இயங்கி வருகின்றன.

ஏழை எளியோருக்கும், தொழுநோயர்களுக்கும், ஆதர வற்ற குழந்தைகளுக்கும் அன்னையைப்போல் பணிபுரிந்தவர் உலகில் ஒருவருமில்லை. அதேபோல், இவரைப்போல் விருதுகளைப் பெற்றவருமில்லை. அமைதிக்கான நோபல் பரிசையும் பெற்றார்.

தாயாகப் பிறந்து கன்னியாகவே வாழ்ந்த இந்தப் புனிதவதி இன்றுதான் (26-08-1910) யூகோஸ்லாவியா நாட்டில் பிறந்தார்.

❑

ஆகஸ்டு-27 வசந்தமும் பின்பனியும்

உலகப் பேரறிஞர்களில் - சிந்தனையாளர்களில் ஒருவர் கன்பூசியஸ். இவர் சீனாவைச் சேர்ந்தவர். இளமையிலேயே தந்தையை இழந்ததால், வறுமையோடு தாயின் வளர்ப்பில் வளர்ந்தார். ஏழு வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அப்போதே அறிவுமிக்கவராக இருந்தார். மற்றவருக்குத் தெரியாத பல விசயங்கள் அவருக்குத் தெரிந்தன. பதினேழு வயதில் பள்ளியாசிரியராக பணி செய்தார். 19-வயது மணம் புரிந்து கொண்டார். பின்னர் ஆசிரியர் பணியை விட்டு ஒரு பண்ணையில் கணக்கராகவும், கால்நடை பராமரிக்கும் பணியிலும் இருந்தார். மீண்டும் ஆசிரியர் பணியினை ஏற்றார். அவ்வேளையில்தான் ‘கலைக்கழகம்’ என்னும் கல்விக் கழகத்தை அமைத்தார். ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசக் கல்வி தந்தார். கன்பூசியசின் அறிவாற்றல் நாடெங்கும் பரவி புகழ் கூடியது.

கன்பூசியஸ் தமது 27-வயதில் அறமுறைகளைப் பற்றிக் கற்றார். செலிகோ என்ற பெரும் பணக்காரர் இவரின் அறிவாற்றலை விரும்பியதால் பொருள் உதவி செய்ய எண்ணியபோது யென்யீங் என்பவன் அதைத் தடுத்து நின்ற தோடு, கன்பூசியசை அவ்வூரில் இருந்து வெளியேற்றவும் செய்தான். 59-வயதில் அவர் இலக்கியங்களைப் பதிப்பித்தப் பின்னர், சுங்கு என்னும் நாடு சென்று, அங்கு நீதிபதியானார். அங்கிருந்து அவர் டசென் என்ற நாட்டுக்குச் சென்றபோது, கன்பூசியஸை ஒற்றன் என்று எண்ணி அந்நாட்டு அரசன் சிறையில் அடைத்தான். பின் உண்மையறிந்து விடுத்தான். பின்னர் பல நாடுகளுக்குச் சென்றார்.

சீன நாட்டிலே நடைபெற்ற வரலாற்று நிகழ்வுகளை எல்லாம் திரட்டி நூலாக ‘வசந்தமும் பின் பனியும்’ என்ற தலைப்பில் எழுதினார். அந்நூல் சீனாவில் அரசியலுக்கு இலக்கண நூலாக இன்றும் விளங்குகிறது. அவர் வாழ்ந்த காலத்தில் பெற்ற புகழை விட 73-ஆம் வயதில் அவர் இறந்த பின்னர் பரவிய புகழ் அதிகமாயிற்று.

இந்த மாபெரும் சிந்தனையாளர் சீனாவில் லூ என்ற நகரில் இன்றுதான் (27-08-கி.மு.551) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-28 தம்பி...

லியோ டால்ஸ்டாய், பணம் படைத்த குடும்பத்தில் பிறந்தவர். அரபு மொழி கற்பதற்காகப் பள்ளியில் சேர்ந்த அவர் முதல் வருடத் தேர்விலேயே தோல்வியைக் கண்டதால், சட்டம் படிக்கத் தொடங்கினார். அந்தப் படிப்பையும் முற்றுப் பெறாமல் நிறுத்திவிட்டார். பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு எளிதில் படிந்துவிடும் கெட்ட பழக்கங்கள் சில இவரிடமும் ஒட்டிக் கொண்டன. சூதாடவும் தொடங்கி பலரிடம் கடன் வாங்கி மானமிழந்தார்.

போர் வீரராகப் பணியாற்றியதுதான் அவருடைய வாழ்க்கைப் போக்கையே மாற்றியமைத்தது. படைக்களத்து அனுபவமே 'போரும் அமைதியும்' என்ற மாபெரும் காவியம் உருவாக காரணமாய் இருந்தது. உலகப் புகழை அவருக்குப் பெற்றுத் தந்தது. போரை அவர் அடியோடு வெறுத்தார். ஏழைகளுக்கு உதவுவதைத் தமது இலட்சியமாகக் கொண்டிருந்தார். தீவிர மதப் பற்றுள்ள அவர் 'அன்பே கடவுள்' என்ற அரிய கொள்கையைக் கடைபிடித்து வந்தார்.

அவரது கருத்துக்களால் கவரப்பட்டவர்களுள் காந்தியும் ஒருவர். லியோவின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சி இது...

ஒருமுறை டால்ஸ்டாய் ஒரு சமயம் வீதி வழியே நடந்து கொண்டிருந்தார். அப்போது ஒரு பிச்சைக்காரன் அவரை வழிமறித்து, "ஐயா, ஏதாவது உதவுங்கள்" என்றான். பரிவு நிறைந்த லியோ, தன் சட்டைப்பைக்குள் கைவிட்டார். அதில் ஒரு காசு கூட இல்லை.

"தம்பி, கையிலே பணமில்லை!" என்றார். இதைக்கேட்டு பசியோடு வாடிப் போயிருந்த பிச்சைக்காரன் முகம் மலர்ந்தது. "ஐயா, பிச்சைக் கொடுப்பதைக் காட்டிலும் ஒரு பெரிய உதவியை இன்று எனக்கு செய்துவிட்டீர்கள் ஐயா! தம்பி, என்று அழைத்த அந்த தெம்பு தரும் ஒரு சொல் போதும்..." என்று மகிழ்ந்து சொன்னான், பிச்சைக்காரன். தன்னை மதிக்காத உலகத்தில் 'தம்பி' என்றழைத்து உறவு கொண்டாடிய டால்ஸ்டாயின் மீது அவனுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டது. பணத்தில் கிடைக்காத மகிழ்ச்சி பரிவிலே கிட்டியது.

புரட்சிக் கருத்துக் கொண்ட புதுமையான பல நூல்களைத் தந்த இவர் ரஷ்ய நாட்டில் இன்றுதான் (28-08-1828) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-29 முதல் பெண் மருத்துவர்

அன்னை முத்துலட்சுமி, திண்ணைப்பள்ளியில் தம் கல்வியைத் தொடங்கி, பின்னர் ஆறாம் வகுப்பில் தேர்ச்சிப் பெற்றார்.

அக்காலத்தில் ஒரு வயதிற்கு மேல் பெண்களை வெளியில் அனுப்பி படிக்க வைக்காத நிலையிருந்ததால், தன் தந்தை யிடமே தனிப்பயிற்சிப் பெற்று, பல்கலைக் கழகத் தேர்வில் முதன்மைப் பெற்றார்.

1907-இல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து பட்டம் பெற்றார். 1921-இல் சென்னை தாய்-சேய் மருத்துவ மனையில் பணியில் சேர்ந்தார். இலண்டன் சென்று மருத்துவப் பயிற்சி பெற்றார்.

தாயகம் திரும்பிய அன்னை 1917-இல் இந்தியப் பெண்கள் கழகத்தைத் தோற்றுவித்ததோடு, 'மாதர் அறம்' என்ற பத்திரிகையையும் தொடங்கினார்.

சட்ட மேலவை உறுப்பினராகி, அங்கே பெண்களின் மேன்மைக்காக குரல் கொடுத்தார்.

விடுதலைப் போரில் கலந்து கொண்டு சிறையும் சென்றார். மேலவைப் பதவியை விட்டு விலகி, விடுதலை இயக்கத்தில் தீவிரமாக செயல்படத் தொடங்கினார்.

வாழ்வில் வழி தவறிய பெண்களுக்கும், ஆதரவற்றப் பெண்களுக்கும் அவர்கள் வாழ்வில் முன்னேற 'ஔவை இல்லம்' என்ற ஒரு புகலிடத்தை அமைத்தார்.

அது இன்றும் சிறப்போடு நடந்து வருகிறது. இன்று சென்னையில் இயங்கி பலரது உயிரை பாதுகாத்து வரும் புற்றுநோய் மருத்துவமனை அன்னை தோற்றுவித்ததே.

அன்னையின் அறப்பணியும், பெண்களின் முன்னேற்ற மும்; விடுதலைப் பணியும் இன்றும் போற்றிப் புகழத்தக்க ஒன்றாகும்!

இந்த அன்புள்ளம் கொண்ட அன்னை புதுக்கோட்டையில் இன்றுதான் (29-08-1886) பிறந்தார்.

❒

ஆகஸ்டு-30 நேரம் வந்துவிட்டது

அந்த மாபெரும் விடுதலை வீரனை பிரிட்டீஷ் அரசு தூக்கிலிட்டது. அந்த வீரன் தூக்கில் இறந்த பின் கடலில் தூக்கி எறிந்து விடவும் அரசு கட்டளையிட்டது.

வீரனின் உடலை புதைக்காவிட்டால் மக்கள் அந்த இடத்தில் கல்லறை எழுப்பி விடுவார்கள். அது அவர்களது ஆவேசத்திற்கு அடிக்கல் நாட்டியதாகி விடும் என்று அரசு அஞ்சியது. இவ்வாறு பிரிட்டீஷ் ஆட்சியாளர்களை நடுங்கச் செய்த வீரன்தான் சூர்யா சென். ஆசிரியராகப் பணிபுரிந்த இவர், விடுதலை வேண்டி நாட்டு மக்கள் போராடுவதைக் கண்டு இவரும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட எண்ணினார்.

இந்த வேளையில் அன்னியராட்சி கொடூரமாக நடந்து கொண்டிருந்தது. அமிர்தசரசில் ஜாலியன் வாலாபாக்கில் பொதுக்கூட்டம் நடந்து கொண்டிருந்த போது, வெளியேறு வதற்கான ஒரே வழியையும் அடைத்துவிட்டு, இராணுவத்தினர் குண்டுமழை பொழிந்தார்கள்.

அதில் 379 பேர் இறந்தனர். 1137 பேர் காயமுற்றனர். இந்தச் செய்தியை அறிந்த சூர்யா சென் சினமும் வெறியும் கொண்டார். மாணவர்களை ஒன்று திரட்டினார். ''கண்ணீர் சிந்துவதாலும், கண்டனக் கூட்டம் போடுவதாலும் பயனில்லை. நாம் செயலில் இறங்க வேண்டும்'' என்று மாணவர்களிடம் முழங்கியதோடு நில்லாமல், போராட் டத்திலும் ஈடுபடத் தொடங்கினார்.

பல்வேறு போராட்டங்களை நடத்தி அன்னியரை விரட்டியடிக்கப் பாடுபட்ட சூர்யா சென், பலமுறை சிறை சென்றார். ஒருமுறை பிரிட்டீஷாரின் சூழ்ச்சி வலையில் மாட்டிக் கொண்டார். மரண தண்டனை விதிக்கப்பட்டது. நள்ளிரவில் சென் ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். அப்போது 'நேரம் வந்துவிட்டது' என்று காவல் துறையினர் கூற, 'வந்தே மாதரம்' என்று முழக்கமிட்டுக் கொண்டே தூக்கு மேடையை நோக்கி நடந்தார்.

இந்த மாபெரும் விடுதலை வீரன் வங்கத்தில் உள்ள சிட்டகாங்கில் இன்றுதான் (30.08.1886) பிறந்தார்.

❑

ஆகஸ்டு-31 மூளை வளர்ச்சி

மரியமாண்டிசொரி, இவர் இத்தாலி நாட்டு கல்வியாளர், விஞ்ஞானி, மருத்துவர், தத்துவமேதை, மனிதநேய மாமணி.

நம்நாட்டில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி எப்படி முதல் மருத்துவப் பெண்மணியோ, அதேபோல் இவரும் இத்தாலியில் முதல் மருத்துவர்.

இவர், மூளை வளர்ச்சி குன்றியவர்களின் வாழ்க்கை சீர்பட பெரிதும் உதவியாக நின்றார். அவர்களுக்கென்றே பள்ளியும் 1907-இல் ஏற்படுத்தினார்.

அங்கே, தன் அனுபவத்தையும், சிந்தனையையும் கொண்டு இவர்களுக்கு இப்படித்தான் பாடம் நடத்த வேண்டும் என்று ஒரு புதிய முறையையும் கண்டுபிடித்தார்.

அந்த முறையே உலகில் இன்றும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த மருத்துவ மேதை இத்தாலியில் இன்றுதான் (31.08.1870) பிறந்தார்.

❏

கண்களைப் பரிசோதிக்க ஆப்கால்ஸ்கோப் என்னும் கருவியைக் கண் டாக்டர்கள் இன்று பயன்படுத்துகின்றனர். இந்தக் கருவியைக் கண்டுபிடித்த ஜெர்மானிய விஞ்ஞானியும், மருத்துவருமான ஹெர்மான் வான் ஹெட்ஹோல்ட்ஜ் என்பவரும் இன்றுதான் (31.08.1821) பிறந்தார்.

❏

நெதர்லாந்து நாட்டு அரசியான வில்ஹெல்மினா என்பவரும் இன்றுதான் (31.08.1880) பிறந்தார்.

❏

'பிலிகிரிம் புராகர்ஸ்' என்ற நூலை எழுதிப் புகழ்பெற்ற ஜான்புன்யான் என்ற எழுத்தாளரும் இன்றுதான் (31.08.1688) பிறந்தார்.

❏

12 வயதினிலே



புலித்தேவன் பன்னிரண்டு வயதிலேயே ஆற்றல் மிக்க வனாக இருந்திருக்கிறான். அந்த வயதில் மல்யுத்தம், சிலம்பம், வாள்வீச்சு என்று வீரக்கலை களை கற்றுத் தேர்ந்தான். மதுரைக்கு வடக்கில் வசித்த புலியொன்று ஊருக்குள் புகுந்து அட்டூழியம் செய்து வந்தது. மக்கள் தினம் தினம் பயந்து வாழ்ந்தனர். அதைக்கண்ட அரசர் விஜயரங்க சொக்கநாத நாயக்கர், புலியை கொன்று வீழ்த்துபவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்த நிலையில் ஒரு நாள் ஊருள் புகுந்த புலியை தன் கை கட்டாரியாலேயே கொன்றுபோட்டான். இந்த செய்தி அறிந்த அரசன், புலித்தேவனுக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தான். அன்று முதல் புலித்தேவன் என்று மக்களால் பாராட்டப் பெற்றான்.

ஆங்கில அதிகாரிகள் வரிவசூலிக்க திருநெல்வேலி சீமையின் மீது 1755-இல் படையெடுத்து வந்தனர். பாளையக்காரர்களிடம் வரிவசூலிப்பதும், ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியின் அதிகாரத்தை உறுதிபடுத்துவதே இப்படையெடுப்பின் நோக்கமாகும்... பல பாளையங்கள் அவர்களுக்கு பணிந்தன. தன்னை எதிர்த்துப் போரிட வந்த மாபஸ்கானையும், காப்டன் பெரிட்சன் என்பவனையும் ஓடஓட விரட்டி அடித்து தோற்றோடச் செய்தான், புலித்தேவன்.

புலித்தேவனை நேருக்கு நேர் நின்று வெற்றிபெற முடியாது என்று எண்ணிய வெள்ளையர், வஞ்சக வலை விரித்து, மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் இருந்த புலித்தேவனை கைது செய்தனர்... பாளையங்கோட்டை அழைத்துச் செல்லும் வழியில், வழிபட சங்கரன் கோயிலுக்குள் நுழைந்தான்... அவ்வளவுதான் அதன்பின் அவனை யாருமே காணவில்லை...

இந்திய விடுதலைக்கு தென்னகத்தில் இருந்து வெள்ளை யனை எதிர்த்த முதல் வீரன் புலித்தேவன் மதுரை மாவட்டம் - ஆவுடையார்புரத்தில் இன்றுதான் (01-09-1715) பிறந்தார்.

❑

செப்டம்பர்-2 அணுகுண்டு

பிரடெரிக்சாடி, இளமையில் இங்கிலாந்தில் கல்வி கற்றுத் தேர்ந்து, நியூஸிலாந்திலிருந்து வந்து ஆய்வுகளை செய்து கொண்டிருந்த ருதர்போர்டு என்பவரிடம் முதலில் மாக்கில் என்னும் பல்கலைக் கழகத்தில் சிறப்பான பயிற்சிகளைப் பெற்றார். பிறகு ராம்சே என்னும் பேராசிரியரிடமும் இலண்டன் பல்கலைக் கழகத்திலும் மேலும் சில ஆய்வுகளைச் செய்து நன்கு தேர்ச்சிப் பெற்றார்.

இப்படி இரு பல்கலைக் கழகங்களில் சிறந்த ஆராய்ச்சிப் பயிற்சி பெற்ற சாடி 1914-ஆம் ஆண்டு அபர்டீன் எனும் இடத்தில் ரசாயனத்துறைப் பேராசிரியராக வேலையில் சேர்ந்தார். அங்கு அவர் மாணவர்களுக்கு அறிவு புகட்டிய நேர்த்தியும், செய்த ஆராய்ச்சியையும் கண்டு, ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் அவருக்கு இரசாயனப் பேராசிரியர் பதவியே தேடி வந்தது.

கதிரியக்கப் பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சியில் சம அணுக்கள் எனப்படும் புதுமையைக் கண்டுபிடித்தவர்கள் சாடி, ஆஸ்டின் என்னும் இரண்டு பெரிய விஞ்ஞானிகள். இதற்காக இவ்விருவருக்கும் நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவர்கள், இயற்கையிலேயே சில பொருள்களின் மூலகங்க்ள் சம அணுக்களின் கலப்பாகவே இருக்கின்றன - என்று, இவர்கள் அச்சம அணுக்களைத் தனித்தனியே பிரித்தெடுக்கும் முறைகளைக் கண்டுபிடித்து அதற்குரிய கருவிகளையும் ஆக்கித்தந்தார்கள். யூரேனியத்திலிருந்து சம அணுக்களைப் பிரித்து, அணுகுண்டு செய்வதற்கு வேண்டிய யூ-230 என்பதை, இவர்கள் அமைத்துத்தந்த கருவியால்தான் பிரித்தெடுத்தார்கள்.

சாடி, ரேடியத்தின் விளக்கம், பொருளும் சக்தியும், அணுவைப் பற்றிய விளக்கம் என்னும் நூல்களோடு வேறுசில நூல்களையும் வெளியிட்டார்.

இவ்வாய்வாளர் இங்கிலாந்தில் ஈஸ்ட்போர்ன் என்னும் இடத்தில் இன்றுதான் (02-09-1877) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் பொருளாதார மேதையான ஹென்றி ஜார்ஜ் என்பவரும் இன்றுதான் (02-09-1839) பிறந்தார்.

❑

ஹவாய் அரசி லில்லியோகலானி என்பவரும் இன்று தான் (02-09-1838) பிறந்தார்.

❑

செப்டம்பர்-3 சுந்தர்சிங்

தாயின் மொழி கேட்டு வாழத் தொடங்கியவர் சாது சுந்தர்சிங். இவர் பிறப்பால் சீக்கியர். சிறு வயதிலேயே ஆன்மிகத்தாகம் உடையவராக இருந்தார். தனது ஏழாம் வயதிலேயே கீதையை முழுவதுமாக மனப்பாடம் செய்துவிட்டார்.

'அன்பு மகனே! உன் ஆத்ம அமைதியைத் தேடு; சாதுவாக உயர்ந்து விளங்கு' - இது சுந்தருக்கு இளமையில் அன்னை சொன்ன அமுத மொழிகள். அன்னையின் மடியில் ஆன்மிக வேட்கை பெற்ற 'சிங்' சீக்கியர் ஆலயத்திலும், சீக்கிய குருமார்கள் இடத்திலும் மெய்ப்பொருளைக் கண்டுகொள்ள முயன்றார்.

அவர் முயற்சிக்குப் பலன் கிடைக்கவில்லை. அதனால் தானே மெய்ப்பொருளைத் தேடுவதென்று முடிவு செய்து இந்து மதத்தின் நான்கு வேதங்களையும், உபநிடதங் களையும் கற்றதோடு, இஸ்லாமியரின் குரானையும், சீக்கியரின் கிரந்தம் ஆகியவற்றையும் ஆழ்ந்து படித்தார். ஆனால், மெய்ப் பொருளைக் காண இயலாது மன அமைதியின்றித் தவித்தார்.

இந்த நிலையில் இவர் படித்த கிறித்துவப் பள்ளியில் விவிலியப் பாடம் நடத்தப்பட்டது. சீக்கிய மத உணர்வு மிகுந்த சுந்தரரோ அதை வெறுத்தார். பள்ளி மாணவர்கள் வாங்கியது போல் இவரும் விவிலிய நூலை விலை கொடுத்து வாங்கினார். அதில் சொல்லப்பட்ட கருத்துக்கள் தம் மதக் கருத்துக்கு முரணாக இருப்பதைக் கண்டு கோபம் கொண்டு, 'புதிய ஏற்பாடாகிய' அந்த விவிலிய நூலைத் தீயிலிட்டுக் கொளுத் தினார்.

இப்படி விவிலியத்தைத் தீயிட்டுக் கொளுத்திய சுந்தர் சிங்தான், 'என்னிடத்தில் வா! நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்ற ஏசுவின் அழைப்பில் அன்பு கொண்டு, கிறித்துவராக மாறி, தீயிட்ட விவிலியத்தைத் தன் மரணம் வரை தூக்கிக் கொண்டு இறைத்தொண்டு செய்தார்.

இந்த இறைமாமணி, பஞ்சாப் - பாட்டியாலா பகுதி யிலுள்ள ராம்பூரில் இன்றுதான் **(03.09.1889)** பிறந்தார்.

❒

செப்டம்பர்-4 இந்தியாவின் குரல்

தாதாபாய் நௌரோஜி, நான்கு வயதிலேயே தந்தையை இழந்துவிட்டார். தாயே வளர்த்து, பதினோராவது வயதில் குல்பாய் என்ற ஏழுவயதுப் பெண்ணை மணமும் முடித்து வைத்தார்.

தாதாபாய், பள்ளிக் கல்லூரிக் கல்வியில் நன்கு படித்து பரிசுகள் பல பெற்றார். அதைக் கண்ட மும்பை உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதி சர்.எர்ஸ்கின் பெரி; இவருடைய திறமையைக் கண்டு தன் செலவில் இங்கிலாந்து அனுப்பி கல்வி பயில உதவ முன் வந்தார். வீட்டார் அதை ஏற்கவில்லை.

அதனால், 1851-இல் எல்பின்ஸ்டன் உயர்நிலைப் பள்ளியாசிரியராகவும், 1853-ல் கல்லூரியில் கணிதப் பேராசிரியராகவும் பணி தொடர்ந்தார். முதன்முதலில் பேராசிரியர் பதவி பெற்ற இந்தியர் இவர்தான். சமூகத் தொண்டில் ஈடுபாடு கொண்ட இவர், பார்சி மதச்சீர்திருத்த சங்கத்தின் அமைச்சராகவும், இந்துக்களின் விதவா இயக்கத்தில் சேர்ந்து சேவை செய்யும் தொண்டராகவும் இருந்தார். இவருடைய பெரும் முயற்சியால் முதன் முதலில் பெண் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டது. அதில் ஊதியம் பெறாமல் இவர் பணி புரிந்தார்.

1857-முதல் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதுவ தோடு, சொற்பொழிவுகளும் ஆற்றத் தொடங்கினார். ஐந்து மொழிகளில் பாண்டித்தியமும் பெற்றிருந்தார். 1855-இல் வணிக நிலையம் ஒன்றில் பணியாற்ற, பார்த்து வந்த வேலையை விட்டுவிட்டு இலண்டன் சென்றார். இந்திய மக்களுடைய நிலைமை பற்றி பிரிட்டிஸ் மக்களுக்கு எழுத்து மூலமாகவும், சொற்பொழிவின் வழியாகவும் விளக்கி வந்தார்.

1883-இல் 'இந்தியாவின் குரல்' என்ற மாத இதழைத் தொடங்கி, அதன் வழியே அந்நிய நாட்டினருக்கு தெரிவித்து வந்தார். மும்பையில் நடைபெற்ற இந்திய தேசியக் காங்கிரஸ் முதல் மாநாட்டில் தீவிரமாகப் பங்கு கொண்டார். 1904-இல் ஆம்ஸ்டர்டாம் நகரத்தில் கூடிய சோசலிஸ்ட்டு மாநாட்டில் இந்தியாவின் வறுமை நிலை பற்றி புள்ளி விவரங்களோடு அவர் ஆற்றிய பேருரை சிறப்பான ஒன்றாகும்.

விடுதலைக்கு வித்திட்ட இந்த மேதை மும்பாயில் கடக் என்ற இடத்தில் இன்றுதான் (04-09-1824) பிறந்தார்.

செப்டம்பர்-5 தத்துவமேதை

இவர் திறமையால் பேராசிரியராகவும், துணைவேந்தராகவும், இந்திய நாட்டில் இந்தியத் தூதராகவும் பணியாற்றிய மேதை.

இந்தியாவின் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற இவர் நாட்டின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டார். இவரைப் பல்வேறு விருதுகள் தேடி வந்தன. இவரது அருஞ் சேவையைப் பாராட்டும் வகையில் சென்னையில் இவர் இல்லம் அமைந்துள்ள சாலைக்கு 'இராதா கிருஷ்ணன் சாலை' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் தினத்தில் தமிழக அரசு நல்லாசிரியர் விருதை 'டாக்டர் இராதா கிருஷ்ணன் விருது' என்னும் பெயரில் வழங்கி வருகிறது.

எல்லா சமயத் தத்துவங்களையும் கற்றுத் தேர்ந்தவர். அதை யாவரும் உணர வேண்டும் என்பதற்காகப் பல நூல்களை எழுதினார்.

ஆசிரியர் கல்லூரியில் அவர் படித்தபோது மனதத்துவ வகுப்புக்கு அவர் வர வேண்டியதில்லை என்று ஆசிரியர் கூறிவிட்டார். காரணம் அவர் இருக்கும்போது ஆசிரியருக்கு பாடம் போதிக்கக் கஷ்டமாக இருந்ததாம். சில சமயம் இவரையே மாணவர்களுக்குப் பாடம் நடத்தச் சொல்வாராம். இவர் பாடம் நடத்தியதை மாணவர்களால் எளிதில் புரிந்து கொள்ள முடிந்ததாம்.

இந்து சமயத் தத்துவங்களில் இவருக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தியது, கிறிஸ்தவப் பாதிரியார்கள் இந்து மதத்தைப் பற்றி இழித்துப் பேசியதும், சுவாமி விவேகானந்தரின் எழுத்துக்களும்தான். கிறிஸ்தவக் கல்லூரியில் படிக்கும்போதே இந்த மாற்றம் அவரிடம் ஏற்பட்டது.

உலக நாடுகள் அனைத்தும் பாராட்டிய இவர் ஞானி போல் வாழ்ந்து இந்தியத் தத்துவங்களை உலகறியச் செய்தவர்.

திருத்தணி அருகேயுள்ள சர்வ பள்ளி எனும் கிராமத்தில் தான் இன்றுதான் **(05-09-1888)** பிறந்தார்.

❐

செப்டம்பர்-6 வாயுமண்டல...

ஏழை கைத்தறி நெசவாளர் குடும்பத்தில் தோன்றினார் ஜான்டால்ட்டன் என்ற விஞ்ஞானி. தனது ஊரில் 'குவேக்கர்கள்' என்னும் சமயக்குழு ஒன்று மக்களால் நடத்தப்பட்டு வந்தது. அங்கே சமய நெறியோடு சிறிது கணிதம், விஞ்ஞானம், ஆங்கில இலக்கணம் ஆகியவற்றையும் கற்றுத் தேர்ந்தார். சிறு வயதிலேயே அவர் கணிதத்தில் மேதை என்று ஊரார் பாராட்டினர்.

அவருக்கு பன்னிரண்டு வயதில் படித்துக் கொண்டு இருக்கும்போதே, அவர் தாமே ஒரு பள்ளிக் கூடத்தை நடத்தப் போவதாக பலரிடம் சொல்லி வந்தார்.

அப்படி நடத்துவதற்கு அவ்வூர் அதிகாரிகளும் அனுமதி வழங்கினார்கள். அந்த இளய வயது ஆசிரியரிடம் அவரைவிட இளையவர்களும் பலர் அவரைவிட மூத்த வயதினரும் பயின்று வந்தார்கள் என்பது உண்மையிலும் உண்மை.

ஆசிரியர் பணியை அவர் ஆற்றிக் கொண்டு இருக்கும் வேளையிலேயே வாயுமண்டல இயலில் கருத்து பதிந்தது. அக்கருத்து அவருடைய வாழ்நாள் முழுதுமே இருந்து வந்தது. தமக்குத் தேவையான ஆய்வுக் கருவிகளை தாமே உருவாக்கிக் கொண்டார். தாம் அவ்வப்போது கண்ட காட்சிகளை எல்லாம் குறிப்பெடுத்து வைத்தும் வந்தார்.

மொத்தத்தில் வானிலையைப் பற்றி அவர் பதவி செய்து வைத்த குறிப்புகளின் எண், இரண்டு இலக்கத்துக்கும் மேற்பட்டவையாம்.

வாயு மண்டலத்தைப் பற்றி டால்ட்டன் அவ்வளவு விரிவாக ஆய்வு செய்ததுதான் பொருளின் அணுக்கோட் பாட்டை ஒட்டிய, ஆய்வுப் பாதையில் கொண்டு சென்று உலகப் புகழுக்கு அவரை இட்டுச் சென்றது.

ஆய்வு மனம் கொண்ட இந்த மேதை, கடைசி வரை மணமே செய்து கொள்ளவில்லை.

இங்கிலாந்தில் ஈகிலேஸ் ஃபீல்ட் என்னும் கிராமத்தில் இன்றுதான் (06-09-1766) பிறந்தார்.

❑

செப்டம்பர்-7 வீராங்கனை

பேரரசி முதலாம் எலிசபெத்தின் தந்தை இங்கிலாந்தின் மன்னர் எட்டாவது ஹென்றி. எனினும் அவர் மனைவி அன்னிபொலீன் ஆட்சியை கவிழ்க்கச் சதி செய்தார் என்று குற்றம் சாட்டி, தலையை வெட்டி எறியும்படி உத்தரவிட்டார். அவ்வேளையில் எலிசபெத்திற்கு இரண்டு வயது.

குழந்தையான எலிசபெத்தும், அவளுடைய அக்காளையும் தந்தையே வாரிசுரிமை இல்லை என்று நாடுகடத்தினான். இருவரும் ஒன்றாக நாட்டுப்புறத்தில் வளர்ந்தனர். அதன் பிறகு இவர்கள் தந்தை இறந்து படவே, அவருக்கு வேறொரு மனைவியின் வழியே பிறந்த இளவரசர் எட்வர்டு, அவர் களோடு சேர்ந்து, அவன் எட்வர்டாகப் பட்டம் பெற்றான். அப்போது எலிசபெத்திற்கு பதினாலு வயதும் அவளத் அக்காள் மேரிக்கு முப்பது வயதும் ஆகியிருந்தது.

பட்டம் ஏற்ற எட்வர்ட் ஆறு ஆண்டுகளில் இறந்துபட, அடுத்து மேரி ஆட்சிக்கு வந்து அவளும் இறந்துபட, அதன்பின் எலிசபெத் தனது 35-வது வயதில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார்.அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் பிரபுக்களும் எலிசபெத்தை மணக்கப் போட்டியிட்டனர். ஆனால் எல்லாரையும் ஒதுக்கினார். இந்த நிலையில் இங்கிலாந்தில் ஏழ்மையும், அமைதியின்மையும், தலைவிரித் தாடியது. நாட்டில் அமைதி தேவைப்பட்டது. அதேநேரம், சாதுரியமாக ஒரு நாட்டோடு மற்றொரு நாட்டை மோதவிட்டு, உள்நாட்டு கலகங்களையும் ஈவிரக்கமின்றி அடக்கினார். நாட்டில் ஒழுங்கு நிலவவும், தொழில் வளரவும் வழி செய்தார்.

இவ்வேளையில் ஸ்பானிஷ் ஆர்மடா என்னும் கப்பற் படை ஆங்கிலக் கால்வாய் வரை வந்தபோது இங்கிலாந்து போதிய தயாரிப்பில் இல்லை. அந்த நெருக்கடியில் எலிசபெத் தீரமும் தீர்மானமும் மக்களின் பயத்தைப் போக்கின. ஸ்பானிசைத் தோற்கடித்தார். இதுவே எலிசபெத்தை உலகப் பார்வைக்குக் கொண்டு சென்றது. பின்னர் இருண்டு கிடந்த இங்கிலாந்தை செல்வம் கொழிக்கிற வலிமையுள்ள நாடாக மாற்றினார்.

இந்த வீராங்கனை இங்கிலாந்தில் கிரீன்விச் நகரில் இன்றுதான் **(07-09-1533)** பிறந்தார்.

❑

செப்டம்பர்-8 ஆன்மிக மருத்துவர்

'காந்தியடிகளின் வாழ்க்கையை முன்மாதிரியாக அமைத்துக் கொண்டு வாழ வேண்டும் என்றும், எல்லா மக்களும் சமம். அனைவரிடத்திலும் இறைவனைப் பார்க்க முடியும். சாதி, மத, நிற, இனமொழி வேற்றுமை இல்லாமல் யாவரும் இறைவனை அடைய முடியும்' என்றும் வலியுறுத்திய துறவி சுவாமி சிவானந்தர்.

1903-ஆம் ஆண்டில் தனது பதினாறாவது வயதில் மெட்ர்குலேசன் படிப்பை முடித்தார். திருச்சியிலுள்ள கல்லூரியில் சேர்ந்து படித்தபோது, ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் நடித்தார். இண்டர் மீடியட் தேர்வில் தேர்ச்சி பெற்று தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். சூழ்நிலையின் காரணமாக படிப்பைத் தொடர முடியாமல் விட்டு, தான் பெற்றிருந்த மருத்துவ அறிவைக் கொண்டு, 'அம்ப்ரோஷியா' என்ற மருத்துவப் பத்திரிகை ஒன்றைத் தொடங்கி நடத்தினார்.

சிவானந்தர் ஏழை, எளிய மக்களுக்கு கொடுத்து உதவுவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அரசியலில் ஆன்மிகமும், மக்கள் பணியும் இணைந்திருக்க வேண்டும். ஆன்மிகமில்லாத அரசியல் ஏமாற்றுக்காரர்களின் கூடாரமாக ஆகிவிடும் என்று கருதினார். சில விசித்திரமான செயல்களை இவர் செய்திருக்கிறார்.

பக்தர்கள் பெரும் பொருட் செலவில் பணத்தை செலவழித்து பாதபூஜை செய்வார்கள். பாதபூஜை சமயங்களில் இவை எல்லாம் தமக்கல்ல, ஆண்டவனுக்கே என்றும், சில சமயங்களில் பாத பூஜை முடிந்ததும், தமது அறைக்குள் சென்று செருப்பு அல்லது துடைப்பத்தால் அடித்துக் கொள்வதுமாக இருப்பாராம். பாத பூஜை சமயத்தில் மனம் எந்த நிலைக்கு உள்ளாயிற்றோ, அதே நிலை செருப்படிபடும் போதும் ஏற்படுகிறதா? என்பதை பரிசோதிக்கவும், ஆணவம் நீங்கி பணிவை வளர்த்துக் கொள்ளவுமே இவ்வாறு செய்வாராம்.

மருத்துவராக தொழிலைத் தொடங்கி ஆன்மிகவாதியாகவும், சமூகத் தொண்டு செய்பவராகவும் விளங்கிய குப்புசாமி என்கிற சுவாமி சிவானந்தர் நெல்லை - பத்தமடை என்னும் ஊரில் இன்றுதான் (08-09-1887) பிறந்தார்.

செப்டம்பர்-9 ஹென்றி

ஹென்றி ஸ்டைடல்ஸ் பிர்ஜ்ஜஸ், இவர் பள்ளி யாசிரியராகவும், பத்திரிகையாசிரியராகவும், குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவராகவுமிருந்தார்.

நியூ ஹம்சர் என்ற மாநிலத்தின் கவர்னராகவும் இருந்தார்.

இவர் ஒரோனா என்ற ஊரிலுள்ள மெயின் பல்கலைக் கழகத்தில் *(1918)* படித்துப் பட்டம் பெற்றார்.

படித்து முடித்ததும் பள்ளியாசிரியராக சிறிது காலமும், பிறகு பத்திரிகையாசிரியராகச் சிறிது காலமும், மாநில அரசுத்துறையிலும் பணியாற்றிவிட்டு, பின் தொழிலதிபராக ஆனார்.

நியூ ஹம்ஸை பல்கலைக் கழகத்தில் ஓராண்டு பணி யாற்றியும் உள்ளார்.

நியூ ஹம்ஸையர் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷனில் செயலராகவும், இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். இப்படி எண்ணற்ற உயர்ந்த பதவிகளில் இவர் இருந்திருக்கிறார்.

இந்த அறிஞர் மேற்கு பெம்ரோக் என்ற இடத்தில் இன்றுதான் *(09.09.1898)* பிறந்தார்.

❏

புகழ்பெற்ற உடற்கூறு ஆராய்ச்சியாளரான கால்வானி என்பவரும் ஜெர்மனியில் இன்றுதான் *(09.09.1737)* பிறந்தார்.

❏

பிரெஞ்சு நாட்டு ராஜதந்திரியான கார்னல் ரிச்சலியூ என்பவரும் இன்றுதான் *(09.09.1585)* பிறந்தார்.

❏

'அன்ன கரீனா', 'போரும் அமைதியும்' என்ற புகழ் பெற்ற நாவல்களை எழுதிய ரஷிய எழுத்தாளரும் இன்றுதான் *(09.09.1828)* பிறந்தார்.

❏

செப்டம்பர்-10 வரைபடக்கலைஞர்

கேரெட்டேவீஸ், இவர் படித்து முடித்ததும் மாவட்ட நிர்வாகத்தில் குமாஸ்தாவாகப் பணியேற்றார்.

இவர் 1823-இல் வழக்கறிஞர் பட்டம் பெற்றார்.

இவர் வழக்கறிஞர் பயிற்சியை பாரீஸில் தொடங்கினார்.

1833 முதல் 35 பிரதிநிதிகளின் மன்றத்தில் பணியாற்றினார். இது கென்டுகி என்ற இடத்தில் உள்ளது.

அமெரிக்க பாராளுமன்றத்தில் அவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (1838-1847).

எல்லைப்புற பாதுகாப்புக் குழுவின் தலைவராகவும் இருந்தார்.

இவர், மவுண்ட் ஸெர்லிங் என்ற நாட்டில் இன்றுதான் (10.09.1801) பிறந்தார்.

❐

இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற மருத்துவர் தாமஸ் சைடன்ஹாம் என்பவரும் இன்றுதான் (10.09.1862) பிறந்தார்.

❐

ஆக்ஸ்போர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகங்களின் பல பகுதிகளை வரைபடமாக வரைந்து கொடுத்த கட்டடக் கலைஞரான சர்.ஜான்ஜோனி என்ற பிரிட்டிஸ்காரரும் இன்றுதான் (10.09.1753) பிறந்தார்.

❐

செப்டம்பர்-11 கொள்ளைக்காரனாக...

இந்தியா முழுதும் நடந்து சென்று, ஏராளமான நிலங்களைத் தானமாகப் பெற்று, நிலமில்லாத ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தவரும், பூமிதான இயக்கத்தின் தலைவருமான ஆச்சாரிய வினோபாபாவே, ஒரு கல்விப் பணிக்கு நிதி சேர்ப்பதற்காக சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது ராஜஸ்தானத்திலிருந்த ஒரு பெரிய கிராமத்திற்குச் சென்றிருந்தார்.

அக்கிராமத்தில் முதல் நாள் இரவு பதினொரு ஆயுதக் கொள்ளைக்காரர்கள் கிராம மக்களிடம் ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருட்களை கொள்ளையடித்துச் சென்றதாக ஒரு செய்தியை வினோபாஜியிடம் யாரோ சொன்னார்கள்.

அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தின் போது வினோபாஜி கிராம மக்களை நோக்கி, ''ஒரு கல்விப் பணிக்காக நிதி வசூலிக்க நான் வந்திருக்கிறேன். இந்த கிராம மக்கள் எனக்கு எவ்வளவு நிதி கொடுப்பீர்கள்?'' என்று கேட்டார்.

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்ட கிராம மக்கள் எல்லாருமாகச் சேர்ந்து, ''ஆயிரம் ரூபாய் வசூலித்துக் கொடுக்கிறோம்'' என்றனர்.

வினோபாஜி சிரித்துக் கொண்டே, ''எனக்குப் புரிகிறது. நான் அன்பாகக் கேட்டால் ஆயிரம் ரூபாய்தான் தருவீர்கள். இரவில் துப்பாக்கியை எடுத்து வந்து மிரட்டினால் இலட்சம் ரூபாய் கொடுப்பீர்கள்... அப்படித்தானே...'' என்றார்.

வெட்கத்தால் தலைகுனிந்த கிராம மக்கள் ஒரு கணிசமான தொகையைத் தங்களுக்குள் வசூலித்து வினோபாஜியிடம் அளித்தனர். நிதியைப் பெற்றுக் கொண்ட வினோபாஜி ''நல்லவேளை என்னை ஒரு கொள்ளைக்காரனாக மாற விடாமல் தடுத்துவிட்டீர்கள்...'' என்று பேசியதை ஊர்மக்கள் கேட்டு ரசித்தனர்.

இந்த தியாக தீபம் மகாராஷ்டிரா மாநிலத்தில் இன்றுதான் **(11-09-1894)** பிறந்தார்.

❑

அமெரிக்காவில் புகழ்பெற்ற எழுத்தாளரான ஓ.ஹென்றி பிறந்ததும் **(11-09-1862)** இன்றுதான்.

❑

செப்டம்பர்-12 யாழ்ப்பாணம் அறிஞர்

யாழ்ப்பாணத்தில் சென்ற நூற்றாண்டில் அமெரிக்க மிஷன் கல்விச் சாலையில் கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே அங்கே கல்வி பயில முடியும்.

ஆங்கிலம் கற்க ஆவல் கொண்டிருந்த அந்த இளைஞர், இந்துவாக இருந்த அவர், கிறித்துவராக மாறி தம் பெயரையும் சார்லஸ் வின்ஸ்லோ கிங்ஸ்பெரி என்று மாற்றிக் கொண்டு, அக்கல்விச் சாலையில் சேர்ந்து பயின்று ஆங்கிலப் புலமை நிரம்பியவர் ஆனார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்கு வந்ததும் மீண்டும் இந்துவாக மாறி, தம் பெயரையும் பழையபடி மாற்றிக் கொண்டார். யார் அவர்...?

யாழ்ப்பாணம் தந்த அறிஞர் - பண்டிதர் சி.வை. தாமோதரனார்தான் அவர். இவர் இளமையில் தம் தந்தையாரிடமும், முத்துக்குமார நாவலரிடத்திலும் தமிழ்க் கல்வியைப் பெற்றார். யாழ்ப்பாண வட்டுக்கோட்டைப் பல்கலைக் கல்லூரியில் தம் பன்னிரண்டாம் வயதில் சேர்ந்து கணிதம், தத்துவம், ஆங்கிலம் முதலியவற்றை நன்கு கற்றார். முதல் நிலையில் வெற்றியும் பெற்றார்.

தொடக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர், கல்லூரி தமிழாசிரியர், இதழாசிரியர், உரையாசிரியர், அரசு அலுவலர், நீதிபதி, பல்கலைக் கழகப் பாடக் குழு உறுப்பினர் என்று பல்வேறு துறைகளிலும் தன்னாற்றலை வெளிப்படுத்திய அறிஞர் என்றாலும், தமிழ்நூல் பதிப்புத்துறையில் இவர் ஆற்றிய அருந்தமிழ்த் தொண்டு ஈடு இணையற்றது; போற்றத் தக்கது; தமிழ்மொழி வரலாற்றிலும்; தமிழ்நாட்டு வரலாற்றிலும் கல்வெட்டாய் நிலைத்து நிற்கும் செயல்பாடாகும்.

தமிழ் இலக்கண நூல்களுள் தொன்மையான தொல் காப்பியத்தையும், கலித்தொகை போன்ற நூல்களையும் முதன் முதலில் வெளியிட்ட பெருமை இவரையே சார்ந்தது.

தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கண இலக்கியங்களுக்கும் தொண்டாற்றிய பேரறிஞர் யாழ்ப்பாணம் சிறுபிட்டி என்னும் ஊரில் இன்றுதான் (12-09-1832) பிறந்தார்.

❒

செப்டம்பர்-13 போர்ப்படை

ஜான் ஜே.பெர்சிங். இவர் இராணுவத்தில் உயர் அதிகாரியாக இருந்தார்.

ஜார்ஜ் வாசிங்டன்னிற்கு இறந்த பிறகே இராணுவத்தில் உயர்ந்த பதவி ஒன்று கிடைத்தது.

அவருக்குப்பின், அமெரிக்க இராணுவ வரலாற்றில் இவருக்கு மட்டுமே வாழ்கின்றபோதே அப்பதவி கிடைத்தது.

அமெரிக்கப் படைகளை முதல் உலகப்போரில் வழி நடத்திச் சென்றவர் இவரே.

இவர் படை வீரர்களுக்கு அளித்து சிறப்புப் பயிற்சிகளும், வீரர்களை அரவணைத்துச் சென்ற போக்கும், போரில் விவேகத்தோடு ஈடுபட்ட முறையும் பெரும்புகழுக்கு வித்திட்டது.

இவரது போர்ப்படை வழி நடத்துதலையே இரண்டாவது உலகப்போரில் ஈடுபட்ட அதிகாரிகள் பின்பற்றினார்கள் என்பதை வரலாறு இன்றும் பேசுகிறது.

1878-இல் இவர் பட்டப் படிப்பை முடித்ததும் இவர் ஏற்ற பணி ஆசிரியர் பணியே. அந்நாளில், இனவேறுபாட்டோடு அமெரிக்கர்கள் இருந்தார்கள்.

அதனால் 'ஆப்பிரிக்கக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தமாட்டார்கள்' ஆசிரியர்கள்.

ஆனால், இவர் இனவேறுபாடு இல்லாது அவர்களுக்கும் கல்வி புகட்டி வந்தார்.

இந்த உயர் அதிகாரி மிசோரியில் இன்றுதான் **(13.09.1860)** பிறந்தார்.

❑

புகழ்பெற்ற டச்சு நாட்டுக் கவிஞரும், எழுத்தாளருமான பீட்ஸும் இன்றுதான் **(13.09.1814)** பிறந்தார்.

❑

செப்டம்பர்-14 நரம்பு மண்டலம்

இளமைக் கல்வியைப் போதிக்கும் சமயச் சார்புமிக்க பள்ளி ஒன்றில், இவான் பாவ்லாப் சேர்ந்து படித்து வந்தார். அங்கேயுள்ள ஆசிரியர்களில் ஒருவர் மதகுரு. பாவ்லாப்பிற்கு விஞ்ஞானத்தில் ஆர்வம் ஏற்பட அவரே காரணம்.

பின்னர், அக்கல்லூரியிலிருந்து பாவ்லாப், செயின்ட் பீட்டர்ஸ் பெர்க்கிலுள்ள பல்கலைக் கழகத்தின் இயற்கை விஞ்ஞானப் பள்ளியில் படிக்கச் சென்றார். அப்போது அவர், 'மூளையின் கருதாத் தன்னியல் செயல்கள்' என்ற நூலைக் காணும் வாய்ப்பைப் பெற்றார். நம்முடைய உடலால் செய்யும் செயல்களுக்கும், உள்ளத்தால் செய்யும் செயல்களுக்கும் உள்ள தொடர்பை அந்நூல் விளக்கி இருந்தது.

தன் எதிர்கால செயலை முடிவு செய்தார். தாம் ஒரு மருத்துவராக கல்வி கற்க வேண்டும். அப்படிச் செய்தால், உடலியல் துறைப் பேராசிரியராகப் பணிபுரிந்து வரலாம்; ஆய்வையும் தொடரலாம். அதனால், மருத்துவம் கற்றார்; பட்டம் பெற்றார். ஆய்வினைத் தொடர்ந்தார்.

ஜீரண மண்டலத்தின் வினை செயல்முறைகளைப் பற்றிப் பாவ்லாப் செய்து முடித்திருந்த ஆய்வுகள், அவரை சர்வதேச அளவில் அறிமுகம் செய்து வைத்தது. நரம்பு மண்டலத் துக்கும், ஜீரண மண்டலத்துக்கும் உள்ள உறவைப் பாவ்லாப் நிரூபித்துக் காட்டினார். இவரது அரிய கண்டுபிடிப்பிற்காக 1904-இல் நோபல் பரிசும் கிடைத்து.

இந்த மேதை ரஷ்யாவிலுள்ள ரியாஸான் என்னும் ஊரில் இன்றுதான் (14-09-1849) பிறந்தார்.

❑

ஜெர்மனிய விஞ்ஞானியான அலெக்ஸாண்டர் வான் ஹம்போல்ட் என்பவரும் இன்றுதான் (14-09-1769) பிறந்தார்.

❑

ஜேம்ஸ் ஃபென்னிமோர் கூப்பர் என்ற எழுத்தாளரும் இன்றுதான் (14-09-1859) பிறந்தார்.

❑

அமெரிக்க ஓவியர் சார்லஸ் டானாகிப்ஸன் என்பவரும் இன்றுதான் (14-09-1917) பிறந்தார்.

❑

செப்டம்பர்-15 பேரறிஞர்

மாணவர்கள் அரசியல் அறிவு நிறைய உடையவர் களாகத் திகழ வேண்டும். ஆனால், அரசியல் கட்சிகளோட தொடர்பு கொண்டு தீவிரமாக பணிபுரிதல் கூடாது. இதற்கு என் வாழ்க்கையையே சான்றாகக் காட்டுவேன்.

நான் மூன்றாவது ஆண்டு ஆனர்ஸ் படிக்கும் வரையில் எத்தகைய பொதுக் கூட்டத்திற்கும் சென்றதில்லை. கல்லூரியில் நடக்கும் விவாதமன்ற சார்பாக நிகழும் கூட்டங்களுக்கும் போகமாட்டேன்.

ஆனால், மூன்றாவது ஆண்டு ஆனர்ஸ் வகுப்பில் படிக்கும்போதுதான் லயோலாக் கல்லூரியில் நடந்த ஆங்கிலச் சொற்பொழிவுப் போட்டியில் முதன் முதலாகக் கலந்து கொண்டேன். பிறகு, 11-12-1934-இல் ஆனந்த விகடன் பத்திரிகையில் நான் சௌமியன் என்ற புனைப் பெயரில் எழுதிய சிறுகதை வெளிவந்தது. அதற்குப் பரிசாக ரூ.20 கிடைத்தது.

என் கல்லூரிப் படிப்பு முடிந்ததும் நான் ஓர் ஆறு மாதம் இந்தப் பள்ளியில் (கோவிந்தப்ப நாயக்கன் பள்ளி; சென்னை, சைனாபஜார் பச்சையப்பனுக்குப் பக்கத்தில் உள்ளது) ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறேன். பிறகு என் சிறிய தாயாரின் விருப்பத்திற்கிணங்க அப்போது குமாரராசாவாக இருந்த திரு.முத்தையா செட்டியாரிடம் கல்லூரியில் பணியாற்றிட ஒரு சிபாரிசுக் கடிதம் கேட்டுச் சென்றேன்.

ஆனால் அவரோ, ''என்னிடமே உதவியாளராக வந்துவிடுங்கள்'' மாதம் ரூ.120 சம்பளம் தருகிறேன் என்றார். நான் வீடு திரும்பி தங்கள் பணியை மேற்கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன் என்று கடிதம் எழுதிவிட்டேன்.

இப்படித் தன்னைப் பற்றிச் சொன்னவர், கட்டுரை யாளராகவும், கதையாசிரியராகவும், திரைக்கதை வசன கர்த்தாவாகவும், நாடக ஆசிரியராகவும், சிறந்தப் பேச்சாள ராகவும் திகழ்ந்தவர் - பேரறிஞர் 'அண்ணா' என்று மக்களால் பாசமுடன் அழைக்கப்பட்டு வந்த, முன்னாள் தமிழக முதல்வரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்று வித்தவருமான சி.என்.அண்ணாதுரை காஞ்சிபுரத்தில் இன்றுதான் (15-09-1909) பிறந்தார்.

❑

செப்டம்பர்-16 கோடை இரவில் மக்கள்

தாயார் ஏழையாய் இருந்த போதிலும் தன் மகன் பிரான்ஸ் சில்லாம்பாவை பள்ளிக்கு அனுப்பி படிக்க வைத்தார். இவர் பள்ளியில் நன்கு படிப்பவராகவும், நல்ல மாணவராகவும் இருந்ததால், ஆசிரியர்கள் பலர் உதவி நின்றார்கள்... அந்த உதவியோடு அவர் கல்லூரியிலும் காலடி எடுத்து வைக்க முடிந்தது.... அந்த வேளையில் ஒரு சமூகத் தொண்டர் குடும்பத்தோடு ஏற்பட்டதால் பட்டம் பெறாமலேயே கல்லூரியிலிருந்து விலகினார்.

சொந்த ஊருக்குச் சென்றார். அங்குதான் அவர் இலக்கியப் பணி தொடர்ந்தது எனலாம். 1915 வரையிலும் சிறுகதைகளே எழுதினார். அவரது படைப்புகள் பரவலாகப் பேசப்பட்டது... நன்கு இலக்கிய உலகில் அறிமுகமும் ஆனார்.

1916-இல் இவரது முதல் நாவல் வெளிவந்த நிகழ்ச்சி விநோதமான ஒன்றாகும்... பிரபல பதிப்பாளர் ஒருவர் சில்லாம்பாவைக் கடத்திக் கொண்டுபோய் ஒரு விடுதியின் அறையில் பூட்டிவிட்டார்.

ஒரு நாவலை எழுதிக் கையில் கொடுக்கும்வரை இந்த அறையில் இருந்து வெளியேற முடியாது எனக் கடுமையாகக் கூறிவிட்டாராம்.

அந்த நாவலை அரசு போற்றி பாராட்டியதோடு சிறப்பு விருது ஒன்றையும் 1920-இல் வழங்கியது என்பதோடு அவரது இறுதிக்காலம் வரை சிறப்பு ஊதியமும் அரசு வழங்கியது. இவரது சிறுகதைகள் ஏராளமாக வெளிவந்து உள்ளன.

1931-இல் வெளிவந்த இவரது, 'இளமையில் உறக்க நாவல்' இவர் ஆற்றலை ஐரோப்பிய நாடுகள் முழுதும் கூட்டிநின்றன. 1932-1934 நாளிலும் வெளிவந்த 'மனிதனின் பாதையும் 'கோடை இரவில் மக்கள்' என்ற இரு நாவல்களும் அவரின் புகழை நாடுதோறும் நிலை நாட்டியதோடு, நோபல் பரிசையும் வாங்கித் தந்தது. (1956)

இவர் பின்லாந்தின் தென்மேற்கிலுள்ள ஹாமீங்கைரோ என்னும் சிற்றூரில் இன்றுதான் (16-09-1888) பிறந்தார்.

❐

செப்டம்பர்-17 பூணூலைத் துறந்தார்

'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று அறிஞர் அண்ணாவால் போற்றப்பட்டவர் 'வ.ரா' எனப்படும் வ.ராமசாமி. முதலில் திண்ணைப் பள்ளியில் படித்த பிறகு திருவையாறில் உள்ள சென்ட்ரல் உயர்நிலைப் பள்ளியில் படித்து 1905-இல் மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றி பெற்றார்

'எப்.ஏ.' என்ற பட்டப்படிப்பில் தோல்வியுற்ற தால், கொல்கத்தா சென்று சுரேந்திரநாத் பானர்ஜி நடத்திய தேசிய கல்லூரியில் சேர விரும்பினார். ஆனால், சரியான பரிந்துரை இல்லாததால் அக்கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே 'வந்தே மாதரம்' என்று முழக்கமிட்டதற்காக கல்லூரி முதல்வரால் தண்டிக்கப்பட்டார், வ.ரா.

சிறுவயதிலேயே காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததால், வேதாரண்ணியத்தில் ராஜாஜி தலைமையில் நடைபெற்ற உப்புச் சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு அலிப்பூர் சிறையில் ஆறு மாதம் சிறை தண்டனை அனுபவித்தார்.

வ.ரா.மிகச் சிறந்த எழுத்தாளர் மட்டுமல்ல. சிறந்த பத்திரிகையாளரும்கூட. சிறையில் இருக்கும்போதே 'வாட் ஈஸ் பொயட்ரி' என்ற நூலை எழுதினார். நான்கு நாவல்கள், ஏராளமான கட்டுரைகள், வரலாற்று நூல்கள், அரசியல் நூல்கள், மொழி பெயர்ப்பு நூல்கள், வாழ்க்கை வரலாறுகள் போன்றவற்றை எழுதியுள்ளார். உரைநடைக்கு வ.ரா. என்று பாரதியார் இவரை பாராட்டியுள்ளார்.

இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பண்பு கொண்ட பண்பாளர். சொல் வேறு செயல் வேறாக இல்லாமல் தான் சொல்வதை தானே கடைபிடிக்கும் குணம் கொண்ட வ.ரா. சாதியின் அடையாளச் சின்னமாகிய பூணூலை அறுத்தெறிந்தார். பழைய சம்பிரதாயங்களை குழி தோண்டி புதைத்துவிட்டு, முற்போக்கான சிந்தனையுடன் மனித நேயத்தைப் போற்றியவர்.

இந்த விடுதலை வீரரும், சிறந்த எழுத்தாளருமான வ.ரா. தஞ்சை மாவட்டம் - திங்களூர் எனும் சிற்றூரில் இன்றுதான் (17-09-1889) பிறந்தார்.

□

செப்டம்பர்-18 அகராதி

விண்ணிற்கும் கீழேயுள்ள நாடுகள் அனைத்திலும் அறிவு விளக்காய் ஒளிவீசிக் கொண்டிருக்கும் மொழி ஆங்கிலம் என்பதை நாம் அறிவோம்.

ஆங்கில இலக்கிய உலகில் அற்புதப் பேரொளியாய் 1709-ஆம் ஆண்டு ஒரு விடிவெள்ளியாக தோன்றியவர், டாக்டர் சாமுவேல் ஜான்சன். சாதாரண ஒரு புத்தக வியாபாரியின் மகனாவார்.

எதை இழந்தாலும் தன்மானம் இழக்காதவராக இருந்த ஜான்சன், தக்க பருவத்தில் கல்வியைத் தொடர்ந்தார். பள்ளிக் கல்வியிலும் சிறந்தோங்கி னார். ஏழ்மையின் காரணத்தால் பட்டப்படிப்பையும் பாதியிலேயே முடித்து; மீதி படிப்பை உலக அனுபவம் என்ற கல்லூரியில் கற்க ஆரம்பித்தார். வறுமையின் காரணமாக பள்ளியாசிரியர் பணியில் சேர்ந்தார். அப்பணி அவருக்கு நிறைவாக இல்லாததால் விலகினார்.

உழைப்பிற்கும், அறிவுக்கும் ஊதியம் தரவல்லது இலண்டனே என உறுதி கொண்டார். வறுமை அவரை வறுத்தெடுத்த காலமது. செல்வந்தர்கள் மது அருந்தி செல்வத்தை வீணாக்கிய விடுதிகளின் முன் காய்ந்த ரொட்டிகளையும், மலிவான பழங்களையும் குறைந்த காசில் சிக்கனமாக வாங்கி கணக்கிட்டு காலத்தை நகர்த்திக் கொண்டிருந்தார்.

வயிற்றுப் பசியைவிட, அவருள் இலக்கியப் பசியே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டு இருந்தது. அதற்கு வடிகாலாய் 'ஜென்டில்மேன்' என்ற பத்திரிகை அமைந்தது. அங்கே உதவியாளராகச் சேர்ந்தார். அப்பத்திரிகையில் அவர் 'இலண்டன்' என்ற தலைப்பின் கீழ் எழுதிய கவிதை அவரது இலக்கிய உலகிற்கு ஒளி விளக்காய் அமைந்தது.

யாரும் செய்யாததை செய்து சாதனை படைக்க வேண்டுமென்று விரும்பிய ஜான்சன் ஆங்கில அகராதியை எழுதத் தொடங்கினார். அவ்வேளையில் அவர் பட்ட துன்பங்கள், துயரங்கள் எண்ணிலடங்கா... ஏழு ஆண்டுகள், இடைவிடாது உழைத்தார்; பாரிசவாயும், காச நோய்க்கும் ஆளானார்.... இருந்தாலும், எடுத்தப் பணியை செம்மையாக முடித்தார்.

ஆங்கில அகராதியை அகிலத்திற்கும் வழங்கிய இந்த ஆசான், இங்கிலாந்தில் ஸ்ட்ராபோர்டு ஷயர் பகுதியிலுள்ள லிச்பில்டு என்னும் ஊரில் இன்றுதான் (18-09-1709) பிறந்தார்.

❑

செப்டம்பர்-19 பித்தளைப் பட்டாம்பூச்சி

வில்லியம் கோல்டிங், மார்ல்பரோ கிராமப் பள்ளியிலும், ஆக்ஸ்போர்டு பிராஸனோஸ் கல்லூரியிலும் கல்வி பயின்று, 1935-இல் பட்டம் பெற்றார்.

இவர் கப்பற்படையில் பணியாற்றினார். பள்ளியாசிரிய ராகவும் பணி செய்தார். அந்த வேளையில்தான், இவர் நான்கு நாவல்களை எழுதினார்.

இதில் ஒன்றுகூட அச்சேறவில்லை. அதற்காக அவர் எழுதுவதை நிறுத்தவுமில்லை. நம்பிக்கைதானே வாழ்க்கை...

'பூச்சிகளின் கடவுள்' என்ற நாவலை மட்டும் இருபத்தி யொரு பதிப்பகங்களுக்கு அனுப்பினார். அத்தனையும் சுவரில் பட்ட பந்தாக வெற்றிகரமாக திரும்பி வந்தன.

சற்றும் தளராமல் மீண்டும் ஒரு பதிப்பகத்திற்கு அந்நாவலை அனுப்பிவைக்க, அப்பதிப்பகம் வெளியிட்டது.

அந்நாவல் பிரிட்டனில் வேகமாக விற்பனையை எட்டியது. அமெரிக்காவிலும் இந்நாவல் பதிப்பாகி சாதனை சரித்திரம் படைத்ததோடு, 1963-இல் பிரிட்டிஷ் திரைப்பட நிறுவனம் அந்நாவலைத் திரைப்படமாக வெளியிட, கோல்டிங்கின் புகழ் உலகம் முழுதும் ஒளியாய் பரவிற்று.

இதன்பின் வெளிவந்த 'வாரிசுதாரர்கள்', 'பின்ச்சர் மார்ட்டின்', 'இலவச வீழ்ச்சி' போன்ற நாவல்களும் இவரது புகழை மேலும் உயர்த்தியது.

இதைத் தொடர்ந்து வெளிவந்த ஏராளமான சிறுகதை களும், 'பித்தளைப் பட்டாம்பூச்சி' என்ற நாடகமும் இவருக்கு பெருமை சேர்த்தன.

சிறுகதை, நாவல், நாடகம் என்று எழுதி குவித்து புகழ்பெற்ற இவர் நோபல் பரிசையும் 1983-இல் பெற்றார். இவர் இன்றுதான் (19-09-1911) பிறந்தார்.

❑

ஹங்கேரி நாட்டு தேசபக்தரான லாஸோல் கொஸூத் என்பவரும் இன்றுதான் (19-09-1802) பிறந்தார்.

❑

செப்டம்பர்-20 பாட்டும் - பரிசும்

மகாவித்வான் ரா.இராகவய்யங்கார், சிறுவயதிலேயே தந்தையை இழந்ததால், இவரது மாமன் தமிழ் வித்வான் முத்துச்சாமி அய்யங்காரே இவரையும், இவரது குடும்பத்தையும் காத்திருக்கிறார். இவரது ஆரம்பக் கல்வி இராமநாதபுரத்தில் சுவார்ட்ஸ் என்கிற ஆங்கிலேயர் நிறுவிய பள்ளியில் தொடந்திருக்கிறது.

மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியின் முதல் தமிழாசிரியரானார். அப்போது இவருக்கு வயது 18. இரண்டாண்டுக்குப் பின்னர் திருச்சி தேசிய உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். தமிழ்த்தாத்தா உ.வே.சா.அவர்கள், அய்யங்காரின் அருந்தமிழ் ஆற்றலைக் கண்டு பாராட்டினார்.

தன் மீது பாமாலை பாட பரிசு தந்து பாராட்டிய சேதுபதி மன்னர், தம்மிடம் ஆஸ்தான வித்வானாகப் பணியாற்ற அழைத்தார். அய்யரும் அவ்வழைப்பை ஏற்று சென்றார். அப்போது மன்னர் அய்யங்காருக்குத் தங்கப் பல்லக்கு பரிசளித்தார். அரசரோடு இருந்தபோது விவேகானந்தரோடு பழகும் வாய்ப்பினைப் பெற்றார்.

இராகவய்யங்கார், 1901-ல் பாண்டித்துரை தேவர் தொடங்கிய மதுரைத் தமிழ் சங்கத்தின் தலைமையை ஏற்றார். 1935-இல் அண்ணாமலை பல்கலைக் கழக தமிழ்த்துறையில் தலைமை ஏற்றார். அங்கே ஆறாண்டுகள் அருந்தமிழ் தொண்டாற்றினார். இவரது ஆய்வு நூல்கள் பல பல்கலைக் கழகங்களில் பாடநூலாக ஆக்கப்பட்டுள்ளன.

753 வெண்பாக்களில் பாரி கதையை இயற்றி அதற்கு உரையும் கொண்டார். இந்நூல் அரங்கேற்றத்தின்போது, இராஜாசர் அண்ணாமலை செட்டியாரால் 6000 பொற் காசுகளை அன்பளிப்பாகவும் பெற்றார். திருமாலைப் பற்றி 'திருவடி மாலை' என்ற நூலையும் எழுதினார்.

'கீதையையும் இராமாயணத்தையும் மொழி மாற்றமும், வடமொழி நூலான சாகுந்தலத்தை தமிழாக்கமும் செய்தார்'. தமிழ் வரலாற்றோடு, பல நூல்களை எழுதிய 'பாஷா கவி சேகரா' என்ற பட்டத்தைப் பெற்றார்.

ஆழ்வார் திருநகரியில், இந்தத் தமிழறிஞர்-இன்றுதான் (20-09-1870) பிறந்தார்.

❑

செப்டம்பர்-21 கால இயந்திரம்

எச்.ஜி.வெல்ஸ், இவர் ஆங்கில எழுத்தாளர். அறிவியல் கதைகளையும், நாவல்களையும் விரும்பி எழுதக்கூடியவர்.

'தவார் ஆஃப்த வோல்ட்ஸ்' (உலகங்களின் போர்)'த கின்வி ஷிபில்மேன்' (கண்ணிற்குப் புலப்படாத மனிதன்) 'த டைம் மிஷின்' (கால இயந்திரம்) இந்த மூன்று நாவல்களும் இவரின் புகழை இன்று வரை பேசிக்கொண்டு இருக்கின்றன.

தும்மல் வரும்போது கூட இமைகள் மூடிவிடும். ஆனால் இவர் நாளும் பொழுதும் இமை மூடாது எழுதிக் கொண்டே இருப்பார் என்று இவரைப் பற்றி குறிப்பிடுவதே பொருத்தமாக இருக்கும்.

இவர் குடும்பம் வறுமையில் இருந்தது. ஒரு தையற் காரரிடம் உதவியாளராக பல ஆண்டுகள் வேலை பார்த்தார்.

இளமையிலேயே எதையும் கூர்ந்து கவனித்து கற்பனை செய்யும் ஆர்வம் இவரிடம் இருந்தது.

அவரது அறிவுக்கு வடிகாலாய் கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றார்.

அதன் பிறகு இரண்டு விஷயங்களில் இவர் கவனம் செலுத்தினார்.

மக்களுடைய வாழ்வு உயர வேண்டும். மகிழ்ச்சியுடன் முழுமையான வாழ்வு பெற வேண்டும். அது விஞ்ஞான வளர்ச்சியின் மூலம் ஏற்பட முடியு மென்று அவர் கருதினார்.

சமத்துவக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டிருந்த அவர் அமைதியான முறையில் அந்த இலட்சியத்தை அடைய விரும்பினார்.

அதனால், எழுத்தை கையில் எடுத்துக் கொண்டார். இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த நாவல்கள் பலவற்றை எழுதி புகழ் பெற்றார்.

இந்த அறிவியல் எழுத்தாளர் அமெரிக்காவில் இன்றுதான் **(21.09.1866)** பிறந்தார்.

❑

செப்டம்பர்-22 'பசிகோவிந்தம்'

இவரது இயற்பெயர் கோவிந்தன். வறுமையும், அறியாமையும் மிகுந்த குடும்பத்தில் பிறந்து, நடுநிலைப் பள்ளியை முடிப்பதற்குக் கூட வசதியில்லாமல் தந்தையுடன் பொற்கொல்லுப்பட்டறை வேலைக்கு சென்று வந்தார். இரவு நேரங்களில் இலவச இரவுப் பள்ளியில் படித்தார். பின், ஓவியம் கற்று ஜெமினி ஸ்டுடியோ விளம்பரப் பிரிவில் ஓவியராக சேர்ந்தார். பின் அங்கிருந்து அவரின் நண்பர் 'ராஜாபாதர்' என்பவர் மூலம் 'தமிழரசு' அச்சகத்தில் அச்சுக் கோர்க்கும் பணியில் சேர்ந்தார். 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற கவிதையை முதன் முதலாக அச்சுக் கோர்த்தவர் இவர்தான். தமிழரசு அச்சகத் துக்குப் பிறகு சில பத்திரிகைகளில் இருந்தவர், 'ஆனந்த விகடன்' அச்சகத்தில் சேர்ந்தார். இங்கு எழுதத் தொடங்கினார்.

இவரை பேராசிரியர் கல்கியிடம் அறிமுகப்படுத்தி பணிக்குச் சேர்த்தார், ராஜாபாதர். தமிழ் இலக்கிய உலகிற்கு கல்கிதான் அறிமுகப்படுத்தினார். இவரை துணையாசிரியராக ஆக்கியதோடு 'விஜி' என்று பெயர் வைத்துக் கொண்ட கோவிந்தன் பெயரை 'விந்தன்' என்று மாற்றி கோவிந்தனை விந்தனாக்கினார், கல்கி. அப்பெயரே விந்தனுக்கு பாராட்டைப் பெற்றுத்தந்தது. விந்தனை துணையாசிரியராக 'கல்கி' சேர்த்துக் கொண்டபோது, 'ஒரு தொழிலாளி துணையாசிரியராவதா? என ஒரு சிலர் கல்கியிடமே வாதாடி தோற்றுப் போனார்கள்.

விந்தன் பத்திரிகை உலகில் வெற்றிகரமாக இருந்த போதுதான் சினிமா ஆசை அவரைத் தொற்றிக் கொண்டது. கல்கியில் பத்தாண்டுகள் இருந்ததை விட்டு ஏவிஎம்மின் கதை இலாகாவில் சேர்ந்தார். அங்கிருந்த கட்டுப்பாடு ஒத்துவராததால் விலகி, சுதந்திர சினிமா எழுத்தாளராக முயன்றார். தோற்றார். சிவாஜி, எம்.ஜி.ஆர் நடித்த கூண்டுக்கிளி, சிவாஜி, நடித்த 'அன்பு' போன்ற படங்களுக்கு வசனமும் பாடல்களும் எழுதினார். ராஜாஜி 'பஜகோவிந்தம்' என்ற நூலை எழுதிய போது, 'பசி கோவிந்தம்' எழுதி படிப்பாளர்களை சிந்திக்கத் தூண்டியவர்.

யாருக்கும் வணங்காமல் பேனா பிடித்த இந்த எழுத்து வேந்தர் செங்கை நாவலூர் என்ற கிராமத்தில் இன்றுதான் **(22-09-1916)** பிறந்தார்.

❑

செப்டம்பர்-23 குயில் தவறாகப்பாடுகிறது

ஜெரோஸ்லாவ் சீஃபெர்ட் என்ற கவிஞர், பள்ளிப் படிப்பு மிகவும் குறைந்தவர். அதனால், தன் தந்தை நிர்வகித்து வந்த கடையிலேயே இவரது இளமை கழிந்தது. கடைக்கு வரும் வாடிக்கையாளர்களோடு ஏற்பட்ட தொடர்பு இவருக்கு பல்வேறு அனுபவ பாடங்களை நிரம்ப கொடுத்ததாக அவரே தன் படைப்புகளில் கூறியுள்ளார்.

கற்ற கல்வி சிறிதேயாயினும் தனது சொந்த முயற்சியால் இலக்கியம், இசை, அந்நிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். சிறுகதை, கட்டுரை, கவிதை என்று எழுதத் தொடங்கியவர் இருபது வயதிலேயே ஒரு பத்திரிகை ஒன்றின் துணை யாசிரியராகவும் ஆனார். முதல் உலகப்போர் முற்றுப் பெற்றதும், அந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்ட சீஃபெர்ட், 'சிவப்பு விளக்கு' என்ற செய்தித்தாளுக்கு எழுதி பேரும் புகழும் பெற்றார். கம்யூனிசக் கொள்கையில் இவருக்குப் பிடிப்பு அதிகம் இருந்ததால், கம்யூனிஸப் பத்திரிகையான 'சிவப்பு விளக்கில்' பணியாற்றும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

1950-வரையிலும் விடாப்பிடியாக பத்திரிகை பணியில் இருந்தார். அந்தவேளைகளிலும் கவிதைகள் எழுதுவதை அவர் நிறுத்தவில்லை. அவ்வாறு எழுதிய கவிதைகளை எல்லாம் தொகுத்து 'கண்ணீரில் நகரம்' எனும் பெயரில் 1920-இல் அது வெளிவந்தது. இவருக்கு புகழ் தந்தது. 'செக்' நாட்டில் புதுக்கவி ஒருவர் தோன்றியதாகப் பேசப்பட்டது. காரணம், கவிதைகள் அனைத்தும் அறிவின் விளைச்சலாக இருந்ததுதான். இதைத் தொடர்ந்து வெளிவந்த 'கம்பியில்லா அலைகள்', 'குயில் தவறாகப் பாடுகிறது...' என்ற இரண்டு கவிதை நூலும் உலக மகா கவிஞர்களுக்கு இணையாக சீஃபெர்ட்டை கொண்டு சேர்த்தது.

சீஃபெர்ட் மொத்தம் முப்பது தொகுதிகள் கொண்ட கவிதைகளைப் படைத்திருக்கிறார். இவரது படைப்பாற்றலைப் பாராட்டி 1966-இல் இவருக்கு 'தேசியக் கவிஞர்' எனும் பட்டத்தை அரசு வழங்கியது. மேலும் 1984-இல் நோபல் பரிசும் கிடைத்தது.

'எழுத்தாளன் வாய் மூடி ஊமையாய் இருப்பானாயின் அவன் ஒரு பொய்யன்' என்ற தன்மானக் குரல் எழுப்பிய இக்கவிஞன் இன்றுதான் செக்கோஸ்லாவிய நாட்டில் - பிராக்கில் இன்றுதான் (23-09-1901) பிறந்தார். ❐

செப்டம்பர்-24 பழனிக்குமார்

இந்தியாவில் சுதந்திரத்தீ எங்கும் பற்றி எரிந்து கொண்டிருந்த நேரம்.

மதுரையிலும் அத்தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த வேளையில், அங்கே பழனிக்குமார் பிள்ளையும் விடுதலைப் போரில் குதித்தார். 1908 பிரம்மஜ்ஞானசத்தில் சேர்ந்தார்.

நேரு ஏற்படுத்திய சுயராஜ்ய கட்சியின் இராமநாதபுரம் மாவட்ட செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட முற்பட்டார்.

அப்போது நடந்த கள்ளுக்கடை மறியலில் களம் இறங்கியபோது போலீசாரால் கைது செய்யப்பட்டு சிறை சென்றார்.

1930-இல் நடந்த உப்புசத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு அந்நியரை வீராவேசமாகப் பேசியதற்காக கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டார்.

இராமநாதபுரம் மதுரை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் 9-வது சர்வாதிகாரியாக இருந்து மறியல் நடத்தியதற்காக இரண்டாண்டு காலம் சிறையில் கடுங்காவல் தண்டனை அரசு கொடுத்ததோடு, ஆயிரம் ரூபாய் தண்டனையும் போட்டது.

1942-இல் வ.உ.சி., சி.சோமயாஜுலு, காமராஜர் போன்ற தலைவர்களோடு ஈடுபட்ட போராட்டத்தில் காமராஜரோடு சிறையில் அடைக்கப்பட்டார்.

தெய்வபக்தியும், தேசபக்தியும், மனித நேயமும் கொண்டு தன் வாழ்நாள் முழுதும் வாழ்ந்து வந்தவர், பழனிக்குமார் பிள்ளை.

இந்த விடுதலை வீரர் இன்றுதான் (24-09-1898) பிறந்தார்.

❐

செப்டம்பர்-25 உடுமலை கவி

விண்ணோடும் முகிலோடும்
விளையாடும் வெண்ணிலவே
கண்ணோடு கொஞ்சும்
கலையழகே இசையமுதே....

- இந்தத் தித்திக்கும் திரைப்பாடலுக்குச் சொந்தக்காரர், உடுமலை நாராயண கவி.

இளம் வயதிலேயே பெற்றோரை இழந்ததால், தனது அண்ணனின் அரவரணைப்பில் வாழ்ந்தார். இளமையில் வறுமைதான். நான்காம் வகுப்போடு திண்ணைப்பள்ளிப் படிப்பு நின்று போனது. தீப்பெட்டிகளைச் சுமந்து கிராமப் புறங்களில் விற்றார். இவரது ஆசிரியர், புலவர் பாலசுந்தரம் பிள்ளை. அனுபவக் கல்வியே அதிகம் பெற்றார்.

பின்னர், முத்துச்சாமி கவிராயரிடம் பதினைந்து ஆண்டு கள் தமிழ்க் கல்வியையும், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளிடம் நாடகத்தையும், ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதரிடம் கதா காலட்சேபக் கலையையும் கற்றார். சரபக்கவி இயற்றுவதில் வல்லவரான முத்துசாமிக்கவி தமிழ் இலக்கணம், சாஸ்திரீய சங்கீதம், பாடல் புனையும் முறை ஆகியவற்றைக் கற்றுத் தந்தார்.

கடன் தொல்லையால் தன் ஊரை விட்டுப் புறப்பட்ட கவிராயர் மதுரைக்குப்போய்ச் சேர்ந்தார். அங்குத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளிடம் சென்று யாப்பிலக்கணம் கற்றார். மதுரையில் நாடகமன்றம் அதிகம் இருந்ததால், அவ்வூர் பிடித்துபோனது. அங்கு பல நாடகங்களுக்கு உரையாடல் களும், பாடல்களும் எழுதிக்குவித்தார். அத்துடன் கவிஞருக்கு தேசிய உணர்வும் பெருகவே, இவரும் ஏராளமான தேச விடுதலைப் பாடல்கள் எழுதினார். மேடையிலும் பாடினார்.

நாடக உலகில், திரைஉலகில் பல்துறை வித்தகராக விளங்கி சாதனை படைத்தவர் கவிராயர். தமிழகத்துத் திரைவானில் ஒரு மின்னலைப் போன்று மின்னிக் கொண்டிருந்தவர். உடுமலை நாராயணகவி. சங்கீத நாடகச் சங்கத்தின் சிறந்த பாடலாசிரியர் விருதும், கலைமாமணி விருதும் பெற்றார்.

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை பூளவாடி என்னும் சிற்றூரில் இந்த மாபெரும் கவிஞர் இன்றுதான் (25-09-1899) பிறந்தார்.

□

செப்டம்பர்-26 'வேஸ்ட் லேண்டு'

ஆங்கில இலக்கிய உலகில் அழியாப் புகழ்பெற்றவர், கவிஞர் எலியட். அமெரிக்காவில் இவர் பிறந்தாரே தவிர, இங்கிலாந்தில் வாழ்ந்தார். தத்துவம், ஆங்கில இலக்கியம், வரலாறு, பிரெஞ்சு மொழி என்று பல்வேறு கல்விகளையும் கற்றார்.

படிக்கும்போதே கவிதை எழுதத் தொடங்கிவிட்டார். படித்து முடித்ததும் பள்ளியாசிரியர் பணியிலும், பின்னர் வங்கியிலும் பணி செய்தார்.

1917-இல் இவரது கவிதை வெளியானது. நண்பர் களிடையேயும், இலக்கிய வட்டத்திலும் பேசப்பட்டது. இதனை அடுத்து 'வேஸ்ட் லேண்ட்' *1922*-இல் வெளிவந்தது. உலகப் புகழைத் தந்தது.

கவிதைகளைத் தவிர நாடகங்கள், இலக்கிய விமர்சனக் கட்டுரைகளை இக்கவிஞர் எழுதினார். *1948*-இல் இந்த மாபெரும் கவிஞருக்கு நோபல் பரிசும் கிடைத்தது.

இக்கவிஞர் அமெரிக்காவில் இன்றுதான் *(26-09-1908)* பிறந்தார்.

❐

கவிதை உலகில் தனிப்பாட்டை போட்டவர்; 'சானெட்' வகைப் பாடல்களை அமைத்தவர். வசன கவிதைகளையும் பிரெஞ்சுக் கவிதை யாப்பினையும் தமிழில் கொண்டு வந்தவர்; இந்தியாவிலேயே முதன் முதலில் 'கலைக் களஞ்சியமும்; குழந்தைக் கலைக் களஞ்சியமும் கொண்டு வந்து தமிழ் மொழிக்கு வளம் சேர்த்தவர். இத்தகு செயலை எல்லாம் செய்த அறிஞர் பெரியசாமிதூரன் தான்.

இவர் *60*-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவருக்கு இந்திய அரசு 'பத்மபூஷன்' விருதையும், தமிழ்நாடு அரசு கலைமாமணி விருதையும் வழங்கி சிறப்பித்துள்ளது.

இந்தத் தமிழ்ச் செம்மலும் கோவை - மஞ்சக்காட்டுவலசு என்ற ஊரில் இன்றுதான் *(26-09-1908)* பிறந்தார்.

❐

செப்டம்பர்-27 தினத்தந்தி

ஐயா ஆதித்தனார் பத்திரிகையுலகில் சாதித்தவை அதிகம். தமிழ், தமிழருக்காக நாளும் ஆற்றிய தொண்டு, தொடு வானையும் விட நீண்டது. அவர் இல்லை என்றால் கூலித் தொழிலாளியும் பத்திரிகையைத் தொட்டிருக்கமாட்டான். தமிழர் தந்தை அய்யா ஆதித்தனார் இலண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் படித்தவர் என்றாலும், தான் ஒரு தூயத் தமிழனாகவே வாழ வேண்டும் என் எண்ணியவர்.

எனவே, தனது பெயருக்கு முன்னால் தூயத் தமிழிலேயே சி.பா.ஆதித்தனார் என்று குறிப்பிட்டார். எந்த நிலையிலும் தன் பெயரோடு 'பாரட்லா' என்பதை குறிப்பிட விரும்பவில்லை. மேல்நாட்டில் படித்திருந்தாலும் வழக்கமாக அரைக்கை மேல்சட்டையும் நான்கு முழ வேட்டியுமே விரும்பி அணிந்து வந்தார். பொதுவாக தமிழ் நாடு மீதும், தமிழர்கள் மீதும் மிகுந்த பற்று கொண்டிருந்த ஐயா தமிழகம் எல்லாத்துறையிலும் முன்னணி வகிக்க வேண்டும் என விரும்பினார். தான் வெற்றிகரமாக நடத்தி வந்த பத்திரிகை தொழில் பற்றி மற்றவர்களும் அறிந்து மேதையாய் விளங்கட்டும் என்ற பரந்த நோக்கில் பத்திரிகையை எப்படி நடத்துவது? என்பது குறித்து தனி புத்தகம் எழுதி வெளியிட்டார்.

அதற்கு ஆதித்தனார் பதில் கூறும்போது, ''அப்படி எல்லாரும் முன்னணிக்கு வரவேண்டும் என்பதுதான் என் விருப்பம். தவிர, நான் எழுதி இருப்பதை மேலெழுந்த வாரியாக படித்துவிட்டு மட்டும் பத்திரிகை துறையில் சாதனை புரிய முடியாது. உழைப்பும், நுண்ணறிவும் அதற்கு தேவை'' என்றாராம்.

அப்போதே எதையும் துணிவோடும், நம்பிக்கையோடும் செயல்பட முற்பட்டார். பள்ளிக் கல்வியை முடித்து, திருச்சி புனித வளனார் கல்லூரியில் பி.ஏ.பயின்று, முதல் மாணவராகத் தேர்வு பெற்றார். 1927-இல் இலண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார். 1942-இல் 'தினத்தந்தி' பத்திரிகையைத் தொடங்கினார். இன்று அந்த நிறுவனம் ஆல்போல் வளர்ந்து பல இதழ்களை வெளிக் கொண்டு வருகிறது.

இந்த பத்திரிகை உலக மேதை நெல்லையில் இன்றுதான் (27-09-1905) பிறந்தார்.

❐

செப்டம்பர்-28 தொழில்மேதை

ரால்ப் எட்வெர்டு பிளான்டேர்ஸ், அமெரிக்க நாட்டின் இயந்திரப் பொறியாளர், தொழிலதிபர், குடியரசு கட்சியைச் சேர்ந்தவர்.

இவர் தமது குழந்தைப் பருவத்தை ரோடித் தீவில் கழித்தவர்.

இயந்திரக் கருவிகள் தயாரிக்கும் ஆலையில் வேலை பார்த்தவர். பணியின்போது இவர் இந்திரக் கருவிகள் பற்றியும், அதனோடு தொடர்புடைய தொழில் நுட்பங்கள் பற்றியும் 'மிஷின்' என்ற தனது பத்திரிகையில் பல கட்டுரைகள் எழுதி வந்தவர். *(1905-1910).*

இவர் பல அறிவியல் கண்டுபிடிப்புகளை நடத்தியவரின் மகளை மணந்து கொண்டார்.

கூட்டமைப்பு இட ஒதிக்கீட்டு வாரியத்தின் தலைவ ராகவும் இருந்தவர் *(1944-1946).*

தொழில் மீது ஆர்வம் கொண்ட இவர், ஒரு முதலீட்டு நிறுவனம் ஒன்றைத் தொடங்கி அதன் வழியே, சிறுசிறு தொழிற்கூடங்களின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

இதன் பயனாக அந்நாட்டில் தொழில் பெருக்கம் ஏற்பட்டதோடு பொருளாதார உயர்வும் கூடி, இவர் புகழ் ஓங்கியது.

இந்த அறிவியல் மேதை வெர்மாண்ட் என்ற இடத்தில் இன்றுதான் *(28.09.1880)* பிறந்தார்.

❑

அமெரிக்கா மதுவிலக்குப் பிரச்சாரத் தலைவர் பிரான்ஸஸ் ஈவில்லார்ட் என்பவரும் இன்றுதான் *(28.09.1839)* பிறந்தார்.

❑

செப்டம்பர்-29 அணு ஆய்வு

என்ரிகோ பெர்மி என்பது அவர் பெயர். அணு ஆய்வுத் துறையில் வியத்தகு முன்னேற்றத்திற்கு துணை நின்ற விஞ்ஞானி.

கதிரியக்கத் துறையில் உழைத்துப் புதிய கதிரியக்கமுள்ள பொருள்களை கண்டுபிடித்ததற்காக 1938-இல் நோபல் பரிசையும் பெற்றவர், என்ரிகோ பெர்மி.

இவர் பள்ளிப் படிப்பை முடித்து, மேற்படிப்பை காட்டிங்கென், லெய்டென் என்ற இரு இடங்களிலும் முடித்தார். பின்னர், ரோம் பல்கலைக் கழகத்தில் பௌதிகப் பேராசிரியராக பணியில் சேர்ந்தார்.

உலகப்போர் தொடங்குமுன் 1938-இல் இத்தாலியை விட்டு அமெரிக்காவிற்குச் சென்றுவிட்டார், பெர்மி. அமெரிக்க ஐக்கிய நாட்டில் அவர் 1939 முதல் 1945 வரை கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் 1945-இல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கதிரியக்க ஆராய்ச்சிக் கழகத்தில் அவர் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

அணுக்களில் நியூட்ரினோ என்னும் ஒரு துணுக்கு இருப்பதாகக் கண்டுபிடித்து அறிவித்தவர் இவரே. அன்றியும் இவர் நெப்டியூனியனியம் என்னும் புதுமூலகம் ஒன்றைக் கண்டுபிடித்தார். இவரது நேர்முகமான உதவியால் அமெரிக்கா அணுகுண்டுகளைச் செய்ய முடிந்தது.

இந்த விஞ்ஞானி ரோம் நகரத்தில் இன்றுதான் (29-09-1901) பிறந்தார்.

❑

பிரிட்டிஷ் இராணுவ வீரரும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை நிறுவியவருமான ராபர்ட் கிளைவ் என்பவரும் இன்றுதான் (29-09-1725) பிறந்தார்.

❑

வெனிஸ் நகரின் சிறந்த ஓவியக் கலைஞரான டின்டோ ரட்டோ என்பவரும் இன்றுதான் (29-09-1518) பிறந்தார்.

❑

செப்டம்பர்-30 பாரசீகக்கல்வி

ஜலாலுதீன் முகமது ரூமி, இவர் பாரசீகக் கவிஞர். நீதித்துறையிலும் இருந்தார். இடைஇடையே இறையியலைக் கற்பித்தும் வந்தார். இவர் 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

ஆப்காஸ்தானி நாட்டிலுள்ள பலக் என்ற நகரில் பிறந்தார். பாரசீக வம்சாவழியினர்.

இவர் ஏராளமான கவிதைகளை எழுதிக் குவித்தவர். ஈரான் ஆப்கானிஸ்தான் மக்கள், இவரது கவிதைகளை படிக்காதவர் களே இல்லை என்று சொல்லலாம்.

இவரது கவிதைகள் இனம், மொழி, நாடு கடந்து புகழ் பெற்றவை. உலகக் கவி என்றே கூறலாம். துருக்கி, பாரசிகக் கவிஞர்கள் இலக்கியவாதிகள் இவரது கவிதைகளை ஆய்வு செய்து மகிழ்ந்தனர்.

திருக்குறளைப்போல், பைபிளைப்போல் இவர் கவிதை களும் உலகமொழிகள் அனைத்திலும் வெளிவந்திருக்கிறது.

கவிதை, இசை, நடனத்தால் இறைவனை அடைய முடியும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தார்.

இந்த உலகப்புகழ் பெற்றக் கவிஞர், ஆப்கானிஸ் நாட்டில் இன்றுதான் (30.09.1207) பிறந்தார்.

❑

1920-ஆம் ஆண்டு 20 இலட்சம் ரூபாயை வழங்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவியவரும், தமிழிசையை ஆராயவும், தமிழிசையைக் கேட்கவும் வாய்ப்பாகச் சென்னையில் தமிழிசை மன்றத்தை தோற்று வித்தவருமான ராஜா சர்.அண்ணாமலைச் செட்டியாரும் கானாடு காத்தான் என்ற ஊரில் இன்றுதான் (30.09.1881) பிறந்தார்.

❑

கால்வாய்களைக் கட்டுவதில், வல்லவரான பிரிட்டிஷ் பொறியாளரான ஜேம்ஸ் பிரிண்ட்லே என்பவரும் இன்றுதான் (30.09.1722) பிறந்தார்.

❑



கொடியேற்றிய பெண்

அன்னிபெசன்ட் அம்மையார், தமிழ்நாட்டைத் தாய்வீடு எனக் கருதினார். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நியூயார்க்கை சேர்ந்த பிளாவட்ஸ்கி அம்மையாரும், கர்னல் ஆல்காட் என்பவரும் சேர்ந்து, தியோசாபிகல் சொசைட்டி என்ற பிரம்மஞான சங்கத்தைச் தோற்றுவித்தார்கள்.

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த அன்னிபேசன்ட் அம்மையாரும் இச்சங்கத்தில் சேர்ந்தார்.

1916-ஆம் ஆண்டு காங்கிரஸில் சேர்ந்தார். தம்மை இந்திய குடிமகளாகவே பதிவு செய்து கொண்டதால் 1917-இல் காங்கிரஸ் தலைவர் பதவி அவரைத் தேடி வந்தது.

இவர், காமன் வீல், நியூ இந்தியா என்ற இரண்டு பத்திரிகைகளைத் தொடங்கினார். தமிழகத்தில் இந்திய விடுதலைக் கனலை மூட்டிய முதல் வீராங்கனை அன்னி பேசன்ட் அம்மையாரே ஆவார். பிரிட்டிஷ் மக்களின் பார்வையை இந்தியாவின் மேல் திரும்பும்படி செய்து வெற்றி பெற்றார். 1932-இல் நடைபெற்ற விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றார்.

இவரால் தொடங்கப்பட்டதே 'ஹோகுரூல்' இயக்கமாகும். இந்த இயக்கத்தை ஆதரித்து காந்தியடிகளும் பிரசாரம் செய்தார். 1916-ஆம் ஆண்டில் அன்னிபெசன்ட் அம்மையார் இந்திய மாணவர் சாரணர் இயக்கத்தைத் தோற்றுவித்தார். காங்கிரஸ் கட்சி முதன் முதலாக அமைத்த நாட்டுக் கொடியை ஏற்றிய முதல் தலைவர் என்ற சிறப்பைப் பெற்ற பெண்மணி இவரே.

இந்த விடுதலைப் போராட்டப் பெண்மணி, அயர்லாந்தில் இன்றுதான் (01-10-1847) பிறந்தார்.

❐

பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிகான் என்பவரும் இன்றுதான் (01-10-1895) பிறந்தார்.

❐

அக்டோபர்-2 உறுதி!

இந்தியாவின் முதல் பிரதமரான நேருஜியின் காலத்திலேயே, அவரைத் தொடர்ந்து அடுத்த பிரதமராகப் பதவி ஏற்பவர் யார் என்ற விவாதம் தொடங்கி விட்டது.

இந்தக் கேள்வி ஒரு கட்டத்தில் நேருவிடமும் எழுப்பப் பட்டது.

கோடிக்கணக்கான மக்களைக் கொண்ட இந்தியாவில், இரண்டாவது பிரதமராகப் பொறுப்பேற்கும் ஆற்றல் உள்ள ஒருவர் இருப்பார் என்றும், காலம் அவரை அடையாளம் காட்டும் என்றும் நேருஜி பொறுமையாகப் பதில் அளித்தார்.

அப்படி ஆற்றல் பெற்றவராக - இந்தியாவின் இரண்டாவது பிரதமராக வந்தவர்தான், லால்பகதூர் சாஸ்திரி.

கடன் கேட்பதே ஒருவனுக்குப் பெரும் இழுக்கு என்று நம்பிய லால் பகதூர் சாஸ்திரி, தம் 14-வது வயதிலேயே தன்மானத்தையும் மன உறுதியையும் விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்தார்.

ஒருமுறை ஆற்றைக் கடந்து செல்வதற்கு படகுக் கட்டணம் செலுத்தத் தம் கையில் பணம் இல்லாததால் அவர் ஆற்றில் ஒரு கரையிலிருந்து நீந்தி மற்றொரு கரையை அடைந்தார்.

பள்ளி நண்பர்களிடம் படகுக் கட்டணத்துக்குரிய பணத்தைக் கேட்டிருந்தால், அவர்கள் கொடுத்திருப்பார்கள். ஆனால், அவர் தன்மானத்தை இழக்கவில்லை.

இத்தகைய மன உறுதியும், தன்னம்பிக்கையும் கொண்ட லால் பகதூர் சாஸ்திரி உத்திரப் பிரதேசத்தில் இன்றுதான் **(02.10.1904)** பிறந்தார்.

❑

அக்டோபர்-3 சிங்கம்...

சிறுவயதிலேயே பஞ்சாப் சிங்கமாகிய இரஞ்சித் சிங்கிற்குக் கன்கயா வம்சத்தில் தோன்றிய குருபக்ஷ சிங்கினுடைய மகள் மாதாப் கூர் என்னும் பெண்ணை திருமணம் செய்து வைத்தனர். அப்போது பாலிய விவாகம் சர்வசாதாரணமானது.

இரஞ்சித் சிங் மகாராஜாவிற்கு மாதாப்கூரைத் தவிர வேறுபல மனைவிகளும் உண்டு. ஆனால், மாதாப்கூரே பட்டத்தரசியாக இருந்தாள்.

இவளுக்கடுத்தாற்போல் இராமசிங்கன் என்னும் ஒரு சிற்றரசனுடைய மகளாகிய இராஜ்கூர் என்பவளையும் மணந்தார்.

அவள் தூரக் சிங்கன் என்னும் மகனைப் பெற்றாள். அவன் ஒருவனே இரஞ்சித் சிங்கருடைய உண்மை மகன் எனச் சரித்திரம் சொல்கிறது.

மற்றும் இரஞ்சித் சிங்கர், குல்பீகம் என்னும் விலை மாதையும், மோரான் என்னும் விலைமாதையும் மணந்தாராம்.

மோரான் சிறிது காலம் மிக்க அதிகாரம் பெற்றவளாக இருந்து மன்னனையே ஆட்டிப் படைத்திருக்கிறாள்.

மன்னருடைய இறுதிக்காலத்தில் ஜிண்டான் என்னும் ஒரு பெண்ணையும் மணந்தாராம்.

அவள் சீக்கிய சேனையின் தளகர்த்தனுடைய மகள் என்றும், நடனத்தில் தேர்ந்தவள் என்றும், அரசர் ஒரு சமயம் அவளைப் பார்க்க நேரிட்ட தென்றும், உடனே அவளை அவர் மணந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

இந்த மன்னன் இன்றுதான் (03.10.1780) பிறந்தான்.

□

அக்டோபர்-4 திருப்பூர் வீரர்

காந்திஜியின் சத்தியாக்கிரக இயக்கம் நாட்டில் எண்ணற்ற அகிம்சை வீரர்களை உருவாக்கிற்று. அவர்களில் திருப்பூர் குமரன் என்ற வீரத் தமிழ் இளைஞனின் பெயரும் அந்தப் பட்டியலில் பதிவாகிவிட்டது.

1932-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் திருப்பூரிலும் போராட்டம் நடந்தது. நெசவாளி குடும்பத்தில் பிறந்த (குமாரஸ்சுவாமி) குமரன் திருப்பூரில் குடியேறியது முதல் தேசியப்பற்று அதிகமாகியது. குமரனின் நனவிலும், கனவிலும் காந்தியமே காட்சியளித்தது.

பெற்றோர்கள், முதலாளி இவர்களுடைய அனுமதியோடு ஆசியும் பெற்று விடுதலைப் போராட்டத் தொண்டனாகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார். தொண்டர் படை, "சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்தே துஞ்சிடோம், இனி அஞ்சிடோம்..." என்ற பாரதியின் பாடல்வரிகளைப் பாடிக் கொண்டு அந்நியத்துணி எரிப்பு செய்ய முன்னேறியது.

அக்காட்சியைக் கண்ட காவல்துறை அதிகாரி தொண்டர்களை விலகிப் போகும்படி உத்தரவிட்டார். தொண்டர்களோ, "நாங்கள் கூலிப்பட்டாளம் அல்ல. நாங்கள் அடக்குமுறைக்கு அஞ்சிட மாட்டோம்" எனக் கூறி ஊர்வலத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். இத்தொண்டர் படை காவல் நிலையத்திற்கு நேராக வந்ததும் காவலர்கள் எச்சரிக்கை ஏதும் செய்யாமல் திடீரென கூட்டத்தில் புகுந்து தடியடி நடத்தினர்.

தேசிய கொடி மீது அவர்கள் கொண்ட கோபத்தினால் முதல் அடி, கொடி பிடித்து முன் நடந்து கொண்டிருந்த குமரன் மீதே விழுந்தது. அவர் கொடியை இறுகப் பிடித்து வைத்திருக்கவே, அடிமேல் அடி விழுந்தது. அவர் மூர்ச்சித்து கீழே சாய்ந்தார். அந்நிலையிலும் கொடியைப் பிடித்திருந்த பிடி தளரவில்லை. குமரன் உயிர் நீத்தார்.

நாட்டிற்காக தன் உயிரைத் தியாகம் செய்த குமரன் அன்று அநாதைப் பிரேதமாகவே சுட்டெரிக்கப்பட்டார் என்பதே பல நெஞ்சை சுட்டெரித்தது!

அந்த தியாக தீபம் இன்றுதான் (04-10-1904) பிறந்தார்.

❐

ஜான் பிரான்கோஸ் மில்லட் என்பவர், புகழ்பெற்ற பிரிட்டன் ஓவியர். இவரும் இன்றுதான் (04-10-1814) பிறந்தார்.

❐

அக்டோபர்-5 அருட்பெருஞ்சோதி

அன்றாட வாழ்வில் அவதிப்பட்டு நிற்கும் மக்களின் துன்பங்களைக் கண்டு மனம் கசிந்தவர், அருளாளர், வள்ளலார். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் 'வாடியவர். சமுதாயத்தில் மலிந்து போயிருந்த 'கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போக வேண்டும்' என்று கடுமையாகச் சாடியவர்.

'நலிதருசிறு' தெய்வங்களுக்கு முன் ஆடு, கோழிகள் பலியிடுவதைக் கண்டும் உளம் கொதித்தவர். வறுமையால் வாடும் மக்களின் பசிப்பிணியினைத் தீர்ப்பதற்கு வழிகாண வேண்டுமென்று நாளும் பாடுபட்டவர்.

உண்மைத் துறவியான அவர், வடலூரில் சத்திய தர்மச் சாலையினை அமைத்து 'பசி' என்று வந்த ஏழை எளியவர்க்குப் 'புசி' என்று கூறி அன்னமிட்டார். சாதிச் சண்டையிலும், கோத்திரக் குப்பையிலும், சமயச் சாக்கிலும் ஆழ்ந்து கிடந்த மக்களை கரையேற்றிவிட சத்திய சன்மார்க்க சங்கம் கண்டார்.

தமிழ்க் கவிதையுலகில் அவர் செய்த புரட்சி மகத்தானது. ஏறத்தாழ ஆறாயிரம் பாடல்களை இயற்றியுள்ளார். ஆன்மநேய ஒருமைப்பாட்டினை காலம் முழுதும் வலியுறுத்தினார். எல்லோரும் இனிது வாழ வேண்டும் என்று அவர் கொண்ட கோட்பாடு உலகளாவிய உயர்ந்த கோட்பாடாகம்.

'நாடெல்லாம் வாழ கேடொன்றுமில்லை' என்று கண்ட அவர், சமரச சன்மார்க்கமென்னும் கொள்கையினை வலியுறுத்தினார். இவ்வுலகில் வாழ வேண்டிய நெறியில் வகையுடன் வாழ்ந்தால் 'மரணமிலாப் பெருவாழ்வு' கிட்டும் என உறுதியாக அவர் நம்பினார்.

ஒருமையுடன் இறைவன் திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவை வேண்டினார். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உத்தமர்தம் உறவை நாடினார்.

இத்தகைய அருள்வள்ளல் இராமலிங்க அடிகள் சிதம்பரத்திற்கு வடக்கேயுள்ள மருதூரில் இன்றுதான் **(05-10-1823)** பிறந்தார்.

❑

அக்டோபர்-6 சாகா

ஆய்வாளர் எம்.என்.சாகா, தமது சொந்த ஊரில் பள்ளிக் கல்வியை முடித்து, கொல்கத்தா மாநிலக் கல்லூரியில் அறிவியல் முதுகலைப் பட்டம் பெற்றார்.

1916-இல் கொல்கத்தா பல்கலைக் கழக அறிவியல் கல்லூரியில் கணித விரிவுரையாளராக சேர்ந்தார். பின் இயற்பியல் துறைக்குச் சென்றார்.

ஆற்றல் பெற்ற புரோட்டான் கருவை பல எலெக்ட் ரான்கள் சுற்றி வருகின்றன என நீல்ஸ் போரும், ரூதர்போர்டும் கண்டறிந்தனர்...

அவை வலம் வரும் வட்டங்கள் ஒழுங்கானவை அல்ல. திடீரென்று மாறும்.

அவ்வாறு மாறும்போது அவற்றின் ஒளிச் சுவடுக் கோடுகள் காணப்படும். அவற்றைத்தான் மேக்நாத் சாகா ஆய்வு செய்தார்.

அம்முடிவுகளைக் கொண்டு விண்மீன்களைப் பற்றி ஆய்ந்தார். அதன் பயனாக 'உடுக்கல் ஒளிக் கற்றையின் தோற்ற மூலம் பற்றி சரியான காரணத்தைக் கண்டு அறிந்து உலகப் புகழ் பெற்றார்.

ஒளிக்கற்றைச் சமன்பாடு கண்டுபிடித்தார். அது வான இயற்பியலின் வளர்ச்சிக்கு பெரிதும் பயன்பட்டு வருகிறது. இப்படி இவரது கண்டுபிடிப்புகள் பல.

அறிவியலாளராகவும், சுயேச்சையாக போட்டியிட்டு 1952-இல் பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்ட இவர், டாக்காவிலுள்ள சியோராதலி எனும் சிற்றூரில் இன்றுதான் (06-10-1893) பிறந்தார்.

❑

அமெரிக்க கண்டுபிடிப்பாளரான ஜார்ஜ் வெஸ்டிங் ரௌஸ் என்பவரும் இன்றுதான் (06-10-1820) பிறந்தார்.

❑

அக்டோபர்-7 புரட்சி!

24 வயது இளைஞன் அவன். விடுதலை வேள்வியில் தன்னை இணைத்துக் கொண்ட, நாட்டுப்பற்று மிக்க நல்லதொரு போர் மறவன்.

பஞ்சாப் சிங்கம் பகத்சிங் என்று போற்றப்பட்ட போராளி அவன். இவனுக்கு ஆங்கில அரசு தந்ததோ தூக்குத் தண்டனை. விடிந்தால் கழுத்தில் கயிறு முத்தமிடும். உயிர் பறந்துவிடும். இதுதான் நிலை.

இந்த நிலையில் அப்போது, சிறையில் இருந்த சில அதிகாரிகளை பகத்சிங்கிற்குத் தெரியாமலேயே, அவனுடைய நண்பர்கள் கைக்குள் போட்டுக் கொண்டு, அதிகாரிகள் மூலமாகவே பகத்சிங்கிற்கு ஒரு துண்டுச் சீட்டை அனுப்பி னார்கள்.

அதில் 'இரவோடு இரவாக நீ, சீட்டுக் கொண்டுவரும் அதிகாரி கூடவே தப்பி வந்துவிடலாம்' என்ற தகவல் இருந்தது.

பகத்சிங் இதை வாங்கிப் படித்துப் பார்த்துவிட்டு, மற்றொரு துண்டுச் சீட்டினில் ஏதோ எழுதி, அதை அதே அதிகாரியிடம் கொடுத்து நண்பர்களிடம் கொடுக்கச் சொன்னான்.

அந்தச் சீட்டில் பகத்சிங் என்ன எழுதியிருந்தான்...? 'உயிர் மேல் எனக்கும் ஆசை உண்டு. ஆனால், புரட்சியாளனான நான் தப்பித்து வந்தேனென்றால், புரட்சிக்காரர்கள் பயந்தவர்கள்' என்று புரட்சி மங்கிவிடும். ஆகவே, அதைவிட காலையில் தைரியமாக சாகிறேன். அப்போதுதான் நாட்டில் இருக்கிற ஒவ்வொரு பெற்றோர்களும் ஆகா! புரட்சி எவ்வளவு மகத்தானது என்று உணர்ந்து, தங்களுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் தாய்நாட்டுப் பாசத்தை ஊட்டி வளர்த்து பகத்சிங் மாதிரி வரவேண்டுமென்று வீரமாக சொல்லுவார்கள். அதனால்தான் நான் அதற்காகவே சாகிறேன்' என்று எழுதி யிருந்தான்.

சாவிற்கு அஞ்சாத அந்த சரித்திர புருசன் இன்றுதான் **(07.10.1907)** பிறந்தான்.

❐

அக்டோபர்-8 உழைப்பே உயர்வு

ஜூவன் பெரான், இவர் ஒரு அரசியல்வாதி. அர்ஜிண்டியனா நாட்டில் மூன்று முறை அந்நாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்நாட்டின் ஏழ்மையை ஒழிப்பதற்கு இவரும், இவரது மனைவி இவாவும் அரும்பாடு பட்டார்கள்.

அதனால், இவர்களுக்கு அந்நாட்டு மக்களிடையே மிகுந்த செல்வாக்கும், பேரும் ஏற்பட்டது.

உழைப்பே உயர்வு என்ற தாரக மந்திரத்தை கொண்டிருந்தவர், இவர்.

தன் நாட்டில் அரசியல் இயக்கம் ஒன்றினை ஏற்படுத்தினார். அந்த இயக்கம் சாம்பலாகாத சரித்திரமாக - விரிந்து பரந்து இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

இவர் தந்தை ஒரு விவசாயி. ஐரீஸ் வம்சா வழியை சேர்ந்தவர். தாயார் அமெரிக்க இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர்.

ஜூவன் இராவணுப் பள்ளியில் சேர்ந்து பட்டம் பெற்று படிப்படியாக இராணுவத்தில் பதவி உயர்வு பெறுகிறார்.

அப்போது, அங்கிருந்து இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு இராணுவ ரேஞ்சராக அனுப்பப்படுகிறார்.

இதன் காரணமாக பல நாடுகளோடு நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது.

தொழிலாளர்களின் சட்டம் கோரிக்கையில்தான் இருந்தது. இதை இவரே நடைமுறைப்படுத்தினார். பின் அதை அரசுத்துறையில் முக்கியத் துறையாகவும் ஆக்கினார்.

தன் நாட்டை தொழில்மய நாடாக ஆக்க நினைத்த அவர், ஐந்தாண்டு திட்டம் ஒன்றைத் தீட்டி அதில் தேசிய மயமாக்கப் பட்ட ஆலைகளை மேலும் வளர்ச்சிக்கு வழிவகுத்தார்.

இவர், அர்ஜிண்டியனா நாட்டில் இன்றுதான் **(08.10.1895)** பிறந்தார்.

❑

அக்டோபர்-9 புகலிடம்...

சிவகங்கையில் தேசியத்தையும், தியாகத்தையும் கட்டிக் காத்த பெருமையும், சிறப்பும் கொண்டவர், விடுதலைவீரர் கா.வெ.சேதுராமச்சந்திரன் என்றால் மிகையன்று.

கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர ஆட்கள், வீட்டு வேலைக்கு என்று தனியே ஆட்கள். வசதியான குடும்பச் சூழல். நஞ்சை புன்சை என்று ஏராளமான நிலபுலன்கள்.

தேசத்திற்கு பாடுபடும் தொண்டர்கள் வீடு நாடி வரும் போதெல்லாம் விருந்தோம்பல் தடபுடலாக இருக்கும். பின்னர் விடுதலைக் கோஷங்கள் எழும்பும்.

துணிச்சல்மிக்க பேச்சாளராகவும், சாதனை செம்மலாகவும், மனித நேயமும், தேசிய நேயமும் இவர் கொண்டிருந்ததால், மறைமுகமாக அந்நியர் ஆட்சிக்கு போர்க்கொடி தூக்கிய தேசபக்தர்களுக்கு புகலிடமாகவும் இவர், இவரது இல்லம் எப்போதும் இருந்தது.

1930, 32, 41, 42 ஆண்டுகளில் நடந்த உப்புசத்தியாகிரகப் போராட்டம், கள்ளுக்கடை மறியல் போன்ற பல போராட்டங்களில் கலந்து கொண்டு பல ஆண்டுகள் சிறைவாசம் செய்தார்.

பெரும் செல்வந்தராக இருந்த இந்த விடுதலைப் போராட்ட வீரர், நாட்டின் நலனையே நாளும் நினைத்து செயல்பட்டதால், செல்வம் குறைந்து, வறுமை வட்டத்தில் வகையாக மாட்டிக் கொண்டார்.

பல இன்னல்களுக்கு ஆளான இவர், தன் குடும்பத்தோடு பிழைப்பைத் தேடி சிவகங்கையில் இருந்து மதுரைக்கு பயணமானார்.

இந்த தேச பக்தர் இன்றுதான் (09-10-1908) பிறந்தார்.

❑

முன்னாள் தமிழக முதல்வர் எம்.பக்தவத்சலமும் இன்றுதான் (09-10-1897) பிறந்தார்.

❑

அக்டோபர்-10 நெமிரி

ஐவோ ஆண்ட்ரீச், உரைநடையிலும் கவிதை வரிகளிலும் இலக்கியம் படைக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தார். இவரது முதல் படைப்பு 'எக்ஸ்பாண்டோ...' இந்நூல் 1918-இல் வெளிவந்தது. அப்போது அவருக்கு வயது 26. இவர் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டதால் மூன்றாண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார்.

சிறையில் காலத்தை விணாக்காமல், டாஸ்டாவஸ்கி, டேனிஷ், சிந்தனையாளர் சோரன், இயர்கார்டு போன்றோரின் படைப்புகளில் ஆழ்ந்து கவனம் செலுத்தினார்.

அந்த வேளையில் வெளிவந்ததுதான் 'எக்ஸ்பாண்டோ.' அடுத்து வந்தது (1920) 'நெமிரி' கவிதைத் தொகுப்பு. இரண்டுமே அவரின் புகழையும், புலமையையும் வெளிப்படுத்தி நின்றன.

முதல் உலகப்போர் முற்று பெற்றதும், ஐவோ சுற்றுப்பயணம் மேற்கொண்டு, ஜாக்ரெப், வியன்னா, கிராக்கா மற்றும் கிராஜ் ஆகிய பல்கலைக் கழகங்களில் தத்துவம் படித்து பட்டம் பெற்றதோடு 1923-இல் டாக்டர் பட்டமும் பெற்றார். அதனால், அவரது அரசின் ராஜப் பிரதிநிதியாகப் பணியாற்றும் வாய்ப்பும் கிட்டியது.

கவிதைகளையே எழுதிக் கொண்டிருந்த ஐவோ, சிறுகதை எழுதவும் தொடங்கினார்.

அந்த முயற்சியில் 1920-இல் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. இவரது எழுத்துக்கு ஏராளமானவர் சேர்ந்தனர்.

சிறுகதைகளை எழுதிக் கொண்டிருந்தவரின் சிந்தனை நாவல் எழுதுவதிலும் நுழைந்தது. 'டிரைனாபாலம்', 'போஸ்னிய நெருக்கடி', 'சரஜீவோ மங்கை' என்ற தலைப்புகளில் மூன்று வெளிவந்தன. 'டிரைனா பாலம்' என்ற அருமையான நாவலே இவருக்கு நோபல் பரிசினை (1961) பெற்றுத் தந்தது.

இந்த எழுத்தாளர் மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான குவாதிஜாப்பில் இன்றுதான் (10-10-1892) பிறந்தார்.

❑

அக்டோபர்-11 'சித்தாந்த சங்கிரகம்'

வேதநாயகம்பிள்ளை அவர்கள், தியாகப் பிள்ளையிடம் முறையாக கல்வி கற்றார். தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, சமஸ்கிருத மொழிகளில் புலமை பெற்றார்.

1848-இல் திருச்சி நீதிமன்ற ஆவணக் காப்பகத்தில் முதன் முதலாகக் காப்பாளரானார். பின் இரண்டாண்டுகளில் நீதிமன்ற மொழி பெயர்ப்பாளராய் உயர்ந்தார். தன்னாற்றலால் பின் நீதிபதியாக ஆனார். தரங்கம்பாடியில்தான் பணி ஏற்றார்.

அக்கால கட்டத்தில் நீதிமன்ற மொழியாக ஆங்கிலம் இருந்ததால், மக்கள் உண்மை உணர முடியாது தவித்தனர். அதனால், சிறந்த வழக்குத் தீர்ப்புகளை எல்லாம் தமிழாக்கம் செய்து, 'சித்தாந்த சங்கிரகம்' எனும் நூலாக்கி அதை 1862-இல் முதல் சட்ட நூலாக வெளியிட்டார்.

தெலுங்குக் கீர்த்தனைகளே எங்கும் ஒலித்துக் கொண்டு இருந்த வேளையில், பிள்ளையவர்கள் தமிழ்ப் புலவர்களிடம் இசைக்கற்று, தமிழில் கீர்த்தனைகள், பாடல்கள் பாடினார்.

ஆங்கிலேயர் ஆண்ட அக்காலத்தில், நாடு முழுதும் பஞ்சம் தலைவிரித்தாடியது. மக்கள் சோற்றுக்கு வழியின்றி எலும்பும், தோலுமாய் அலைந்து கொண்டு இருந்த வேளையில், மக்கள் நேயர் உள்ளம் கசிந்து பெரும் செல்வந்தர்களிடமும் தொழிலதிபர்களிடமும் இருந்து, பொருள் பெற்று, ஊர் தோறும் கஞ்சித் தொட்டிகளை திறந்து வைத்து அமைதிப்பட்டார்.

பெண்களின் நலனில் இவர் முன் நின்றார். அவர்களும் படிக்க வேண்டும் என்று விரும்பினார். அதனால் 1869-இல் பெண்களுக்கெனத் தனிப்பள்ளி ஒன்றினை முதல் முதலாக தமது சொந்த செலவில் மாயூரத்தில் தொடங்கினார். பெண்களின் உயர்விற்காகவே, பெண் கல்வி, பெண்மானம் எனும் இரு உரைநடை நூல்களை 1870-இல் வெளியிட்டார்.

இவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின் சிறந்த புதினங்கள் பல எழுதினார்.

இப்பெருந்தகையாளர், திருச்சி - குளத்தூரில் இன்று தான் (11-10-1826) பிறந்தார்.

❏

அக்டோபர்-12 நாட்குறிப்பு

யூஜினியோ மாண்டேலீக்கு பதினான்கு வயதுச் சிறுவனாக இருந்தபோதே உடல்நிலைக் கோளாறு ஏற்பட்டது. அதனால் கல்வியை அரைகுறையாய் முடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வீட்டிலிருந்தபடியே இத்தாலி, பிரெஞ்சு நாவல்களை படிப்பதில் கவனம் செலுத்தினார்.

இதற்கிடையே உலகப்போர் தலைகாட்ட, தரைப்படை இராணுவத்தில் சேர்ந்தார். 1922-இல் இலக்கியத் தாகத்தால் தாமே ஒரு பத்திரிகையைத் தொடங்கினார். அது வெற்றி பெறவில்லை. இருந்தாலும் மற்ற இதழ்களில் எழுதிவந்தார். அத்தனை முயற்சிகளுக்குப் பிறகு 1928-இல் அவருடைய கவிதைத் தொகுப்பு ஒன்று வெளிவந்தது.

அதுவே, அவர் கவிஞர் என்பதை நாடு ஏற்றுக் கொண்டது. பிளாரன்ஸில், ஒரு புகழ்பெற்ற பதிப்பக நிறுவனத்தில் பணியாற்றினார். அங்கேயும் சில காலமே. 1928-இல் ஒரு நூலகத்தின் ஆராய்ச்சித் துறையில் இயக்குநராக அமர்த்தப் பட்டார். அதில் பத்தாண்டு காலம் நீடித்தார். அந்த வேளையில் நிரம்ப பத்திரிகைகளில் கவிதை, கட்டுரைகளை எழுதி வந்தார். அப்படி இருந்தும் அவர் பெயர் வெளியில் சொல்லுமளவில் பிரபலமாகவில்லை. இருந்தும் நம்பிக்கையோடு பேனாவைப் பிடித்தார்.

தான் வகித்து வந்த இயக்குநர் பதவி பறிக்கப்பட்டது. அந்த நிலையில் முன்பு இருந்த கவிதைகள் இரண்டாவது தொகுப்பாக 1939-இல் வெளி வந்தது. உணர்ச்சி மிகுந்த அந்தக் கவிதைகள் மக்களிடையே அவரை இனம் காட்டியது. அப்போது இத்தாலியின் புகழ்பெற்ற செய்தித்தாளான 'ஈவினிங் கூரியரில்' இலக்கிய ஆசிரியர் பணி கிடைத்தது.

அவ்வேளையில் மூன்றாவது கவிதைத் தொகுப்பு வெளிவந்தது. சில ஆண்டுகளின் நிகழ்ச்சிகளை 'நாட்குறிப்பு' எனும் பெயரிலே எழுதியிருந்தார். இதுவே அவர் புகழ் உலக அளவில் பரவ காரணமாயிருந்தது. இதற்கு இடையே 1975-இல் நோபல் பரிசும் அவருக்குக் கிடைத்தது.

இந்த எழுத்தாளர் ஜெனோவாவில் இன்றுதான் **(12-10-1896)** பிறந்தார்.

❑

அக்டோபர்-13 நேக்கட் ப்ரே...

கானர்ல் வில்டு, என்றவர் அமெரிக்கா நடிகர். இவர் இளமையில் ஐரோப்பிய நாடுகள் யாவையும் சுற்றி வந்தவர். அதனால், ஏராளமான மொழிகளை எழுதவும், பேசவும் இவருக்குத் தெரிந்திருந்தது.

நடிகராவதற்கு முன்பாக சிறந்த விளையாட்டு வீரராக உலா வந்திருக்கிறார். 1936-இல் நடந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு இருக்கிறார்.

இவர் ஒலிம்பிக் போட்டியில், தற்காப்பு கலையான வாள் வீச்சு விளையாட்டில்தான் கலந்து கொண்டார்.

இந்த விளையாட்டே இவரை திரைப்படத்திற்கு வர காரணமாக அமைந்தது.

'ரோமியோ ஜூலியட்' படத்தில் நடிப்பைப் பார்த்த ஹாலிவுட் திரைத் துறை இவரை அழைத்துக் கொண்டது.

1945-இல் பிடரிக் ஸாப்பின் தயாரித்த 'சாங்டு ரிமம்பர்' என்ற படத்தில் நடித்தபோது இவருக்கு சிறந்த விருது ஒன்று கிடைக்கப் பெற்றது.

அந்தக் காலத்தில் அந்த நாட்டில் இவரே காதல் மன்னன். காரணம், இவர் காதல் சம்பந்தமான படங்களிலேயே நடித்து வந்ததால்தான்.

1950-இல் இவரே திரைப்படமும் தயாரிக்கத் தொடங்கினார்.

1966 - 'நேக்கட் ப்ரே' என்ற படத்தை இவரே தயாரித்து அதில் காட்டுவாசியாக - நிர்வாணமாக நடிக்கிறார். இதுவே இவரை உலகப் புகழ் பெற வைக்கிறது.

இந்த நிர்வாண நடிகர், நியூயார்க்கில் இன்றுதான் (13.10.1915) பிறந்தார்.

❑

இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமரான மார்க்ரெட் தாட்சரும் இன்றுதான் (13.10.1925) பிறந்தார்.

❑

ஜெர்மன் விஞ்ஞானி ருடாஃல் வர்செள என்பவரும் இன்றுதான் (13.10.1821) பிறந்தார்.

❑

அக்டோபர்-14 சிவா

விடுதலைப்போர் வீரர்களில் ஒருவரான சுப்ரமணிய சிவா, தாயின் அன்பில் நன்றாகவே வளர்ந்தார். இறைவன் மீது தீவிர ஈடுபாடு கொண்ட சிவா கடைசி வரை அதே நிலையில் வாழ்ந்தார். தொடக்கக் கல்வியை முடித்த தன் மகன் சிவாவை திருவனந்தபுரம் நகர உயர்நிலைப் பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார். ஆங்கிலம் மற்றும் தமிழ் இரண்டு மொழிகளிலும் உள்ள இலக்கியங்களிலும் சிவாவுக்கு ஆழமான விருப்பம் இருந்தது. பின் சிறந்த இலக்கியவாதியாக சிவா இருந்ததற்கு அவர் பள்ளி நாட்களே காரணம். அங்கு தான் அவருக்கு அதற்கான தூண்டுதல் இருந்தது. பதினைந்து வயதில் திருமணம் ஆன சிவா, படிப்பதற்காக கோயம்புத்தூர் சென்றார்.

அங்கே சென்ற அவர் முரட்டுத்தனமான மனிதரானார். மீசை வளர்த்துக் கொண்டு மல்யுத்தம், சிலம்பம் என்ற சண்டைப் பயிற்சி பெற்று வீரமுடன் திகழ்ந்தார்.

அதேசமயம் கவிதை கட்டுரை போன்றவற்றில் ஆர்வமும் தேச பக்தி எனும் தீயும் சிவாவை அங்குதான் பற்றியது. இருந்தும், வளர்ந்தது முரட்டு குணமும், வீண் வம்புச் சண்டையும். போலீஸும் பிடித்துச் சென்றது.

சச்சிதானந்த சுவாமிகளின் சந்திப்பால் சிவாவின் வாழ்க்கைப் பாதை ஆன்மிகத்தில் திரும்பியது. முரட்டுக் குணங்கள் மாறியது. அவரது சீடராக மாறினார் சிவா. தாடி, மீசையோடு இல்லறத் துறவியாகவே மாறிவிட்டார், சிவா.

'தர்ம பரிபாலன சமாஜம்' என்ற அமைப்பை சிவா தோற்றுவித்தார். இதன் மூலம் அரசியல் பக்கம் சென்றார். பல கூட்டங்களில் கலந்து கொண்டு பேசினார். அவர் பேச்சு மக்களிடையே எழுச்சியையும், விடுதலை உணர்வையும் ஏற்படுத்தியது. பலமுறை சிறை சென்றார், சிவா. விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமல்ல, திறமையான பத்திரிகையாளர், 'பக்த விஜயம்' போன்ற 30 புத்தகங்களை எழுதிய சிறந்த ஆசிரியரும் கூட.

மதுரை - வத்தலகுண்டு எனும் கிராமத்தில் இந்த தேசமறவர் இன்றுதான் (14-10-1884) பிறந்தார்.

❑

அக்டோபர்-15 மன்னித்துவிடுங்கள்

அக்பர் நம் நாட்டை ஆண்டு வந்த காலத்தில், இந்து மதத்தைச் சேர்ந்த சில விஷமிகள், புனித நூலான குரானை ஒரு விலங்கின் வாலில் கட்டி ஊர்வலமாக அனுப்பிவிட்டார்கள்.

இந்த செய்தி அக்பரின் அன்னையாருக்கு தெரிந்ததும் பெரிதும் கலங்கிப் போனார். உடனே தன் மகன் அக்பரை வரச் செய்தார். அக்பர் வந்ததும் தன் வேதனைகளை அவர்முன் கொட்டினார்.

''மகனே, நமது புனித நூலை அவமானப்படுத்திய இந்துக்களுக்கு நாம் சரியான பாடம் கற்பிக்க வேண்டும்.

அவர்கள் போற்றுகின்ற அவர்களுடைய மதநூல்களை இன்னொரு விலங்கின் வாலில்கட்டி ஊர்வலமாக நடத்த உடனே உத்தரவிடு...'' என்று கூறினார்.

அக்பரோ நிதானமாக அன்னையாரிடம் சொன்னார். ''அம்மா! எவனோ அறிவிலி நமது புனித நூலை அவமானப் படுத்துவதாக நினைத்து, அவனுக்கே அவமானம் நேரக்கூடிய செயலை செய்திருக்கிறான்.

ஒரு அறிவிலியின் செயலை பெரிதாக எண்ணிக் கொண்டு அவனைப்போலவே நாமும் மதியற்ற செயலை செய்யத் துணியலாமா?

எந்த ஒரு மதத்தின் நூலையோ, அல்லது ஆலயத்தையோ அவமானத்துக்கு உள்ளாக்க நினைப்பவன் தன்னையும், தன்னைச் சேர்ந்த மதத்தையும் அவமானத்திற்கு உள்ளாக்க முனைகிறான் என்பதே பொருள்.

எனவே எனது தாயின் கட்டளையானாலும் இன்னொரு மதத்தின் நூலை அவமானப்படுத்தும் செயலில் நான் இறங்கமாட்டேன்! என்னை மன்னித்துவிடுங்கள்'' என்று கேட்டுக் கொண்டார்.

இந்த நல்லுள்ளம் கொண்ட மன்னன் அக்பர் இன்றுதான் *(15-10-1542)* பிறந்தார்.

❒

அக்டோபர்-16 மனிதக்குரங்கு...

யூஜின் ஓநீலின் தந்தை ஜேம்ஸ் ஓநீல் ஒரு பிரபலமான நடிகர். அவர் தனது ஒன்பதாவது வயதிலேயே அமெரிக்கா விற்குச் சென்றுவிட்டார். அவர் அங்கு சொந்தமாக நாடகக் குழுவை அமைத்து பல புகழ்பெற்ற நாடகங்களை நடத்தினார்.

ஓநீலுக்கு தந்தையின் ஆற்றல் சிறுவயதிலேயே அரும்ப ஆரம்பித்துவிட்டது. இருந்த போதிலும் அவ்வப்போது பள்ளிக்கும் சென்று வந்தார். பதினெட்டு வயதில் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.

அங்கு ஓராண்டு காலமே கற்றார். பின் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கு நாடகக் கலையைப் பற்றி அறிந்தார். *1914-15* வாக்கில் ஓநீல் நாடகங்களை எழுதக்கூடிய ஆற்றலைப் பெற்றார்.

'பவுண்டு ஈஸ்ட் ஃபார் கார்டிஃப்' என்ற நாடகத்தை முதன் முதலாக எழுதி, ஒரு நாடகக் குழுவிற்குக் கொடுத்தார். முதல் படைப்பே அவருக்கு ஒழுங்கான முகவரியைத் தந்தது. அது முதல் உற்சாகத்தோடு நாடகம் எழுத முனைந்தார்.

1916 முதல் *1920* வரை பல ஓரங்க நாடகங்களை எழுதிக் குவித்தார். அனைத்தும் நாடகக் குழுவால் நடிக்கப் பெற்றது. 'அடி வானத்திற்கு அப்பால்' என்ற நாடகம் சிறப்புமிக்க புலிட்சர் பரிசினை அவருக்குப் பெற்றுத் தந்தது. அமெரிக்கா வின் நாடக ஆசிரியருள் ஓநீலும் ஒருவரானார். நாடெங்கும் புகழ் ஒளி வீசியது.

இருபத்து மூன்று ஆண்டுகளில் இருபது நாடகங்களை எழுதினார். 'பேரரசன் ஜோன்ஸ்', 'அன்னாகிறிஸ்டி', 'மனிதக் குரங்கு' - இப்படி இவரின் படைப்புகள் நீண்டது.

'அன்னா கிறிஸ்டி', விசித்திர இடைவேளை', மற்றும் 'இரவை நோக்கி நீண்ட பகற்பயணம்' இம்மூன்று படைப்பு களும் புலிட்சர் பரிசினைப் பெற்றது. மேலும் நோபல் பரிசும் கிடைத்தது.

இந்த நாடகாசிரியர், நியூயார்க் நகரில் இன்றுதான் *(16-10-1888)* பிறந்தார்.

❐

அக்டோபர்-17 விண்மீன்

வான்கோளவியல் விஞ்ஞானிகளில் உலகம் போற்றுகின்ற ஒரு சிலரில் டாக்டர் எஸ்.சந்திரசேகரும் ஒருவர். விண்மீன்கள் பற்றிய இவரது ஆராய்ச்சி 1983-இல் இவருக்கு நோபால் பரிசினைப் பெற்றுத் தந்தது.

விண்மீன்களின் அடர்த்திக்கு ஒரு எல்லை உண்டு. அதை மீறும் போது 'வொயிட் டுவார்ஃப்' எனப்படும் ஒரு வகை விண்மீன்கள் அணுகுண்டைப்போல வெடித்துச் சிதறுகின்றன என்பது சந்திரசேகரின் கண்டுபிடிப்பு.

இன்று அந்த அடர்த்தி எல்லை 'சந்திரசேகர் லிமிட்' என்றே குறிப்பிடப்படுகிறது.

இன்று வான் கோளவியல் ஆய்வாளர்களுக்கு, நட்சத்திரங்களின் சூழ்நிலை குறித்துப் புரிந்து கொள்வதிலும், வானிலுள்ள பால் மண்டலத்தில் விண்மீன்களிடையேயான இயக்கம் பற்றி அறிந்து கொள்வதிலும் இவரின் ஆய்வுகள் பேருதவியாக இருக்கின்றன.

27-வயதில் அமெரிக்கா சென்றார். அங்கேயே அரை நூற்றாண்டுக்கும் மேலாக வாழ்ந்த போதும் நம் பண்பாடு மாறாமல் வாழ்ந்தவர்.

வாழ்வில் உயர்வு பெற விரும்புகிறவர்களுக்கு அவரது அறிவுரை இதுதான்... 'மிகச் சிறந்த மனிதர்கள் பிறப்பதில்லை. தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்கிறார்கள்.''

இவர் லாகூரில் பிறந்தவர். இருந்தாலும் சென்னை மாநிலக் கல்லூரியில்தான் பி.ஏ.ஹானர்ஸ் படித்தார்.

இந்த விண்ணியல் ஆய்வு மேதை இன்றுதான் (17-10-1910) பிறந்தார்.

□

அக்டோபர்-18 சிரிப்பு

சிறு வயதிலேயே படுசுறுசுறுப்பாக இருந்தார், ஹென்றி பெர்க்ஸன். *1868* முதல் *1878* வரையிலும் பாரிசிலுள்ள லைசி காண்டர்செட் பள்ளியில் படித்தார்.

அங்கு அவர் கணிதத்தில் சிறந்தவராய் இருந்தார். தனது *19*-வது வயதில், ஒருமுறை கணிதத்தில் ஒரு சிக்கலான கணக்கை மிக எளிதாக விடை கண்டு பரிசும் பெற்றார்.

ஆசிரியருக்கே விளங்காத அந்தக் கணக்கிற்கு தீர்வு கண்டதால் பள்ளியில் வியந்து பாராட்டாதவர்களே இல்லை.

1881-இல் பட்டம் பெற்றதுமே ஹென்றிக்கு விரிவுரையாளர் பணி கிடைத்தது. அங்கு பணி செய்து கொண்டு இருந்த வேளையில்தான் அவர் தனது முதல் நூலை எழுதினார்.

1889-இல் வெளியான அந்த ஆய்வு நூல் வெளிவந்து, பாரிஸ் சர்வகலாசாலையிலிருந்து பிஎச்டி பட்டத்தைப் பெற்றுத் தந்தது.

1900-இல் பிரெஞ்சுக் கல்லூரியில் கிரேக்கத் தத்துவத் துறையின் தலைவர் பதவியை ஏற்றார். அதே ஆண்டில் 'சிரிப்பு' என்ற தத்துவ நூல் வெளியிடப்பட்டது.

இவரது தத்துவ விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தாமஸ் மாண் போன்ற பெரும் எழுத்தாளர்களெல்லாம் நாவல் இலக்கியம் படைத்து உள்ளனர் என்றால், இவரது தத்துவ நூல்களின் சிறப்பை அறியலாம். எராளமான நூல்களை எழுதியுள்ளார்.

இந்த தத்துவமேதை பாரிஸ் நகரில் ஓர் யூத குடும்பத்தில் இன்றுதான் (*18-10-1859*) பிறந்தார்.

❑

அக்டோபர்-19 அவர் மகாகவி

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கு, வாலாஜாப்பேட்டையில் பணமுடிப்பு விழா நடைபெற்றது. முன்னுரையில் விழாத் தலைவர் சொன்னார். ''கவிஞர்கள் மகா மேதைகள். அவர்கள் நடந்து கொள்ளும் முறை அலாதியானது. பாரதியாரின் வாழ்க்கையில் ஒரு நிகழ்ச்சி.

ஒரு சமயம் அவர் கடனாகக் கேட்ட பணத்தை நண்பரிடமிருந்து கைநீட்டி வாங்க மறுத்து 'கவி' மன்னருக்குச் சமம். அவருடைய கை என்றும் உயர்ந்தே இருக்க வேண்டும். தாழ்ந்திருத்தல் கூடாது. ஆகவே ''பணத்துடன் கையை நீர் நீட்டும். நான் எடுத்துக் கொள்கிறேன்'' என்று பணித்து அவ்வாறே எடுத்துக் கொண்டார்.

''அதே மகா கவிஞரால் பாராட்டப்பட்ட கவிஞருக்கு பணமுடிப்பு வழங்குவதில் பெருமை அடைகிறோம். பாரதி வழி வந்த இவரும் அவரைப்போலவே கரங்களைத் தாழ்த்தாமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கூறி பணமுடிப்பைத் தாங்கியவாறு இரு கரங்களையும் பணிவுடன் நீட்டினார். நாமக்கல் கவிஞர் அடக்கத்துடன் சொன்னார்...

''பாரதியார், கவிச்சக்கரவர்த்தி. ஆகவே, அவர் அவ்வாறு செய்தது முற்றிலும் பொருத்தம். ஆனால் நானோ, அவர் முன் எம்மாத்திரம்? எனக்கு அந்த அருகதையே கிடையாது. எனவே, கை நீட்டியே நன்றியுடன் வாங்கிக் கொள்கிறேன், தாருங்கள்...'' என்று சொல்லி தலைவருடைய நீட்டிய கரங்களுக்கும் தாழ்வாகத் தம் கைகளை நீட்டினார். நாமக்கலாரின் நற்பண்புகளையும், அடக்கத்தையும் கண்டு கூட்டத்தினர் மெய்மறந்து போயினர்.

இந்த நல்மனக்கவிஞர் இன்றுதான் (*19-10-1888*) பிறந்தார்.

❑

இந்தியர்களுக்கு விண்வெளி ஆராய்ச்சி அறிவு நிறையவே உண்டு என்பதை, 26 ஆண்டுகள் போராடி ஆராய்ந்து நிரூபித்துக் காட்டியதுடன், அதற்காகவே 1938-இல் நோபல் பரிசைப் பெற்றவருமான விஞ்ஞான டாக்டர் சுப்பிரமணியம் சந்திரசேகர். லாகூரில் இன்றுதான் (*19-10-1910*) பிறந்தார்.

❑

அக்டோபர்-20 சாட்விக்

விஞ்ஞானி சாட்விக், இளமையில் சொந்த ஊரிலேயே ஆரம்பக் கல்வியைக் தொடர்ந்தார். இளம் வயதிலேயே அவருக்கு விஞ்ஞானப் பாடங்களில் அதிக கவனம் சென்றது. அதனால், அத்துறை நூல்களை தேடிப் பிடித்துப் படித்தார். பள்ளியில் சிறந்த மாணவராகவே திகழ்ந்தார். மேல் படிப்பிற்காக பெர்லின் நகரிலுள்ள பல்கலைக் கழகத்தில் சேர்ந்து, பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினார்.

பிறகு, மான்செஸ்டரில் ரூதர்போர்டு பேராசிரியராக இருக்கும்போது அவருடைய அன்பிற்குரிய மாணவராக இருந்து விஞ்ஞான ஆய்வில் அவருடன் ஒத்துழைத்தார். அதன் பின்னர் கேம்பிரிட்ஜில் உள்ள காவெண்டிஷ் ஆய்வுக் கூடத்தில் மீண்டும் ரூதர்போர்டிடம் சிறிது காலம் பயின்று ஆய்வுகளை நடத்தினார். இச்சமயம் அவர் அணுவின் அமைப்பைப் பற்றியே விரிவாக ஆராய்ந்து வந்தார்.

இவர், நியூட்ரான்களைக் கண்டுபிடித்துக் காட்டினார். 1925-இல் சாட்விக் பரிசோதனையின் மூலம் நிருபித்தார். புரோட்டானின் எடையும் நியூட்ரானின் எடையும் ஏறக் குறைய சமம் என்பதையும் இவர் கண்டறிந்தார்.

இவரது அரிய கண்டுபிடிப்புகளுக்காக பல்வேறு பரிசுகளைப் பெற்றார். குறிப்பாக நோபல் பரிசையும் பெற்றார்.

இந்த அறிவியல் மேதை இங்கிலாந்திலுள்ள மான்செஸ்டர் நகரில் இன்றுதான் **(20-10-1891)** பிறந்தார்.

❑

இங்கிலாந்தின் புகழ்பெற்ற கட்டடக் கலைஞர் ஸர்.கிறிஸ் டோபர் ரென் என்பவரும் இன்றுதான் **(20-10-1632)** பிறந்தார்.

❑

அமெரிக்க நாட்டு மனோதத்துவ அறிஞர் ஜான்-டேவி என்பவரும் இன்றுதான் **(20-10-1859)** பிறந்தார்.

❑

அக்டோபர்-21 மாமனிதர்

ஆல்பிரட் நோபல், காலம் முழுதும் உலகம் சுற்றும் ஆர்வம் இருந்ததால், பல்வேறுபட்ட மக்களைச் சந்தித்ததால் அவர்களது கலை, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை அறியும் வாய்ப்பினைப் பெற்றார்.

இளம் வயதிலேயே இவரது இதயம், அறிவியலில் ஈடுபடத் தொடங்கிவிட்டது. அதன்வழியே பல ஆய்வில் இறங்கினார். புதியன கண்டுபிடித்தார். அதில் குறிப்பிடத்தக்க ஒன்றுதான் 'டைனமைட்' என்று அழைக்கப்படும் வெடிமருந்து.

ரஷ்யாவில், எண்ணெய் நிறுவனம் ஒன்றில் தன் பெருஞ்செல்வத்தை மூலதனமாகப் போட்டார். அதன் வழியே கோடீஸ்வரர் ஆனார். பெரும் செல்வந்தராக இருந்த அவர், வாழ்நாள் முழுவதும் திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்தார்.

மனித நேயமிக்க இந்த மாமனிதர், தன் பெரும் செல்வமும் நிலைக்க வேண்டும், தன் பெயரும் தழைக்க வேண்டும் என்று எண்ணினார்.

அதனால், நோபல் நிறுவனத்தை ஏற்படுத்தினார். இந்த நிறுவனத்தின் வழியாக, உலகில் உள்ள உயர்ந்த சிறந்த அறிவு மேதைகளுக்கு பெரும் செல்வத்தை பரிசாக வழங்கவும் நினைத்தார். அதன்படியே தன் எண்ணத்தை 1895-ஆம் ஆண்டு உயிலாகவே எழுதி பதிவு செய்தார். நோபல் எழுதி வைத்த அவரது சொத்தின் மதிப்பு 1896-இல் 6 மில்லியன் அமெரிக்க டாலராகும்.

இன்று அந்த சொத்தின் மதிப்பு பல நூறு டாலராகப் பெருகியுள்ளது. அப்படி பெருகியுள்ள வைப்பு நிதியில் இருந்து வரும் வட்டிப் பணத்தைத்தான் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10-ஆம் நாள் நோபல் பரிசாக ஆறு துறையைச் சார்ந்தவர்களுக்காக வழங்கப்படுகிறது. இந்தப் பரிசு 1901-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மாபெரும் மனிதர் நோபல், ஸ்டாக்ஹோமில் இன்றுதான் (21-10-1833) பிறந்தார்.

❑

அக்டோபர்-22 உலகின் விளிம்பில்

இவான் பூனில் பள்ளிப் படிப்பைக்கூட ஒழுங்காகப் படிக்க முடியாத நிலையில் குடும்பச் சூழல் இருந்ததால், வீட்டிலேயே படித்தார். தனது சகோதரர் சொல்லியதற்கு ஏற்ப ரஷ்ய இலக்கியங்களைப் படிக்க முற்பட்டவர், அதிலேயே ஆழ்ந்து போனார். ரஷ்ய எழுத்தாளர்களைப் போல தானும் புகழ்பெற வேண்டும் என்று விரும்பினார். தேடித்தேடி புத்தகங்களைப் படித்தார். 17-வயதில் கவிதை எழுதத் தொடங்கினார். குடும்பம் பொருளாதாரத்தில் சிக்குண்டதால் 1889-இல் 'ஆரல் ஹொல்டு' என்ற செய்தித்தாளில் துணையாசிரியராகச் சேர்ந்து பணியாற்றினார்.

பூனிற்கும், அவர் பணியாற்றிய இடத்தில் வேலை செய்த ஒரு பெண்ணிற்கும் காதல் ஏற்பட, அவர்கள் வீட்டில் ஏற்காததால் 1892-இல் தன் காதலியுடன் யுக்ரேனுக்குச் சென்றார்.

இரண்டு ஆண்டுகளில் காதலி பிரிந்து சென்றுவிட்டாள். ஆனால், கவிதையூற்று அவரிடமிருந்து போகவில்லை. அவரது முதல் கவிதைத் தொகுப்பு பிரபல இலக்கிய இதழ் ஒன்றில் இணைப்பாக வெளிவந்தது. கருத்துச் செறிவோடு அக்கவிதை இருந்ததால் முதலிலேயே பிரபலமாகப் பேசப்பட்டார்.

கவிதையோடு நில்லாது சிறுகதைப் பக்கமும் சென்றார். ஆண்டன் செக்காவ் போன்ற இலக்கியக் கர்த்தாக்களோடு பழகும் வாய்ப்பு பெற்று, தன் சிந்தனையை மேலும் மெருகேற்றிக் கொண்ட, பூனிற்கு, டால்ஸ்டாயின் மீது பெருமதிப்பும் உண்டு.

'உலகின் விளிம்பில்' என்ற அவருடைய சிறுகதை 1897-இல் வெளிவந்து பெருமை சேர்த்தது. 'விரிந்த வானத்திற்கு அடியில்' என்ற கவிதைத் தொகுப்பு நாடு போற்றும் நல்ல கவிஞர் என்ற பெயரை பெற்றுத் தந்தது.

'ஆண்டொனாவ் ஆப்பிள்கள்', மற்றும் 'சாஸ்னி' போன்ற கதைகளும் அவருக்கு புகழ் சேர்க்க, நோபல் பரிசும் 1933-இல் கிடைத்தது.

வறுமையிலும் வற்றாத கற்பனைவளம் பெற்ற இக்கவிஞர் ரஷ்யாவின் மத்திய பகுதியான ஆரல் மாநிலத்தில் இன்றுதான் (22-10-1870) பிறந்தார்.

❑

அக்டோபர்-23 இலக்கிய மலர்கள்

தமிழ்மொழி, கல்லூரிகளில் பயிற்றுமொழியாக இருக்க வேண்டுமா? ஆங்கிலம் இருக்க வேண்டுமா? என்ற கருத்தொன்று வந்தது. அப்போது தமிழகச் சட்டமன்றத்தில் கல்வி அமைச்சராக இருந்தவர் சி.சுப்பிரமணியம்.

பல கல்வியாளர்களை அழைத்து கருத்து கேட்டார். அவர்களில் ஒருவர்தான், பேராசிரியர் அ.சீனிவாசராகவன்.

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் தமிழ் கற்றவர். முதுகலையில் ஆங்கிலப் பட்டமும் பெற்றிருந்தார். நெல்லை இந்துக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றினார்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி புலமைமிக்க இவர் தமிழ் நூல்கள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆங்கில மொழி நூல்கள் சிலவற்றை மொழி பெயர்த்தார்.

காளிதாசன், தாகூர், கிப்சன், சேக்ஸ்பியர் போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளையும், கம்பர், பாரதி, ஆழ்வார் ஆகியோர்களின் கவிதைகளையும் மொழியாக்கம் செய்தார்.

'சிந்தனை' எனும் இதழைச் சில ஆண்டுகள் நடத்திய தோடு, ஒரு ஆங்கில ஏட்டிலும் ஆசிரியர் குழுவில் பங்கு வகித்தார்.

சென்னை சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த தோடு, தாருதத், இலக்கிய மலர்கள், வேதாந்த தேசிகர், ஆழ்வார்கள் காட்டும் நெறி போன்ற நூல்கள் எழுதியதோடு நாடகங்களும் எழுதியுள்ளார்.

முதல் உலகத் தமிழ் மாநாடு, இந்தோனேசியாவில் நடந்த இராமாயண மாநாடு போன்ற விழாக்களில் பங்கு பெற்ற இவர், சிறந்த பட்டிமன்ற தலைவராகவும், பேச்சாளராகவும் இருந்தார்.

இந்தப் பேரறிஞர் தஞ்சையை அடுத்துள்ள கண்டியூரில் இன்றுதான் **(23-10-1905)** பிறந்தார்.

❑

அக்டோபர்-24 மித்ரா

விஞ்ஞானி எஸ்.கே.மித்ரா வானொலி அலைகளைப் பிரதிபலிக்கும் அயனோஸ்பியர் அடுக்குகளைப் பற்றிய ஆய்வு செய்து வெற்றி பெற்றவர். செய்தி பரிமாற்றங் களுக்கான ஆய்வுத்துறையை இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களில் அறிமுகப்படுத்தியவர்.

இவர் கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம் பெற்றார். அங்கேயே இயற்பியல் பேராசிரியராகவும் சேர்ந்தார். பிறகு கொல்கத்தா தேசிய ஆராய்ச்சிப் பேராசிரிய ராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

அயனோஸ்பியர் அடுக்குகளைப் பற்றிய இவரது ஆய்வின் முடிவாக, 'இ' பிரிவு அயனோஸ்பியர் அடுக்குகளை சூரியனிலிருந்து வரும் புறஊதாக் கதிர்கள் உருவாக்குகின்றன.

விண்வெளியிலுள்ள 'எப்' பிரிவு அடுக்கினால் இரவு நேரங்களில் ஆகாயம் அழுக்குப்படிந்து, லேசான கறுப்பு போல் காணப்படுகிறது என்பதைக் கண்டுபிடித்தார்.

அயனோஸ்பியர் ஆய்வு நிலையத்தை முதன் முதலில் இந்தியாவில் தொடங்கி, அங்கு வானொலி, மைக்ரோபோன், ஒலிபெருக்கி, எலெக்ட்ரான் குழல் போன்றவைகளைத் தயாரித்த பெருமை இவரையே சாரும்.

பல்வேறு சிறப்பு விருதுகளைப் பெற்ற இந்த அறிவியல் மேதை கொல்கத்தாவில் இன்றுதான் **(24-10-1890)** பிறந்தார்.

❑

டச்சு நாட்டு இயற்கை ஆய்வாளரான அன்டன்வான் லியூவென்ஹாக், இவர் தான் மைக்ரோஸ்கோப் கருவியை உருவாக்கிய விஞ்ஞானி. இந்த ஆய்வாளரும் இன்றுதான் **(24-10-1632)** பிறந்தார்.

❑

டேனிஷ் நாட்டு வானாராய்ச்சியாளரான டைகோ பிராஹி என்பவரும் இன்றுதான் **(24-10-1601)** பிறந்தார்.

❑

அக்டோபர்-25 காந்திமகான் கதை

கொத்தமங்கலம் சுப்பு என்று சொன்னாலே, 'காந்தி மகான் கதை' தான் நினைவிலாடும். தேசபக்தியும், தெய்வ பக்தியும் கொண்ட இவர், பல்கலை வித்தகர். பாடல்கள் எழுதுவார். கதை எழுதுவார்; வசனம் எழுதுவார், நடிப்பார்; திரைப்படம் இயக்குவார்!

வெள்ளையரை எதிர்த்து நாடு கொதித்தெழுந்தபோது, இவர் இயற்றி - மேடையில் பாடிய எழுச்சிமிக்க தேசிய பாடல்கள் பலரை வீறு கொள்ள செய்த ஒன்றாகும்.

காந்திமான் காவியத்தை முதல் சுதந்திர நாளில் வெளியிட்டார். இக்காவியத்தை பல ஆயிரம் மேடைகளில் நிகழ்ச்சியாக நடத்தியது சாதனை என்றே கூற வேண்டும்.

பந்தநல்லூர் பாமா, தில்லானா மோகனாம்பாள் போன்ற புகழ்மிக்க புதினங்களும், 'புன்னை வனத்துப் பூங்குயில்' போன்ற படைப்புகள் இவரது எழுத்தாற்றலுக்கு எடுத்துக் காட்டாகும்...

ஏழாம் வகுப்பு வரையே பயின்ற இவர், பிறரை படிக்க வைக்கும் நிலையில் காரைக்குடியில் இருந்து வெளிவந்த 'குமரன்', 'ஊழியன்' போன்ற பத்திரிகையில் பணியாற்றிய தோடு, 'ஆனந்த விகடனிலும்' பணியாற்றினார்.

ஜெமினி திரைப்பட நிறுவனத்தில் இருபது ஆண்டுகள் பணியாற்றியதோடு, இருபதுக்கும் மேற்பட்ட படங்களுக்கு கதை, வசனம், பாடல்கள் எழுதியதோடு இயக்கவும் செய்திருக்கிறார்.

ஔவையார், தில்லானா மோகனம்பாள் இரண்டு படமும் இவரின் புகழை என்றும் நிலைநாட்டிக் கொண்டிருக்கும்.

கலாசிகாமணி, பத்மஸ்ரீ, காந்தியச் செல்வர், படைப்புக் கலைச் செம்மல் - இப்படி பல விருதுகளைப் பெற்றவர். கொத்தமங்கலம் சுப்பு.

இந்த மக்கள் கவிஞர்; கன்னாரி என்னும் சிற்றூரில் இன்றுதான் (25-10-1910) பிறந்தார்.

❐

அக்டோபர்-26 ஐயர்

மறைதிரு.சுவார்ட்ஸ் ஐயர், 'ஹாலி'யில் படித்துத் தேர்ந்து, கோபன்ஹேகன் நகரில் 1749-இல் சமய குருவாக ஆக்கப்பட்டார். இந்தியாவுக்கு பயணமாக இவர் 1750-இல் கடலூர் வந்து சேர்ந்தார். பின்னர் அங்கு இருந்து தரங்கம் பாடிக்கு அனுப்பப்பட்டார். இங்கிருந்து தமிழகத்தின் தென்கோடி வரையில் கிறித்துவ சமய குருமார்களும் கிறித்துவ சமயப் பரப்புப் பணியாற்றிடச் சென்று வந்தனர். இவ்வாறு சென்று வந்தவர்களுள் முதலாவது ஐரோப்பிய சமயப் பரப்பாளர் அமைப்பினை சார்ந்தவர் சுவார்ட்ஸ் ஐயர்தான் என்பது தெரிய வருகிறது.

தரங்கம்பாடியில் இருந்த ஐயர், சென்னைக்கு அனுப்பப் பட்டார். சில காலம் அங்கு இருந்து பணியாற்றிய ஐயர். பின் மீண்டும் தரங்கம்பாடிக்கு அனுப்பப்பட்டார்.

11-ஆண்டுகள் தரங்கம்பாடியில் இருந்த ஐயர், திருச்சி, தஞ்சையிலும் சமயப்பணி அமைப்புகளைத் தோற்றுவித்தார். இருபது ஆண்டுகள் தஞ்சையிலேயே தங்கி நற்தொண்டாற்றி னார்.

தமிழ்ப் பாடல்களையும், 'கிறித்துவ இந்துக்களின் இடையிலான ஓர் உரையாடல்' என்னும் நூலினையும் இயற்றினார். அந்நூலை மராத்தியிலும் மொழிபெயர்த்தார். 1798 பிப்ரவரி 13-இல் மறைந்தார்.

அந்நாளில் தஞ்சையை ஆண்டுவந்த சரபோஜி மன்னர், இவரோடு நட்புக் கொண்டவராக இருந்தார். ஐயரின் பிரிவு தாங்காது வேதனைப்பட்டார். சமயப் பணி செய்ததோடு ஏழை எளியவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து வந்த பண்பாளர், இவர்.

இவரின் சிறப்பை அறிய வேண்டுமானால் தஞ்சைக் கோட்டையில் சுவார்ட்ஸ் ஐயர் சிலை நிறுவப்பட்டு, அதன் கீழே இவர் வரலாற்றுக் குறிப்பும் உண்டு.

தமிழ்த்தொண்டு செய்த ஐயர், பிராண்டென்பர்க் மாநிலத்திலுள்ள சோன்னன்பர்க் எனும் ஊரில் இன்றுதான் (26-10-1726) பிறந்தார்.

❑

அக்டோபர்-27 கடலாய்வு

கேப்டன் ஜேம்ஸ் குக் - இவர் மாலுமியாகவும், பூகோள கண்டுபிடிப்பாளராகவும், வரைபட நிபுணராகவும் இருந்தவர்.

இவர் பசிபிக் பெருங்கடல் பயணத்தின்போது, அங்கே உள்ள தீவுகளையும், சில இடங்களையும், கடற்கரைப் பகுதிகளையும் வரை படத்தின் துணையோடு கண்டறிந்தார்.

ஆஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியையும், ஹவாய்த் தீவுகளையும், நியூசிலாந்து போன்ற பகுதிகளையும் கண்டறிந்து வரைபடமாக்கினார்.

இவர் ஒரு பண்ணைத் தொழிலாளியின் மகன். இளமையில் இவரும் தந்தையோடு பணி செய்தார்.

பண்ணையின் முதலாளியே இவரை படிக்க வைத்தார். பட்டம் பெற்றார். இவர் 13-வயதிலேயே பண்ணையை நிர்வகிக்கும் திறமைப் பெற்றவராக இருந்திருக்கிறார்.

பின், கப்பல்துறைமுகப் பகுதியில் வேலையில் இருக்கும் போதுதான், இவருக்கு கடலாய்வில் ஈடுபட இதயம் விரும்பியிருக்கிறது.

இந்த ஆய்வாளர் மார்ட்டன் என்ற நகரில் இன்றுதான் (27.10.1723) பிறந்தார்.

❑

நிக்கோலா பாகநினி என்னும் இத்தாலி நாட்டு வயலின் கலைஞரும் இன்றுதான் (27.10.1782) பிறந்தார்.

❑

அமெரிக்க ஜனாதிபதிகளுள் ஒருவரான தியோடர் ரூஸ்வெல்ட் என்பவரும் நியூயார்க்கில் இன்றுதான் (27.10.1858) பிறந்தார்.

❑

புதிய தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்த மெரிட் சிங்கர் என்பவரும் இன்றுதான் (27.10.1811) பிறந்தார்.

❑

அக்டோபர்-28 நிவேதிதை

அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த சகோதரி நிவேதிதை, இந்தியாவின் மீது பற்றுகொண்டு இங்கே வந்து, இந்தியாவைத் தனது தாய்த் திருநாடாகவே ஏற்றுக் கொண்டு ஆற்றிய பணிகள் ஏராளம், ஏராளம்.

விவேகானந்தரின் அறிவையும் ஆற்றலையும், மாறுபட்ட அவரது ஆன்மிக சொற்பொழிவுகளையும் கேட்டு, அதில் தன் மனதை பதித்து, பின் அவரின் சீடராகவே மாறியவர், சகோதரி நிவேதிதை.

பள்ளிப் படிப்பிலும், அறிவுச் செரிவிலும், ஒழுக்க நெறியிலும், ஏழை எளியவர்களுக்கு உதவும் நல்ல மனிதப் பண்பிலும், இளமையிலேயே இதயம் பதித்தவர், நிவேதிதை.

பட்டப்படிப்பை முடித்ததுமே அவரைத் தேடி ஆசிரியப் பணி வந்தது. மகிழ்ச்சியோடு அப்பணியில் ஈடுபட்டார். அவ்வேளையில் 'ரக்பி' என்னும் இடத்தில் அநாதைப் பெண்களுக்கு ஒரு பள்ளி இருந்தது. அந்த விடுதியில் ஊதிய மின்றிப் பணி செய்ததோடு, அங்குள்ள பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தல், மற்றப் பணிகளையும் செய்வதிலும் மகிழ்வோடு ஈடுபட்டு வந்தார். எழுத்தாளராகவும் இருந்தார்.

பின்நாளில், கொல்கத்தாவில் பெண்கள் பள்ளி ஒன்றையே தோற்றுவித்தார். அக்கல்விக்கூடம் இன்றும் சிறந்து விளங்கி வருகிறது.

இவரது கல்விப்பணியும், ஆன்மிகப் பணியும், விடுதலைப் போராட்டப் பங்கும் போற்றுதலுக்குரிய செயல்பாடுகளாகும்.

பெண்களின் மேன்மைக்காகப் பாடுபட்ட இவர், அயர்லாந்து நாட்டின் வடபகுதி நகரம் ஒன்றில் இன்றுதான் *(28-10-1867)* பிறந்தார்.

❑

கவிஞரும், ஓவியருமான வில்லியம் பிளேக் என்பவரும் இங்கிலாந்தில் இன்றுதான் *(28-10-1757)* பிறந்தார்.

❑

அக்டோபர்-29 கீட்ஸ்

இளமையில் யாரிடமும் சண்டைக்குப் போகும் தன்மையும், முன்கோபம் கொண்டவனாகவும், இருந்தான் ஜான் கீட்ஸ். 14 வயது முதல்தான் தன்னுடைய படிப்பில் கவனத்தைச் செலுத்தினான். கிரேக்க இதிகாசங்களின் மேல் கவனமும் ஆவலும் சென்றது. அந்த இதிகாசங்களில் வரும் கடவுள்களைப் பற்றியும், அதில் வரும் வீரர்களைப் பற்றியும் விரும்பிப் படித்தான்.

படிப்பு முடிந்த பிறகு அறுவை சிகிச்சை மருத்துவ மாணவனாகப் பயிற்சி பெற்று வந்தான். அப்போது பள்ளிப் பருவத்தின் ஆசிரியரான கௌடன் கிளார்க் என்பவரின் நெருங்கிய தொடர்பு கிடைத்தது. இவர்தான் கீட்ஸிற்கு பல நூல்களைக் கொடுத்து கவிதை மீது ஆர்வத்தை ஏற்படுத்தியவர். கவிதை இலக்கணத்தையும் கற்றுக் கொடுத்தார். கவிதையில் ஆர்வம் ஏற்படவே, கீட்ஸ் தானாகவே கவிதை எழுதத் தொடங்கினான். 1813-இல் 'ஸ்பென்சரைப் பின் பற்றி...!' என்ற கவிதை நூலே முதன்முதலில் வெளிவந்தது.

கிளார்க் மூலமாக 'எக்சாமினர்' பத்திரிகையில் அறிமுக மானான், கீட்ஸ். அவரது நட்பும், கவிதையாற்றலும் கண்டு கீட்ஸ் பெரிதும் மகிழ்ந்தான். அவர் வழியே உயர்ந்தான். 1817-இல் முன்பு எழுதிய கவிதைகளையும், இடையில் எழுதிய கவிதைகளையும் சேர்த்து, 'கவிதைகள்' என்ற தலைப்பில் இரண்டாவது கவிதை நூலை வெளியிட்டான். இந்நூலைப் பற்றி எக்சாமினர் ஆசிரியரான 'அண்ட்' எழுதிய நீண்ட விமர்சனத்தால், கீட்ஸின் புகழ் பரவியது.

இந்த நிலையில், அழகாகவும், துடிபபாகவும், கவர்ச்சி யாகவும் இருந்த ஃபெனி பிரொவன் என்பவளை மிகவும் ஆழமாக காதலித்தான். ஆனால், அவள் அப்படி இல்லை. காரணம், கீட்ஸின் பொருளாதாரமே. அவள் வேறு ஒருவனை மணந்து போனாள். இந்த நிலையில் காதல் தோல்வியில் வீழ்ந்த கீட்ஸ் எழுதினான்... எழுதினான்... காதல் கவிதைகளாக எழுதினான். உயிரோவியமான கவிதைகளை எழுதினான். உலகப் புகழ் பெற்றான். ஐந்தே ஆண்டுகளில் கவிதை உலகில் வானம் பாடியாய் பாடிப் போனான்.

இம்மாபெரும் கவிஞன், இன்றுதான் (29.10.1795) பிறந்தான்.

□

அக்டோபர்-30 பசும்பொன்

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சாதித்தலைவர் அல்ல, சாதித்தத் தலைவர். தேவர் திருமகன் சிறுவயதிலேயே சிலம்பம், மற்போர், குதிரை ஏற்றம், துப்பாக்கிச் சுடுதல் முதலிய வீரக்கலைகளை விவேகத்துடனும், விதிமுறை களோடும் கற்றறிந்தார். சிறந்த வல்லுநர் ஒருவர் மூலம் வர்மக்கலையும் கற்றார்.

பாண்டி மகாராஜா விருப்பப்படி இராமநாதபுரம் அரசர் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து ஆறாம் வகுப்பில் தேர்வு எழுதினார். இந்த அளவே தேவர் கற்ற கல்வி என்றாலும் பின்னாளில் அவர் பேசிய ஆங்கிலப் பேச்சுக்களையும், மற்றைய பேச்சுக்களையும் கேட்டால், இவை எல்லாம் எங்கு, எப்படி, யாரிடம் கற்றார் என்பது புரியாத புதிராக இருக்கும்.

முதுகுளத்தூர் தாலுகாவிலுள்ள ஒரு சிற்றூர் சாயல்குடி அந்த ஊரில் சுவாமி விவேகானந்தர் வாசக சாலையில் மதுரை கிருஷ்ணசாமி பாரதி பேச வேண்டியவர்.

அவர் வராததால் பசும்பொன் தேவருக்கு பேச வாய்ப்பு கிடைத்தது. இது தான் முதல் மேடை; முதல் பேச்சு. முதல் பேச்சிலேயே அரசியலும், ஆன்மிகமும் கலந்து விவேகானந் தரின் தத்துவங்களை எடுத்து வைத்து அடுக்கடுக்காக பேசினார்.

பின்னாளில், விடுதலைப் போராட்டத் தலைவர்களோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. நேதாஜி, காந்திஜி போன்ற தேசத் தலைவர்களோடு நேசமாகப் பழகும் வாய்ப்புக் கிட்டியது.

தென்னாட்டு விடுதலைச் சிங்கமாக விளங்கிய பசும் பொன் தேவர் அவர்கள் பல போராட்டங்களில் ஈடுபட்டு வெள்ளையர்களால் சிறையில் அடைக்கப்பட்டார். இறுதியில் வெற்றி கண்டார்.

இந்த ஈர இதயம் கொண்ட வள்ளல் பெருமான் - இராமநாதபுரம் மாவட்டம் கமுதி எனும் ஊருக்கு அருகிலுள்ள பசும்பொன் கிராமத்தில் இன்றுதான் (30-10-1908) பிறந்தார்.

அக்டோபர்-31 இரும்பு மனிதர்

வக்கீல் தொழிலோடு, விடுதலைப் போராட்டத்திலும் ஈடுபட்டவர், சர்தார் வல்லபாய் பட்டேல் என்பதை அறிவோம்.

ஒரு நாள் சர்தார் கோர்ட்டில் வழக்காடிக் கொண்டு இருந்தார்.

அந்தச் சமயம் அவரிடம் தந்தி ஒன்று கொடுக்கப் பட்டது. ‘மனைவி இறந்துவிட்டார்’ என்று அவரிடம் ‘தந்தி’ பேசியது.

தந்தியை சர்தார் படித்தார். ஒரு நிமிடம் கலங்கி நின்றார். உடனே தன்னைச் சரி செய்து கொண்டு வாதாட ஆரம்பித்தார். ஒருவருக்கும் செய்தியே என்னவென்று தெரியவில்லை.

வழக்கு வாதாடி முடிந்ததும் தந்தியின் விவரம் என்னவென்று மற்றவர் அறிந்து, அதிர்ந்தனர். இவருடைய கலங்காத உள்ளத்தைக் கண்டு பிரமித்தனர்.

இதனால் கொஞ்சமும் இரக்கமில்லாத கடும் இதயம் கொண்டவர் என்று சொல்லிவிட முடியாது.

சர்தாரின் மனைவி இறந்த சமயம் அவருக்கு என்ன வயதிருக்கும்...? முப்பத்திரண்டு வயதுதான்.

அப்போது அவர் விரும்பியிருந்தால் மறுமணம் செய்திருக்கலாம்; சுக வாழ்வை அனுபவித்திருக்க முடியும்.

ஆனால், அப்படி அவர் செய்யவில்லை. அவர் மனம் மலரைவிட மென்மையானது. ஒரு அம்மையாருக்கு அவர் எந்த இடத்தில் தன் மனதில் இடம் அளித்தாரோ அந்த இடத்தில் மற்றவருக்கு இடமேது...?

அதனால்தான், இவரை இரக்கமுள்ளவர் என்றும், ‘இரும்பு மனிதர்’ என்றும் மக்கள் சொன்னார்களோ?

இவர் குஜராத் மாநிலம் ‘கரம்சத்’ கிராமத்தில் இன்றுதான் **(31-10-1875)** பிறந்தார்.



8 வயதிலேயே

ஸ்டீபன் கீரேன், நியூ ஜெர்ஸி மாநிலத்தில் பிறந்த எழுத்தாளர். இவர் எட்டு வயதிலேயே சிறுகதைகளை எழுதத் தொடங்கிவிட்டார். 16-வயதில் 'நியூயார்க் டிரிட் பியூன்' என்ற பத்திரிகையில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வந்தார். பட்டதாரி. சிறுவயதிலேயே இவர் பெற்றோரை இழந்ததால், நியூயார்க்குக்குச் சென்று தங்கினார். தனியே பத்திரிகை யாளராக இருந்தே எல்லாப் பத்திரிகைகளுக்கும் எழுதியே வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தார். ஏழை மக்கள் வாழ்ந்த குப்பத்திலேயே இவரும் ஒருவராக அவர்களோடு வாழ்ந்து வந்தார்.

அப்படி வாழ்ந்தபோது, குடிசைவாழ் மக்களின் வாழ்க்கை முறையை வைத்து முதன் முதலில் இவர் எழுதிய 'தெருக்களில் வாழும் ஒரு பெண்' என்ற முதல் நாவலே இவருக்கு பேரையும் புகழையும் ஈட்டித் தந்தது. வெளியீட்டாளரும் இவரே. இந்த நாவலை இவர் 'ஜான்ஸ்ட்டன் ஸ்மித்' என்ற புனைப் பெயரிலேயே வெளியிட்டிருக்கிறார்.

இந்த எழுத்தாளர் நியூஜெர்ஸியில் இன்றுதான் **(01.11.1871)** பிறந்தார்.

❑

இத்தாலி நாட்டின் புகழ்பெற்ற சிற்பி மற்றும் தங்க வேலை கலைஞரான பென்வெனுட்டோ ஸெலினி என்பவரும் இன்றுதான் **(01.11.1500)** பிறந்தார்.

❑

அறுவை சிகிச்சையில் முதன் முதலாக ஈதரை மயக்க மருந்தாகப் பயன்படுத்தி வெற்றி பெற்ற மருத்துவர் கிராபோர்ஃட் டபிள்யூ லாங் என்பவரும் இன்றுதான் **(01.11.1815)** பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற நாவலாசிரியரான ஷோலெம் ஆஷ் என்பவரும் இன்றுதான் **(01.11.1880)** பிறந்தார்.

❑

நவம்பர்-2 முதல் கவிதை

ஓடிசிய' எலிடிஸ், தனது கல்லூரி படிப்பையே தன்னுள் இருந்த இலக்கிய தாகத்தால் முடிக்காமலேயே எழுத்துத் துறைக்கு வந்தவர்.

சிறு வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கியவர். பிரெஞ்சுக் கவிஞர் பால் எட்வர்டின் படைப்புகள் மிகவும் பாதித்ததாம் இவரை.

இவருடைய முதல் கவிதை 1935-இல் கிரேக்க மொழியில் வெளிவந்த பிரபல 'புதிய எழுத்துக்கள்' எனும் இலக்கிய இதழில் கண் விழித்திருக்கிறது.

அந்த முதல் கவிதையே இவரை நல்ல கவிஞர் எனும் அறிமுகம் செய்திருக்கிறது.

சிறிது காலம் இராணுவத்தில் பணியாற்றி இருக்கிறார். அதன் பிறகு, 'காத்திமெரினி' என்ற நாளிதழில் கதை, கட்டுரை, கவிதை என்று ஏராளமாக எழுதத் தொடங்கி இருக்கிறார்.

1959-ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் இவரது புகழ்பெற்ற படைப்புகள் வெளிவந்து, உலகப்புகழ் பெற்றிருக்கிறார்.

இவர், கிரேக்கத்தைச் சேர்ந்த கிரீட் தீவிலுள்ள இராக்லியானில் இன்றுதான், (02-11-1911) பிறந்தார்.

❑

புதிய நிலப்பகுதிகளைக் கண்டுபிடித்த ஆராய்ச்சி செய்வதில் புகழ்பெற்ற டானியல்பூன் என்னும் அமெரிக்கரும் இன்றுதான் (02-11-1734) பிறந்தார்.

❑

பிரெஞ்சு அரசி மேரி அண்டோனியும் இன்றுதான் (02-11-1880) பிறந்தார்.

❑

நவம்பர்-3 தமிழ்த்தொண்டு

பாஸ்கர சேதுபதி, இசையில் இதயம் பதித்தவர். காரணம் சேதுபதி அரசர்களின் பாரம்பரிய சொத்து என்றே சொல்லலாம். பாஸ்கரர், தமது இளம் வயதில் பியோனா இசைக் கருவியை மீட்டுவதில் ஆர்வம் கொண்டிருந்தார். பல இசை மேதைகளைப் போற்றி வளர்த்தார். இசையோடு இனிய தமிழ் கவிதைகளையும் எழுதுவதில் தேர்ச்சி பெற்றிருந்தார், கவிஞர்களையும் ஆதரித்து வந்தார். இவர் சிறந்த சொற்பொழி வாளராகவும் இருந்திருக்கிறார்.

சேதுபதி செந்தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள சேவை என்றும் நிலைத்து நிற்கக் கூடிய ஒன்றாகும். சிலப்பதிகாரத்தை உ.வெ.சாமிநாதய்யர் பதிக்க நிதி உதவியினை செய்ததோடு, சிறந்த நூல்களையும் வெளியிட்டார். 'நீலகேசனி' என்ற இலக்கிய திங்கள் இதழ் செழித்தோங்கி வளர பெரும் பொருள் தந்து உதவினார்.

சிகாகோ நகரில் நடந்த அனைத்துலகச் சமய மாநாட்டிற்கு சுவாமி விவேகானந்தரை அனுப்பி வைத்து பெருமை பெற்றவர் சேதுபதி மன்னரே. இஸ்லாமியர்களின் வளர்ச்சிக் காக சேதுபதி செய்த உதவிகள் மிகப் பெரிது. தமிழையும், இசையையும், கலைகளையும் அவர் காலத்தில் மிகவே வளர்ந்த்தார்.

தமிழ்ப்பணி, தாழ்த்தப்பட்டோர் நலப்பணி, சமுகப்பணி, ஆன்மிகப் பணி இப்படி செய்த பணிகள் செம்மை பட்டன.

இவர் தந்தையை இளமையிலேயே இழந்தார். அப்போது ஆஸ்தான பொறுப்பை ஆங்கிலேயரே ஏற்றனர். அந்த நேரம், பாஸ்கரையும் அவரது சகோதரரையும் வளர்க்கும் பொறுப்பை ஆட்சிக்குழுவே ஏற்றுக் கொண்டது. இருவரும் சென்னையில் பயின்றனர்.

ஜாதி, மதம் பாராது இந்து முஸ்லிம், கிறித்துவ ஆலயங் களுக்கும், அவ்வின மக்களுக்கும் உதவி செய்ததோடு, கல்விக்காக பல ஆயிரம் ரூபாய்களை செலவிட்டு மகிழ்ந்தார்.

மனித நேயமிக்க மன்னர் சேதுபதி இன்றுதான் (03-11-1868) பிறந்தார்.

❑

நவம்பர்-4 காந்தி படம்

காந்திஜியின் கொள்கைகளை பரப்புவதற்காக படம் யாரும் இப்போது எடுக்கவில்லை. பணம் பண்ணுதற்கு மட்டுமே இந்நாளில் படம் எடுக்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாட்டில் பிறந்த ஒருவர் காந்திஜியை திரைப்படம் எடுத்தார். ஆமாம், அந்த காலத்திலே ஏ.கே.செட்டியார் என்கின்ற நமது வீரத் தமிழர் ஒருவர் காந்தியடிகள் வாழ்ந்தபோது அவரை தொடர்ந்து பின் சென்று முழு நீளத் திரைப்படம் ஒன்றை தயாரித்தார்.

அந்தப் படம்தான் பிற்காலத்தில் ஆங்கில டைரக்டர் அட்டன்பரோ எடுத்த காந்தி படத்திற்கு ஆதாரமாக அமைந்தது.

உண்மையான காந்தியை படமெடுத்த ஏ.கே.செட்டியாரை அமெரிக்கா பட முதலாளிகள் நேரில் சந்தித்து 1940-லேயே அந்த படத்தை பல கோடி ரூபாய்க்கு கேட்டார்கள்.

ஆனால், தூய தமிழரான ஏ.கே.செட்டியார், 'இது காந்திமகானை தரிசிப்பதற்கு எடுத்த படம். இது வியாபாரத்திற்கு எடுத்த படமல்ல...' என்று கூறி படத்தை விற்க மறுத்துவிட்டார். அந்த காந்தி படத்திற்கு நிகராக எந்தப் படமும் வரமுடியாது.

இப்படி முதன் முதலில் படம் எடுத்து மட்டும் இந்தத் தமிழர் புரட்சி செய்யவில்லை.

உலகம் சுற்றிய முதல் தமிழரும் இவர்தான். தமிழில் முதல் பயண நூல்களை எழுதிய பெருமை கொண்டவரும் இவரே தான்.

இந்த உலகம் சுற்றிய வாலிபர் இன்றுதான் **(04-11-1911)** பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற நகைச்சுவை நடிகர் வில்ரோஜர்ஜ் என்பவரும் இன்றுதான் **(04-11-1879)** பிறந்தார்.

❑

நவம்பர்-5 குருநானக்

குருநானக், க்ஷத்திரியர் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆதலால், வயது வந்தவுடன் அவருக்குப் பூணூல் போட பெற்றோர்கள் நினைத்தார்கள். பூணூல் போடும் நேரம் வந்தது. புரோகிதர் குருநானக் குக்குக் பூணூல் அணிவிக்க வேண்டி அரிதயாள் பூணூலைக் கையில் எடுத்தார். அவ்வளவுதான்...

குருநானக் அதைத் தடுத்து நிறுத்தினார். பிறகு, புரோகிதரைப் பார்த்து, ''எதற்காகப் பூணூல் அணிய வேண்டும்?'' என்று கேட்டார். அந்தக் கேள்வி புரோகிதரை மட்டுமின்றி, அங்கு கூடியிருந்த அனைவரையும் திடுக்கிட வைத்தது.

புரோகிதர் பூணூல் அணிய வேண்டியதன் காரணத்தை விளக்கிச் சொன்னார். அவர் சொன்னது நாக்கிற்கு திருப்தி அளிக்கவில்லை. அவருள் இருந்த சக்தி இனிய பாடல் வழியே ஓர் அரிய உண்மையைப் புரிய வைத்தது.... அந்தப் பாடலின் பொருள் இதுதான்....

''சாதாரண பருத்தி நூலை அணியாதீர்கள். அதனால், பயனில்லை. இரக்கம் என்னும் பருத்தியைக் கொண்டு மனத்திருப்தி என்னும் நூலைத் தயாரியுங்கள். அதில் உண்மை என்னும் முடிச்சுகளைப் போட்டு அணிந்து கொள்ளுங்கள். உண்மையோடு வாழுங்கள். நல்வாழ்வு பெறுங்கள்.''

பாடலைப் பாடி முடித்ததும் இருக்கையை விட்டு எழுந்தார் நானக்; நடந்தார் வெளியே. நானக் நடந்து கொண்ட முறை பெற்றோர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தது. 'நானக் இறைவனின் பிள்ளை' என்னும் உண்மையை அவர்களால் அறிய முடியவில்லை.

இவ்வாறு சீரிய சிந்தனையைக் கொண்டிருந்த சீக்கியமதத் தலைவரான குருநானக். பஞ்சாபில் தாள்வண்டி கிராமத்தில் இன்றுதான் (05-11-1469) பிறந்தார்.

❑

அமெரிக்க வரலாற்றாசிரியர் வில்டூரான்ட் என்பவரும் இன்றுதான் (05-11-1885) பிறந்தார்.

❑

நவம்பர்-6 களஞ்சியம்

லெ.ப.கரு.இராமநாதன் செட்டியார், பெரும் புலவர் கருணாலய பாண்டியரிடம் முறையாக தமிழ்க் கற்று, மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வில் வெற்றி பெற்றுப் பண்டிதர் பட்டம் பெற்றார். 1936-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர் பயிற்சியில் முதல் நிலையில் தெரிவு பெற்றார். 1943-இல் வித்வான் தேர்வில் முதன் நிலை பெற்றமைக்காக ஜார்ஜ் மன்னர் பரிசாக ஆயிரம் வெண் பொற்காசுகள் பரிசாகப் பெற்றார்.

1937-இல் ஆய்வுத் துறையில் சேர்ந்தார். இத்துறையில் ரா.ராகவ அய்யங்கார் தலைவராக இருந்தார். 1938 இல் தமிழ்த் துறையில் விரிவுரையாளராகப் பணியேற்றார். பின்னர் அத்துறையில் தலைவராகவும் ஆனார். டீன் ஆகப் பணிப் பொறுப்பேற்ற முதல் தனித்தமிழ்ப் புலவர் இவரே. ஐந்து முறை இடைக்காலத் துணை வேந்தராகவும் இருந்தார்.

இவர், விடுதிப் பொறுப்பாளராக இருந்த வேளையில் தான் திருவள்ளுவர் விழா கொண்டாடும் வழக்கத்தை ஏற்படுத்தி னார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், எம்.ஓ.எல். வகுப்பு தொடங்கிய பெருமைக்குரியவர் இவரே. தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் ஈடுபட்டு இரண்டு தொகுதிகளை கொண்டு வந்தார். இவர் பல நூல்களை எழுதினார்.

இத்தமிழறிஞர் தருமபுரம் ஆதினத்தால் 'முத்தமிழ் வித்தகர்' பட்டம் அளித்துச் சிறப்பிக்கப்பட்டார்.

இந்த தமிழறிஞர் செட்டிநாட்டிலுள்ள நெற்குப்பை என்னும் ஊரில் இன்றுதான் (06-11-1915) பிறந்தார்.

❐

கூடைப்பந்து விளையாட்டைக் கண்டுபிடித்த ஜேம்ஸ் நைஸ்மித்தும் இன்றுதான் (06-11-1861) பிறந்தார்.

❐

போலந்து நாட்டு பியானாக் கலைஞர் இக்னாக் ஜான் பேடரிவெஸ்கியும் இன்றுதான் (06-11-1860) பிறந்தார்.

❐

நவம்பர்-7 பொதுநலம்

பொதுவாக நாம் எந்த துறையில் சாதனை புரிய எண்ணுகிறோமோ, அந்த சாதனையால் சமூகத்தில் பலருக்கு நன்மை இருக்கிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது சாதனை மூலம் பெரும் நன்மை விளையும் என்றால் அந்த ஒரு காரணமே சோதனையிலும், தோல்வி யிலும் நம்மை சோர்ந்து போக விடாமல் வைத்திருக்கும். அப்படி அல்லாமல், இந்த சாதனையை புரிந்து விட்டோ மானால் ஏராளமாய் சம்பாதிக்கலாம்; மிகுந்த வசதியாய் இருக்கலாம் என்கிற மாதிரி நம்மைப் பற்றி மட்டுமே சிந்தனையோடு இருப்போமேயானால், நமது முயற்சிகளில் சோதனையும், தோல்வியும் ஏற்படும் பொழுது, மிகவும் தளர்ந்துபோய் விடுவோம். இனி எழவே முடியாது என்கிற மாதிரி நம்பிக்கை இழந்துவிடுவோம்.

மேடம் மேரி அம்மையாரும் அவர் கணவர் டாக்டர் கியூரியும் தங்கள் வசதியற்ற சூழ்நிலையில் மக்களுக்கு நன்மை தரும் மருந்தை கண்டுபிடிக்க போராடினார்கள். அந்த முயற்சியில் வெற்றி பெற்று நோபல் பரிசை அடைந்தார்கள். தாங்கள் கண்டுபிடித்த மருந்து தங்களுக்கு மட்டுமே உரிமையானது அல்ல. அது எல்லோருக்கும் பயனாகவே கண்டுபிடித்தோம். எனவே அதை யார் வேண்டுமானாலும் தயாரிக்கலாம் என உரிமை தந்தார்கள்.

இந்நிலையில் சிலர் சந்தேகமாய் ஒரு கருத்தை பரப்பினார்கள். மேரி அம்மையாருக்கு நோபல் பரிசு பெறுகிற தகுதி இருக்க முடியாது. அவர் தன் கணவரது உதவி யினாலேயே நோபல் பரிசை பெற்றிருக்கிறார் என பேசினார்கள். ஆனால், மக்கள் நலனுக்காகவே மருந்தை கண்டுபிடித்து அதை விட்டுக் கொடுத்த பெருங்குணம் இருந்ததால் மேரி அம்மையாருக்கு இந்த விமர்சனங்களால் விரக்தி ஏற்பட வில்லை. அதனாலேயே, அவர் மீண்டும் புதிய மருந்தை கண்டுபிடிப்பதில் தனது திறமையை வெளிப்படுத்தி மீண்டும் நோபல் பரிசை வென்று காட்டினார்.

போலந்து நாட்டில் ஓர் ஏழைக் குடும்பத்தில் மேரி கியூரி இன்றுதான் **(07-11-1867)** பிறந்தார்.

❑

நவம்பர்-8 தமிழ் இலத்தின் அகராதி

இவர், கத்தோலிக்கக் கிறித்துவ சமயப்பணி புரிய விரும்பி இயேசு சபை என்ற துறவோர் குழுவைச் சேர்ந்து 1709-ஆம் ஆண்டு குருப்பட்டம் வழங்கப் பெற்றார்.

தமிழ் நாட்டுக்கு வந்து சமயப் பணி புரியும் நோக்கோடு 1711-ஆம் ஆண்டு கோவாத் துறைமுகத்தில் வந்திறங்கி மலையாளக் கரையையும் உள்ளடக்கிப் பரந்துகிடந்த தமிழகம் முழுவதும் அலைந்து திரிந்து பல இடர்களுக்கிடையே 36 ஆண்டுகள் அருந்தொண்டு செய்தார்.

தமிழ்மொழியைக் கற்க விரும்பி சுப்பிரதீபக் கவிராயரிடம் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றார். தமிழ்க் காப்பியமாகிய கம்பராமாயணம், சீவகசிந்தாமணி முதலிய நூல்களையும், சித்தர்கள் அருளிய மருத்துவ நூல்களையும் கற்றார்.

சித்தர்களைப் போல் காவியுடை அணிந்து, மரக்கறியுணவு உண்டு குண்டலம், பூணூல், பாதக்குறடு முதலிய அணிந்து, புலித்தோலில் அமர்ந்து தமிழ்ச் சித்தராகவே மாறிவிட்டார்.

'தேவ விளக்கம்', 'வேதியர் ஒழுக்கம்', 'பேதகம் மறுத்தல்', 'தமிழ் இலத்தின் அகராதி', 'திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால்', இலத்தீன் மொழி பெயர்ப்பு என்று பல இலக்கணம், பெருங்காப்பியம் என்று பல நூல்களை எழுதியதோடு, இயேசுநாதரின் தந்தையாகிய சூசைமா முனிவரின் வரலாற்றைப் பற்றி மூன்று காண்டங்களாய் முப்பத்தாறு படலங்களாய் 3615 செய்யுட்களடங்கிய தேம்பாவணிக் காப்பியத்தையும் தந்தார்.

இப்படி அருந்தமிழுக்குத் தொண்டாற்றியவர்... கொன்ஸ் தந்தீன் ஜோஸெப் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் இத்தாலிய நாட்டில் இன்றுதான் (08-11-1680) பிறந்தார்.

நவம்பர்-9 தகவல்

ஹெடிலாமார், இவர் ஒரு சிறந்த நடிகை. அத்தோடு தொழில் நுட்பக் கல்வியும் கற்றவர்.

நவீன தகவல் தொடர்புத்துறையில் பல யுக்திகளை இவரே கண்டுபிடித்து, அதன் மூலம் ரகசிய தகவல் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார்.

தொழில் நுட்பத் துறையில் இப்படி பல சாதனைகளை செய்த இவர் மிகவும் அழகாக இருப்பாராம்.

அதனால், திரைத்துறையிலும் நுழைந்து வெற்றி பெற்றுமிருக்கிறார்.

இவர் காலத்தில் நடித்த நடிகைகளிலேயே இவரது முகமே 'கேமரா பேஸிற்கு' சிறப்பாக இருந்ததாம்.

இவரது முதல் கணவர் ஆயுதங்களை தயார் செய்யும் தொழிலதிபர். ஹிட்லர், முசோலினி போன்ற பெரும் இராணுவத் தளபதிகளுடன் எல்லாம் இந்த நடிகைக்கு தொடர்பு இருந்ததாம்.

இவர் கவர்ச்சியான தோற்றத்திலும், குணச்சித்திரப் பாத்திரங்களிலும் ஹாலிவுட் திரைப்படங்களில் அதிகமாக நடித்தார்.

இவர் வியன்னா நாட்டில் இன்றுதான் ***(09.11.1913)*** பிறந்தார்.

❐

இவான் டர்ஜெனிவ் என்பவர் புகழ்பெற்ற ரஷ்ய நாவலாசிரியர் இவரும் இன்றுதான் ***(09.11.1818)*** பிறந்தார்.

❐

இங்கிலாந்தின் ஏழாம் எட்வர்ட் மன்னரும் இன்றுதான் ***(09.11.1841)*** பிறந்தார்.

❐

நவம்பர்-10 முத்தமிழ்க்காவலர்

'முத்தமிழ்க் காவலர்' என்று அன்போடும், பண்போடும் தமிழ் நெஞ்சங்களால் அழைக்கப்பட்டவர் - நினைக்கப் பட்டவர் தமிழறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதன் அவர்கள்.

தமிழையும், தமிழரின் உயர்வையும் இரு கண்களாய் நினைத்தவர். அதற்காக, தமது இறுதிக் காலம் வரை உழைத்தவர். உயர்ந்தவர்; சிறந்தவர்.

இத்தமிழ் மகனார், அறிவாளி; உழைப்பாளி; போராளி. இவரின் அறிவின் விளைச்சலை அவர் எழுதிய கால் நூறு நூல்களால் அறியலாம்; ஒரு நாள் கூட ஓய்வு கொள்ளாமல் தமிழ் மேடைகளில் ஆற்றிய பொழிவுகளால் அறியலாம்; அவர் தம் உழைப்பை, இந்தி எதிர்ப்புப் போராட்ட காலங்களிலும் தனித் தமிழ் போராட்ட காலங்களிலும், அவர் முன் நின்று நடத்தியப் போராட்டங்களால், அவர் ஒரு போராளி என்பதை அறியலாம்.

இவர் பேச்சில் சுருக்கம் இருக்கும். எழுத்தில் சுருக்கம் இருக்கும். ஆனால், அதில் தெளிவு இருக்கும்; பொலி விருக்கும்; தமிழ் வளர்ச்சியின் பெருக்கம் இருக்கும்; குறளின் நெறியிருக்கும்!

இவர் பேச்சின் வீச்சில் ஆழமிருக்கும்; அனுபவ பதிவு இருக்கும்; புதுமை இருக்கும்; புலமையிருக்கும்; ஈரமும் இருக்கும். அதேவேளை வீரமும் இருக்கும். வாழ்வு நெறிக்கான வழியிருக்கும்; வள்ளுவரின் மெய்மையிருக்கும்.

96-ஆண்டுகள் அகமும், புறமும் அழுக்கற்ற நிலையில் தூய்மையாய் வாழ்ந்த தெள்ளுதமிழறிஞர்.

இவரது சிந்தனையும், செயலும், செதுக்கிய கல் வெட்டாய் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைத்து நிற்கும்.... காரணம், புலவர் குழு அமைத்ததும், தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்றவும் காரணமாக இருந்த மூலவர் இவரன்றோ...?

இவ்வறிஞர் திருச்சியில் இன்றுதான் (10-11-1899) பிறந்தார்.

❑

நவம்பர்-11 இறைபணி

இந்தியர்களை இந்தியர்களே நிர்வாகம் செய்து கொள்ள வேண்டும் என்ற சிந்தனையை முதலில் உருவாக்கியவர் ஜான்தாமஸ் என்கிற கிறிஸ்தவ மிஷனெரி.

இந்தியர்களுக்காக உழைப்பது இங்கிலாந்துக்காரர்கள் ஒவ்வொருவரின் கடன் என்று வற்புறுத்தியவர்.

சிறந்த வக்கீலாகவோ, மருத்துவ ராகவோ விரும்பி இருந்த ஜான்தாமஸ், இந்திய மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றி கேள்வியுற்று வருந்தி, அவர்களுக்காக உழைப்பேன் என்ற முடிவுடன் மிஷனெரியாகி 1833-35-இல் இஸ்லிங்டன் சர்ச் மிஷனெரிக் கல்லூரியில் இரண்டாண்டுகள் படித்து 4.6.1835-இல் உதவி குரு பட்டம் பெற்று 1836-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இந்தியாவில் - சென்னைக்கு வந்தார்.

பாளையங்கோட்டையில் உதவி ஆசிரியராகப் பொறுப் பேற்று மாணவர்களுக்கு கல்வி கற்பித்தார்.

மிஷனெரி ஊழியத்தில் பள்ளிக்கூடங்களே மிகவும் முக்கியமானது என உணர்ந்து பல பள்ளிகளை நிறுவி, ஏழைச் சிறுவர்களுக்கும், பெரியோர்களுக்கும் கூட கல்வியறிவு தந்தார்.

மெஞ்ஞானபுரத்தில் 1841-இல் பெண்களுக்கான போர்டிங் பள்ளியையும் 1844-இல் ஒரு பள்ளியையும் ஏற்படுத்தினார்.

நெல்லை மாவட்டத்தில் புயல் ஏற்பட்டு பல கிராமங்களே காணாமல் போய்விட்டது. அந்த நிலையில், திட்டமிட்டு அழிந்து போன அவ்வூரை அழகிய நகரமாக நிர்மாணித்தார்.

ஜான்தாமஸின் இறை பணியையும், மக்கள் சேவையையும் அவர் கட்டிய பரி-பவுலின் தேவாலயமும், அவ்வூருமே பறைசாற்றி கொண்டு இன்றும் நிற்கிறது.

இவர், இங்கிலாந்தில் வேல்ஸ்-ரான்ஸெல் என்னும் கிராமத்தில் இன்றுதான் (11-11-1807) பிறந்தார்.

நவம்பர்-12 பறவை மனிதர்

“இன்றைய மனிதனின் பரபரப்பான சூழ்நிலையை மறக்கச் செய்பவை பறவைகள்தான். அவைகளை வேட்டை என்ற பெயரில் அழிக்க வேண்டாம். பறவைகள் இல்லாத உலகை உங்களால் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது” என்று கூறியவர், பறவையியல் ஆராய்ச்சிக் கல்வியை இந்தியாவில் புகழ்பெறச் செய்த சலீம் அலிதான்.

பொருளாதார சூழ்நிலையால் கல்லூரி படிப்பை பாதியிலேயே விட்டு, பர்மாவில் இருந்த அவருடைய அண்ணன், டங்ஸ்டன் என்னும் உலோகத்தினுடைய தாது வெட்டியெடுக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தார். அவருக்கு உதவி செய்ய சலீம் அலி பர்மா சென்றார்.

இயற்கை எழில் கொஞ்சிய காடுகளும், டாவாய் ஆறு பாய்ந்து செல்லும் அழகும் - அங்கு வசித்த பறவைகளும் அவரைக் கவர்ந்தன. முன்பே பறவைகள் பற்றி அதிகம் கவனம் செலுத்தியவர். அதனால், அவரால் அங்கு தொழிலில் மனம் தோயவில்லை. அதனால், அண்ணனுடன் தகராறு. எனவே 1920-இல் மும்பை திரும்பினார்.

மும்பையில் விலங்கியலில் பயிற்சி மேற்கொண்டார். பின் மும்பை இயற்கை வரலாற்றுக் கழகத்தில் உள்ள பொருட்காட்சி நிலையத்தில் வழிகாட்டியாக வேலைக்குச் சேர்ந்தார். அவருக்கு அப்போது வயது 20. அங்கே, பாதுகாக்கப்பட்டிருக்கும் பறவைகளைப் பற்றி வருவோருக்கு எடுத்துக் கூறுவதுதான் அவரின் பணி. அதனால், உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் பறவைகளை அதிக அளவில் தெரிந்து கொள்ள வேண்டும் என ஆவல் மேலிட்டது.

அதனால் வேலையை விட்டார். ஜெர்மன் சென்றார். அங்கு டாக்டர் இர்வின் ஸ்டிராஸ்மேனிடம் விரிவுரையாளர் பயிற்சி பெற்று மும்பை வந்தார். ‘தூக்கணாங் குருவியின் செயற்பாடுகள்’ ‘இந்திய பறவை நூல்’என்று நூல்களை எழுதினார். உலக அளவில் அவ்வாய்வு நூல் இவருக்கு பொருளையும், புகழையும் பல விருது களையும் தந்தது.

இவ்வரிய மனிதர், மும்பையிலுள்ள கெயிப்வாரி எனும் ஊரில் இன்றுதான் (12-11-1896) பிறந்தார்.

□

நவம்பர்-13 நீண்டநாள் வாழ...

லூயிஸ் பிரான்டிஸ் வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் இருந்து புகழ் பெற்றவர்.

ஜூ இனத்தில் அதிகம் படித்து, பெரும் பதவியை அந்த காலத்தில் வகித்து இருந்த முதல் மனிதர் இவரே. அந்த இனத்தின் வளர்ச்சிக்காக ஒரு அமைப்பையே இவர், ஏற்படுத்தியிருக்கிறார்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனநாயகக் கட்சியின் வளர்ச்சிக்கு அதிகமாக பாடுபட்டிருக்கிறார்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசிடம் பல அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கிறார்.

சமூக அறிவியல் என்ற பாடத்தை, சட்டம் படிப்பவர்கள் கண்டிப்பாக படிக்க வேண்டும் என்பதை அமெரிக்காவில் நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் இவரே.

இந்த அறிஞர் லூயிஸ்வெல் அமெரிக்காவில் இன்றுதான் *(13.11.1856)* பிறந்தார்.

❑

விளையாட்டிலும், நடைப் பயிற்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர்கள் நீண்ட நாள் வாழலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்தவர்...

மூன்றுமுறை ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்டு மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றவர்... தனது 98-வது வயதில் நண்பர்கள் புடைசூழ பிறந்த நாளை கொண்டாடியவர்...

இப்படி பல சிறப்புகளைப் பெற்ற வீரரான லியோன் ஸ்டுகல்ஸ் என்ற ஸ்லோவானியா நாட்டுக்காரரான இவரும் இன்றுதான் *(13.11.1898)* பிறந்தார்.

❑

ஜேம்ஸ்.சி.மாக்ஸ்வெல் என்பவர் ஸ்காட்லாந்து நாட்டு மருத்துவ மேதையும் இன்றுதான் *(13.11.1840)* பிறந்தார்.

❑

நவம்பர்-14 குழந்தை மாமா

இந்தியாவில் நீண்டகாலம் பிரதமராக இருந்தவர் நேரு மட்டும்தான். 17 ஆண்டுகள் பிரதமராக இருந்தார். நேரு விடுதலைப் போரில் கலந்து கொண்டு 16 ஆண்டுகள் சிறையில் இருந்தவரும், நேருதான். இன்று அரசியல்வாதிகள் பலர் நாட்டுச் சொத்துகளை எல்லாம் தங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். ஆனால் பலகோடி ரூபாய் மதிப்புள்ள 'ஆனந்தபவனம்' என்கிற மாளிகையை நாட்டுக்கே தந்தவர் நேரு. நிறைய படிக்கும் பழக்கம் கொண்டவர் நேரு. நள்ளிரவு ஒரு மணி வரை ஏதாவது படித்துவிட்டுத்தான் படுப்பார். படிப்பதுடன் நில்லாமல் எழுதுவதையும் கைக் கொண்டிருந்தார். சிறையில் இருந்தபோது நேரு எழுதிய நூலின் பெயர் 'டிஸ்கவரி ஆஃப் இண்டியா' என்பதாகும்.

1946-ஆம் ஆண்டில் இந்திய இடைக்கால அமைச்சரவை யின் பிரதமராய் இருந்தபோது, இந்து முஸ்லிம் கலவரங்களுக்கு முடிவு காண மகாத்மா நவகாளி யாத்திரையை மேற்கொண்டார். ஒரு முக்கிய பிரச்சனையில் மகாத்மாவிடம் யோசனை கேட்கப் பிரதமர் நேரு, நவகாளி சென்றார். விடியற்காலை 4-மணி இருக்கும், தூங்கும் மகாத்மாவை எழுப்பக் கூடாது எனக் கருதிய நேரு அக்குடிசையின் திண்ணையிலேயே அமர்ந்திருந்தார்.

வழக்கம்போல அதிகாலையில் எழுந்த மகாத்மா, திண்ணையில் காத்திருந்த நேருவைக் கண்டு துணுக்குற்று, "இந்தியாவின் பிரதமரா இப்படிக் காத்திருக்கிறார்?" என்று கேட்டார்.

அப்பொழுது நேரு, "பாரதம் தூங்கிக் கொண்டு இருக்கும்போது, நான் எப்படி அதன் துயிலை கெடுக்க முடியும்?" என்று திருப்பிக் கேட்டாராம். எவ்வளவு பணிவு. எப்படிப்பட்ட குரு பக்தி!

இந்த சீடர்தான், இந்தியாவின் முதல் பிரதமராக இருந்த நேருஜி. இன்றுதான் (14-11-1889) இவர் பிறந்தார். இவரது பிறந்த நாளை இந்தியா குழந்தைகள் தினமாகக் கொண்டாடி மகிழ்கிறது.

❒

நவம்பர்-15 விடிவுக்கு முன்

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஈடு இணையற்று நாடக உலகில் புகழ்க் கொடியை நட்டவர். ஜெரார்ட் ஹவுப்டமண். உள்ளூர் பள்ளியில் ஒழுங்காகப் படிக்காததால், அவர் பெற்றோர் விவசாயத்தில் ஈடுபடுத்தினர். விவசாயப் பண்ணையில் ஓராண்டு காலமே அவர் இருந்தார். அவ்வேளையில் அவர் பெற்ற அனுபவங்கள் ஏராளம். பின்,

நாடகத்தில் நடிக்க வேண்டும் என்று விரும்பி வந்தவர், நாடகம் எழுதுபவராக மாறினார். இந்த வேளையில் மேரி தியெனிமான் என்ற பெரும் பணக்காரியின் தொடர்பு ஏற்பட, பின் இருவரும் மணந்து கொண்டார்கள். மனைவியின் பெரும் பணம், அவரது அன்பு கலந்த மனம், அவருக்கு நல்துணையாக இருந்தது. இருந்தும் அந்தக் காதல் வாழ்க்கை நீடிக்கவில்லை. *1889*-இல் மார்கரெட் மார்ஷாக் என்ற அழகியை சந்தித்ததும் முதல் மனைவியை விட்டு அவரோடு வாழத் தொடங்கினார்.

அக்காலத்தில் ஜெர்மனியின் பெர்லினில் 'திஃப்ரீஸ்டேஜ்' என்ற நாடக நிறுவனம் புதிய இளம் நாடக ஆசிரியர்களை ஊக்குவித்தது. அவர்கள் ஹவுப்ட்மண் நாடகத்தையும் அரங்கேற்றினார்கள். நாடகத்தின் பெயர் 'விடிவுக்கு முன்.' இந்த முதல் நாடகமே பெரும் வெற்றியை அவருக்குத் தந்தது.

1893-இல் மேடை ஏறிய நாடகமான 'நெசவாளிகள்' அவரை புகழ் உச்சிக்கே கொண்டு சென்றது. இந்நாடகம் ஐரோப்பிய மேடைகளைப் பலமுறை கண்டதோடு, *1897*-இல் நியூயார்க் நகரிலுள்ள சிறப்புமிக்க இர்விங் பிளேஸ் தியேட்டரிலும் மேடையேற்றப்பட்டது. இப்படி இந்நாடகம் அமெரிக்க மேடைகளையும் அலங்கரித்தது. புகழ் சேர்த்தது. பிரபலமான பத்திரிகைகளும் பார்ட்டிச் சிறப்பித்தன.

இவரது சிறந்த நாடகங்களில் 'ஹன்னலிஸ் ஹிம்மல் ஃபார்ட்' என்ற இரங்கல் நாடகமும் சேரும். ஆங்கில மொழி பெயர்ப்பும் பெற்றது. இந்நாடகம் உலகம் முழுதும் பேசப்பட்டது.

நாடகத்தோடு, கவிதை, நாவல், சிறுகதைகளையும் எழுதினார். இந்நாடக ஆசிரியர் இன்றுதான் **(15-11-1862)** பிறந்தார்.

❑

நவம்பர்-16 ‘பெங்குவின்’

பர்க்கஸ் மெரிடிட், இவர் நாடகக் கம்பெனி ஒன்றினை நடத்தி வந்தார்.

1939-இல் ‘ஆஃப் மைஸ்ன் அண்டு மென்’ என்ற நாடகத்தில் ஜார்ஜ் வேடமேற்று நடித்தது, நாடக உலகைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

1940-இல் திரைப்படத் துறையில் நுழைந்து, அந்த ஆண்டில் அதிகப் படங்களில் நடித்தார்.

இவரோடு அதிகப் படங்களில் நடித்த பவுலிட் என்ற நடிகையைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

‘பேட்மேன்’ என்ற தொலைக்காட்சி நாடகத்தில் ‘பெங்குவின்’ என்ற பாத்திரத்தில் இவர் நடித்தபோது, உலக மக்களின் உள்ளத்தில் குடியேறினார்.

குணச்சித்திரப் பாத்திரங்களை ஏற்று நடித்து சிறந்தேதோடு இவர், நகைச்சுவைப் பாத்திரத்தையும் ஏற்று நடித்துப் பெயர் பெற்றார்.

இவர் நடிகர் மட்டுமல்ல, இராணுவத்திலும் பங்கு கொண்டு இரண்டாவது உலகப்போரில் தரைப்படையிலும், விமானப் படையிலும் பணியாற்றி தளபதியாய் பதவி உயர்வும் பெற்றவர்.

இவர் கிளிங் லேண்டில் இன்றுதான் *(16.11.1907)* பிறந்தார்.

❑

இசையமைப்பாளர் பால் ஹின்ட்மித் என்பவரும் இன்றுதான் *(16.11.1895)* பிறந்தார்.

❑

கனடா நாட்டுக் கவிஞரான லூயிஸ்ஹெச் ஃபிரைசிடோர் என்பவரும் இன்றுதான் *(16.11.1839)* பிறந்தார்.

❑

நவம்பர்-17 தமிழ்நாடு டாக்கிஸ்

பேசும்படம் காலம் வந்தது. இந்த நேரத்தில் நான்கு தயாரிப்பாளர்கள் வந்தார்கள். இந்த நால்வருள் ஒருவர் எஸ்.சவுந்தரராஜன். மற்றவர்களைவிட தமிழ்நாடு டாக்கீஸ் சவுந்தரராஜ அய்யங்கார் மட்டுமே 30 ஆண்டு காலத்தில் 25 படங்களை எடுத்தார். தமிழ்ப்பட தயாரிப்பாளர்களிலே முன் நின்றவர் இவரே. இவரது முதல் படம் 'சங்கீத லவகுசா' (1932) கடைசி படம் 'மல்லியம் மங்களம்' (1961).

இவரது தந்தையார் இளமையிலேயே இறந்துவிட்டதால், இவரையும், இவரது சகோதரரையும் கும்பகோணத்தில் இருந்த பாட்டியே வளர்த்தார்கள். அங்கேயுள்ள டவுன் ஹைஸ்கூலில் பள்ளியில் படித்துத் தேர்ந்தார். பின்னர், அங்கிருந்த கல்லூரியில் படித்தார்.

சென்னை வந்த இவர் செய்த தொழில் பாத்திர வியாபாரம். இவருக்கு நாடகக்காரர்களோடு நட்பு மலர்ந்ததால், வி.ஏ.செல்லப்பா, எஸ்.ஜி.கிட்டப்பா போன்ற நடிகர்களோடு தொடர்பு ஏற்பட்டது. அவர்களும் இவர் வீட்டிற்குச் சாப்பிட வரும் அளவிற்கு நட்பு வளர்ந்தது. அந்த நட்பு பிற்காலத்தில் திரைப்படத் தயாரிப்பாளராகும் அளவிற்கு இவரை வளர்த்தது.

ரஞ்சன், வி.என்.ஜானகி, வசுந்தராதேவி, கிருஷ்ணகுமார், எம்.என். ராஜம் போன்ற நடிகர்களை திரையுலகில் அறிமுகம் செய்தவர், இவரே. தமிழோடு தெலுங்கிலும் படம் எடுத்தார். இவர் அரசாங்க நல்லெண்ணக் குழுவில் அமெரிக்கா சென்று வந்தார்.

காலப்போக்கில் திரையுலகில் மதிப்பும், மரியாதையும் குறைவதைக் கண்டு கொடைக்கானல் சென்று தங்கினார். சென்னைக்குப் படம் எடுக்க மட்டும் வருவார். வேலை முடிந்ததும் அங்கே சென்றுவிடுவார்.

இவரது இறுதிச் சடங்கில் (1966) எம்.ஜி.ஆர். அவர்கள் இடுகாடு வரை நடந்தே வந்தார் என்பதிலிருந்தே, இவரது புகழ் திரைத்துறையில் எத்தகையது என்பதை நாம் உணரலாம்.

இந்த தமிழ்நாடு டாக்கிஸின் உரிமையாளரான எஸ்.சவுந்தரராஜன், தஞ்சை மாவட்டம் - பாபநாசம் அருகிலுள்ள கோட்டச்சேரியில் இன்றுதான் (17-11-1901) பிறந்தார்.

❑

நவம்பர்-18 பெண்களும் யோகா...

என் சொத்துகள் அனைத்தையும் விற்றுத் தருகிறேன். இந்த யோகா முறையைப் பரப்ப அதைச் செலவிடுங்கள் என்று தத்துவ மேதை ஜே.கிருஷ்ணமூர்த்தி கூற, அவர் கூறியதைக் கேட்டவர் ''அதெல்லாம் வேண்டாம்'' என்று சொல்லி விட்டாராம். இப்படிச் சொன்னவர் யார்...? உலகமகா ஞானி என்று போற்றப்பட்ட ஜே.கிருஷ்ணமூர்த்தி ஒருவரிடம் அவர் கூறினார் என்றால், அவர் மரியாதையை நாம் தெரிந்து கொள்ளலாம். அந்த உயர்ந்தவர், யோகா மாமுனிவர் கிருஷ்ணமாச்சாரியார்தான்.

இந்திய கலாச்சாரத்தின் அங்கம் யோகாப்பயிற்சி. உடலாற்றல், மன ஆற்றல், நோய் நீக்கும் மருந்து, தெளிந்த சிந்தனை, சிறந்த அறிவு இத்தனையும் தரக்கூடிய சாஸ்திரம் யோகா. இக்கலையில் மாபெரும் ஆசான் மகா பாண்டி யத்தியம் பெற்றவர். வைணவப் பெரியார் நாதமுனி மகானின் உபேதசங்களை பார்முழுதும் பரப்பி வந்தவர். மகான் கிருஷ்ணமாச்சாரியார். இவர் வேதம், வேதாந்தம், யோகா, ஆயுர்வேதம், இசை, தனுர்வித்தை, ஜோதிடம் என்று பல்துறை வித்தகர். இவர்ஒரு அவதார புருஷர் எனலாம்.

தொடக்கக் கல்வியை தந்தையிடமும், அதன் பின்னர் பாட்டனாரிடமும் கற்றார். சில **ஆண்டுகளிலேயே சகல** விதமான சாஸ்திரமும் பழுதறக் கற்றார். மன்னர் கல்லூரியில் வித்வான் பட்டம் பெற்றார்.

வாரணாசியில் யோக நிபுணர் பாபு பகவான்தாஸிடம் யோகம் கற்றார். திபெத்திற்குச் சென்றார். அவ்வேளையில் இந்திய வைஸ்ராய் சர்க்கரை நோயில் வீழ்ந்தார். அவரை யோக முறையால் குணப்படுத்தினார். இவர் எழுதிய நூல்கள் கல்லூரிகளில் பாட நூல்களாகத் தெரிவு செய்யப்பட்டன. கல்வித் தொண்டும் செய்தார். மைசூர் சமஸ்கிருதக் கல்லூரியில் யோகா ஆசிரியராகப் பொறுப்பேற்றார். பெண்களும் யோகாசனம் கற்கலாம் என வாதிட்டு இவர் அவர்களுக்கும் பயிற்சி கொடுத்தார். நூறாண்டு வாழ்ந்தார். அவரது நினைவாக அவரது யோகாசிரமம் இன்றும் சென்னையில் நடந்து வருகிறது.

இந்த யோகா மேதை கர்நாடகாவிலுள்ள முசுகுந்தபுரம் என்னும் ஊரில் இன்றுதான் ***(18-11-1888)*** பிறந்தார்.

❒

நவம்பர்-19 மீள்வது

இந்திராகாந்தி, 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இந்திய நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அன்றுமுதல், இவர் உலகத் தலைவர்களுள் ஒருவராக உயர்ந்தார். தமது உழைப்பாலும், உயர் இலட்சியங்களாலும் தனித் திறமையாலும், செயல் திறனாலும், விடாமுயற்சியாலும், நெஞ்சுறுதியாலும் மக்களின் மதிப்பையும், மரியாதையையும் பெற்று உலகம் புகழ வாழ்ந்தார்.

பிரதமர் இந்திராகாந்தியின் வாழ்வில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்திய சம்பவம் என்றால், அது அவருடைய தாயார் கமலாநேருவின் மறைவுதான். அந்தத் துக்கத்தில் இருந்து அவரால் கடைசிவரை மீளவே முடியவில்லை.

கமலா நேரு இறந்து 35-வருடம் கழிந்து ஒரு பெண் பத்திரிகை நிருபர், இந்திராவிடம் கேட்டார். ''உங்கள் தாயின் பிரிவு துயரில் இருந்து மீள்வதற்கு நெடுங்காலம் பிடித்ததா?''

இந்திரா சொன்னார்: ''எனக்கு தெரியவில்லை. 'மீள்வது' என்கிற வார்த்தை எனக்குப் பிடிக்கவில்லை. காரணம், இம்மாதிரி காயங்கள் குணமாவதேயில்லை. வடுவும் தாக்கமும் ஏதேனும் ஒரு வகையில் இருந்து கொண்டே இருக்கிறது. அவ்வப்போது அம்மா என் அருகில் இருப்பதாகவே நினைக்கிறேன்...''

தாயின் அன்பை இதைவிட மிகச் சிறந்த வார்த்தைகளால் யாரும் விளக்கியதாகத் தெரியவில்லை.

இந்த மாபெரும் அரசியல் தலைவர், உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள ஆனந்தபவனில் இன்றுதான் (19-11-1917) பிறந்தார்.

❑

சுதந்திரப் போராட்ட வீராங்கனைகளின் வழிகாட்டியாக வாழ்ந்த ஜான்சிராணி லட்சுமிபாயும் காசிமாநகர் பீடூரில் இன்றுதான் (19.11.1835) பிறந்தார்.

❑

நவம்பர்-20 திப்பு

அன்னியர் ஆட்சியை எதிர்த்து, தேசபக்தியுடன் இறுதிவரைப் போராடிய வீறு கொண்ட புலியாக இருந்து எதிரிகளை விரட்டியவர்களில் முன் நிற்பவர், மன்னன் திப்பு சுல்தானும் ஒருவர்.

சிறு வயது முதற் கொண்டே திப்பு போர்ப் பயிற்சி, குதிரை ஏற்றம், கல்வி ஆகியவற்றில் தேர்ந்து விளங்கினார். முகமதிய கோட்பாடுகளை மவுல்லி அப்துல்லாவிடமும், கோவர்தன பண்டிதரிடம், தியானம், வழிபாடு, யோகாசன பயிற்சி ஆகியவற்றையும், காசிகானிடம் மல்யுத்தம், நீச்சல், குதிரை ஏற்றம், போர்க்கலை ஆகியவற்றையும் விதிமுறையோடு பயின்றார். இவர் தனது சிறுவயதிலேயே தந்தை ஹைதருடன் இணைந்து, பெத்தனூர், வாணியம்பாடி, திருப்பத்தூர் ஆகிய இடங்களில் போர் புரிந்து, அங்கேயுள்ள கோட்டைகளை வென்றதில் இருந்து இவரது போர்த்திறன் புலப்படுகிறது.

திப்புவின் செயல்திறன் போர்க்களத்துடன் நின்றுவிடாமல் கல்வி, கலை போன்ற பல்வேறு துறைகளிலும் ஒளிர்ந்தது. இவரது படைப்புகள் யாவற்றிலும் புதுமை காணப்பட்டது. அவ்வாறே பழமையும் போற்றப்பட்டது. மத வேறுபாடு கருதாமல் இந்துமத ஆலயங்களுக்கு திப்பு கொடுத்த நன்கொடைகள் ஏராளம்.

“இருநூறு ஆண்டுகள் ஆட்டு மந்தையாக வாழ்வதை விட இரண்டு நாள் சீறும்புலியாய் வாழ்வதே சாலச் சிறந்தது என்று சூளுரைத்த பரிசுத்த பெருவீரன் தியாகச் சுடர் திப்பு சுல்தான்.”

ஆங்கில ஏகாதிபத்தியத்தை அடியோடு ஒழித்து விட்டுத் தான் பஞ்சணையில் உறங்குவேன்; அழகிய சிம்மாசனத்தில் அமர்வேன்... என்று சபதமெடுத்து தன்மானம் காக்க, இம் மண்ணின் நன்மானம் காக்க இறுதி மூச்சு வரை போராடி, சாதாரணச் சிப்பாய் உடையில் குண்டடிப்பட்டு.... இவ்வீரத் தியாகி மைசூரை சார்ந்த தேவண ஹல்லில் இன்றுதான் **(20-11-1753)** பிறந்தார்.

❐

நோபல் பரிசு பெற்ற செல்மா லாகர்லவ் என்ற மாபெரும் எழுத்தாளரும், ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த வார்ம்லாந்து மாநிலத்தில் இன்றுதான் **(20-11-1858)** பிறந்தார்.

❐

நவம்பர்-21 பாட்டுப்பறவை

பெற்றோர்கள் இசையில் நல்ல ஈடுபாடு கொண்டிருந்த தால்; கவிஞர் சடையப்பனும், இசையை முழக்கிக் கொண்டே சிறுவயதிலேயே பாடுகின்ற ஆற்றலைப் பெற்றிருந்தார்.

திண்ணைப் பள்ளியில் படிப்பைத் தொடர்ந்த இவர், பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். கல்லூரி செல்ல வாய்ப்பு இல்லாத அவருக்கு பெற்றோர்கள் சொந்தத்திலேயே மணம் முடித்து வைத்தனர்.

பாட்டுப் பறவையாக சுதந்திரமாகப் பாடித் திரிந்தவர். வீட்டுச் சிறைப்பட்டார். உடனும் சுதந்திரமாக வெளிப்பட்டார். இராணுவத்தில் சேர்ந்தார். அங்கே பணியாற்றியபோது, வெள்ளையர் எதிர்ப்பும், தேசிய தலைவர்கள் மீது கொண்ட பற்றாலும் பல இன்னல்கள் பட்டார். பட்ட துயர் போதுமென்று அந்த வேலைக்கு ஒலை கொடுத்து ஊருக்குத் திரும்பிவிட்டார். மீண்டும் போலீஸில் சேர்ந்து பணியாற்றிய தோடு, கிடைக்கும் நேரத்தில் எல்லாம் சுயமரியாதைக் கருத்துக்களை மேடைகளில் பொழிவு செய்தார்.

சுயமரியாதை இயக்கத்திலிருந்து, கம்யூனிஸ இயக்கத்தில் ஈடுபட்ட **கவிஞருக்கு** - பாடல் **எழுதுவது, அதைத் தானே** டேப் எடுத்துக் கொண்டு மேடையில் பாடுவது. நாடகங்கள் எழுதியதோடு நடிக்கவும் செய்வது - இதுவே பணி நேரம் போக ஆற்றும் பணியாகும். சிறை சென்றதுமுண்டு.

சினிமாவில் நடிக்கவும் பாடல் எழுதவும் சென்னை வந்தக் கவிஞருக்கு வாகினி ஸ்டூடியோ பணிக்களமாக ஆகியது. பின்னர் சுதந்திரமாக ‘டேப் சடையப்பன் கலைக்குழு’வை அமைத்தார். தமிழகம் முழுதும் உலா வந்தார். 15 நாடகங் களையும், பல நூறு கவிதைகளையும், இசைப் பாடல் களையும், கதைகளையும், கட்டுரைகளையும் எழுதினார். கவிஞர் ஜீவா, எம்.கல்யாணசுந்தரம் போன்றவர்களின் நன்மதிப்பைப் பெற்ற இக்கவிஞர் - கம்யூனிஸ இயக்கத் தோழர்களால் பெரிதும் மதிக்கப்பட்டார்.

இக்கவிஞர் தர்மபுரி - அரூர் - சக்கிலிப்பட்டி எனும் **கிராமத்தில் இன்றுதான் (21-11-1925)** பிறந்தார்.

❒

நவம்பர்-22 காதலரின் முயற்சி

ஒரு பேராசிரியரின் மகனாக ஆண்ட்ரிகைட் பிறந்தார். ஒரே பிள்ளை என்பதால் செல்லமாக வளர்க்கப் பெற்றார். தந்தை இளமையிலே இறந்ததால், அத்தையின் பராமரிப்பில் வளர்ந்தார்.

இளமையில் இவரது உடல்நிலை அடிக்கடி நோய்வாய்ப் பட்டதால், அடிக்கடி பள்ளிகளும் மாற வேண்டியதாயிற்று. சில காலங்களில் வீட்டிலேயே கல்வி பயின்றார். பாரிஸில் முக்கிய பள்ளி ஒன்றில் பயிலும்போது இலக்கியத்தில் முழு வீச்சில் இறங்கினார். கிரேக்க எழுத்தாளர்களின் காவியங்களை தேடிப்பிடித்துப் படித்தார்.

1891-இல் ஆண்ட்ரி வால்ட்டரின் குறிப்புப் புத்தகம் வெளிவந்தது. இது கவிதைகளாக - சுயவரலாறு போல இருந்தது. அது பெரும் வெற்றியைத் தரவில்லை என்றாலும், அறிமுகம் கிடைத்தது. இதே ஆண்டில் 'யூரியனின் கடற்பயணம்', 'காதலரின் முயற்சி' என்ற நாவல்களும் வெளிவந்தன. *1894*-இல் அவர் எழுதிய ''மார்ஷ்லேண்ட்ஸ்'' மிகுதியாகப் பாராட்டப்பட்டது. விலங்குகளைப் பற்றிய கவிதை நூலாக அது இருப்பினும் தத்துவத்தை எளிமையாக விளக்கியிருந்தார்.

ஆண்ட்ரி *27*-வது வயதில், ரோக் நகரின் மேயரானார். சிறு வயதில் மேயராகப் பதவி ஏற்றது இவரே என்று புகழ்ந்து பேசப்பட்டார். இருந்தாலும் அவருக்குள் இலக்கியப் பணி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. *1897*-இல் வெளிவந்த 'பிரபஞ்சத்தின் கனிகள்' சிறந்த படைப்பாகப் புகழப்பட்டது. கவிதை நடையில் அந்த நாவல் அமைந்திருந்தது. இலக்கிய தகுதி கிடைத்தது.

1902-1919-க்கும் இடையில் அரும்பெரும் இலக்கியங் களை படைத்தார். நாடு போற்ற பேசப்பட்டார். நோபல் பரிசும் கிடைக்கப் பெற்றார். *(1947)* அதே ஆண்டில் ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தின் சிறப்பு பட்டமும் பெற்றார்.

இவர், பாரிஸ் நகரில் இன்றுதான் *(22-11-1869)* பிறந்தார்.

□

நவம்பர்-23 உவமைக்கவிஞர்

உவமைக் கவிஞர் சுரதா. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரம்பரையில் வந்த கவிஞர்களில் இவரே குறிப்பிடத்தக்கவர். நறுக்குத்தெறிக்கும் வார்த்தைகளில் கவிதைகளை இறுக்க மாகவும், சுருக்கமாகவும் இவர் உவமை நயத்தோடு சொல்கின்ற சுகமே, சுகம்தான்.

பகுத்தறிவும், பயமில்லாத நெஞ்சுறுதியும் கொண்டவர் இவர். அதனால்தான் நாயன்மார்களைப் பற்றிப் பாடினால் தான் கவிதையா? நடிகைகளைப் பற்றிப் பாடினால் கவிதை இல்லையா? என்றவர். 'சுவரும் சுண்ணாம்பும்' என்ற நூலை எழுதினார். இருபது நூல்களுக்கு மேல் எழுதியிருக்கும் இவர், எண்ணற்ற விருதுகளைப் பெற்றிருக்கிறார். 'தேன்மழை'யும், 'துறைமுகமும்', 'அமுதும் தேனும்' ஆகிய ஒவ்வொன்றும் படிக்க வேண்டிய, பாதுகாக்க வேண்டிய பனுவல்.

இவர் மூவாயிரம் கவிதைகளுக்கு மேல் எழுதியிருக்கிறார். 'ஜெனோவா', 'அமரகவி', 'மங்கையர்க்கரசி' போன்ற திரைப்படங்களுக்கு வசனம் எழுதியதோடு, பாடல்களையும் எழுதியிருக்கிறார். இவரது திரைப்பாடலாகட்டும், தனிக்கவிதை யாகட்டும் அவைகளில் அவர் சொல்லியிருக்கின்ற நுட்பமான உவமை கள் கேட்பவரை, படிப்பவரை சிந்திக்க வைக்கும்.

'அமுதும் தேனும் எதற்கு...'
'ஆடி அடங்கும் வாழ்க்கையடா...'
'வெற்றிலை போடாமலே வாய் சிவந்த பச்சைக் கிளிகள்...'
'விண்ணுக்கு மேலாடை...'
'நீல வான்மீது நிழல் படிவதுண்டோ...'
'பிழிந்ததொரு புடவையைப் போல் குனிந்து கொண்டாள்..'
'தண்ணீரின் ஏப்பம்தான் அலைகள்...'
'விடுபடா அம்பு விழி பெற்ற மாதே...'
'கொடிபடு கிழங்குக் கொண்டை ஏன் அவிழ்ந்தது...?'

இப்படி இவரது உவமைப் பாடல்களைத் தொகுத்துக் கொண்டே போகலாம்... 'உவமைக் கவிஞர்' என்ற பட்டத்தை இவருக்குக் கொடுத்தது யார்? 'உதட்டில் உதடு' என்ற இவரது நூல் வெளியீட்டு விழாவின்போது நாவலாசிரியர் ஜெகசிற்பியன் தான் இப்பட்டத்தை (1953)இவருக்கு வழங்கினார்.

இம்மாபெரும் உவமைக் கவிஞர், தஞ்சை மாவட்டம் பழையனூர் எனும் சிற்றூரில் இன்றுதான் (23.11.1921) பிறந்தார்.

நவம்பர்-24 நிரந்தர உலகம்!

டச்சு நாட்டு தத்துவ மேதை பரூச் ஸ்பினோஸா. இவர் புகழ் பெற்ற 'எதிக்ஸ்' என்ற தத்துவ நூலைத் தந்தவர். இவரது தத்துவங்கள் 'பேன்தீஸம்' என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது, நமது அத்வைத சித்தாந்தங்களைப் போன்றது. இறைவனும் இயற்கையும் ஒன்றே என்பவை.

நாம் எத்தகைய உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்...? நம்மை இங்கே கொண்டு வந்தவர் யார்...? ஏன்...? என்ற வழக்கமான மூன்று கேள்விகளுக்கு அவரின் பதில்....

'இது முடிவிலா நிரந்தர உலகம். நம்மை இறைவன் கொண்டு வந்தான். அவன் பரந்திருப்பவன். முழுமை யானவன் எங்கும் தங்கியிருப்பவன். அவன் நம்மைவிட உயரத்தில் இல்லை. நம்மில் இருக்கிறான் அவன். நாம் மகிழ்ச்சியாக வாழவே இங்கு வந்திருக்கிறோம்.''

'வெறுப்பைத் தவிர். அது வலியையே உண்டாக்கும். மனித குலத்துக்கு எதை நீ விரும்ப மாட்டாயோ, அதை உனக்கு நீ விரும்பாதே' என்பதுஅவர் போதனை.

மனித ஆத்மா, மகேசனின் ஆத்மாவின் ஒரு பகுதியே என்பது அவர் நம்பிக்கை.

வேர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, ஜார்ஜ்எலியட், கோத்தே போன்ற மேதைகளைக் கவர்ந்தவர், ஸ்பினோஸா.

இந்த மேதை ஹாலந்தில் இன்றுதான் (24-11-1632) பிறந்தார்.

❒

பிரிட்டிஷ் நாவலாசிரியர் லாரன்ஸ் ஸ்பெர்ன் என்பவரும் இன்றுதான் (24-11-1713) பிறந்தார்.

❒

பிரெஞ்சு ஓவியர் ஹென்றி டி.டௌலஸ் லாட்டரி என்பவரும் இன்றுதான் (24-11-1864) பிறந்தார்.

❒

நவம்பர்-25 முன்னோடி

நீராவியால் இயங்கக்கூடிய கார் ஒன்றை நிக்கோலஸ் குகாட் என்ற பிரெஞ்சுக்காரர் 1769-இல் தயாரித்தார். இந்த நீராவிக்கார் முதலில் தானாக சிறிது தூரம் ஓடிச் சுவரில் மோதியது. விபத்தை ஏற்படுத்திய குகாட்டிற்கு சிறை தண்டனை கிடைத்தது. இதற்குப் பிறகு கார் தயாரிப்பில் ஆர்வம் காட்டி முயற்சி செய்து தோல்வி கண்டனர். சிலர் வெற்றியடைந்தாலும் அவர்கள் தயாரிப்பிற்கு முன்னோடியாக விளங்கவில்லை.

இந்த நிலையில் நீராவியை விலக்கிவிட்டு, பெட்ரோலால் காரை ஓடச் செய்த கார்ல் பென்ஸ் என்ற ஜெர்மானியர்தான், கார் தயாரிப்பின் முன்னோடியாகத் திகழ்ந்தார். ஆனால், காரை கண்டுபிடித்தவர் இவரல்ல.

குகாட் கண்டுபிடித்த காரை முதலில் இவர் எண்ணெயால் ஓடச் செய்தார். அடுத்து அதில் பல மாற்றங்கள் செய்ததால் மணிக்கு 10 அல்லது 12 கிலோ மீட்டர் எனத் தொடர்ந்து ஓடச் செய்தும் வெற்றி பெற்றார். இவர் காட்டிய வழியில்தான் பின்னர் வந்த கார் தயாரிப்பு மன்னர்கள் கருத்தைச் செலுத்திப் புகழ் பெற்றார்கள். டெய்ம்லர், மார்க்கஸ் போன்றோரும் இவர் காலத்தில் தான் பெட்ரோல் கார்களைத் தயாரித்தார்கள். இருந்தும் 1889-இல் பாரிஸில் நடந்த கண்காட்சியில் இவருடையதே சிறப்பானது என தெரிவு செய்யப்பட்டதால் இன்றும் கார் தயாரிப்பில் அடிப்படை அமைப்புகள் பென்ஸ் வழியில் அமெரிக்காவில் 1892-இல் ஹேன்ஸ், போர்டு ஆகிய இருவரும் கார் தயாரிக்கத் தொடங்கினர்.

பென்ஸ்தான் ஜெர்மனியில் பெட்ரோல் காரை அறிமுகப்படுத்தியவர்.பென்ஸ் ஜெர்மனியில் முயால் டார்ப் என்னும் ஊரில் பிறந்தார். பென்ஸ் பிறந்த இரண்டாவது ஆண்டில் தந்தை இறந்துபோக, தாயாரின் வளர்ப்பில் பொறியியல் படித்து, பட்டம் பெற்றார்.

கார் தயாரிப்பாளரும், கார் தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவருமான கார்ல் பென்ஸ் இன்றுதான் **(25-11-1844)** பிறந்தார்.

❏

அமெரிக்கத் தொழிலதிபரான ஆண்ட்ரூ கார்னகியும் இன்றுதான் **(25-11-1835)** பிறந்தார்.

❏

நவம்பர்-26 குளிர்சாதனம்

இன்று அலுவலகங்களும், உணவு விடுதிகளும், ஒட்டல் அறைகளும், வீடுகளும் வசதிக்கு ஏற்ப குளிர்சாதன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் மூலகாரணமாக இருந்தவர், இத்தொழிலுக்கு வழிகாட்டியவர், வில்லிஸ் ஹாவிலாண்ட் கேரியர்தான்.

இவரின் தந்தை ஒரு விவசாயி. தாயார், தையல் இயந்திரம், கடிகாரம் போன்றவற்றைப் பழுதுபார்ப்பவர். அதை பல நேரங்களில் உடனிருந்து கவனித்தார், கேரியர். தாயார் இறந்து படவே, தாய் செய்த கடிகாரம், தையல் இயந்திரம் பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டார்.

கணக்குகளைப் புதிது புதிதாகப் போட்டுப் பார்ப்பதிலும் பொழுதைப் போக்கி வந்தார். தன் ஊரிலும், பிறகு காரன்ல் நகரிலுள்ள கல்லூரியில் பொறியியல் படிப்பையும் படித்து முடித்தார்.

இந்த நிலையில் குளிர்சாதனக் கருவியைக் கண்டுபிடிக்க ஆய்வில் ஈடுபட்டார். வெப்பம், காற்று ஆகியவற்றின் அளவு ஆற்றல், பற்றி முழுவதும் தெரிந்து கொண்டு வேறு வேறு வகையான புதிய கருவிகளை வடிவமைத்தார்.

குளிர்பத இயந்திரத்திற்காக சில புதிய கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டு, வடிவமைத்துத் தயாரிக்கப்பட்டன. பொருள்களைப் பாதுகாத்து வைக்க, காற்றின் வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் முறையைத் தன்னுடைய ஆராய்ச்சியில் கேரியர் கண்டு பிடித்தார். வெற்றியும் பெற்றார்.

உற்பத்தியாகும் பொருள்களின் தரத்தைக் கூட்டவும், நஷ்டம் குறையவுமே குளிர்பத இயந்திரத்தை அவர் தயாரிக்கத் தொடங்கினார். மனிதன் குளிர்ச்சியான சூழ்நிலையிலும், வெப்பமான சூழ்நிலையிலும் பயன்படுத்தும் விதமாக இம்முறை பரவலாகப் பரவியது.

இப்படி தொழில் மேதையாக இருந்த கேரியர், அமெரிக்க குடும்பம் ஒன்றில் இன்றுதான் (26-11-1876) பிறந்தார்.

நவம்பர்-27 ரோல்ஸ்-ராய்ஸ்

உலகிலேயே புகழ்பெற்ற ரோல்ஸ் ராய்ஸ் காரைத் தயாரித்தவர், ஹென்றி ராய்ஸ்தான். இவர் பள்ளிப்படிப்பை 14-வயதில் முடித்து, தன் கிராமத்தின் அருகிலிருந்த பீட்டர் பரோ நகருக்குச் சென்று, அங்கே இரயில்வே பட்டறை ஒன்றில் உதவியாளராகச் சேர்ந்து பொறியியல் தொடர்பான தொழிலைச் கற்றார். பிறகு கார்களைப் பற்றிய நுட்பத் தொழிலைத் தான் அடுத்தடுத்துக் கற்றுக் கொண்டார்.

இறுதியாகத் தன்னுடைய 43-வது வயதில் சிலிண்டர்களுடன் கூடிய பத்து குதிரை சக்தி கொண்ட மோட்டார் வாகனத்தைத் தயாரித்தார். 29-ஆண்டுகள் பல்வேறு இடங்களில் பொறியியல் நுட்பத்தைப் பற்றி நன்கு கற்றுக்கொண்ட பிறகே அவர் தயாரிப்பில் இறங்கியதால் அவருடைய கார்களில் மென்மையான ஓட்டம், நீடித்த உழைப்பு, காரின் வடிவமைப்பு, பொறியியல் நுட்பம், தரம் என அனைத்தும் மிகச் சிறப்பாக இருந்தன. மென்மையான ஓட்டம், நீடித்த உழைப்பு ஆகிய இரண்டு காரணங்களாலேயே அவருடைய கார்கள் அதிக அளவில் விற்பனையாகி, அவருக்குப் புகழும் சேர்ந்தது.

இவரின் திறமையை உணர்ந்த சி.எஸ்.ரோல்ஸ் என்ற கார் வியாபாரி ராய்ஸை சந்தித்தார். இருவரும் சேர்ந்து கார் தயாரிப்பைப் பெரிய அளவில் உற்பத்தி செய்யலாம் என்னும் விருப்பத்தைத் தெரிவித்தார். ராய்ஸும் ஏற்றுக் கொண்டார். இருவரும் சேர்ந்து 'ரோல்ஸ் - ராய்ஸ் லிமிடெட்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார்கள்.

இன்று ரோல்ஸ்-ராய்ஸ் கம்பெனியின் தயாரிப்புகளான என்ஜின்கள் ராக்கெட், எல்லாவகை விமானங்கள் முதலியவற்றிலும் பொருத்தப்படுகின்றன என்பது கூடுதலான செய்தியாகும். ராய்ஸ் இறுதி வரை புதிது புதிதாகக் கற்றுக் கொண்டே இருந்ததால்தான் அவரால் சாதனை சரித்திரம் படைக்க முடிந்தது.

இந்த தொழில் மேதை இங்கிலாந்தில் - அல்வால்டன் எனும் கிராமத்தில் இன்றுதான் (27-11-1868) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் வரலாற்றாசிரியர் சார்லஸ் ஏ.பியர்டும் இன்றுதான் (27-11-1874) பிறந்தார்.

❑

நவம்பர்-28 திறனாய்வு மேதை

புரூக்ஸ் அக்சின்சன் - இவர் சிறந்த நாடகத் திறனாய் வாளர்.

1925-1960 வரை 'நியூயார்க் டைம்ஸ்' என்ற பத்திரிகையில் விமர்சனங்களை எழுதும் வேலையில் இருந்தார்.

இவரது இளமை காலத்தில் இவரே ஒரு தினசரி இதழை சொந்தமாக நடத்தி வந்திருக்கிறார்.

இவர் ஹார்டுவேர்டு பல்கலைக் கழகத்தில் படிக்கும் போதே, எதிர் காலத்தில் பத்திரிகையாளனாக வரவேண்டும் என்று எண்ணி இருந்தார்.

அதனால், படித்து முடித்ததும் ஸ்பிரிங்பீல்டு என்ற தின இதழ் ஒன்றில் பணியில் சேர்ந்து கொண்டார்.

இரண்டாவது உலகப் போரின்போது, போர் நடக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று செய்தி சேகரித்து வந்து வெளியிட்டிருக்கிறார்.

அதிக அளவில் இவர் பத்திரிகைகளில் நாடக திறனாய்வு களை எழுதி வந்ததால், காலப்போக்கில் இவருக்கே நாடகம் எழுத வேண்டும் என்ற எண்ணம் வந்திருக்கிறது. அதன் படியே எல்லாத் துறையிலும் நாடகங்களை எழுதி, இவரே மேடை ஏற்றியிருக்கிறார்.

அந்நாட்டு திறனாய்வாளர்கள் எல்லோருமே ஒட்டு மொத்தமாக இவரையே சிறந்த திறனாய்வாளர் என்று புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்.

இவரது எழுத்தாற்றலைக் கண்டு இவருக்கு அரசே புலிட்சர் விருதைத் தந்து சிறப்பித்திருக்கிறது.

இந்த திறனாய்வு மேதை மெல்ரோஸ் என்ற இடத்தில் இன்றுதான் (28.11.1757) பிறந்தார்.

❑

கவிஞரும், ஓவியருமான வில்லியம் பிளேக் என்பவரும் இன்றுதான் (28.11.1757) பிறந்தார்.

❑

நவம்பர்-29 இசையும் பசியும்

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் நல்ல கலைஞர் மட்டுமல்ல, ஈர இதயம் கொண்ட உயர்ந்த மனிதரும்கூட என்பதை பார் அறியும்.

ஒரு நாள் கலைவாணரைக் காண ஒருவர் வந்தார். வந்தவர், "ஐயா, மூன்று வேளை சாப்பாடு போட்டு, மாதம் ஐந்து ரூபாய் கொடுங்க. நீங்கள் வேண்டும் பொழுதெல்லாம் நாதஸ்வரம் நான் வாசிப்பேன்..." என்றார்.

"அப்படியா! சரி, இப்போதே வாசி!" என்றார், கலைவாணர். அவரும் நாதஸ்வரத்தை எடுத்து வாசித்தார். வாசிப்பில் சுருதி, தாளம், ராகம் எதுவுமே இலக்கணப்படி அமையவில்லை. நாதஸ்வர இசையைக் கேட்டுக் கொண்டு இருந்த கலைவாணர் அதை நிறுத்தச் சொல்லிவிட்டு, நூறு ரூபாய் கொடுத்தார். பணத்தைப் பெற்றுக் கொண்ட நாதஸ்வரக்காரர் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றார்.

அவர் திகைப்பைக் கண்ட கலைவாணர், "நீர் வாசித்ததை மிகவும் ரசித்து அனுபவித்தேன். நீர் நாதஸ்வரம் வாசிக்க வில்லை; உம்முடைய வறுமைநிலையை நாதஸ்வரத்தில் வாசித்துக் காட்டினாய்; அதற்காகவே உனக்கு நூறு ரூபாய் கொடுத்தேன். எடுத்துக்கொள்; நன்றாகக் கற்றுக்கொண்டு பிறகு வா. இப்போது சாப்பிட்டுவிட்டுப் போ" என்றார், கலைவாணர்.

திரையுலகில் பல திருப்புமுனைகளை செய்த என்.எஸ்.கே.நாகர்கோவிலில் இன்றுதான் **(29-11-1908)** பிறந்தார்.

❑

குழந்தைகளுக்கான பல சிறுகதைகளையும், நாவல் களையும் எழுதிப் புகழ் பெற்ற அமெரிக்க எழுத்தாளரான லூசியா எம்.ஆல்காட் என்ற பெண்மணி இன்றுதான் **(29-11-1832)** பிறந்தார்.

❑

சி.எஸ்.லெவிஸ் என்ற ஆங்கில எழுத்தாளர் இன்று தான் **(29-11-1898)** பிறந்தார்.

❑

நவம்பர்-30 முன்பே தெரியும்

அமெரிக்காவின் புகழ்பெற்ற எழுத்தாளரான மார்க்டுவைன் எழுதத் தொடங்கிய காலத்தில் பத்திரிகை ஒன்றில் ஆறுமாத காலம் ஆசிரியர் குழுவில் பணியாற்றினார்.

ஒரு நாள் ஆசிரியர் அவரை அழைத்துச் சொன்னார்;

''இனி நீ வேலைக்கு வரத் தேவையில்லை'' என்று.

''ஏன்?'' என்றார், டுவைன்.

''நீ ஒரு சோம்பேறி, ஒன்றுக்கும் உதவாதவன்'' என்றார், ஆசிரியர்.

''நீங்கள் ஒரு மகா மடையர்...'' என்று டுவைன் சொன்னதைக் கேட்டுத் திகைத்தார், ஆசிரியர்.

''ஆறு மாதம் ஆகியிருக்கிறதே உங்களுக்கு, நான் சோம்பேறி, உதவாக்கரை என்று தெரிந்து கொள்ள. எனக்கு அது அப்போதே தெரியும்...'' என்று கூறி புறப்பட்டு விட்டார், டுவைன்.

பிற்காலத்தில் அழியாப் புகழ்பெற்ற நாவல்களைத் தந்த இந்த எழுத்தாளர் இன்றுதான் *(30-11-1835)* பிறந்தார்.

❑

உலகப்புகழ்பெற்ற பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சிலும் இன்றுதான் *(30.11.1835)* பிறந்தார்.

❑

ஜெர்மானிய வரலாற்றாசிரியர் தியோடர் மாம்சென்னும் இன்றுதான் *(30.11.1817)* பிறந்தார்.

❑

கலிவரின் பயணம் என்னும் புகழ்மிக்க கதையை எழுதிய ஜோனாதன் விஃப்ட்டும் இன்றுதான் *(30.11.1667)* பிறந்தார்.

❑

சாமி சிதம்பரனார்

பைந்தமிழ்ச் செல்வர், சீர்திருத்தச் செம்மல், பெரும் புலவர் என்றெல்லாம் போற்றப் படுபவர் சாமி-சிதம்பரனார். பெரியார் இயக்கத்தின் வழி நின்று அரும்பெரும் பணியாற்றியவர். பொது மக்களுக்கு பயன்படாமல், புலவர்களுக்கு மட்டுமே பயன்பட்டு வந்த பண்டைத் தமிழ் இலக்கியங் களை எளிமைப்படுத்தி அனைவருக்கும் புரியும் வண்ணம் எளிய உரைகளை எழுதினார். மாணவர்களுக்கு சுயமரியாதை உணர்வை சிறுவயதிலேயே கற்பித்தவர். சாதி ஒழிப்பு, தீண்டாமை நீக்கம், விதவைத் திருமணம் போன்றவற்றில் அதிக ஈடுபாடு கொண்டவர்.

அந்த காலத்திலேயே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட இலக்கியங்களைப் படைத்தவர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பண்டிதர் பட்டம் பெற்றவர். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் ஓராண்டு ஆசிரியராகவும், ஜில்லா போர்டு உயர்தரக் கல்லூரியில் ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். அக்காலத்தில் பள்ளி மாணவர்களுக்கு பல பாட நூல்கள் எழுதியவர். 1924 முதல் 1940 வரை பள்ளி ஆசிரியராக விளங்கிய இவர், பல பத்திரிகைகளில் பணியாற்றினார்.

சாமி சிதம்பரனார் தமிழ் மீது அதிக பற்றுடையவர். தமிழனுக்கு தமிழ் மொழியினிடத்து பற்று இருக்க வேண்டும். ஆனால் மொழிப்பற்று மொழி வெறியாக மாறிவிட அனுமதிக்கக் கூடாது என்பார். பல இலக்கிய நூல்களை பாமரரும் படிக்கும் அளவில் எளிமையாக எழுதினார். இவர் உரையெழுதி வடிவமைத்துக் கொடுத்த சாதனையை வேறெவரும் செய்ததில்லை என்பதே இவர் பெருமைக்கு சான்று.

இந்த இனிய தமிழ் மேதை தஞ்சை - சிறுகடகம் என்னும் சிற்றூரில் இன்றுதான் (01-12-1900) பிறந்தார்.

❑

டிசம்பர்-2 காகிதம்

நிக்கலஸ் லூயி ராபர்ட், இள்மையில் துடுக்காகவும், முன் கோபம் கொண்டவராகவும், துணிச்சல்காரராகவும் இருந்தார். பிரிட்டீஷாருக்கு எதிராக அமெரிக்கர் நடத்திய விடுதலைப் போரில் ஈடுபட்டு போர் புரிந்து தமது திறமையைக் காண்பித்தார்.

போர் முடிந்த பின், பத்து ஆண்டுகள் செயிண்ட் லீஜர் டிடோ என்னும் நூற்பதிப்பு கழகத்தில் ஒரு சாதாரண குமாஸ்தா வாகத்தான் காலம் கழித்து வந்தார். அவரது கடினமான உழைப்பும், புதியன கண்டறிவதில் ஆற்றல் படைத்தவராக இருந்ததாலும், அவருக்கு சிறிது புகழ் இருந்தது. பிறகு எஸ்ஸோன்ஸ் என்னும் இடத்திலுள்ள காகிதச் சாலையின் தொழிலாளிகளின் நிர்வாகி பதவிக்கு மாற்றப்பட்டார். அங்கேதான் பிற்காலத்தில் காகிதத் தொழிலின் தந்தையாக ஆவதற்கு வேண்டிய வாய்ப்பு ஏற்பட்டது. நானூறு ஆண்டுகளாக எஸ்ஸோன்ஸ் என்னும் ஊர் காகிதம் செய்வதில் முக்கிய இடமாக இருந்தது.

காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன்னால் மக்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதற்குக் குகைகளின் சுவர்களில் கோணல் மாணல்களாக அடையாளங்களைப் பொறித்து வைத்தார்கள். அதற்குப்பின் இலைகள், மரப்பட்டைகள், மரக்கட்டைகள் முதலிய இயற்கைப் பொருள்களையும், கையால் செய்த உலோகம், செங்கல் முதலியவைகளையும் படம் வரைவதற்கு பயன்படுத்தினார்கள்.

சீனாவில் சாய்லூன் என்னும் அறிஞர் கி.பி.105-ஆம் ஆண்டில் முதன்முதலாக உண்மையான காகிதம் கண்டு பிடித்தார். சீனக் காகிதம் மேற்கு நாடுகளுக்கு வந்து சேர்ந்தது. காகிதம் செய்யும் முறையை கி.பி. 75-ஆம் ஆண்டு வரை சீனாவுக்கு வெளியே யாரும் கற்கவில்லை.

எஸ்ஸோன்ஸ் என்னும் இடத்தில் ராபர்ட் காகிதம் செய்வதை முதன்முதலாகக் கண்டார். அக்காலத்தில் காகிதம் கையால் செய்யப்பட்டது. ராபர்ட் தமது 30-ஆவது வயதில் காகிதம் செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். அவரின் கண்டுபிடிப்பு உலகில் இன்று எந்த அளவில் காகிதம் பல்வேறு நிலையில் பரிணாம வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை நாம் அறிய முடிகிறது.

இந்த காகிதத் தொழிலின் தந்தை நிக்கலஸ் லூயி ராபர்ட், பாரிஸ் நகரில் இன்றுதான் **(02.12.1761)** பிறந்தார்.

டிசம்பர்-3 என் வரலாறு

டாக்டர் இராசேந்திர பிரசாத், தமது சொந்த ஊரில் உயர்நிலைக் கல்வியை முடித்து, கொல்கத்தாவில் கல்லூரிக் கல்வியைத் தொடர்ந்தார். முதுகலைத் தேர்வில் மாநிலத்திலேயே (எம்.ஏ.) முதல் மாணவராகத் தேர்வு பெற்றார். ஓராண்டு ஆசிரியர் பணிக்குப் பின்னர், சட்டம் பயின்று *1911*-ஆம் ஆண்டில் வழக்குரைஞர் பணியைத் தொடர்ந்தார்.

ஆங்கிலம், இந்தி, பாரசீகம், வடமொழி ஆகியவற்றில் புலமை பெற்றவராக இருந்தார். பீகார் பல்கலைக் கழகம் பீகார் வித்யாபீடம், சதாகத் ஆசிரமம் ஆகியவை தோன்ற காரணமாக இருந்தவர் இவர்.

1905-ஆம் ஆண்டில் ஏற்பட்ட வங்கப் பிரிவினை இவரது வாழ்க்கைப் போக்கை மாற்றி அமைத்தது எனலாம். *1906*-ஆம் ஆண்டு அகில இந்தியக் காங்கிரசுக் கட்சியில் உறுப்பினர் ஆனார். *1916*-இல் இலட்சுமணபுரி காங்கிரஸ் மாநாட்டின் போது காந்தியின் தொடர்பு ஏற்பட்டது.

1946-இல் டெல்லியில் அமைந்த இடைக்கால அரசில் உணவு - விவசாயத்துறை அமைச்சரானார். விடுதலை பெற்ற இந்திய நாட்டின் முதல் குடியரசுத் தலைவராகத் *(1950)* தேர்ந்தெடுக்கப்பட்டார். *1962*-ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து குடியரசுத் தலைவராக இருந்த சிறப்புக்கும் உரியவர் இவரே. உப்பு சத்தியாக் கிரகத்தின்போது, முதன் முதலாக சிறை புகுந்தவர்.

இவர் எழுதிய பல நூல்களுள் 'சம்பரான் சத்தியாக் கிரகம்', 'என் வரலாறு' ஆகிய இரண்டும் சிறப்புமிக்கவை.

வாழ்நாள் முழுதும் நாட்டுக்கும் மக்களுக்கும் தொண்டாற்றிய இராஜேந்திர பிரசாத் ஒரு நேர்மையான அரசியல்வாதி, பண்பாடு மிக்க குடியரசுத் தலைவர். அனைத்துக்கும் மேலாக மாந்த நேயமிக்கவர்.

இந்த மாபெரும் தலைவர், பீகார் மாநிலம் சாரன் மாவட்டத்தில் இருக்கும் சூராதேவி என்னும் ஊரில் இன்றுதான் *(03.12.1884)* பிறந்தார்.

❑

டிசம்பர்-4 வெப்பமானது...

அறிவியலாளர் கே.எஸ்.கிருஷ்ணன், கம்பிகள், சுருள் கம்பிகள் வெற்றிடம் போன்றவற்றில் வெப்பமானது எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் -

பிளாஸ்டிக் பொருட்கள் உருவாகக் காரணமாக இருக்கும் சிந்தெடிக் இயற்பியலின் அடிப்படை விதிகளைக் கூறியவரும் இவரே.

பள்ளிக் கல்வியை சொந்த ஊரிலும், பட்டப்படிப்பை சென்னை கிறித்துவக் கல்லூரியிலும் பயின்று - அதே கல்லூரியில் வேதியியல் மற்றும் இயற்பியல் செய்முறை ஆசிரியராக பணியில் சேர்ந்தார். பிறகு மேல் படிப்பிற்காக கொல்கத்தா சென்ற இவர், அங்கு சர்.சி.வி.இராமனுக்குத் துணையாக இருந்து செயல்பட்டார்.

டாக்கா பல்கலைக் கழகத்திலும், அலகாபாத் பல்கலைக் கழகத்திலும் பேராசிரியராகப் பணியேற்றார். அங்கு தம் ஆய்வுகளையும் மேற்கொண்டார்.

படிக இயலையும், அவற்றின் காந்தத் தன்மைப் பற்றி ஆய்வுகள் மேற்கொண்டு முடிவுகள் அறிவித்தார்.

அணுக்களின் அமைப்பு முறையை ஒட்டியே அழகான படிகங்களின் அமைப்பும் அமைகிறது என்று கண்டறிந்தார்.

பொருட்களின் அணுவின் மூலக்கூறுகள் அமைந்த விதத்தையும், அவைகளுக்கிடையே உள்ள விசைகளைப் பற்றியும் கண்டறிந்தார்.

இப்படி பல்வேறு கண்டுபிடிப்புகளின் சொந்தக்காரரான இம்மேதை நெல்லை - திருவில்லிபுத்தூருக்கு அருகிலுள்ள வாதிராப் கிராமத்தில் இன்றுதான் (04-12-1898) பிறந்தார்.

❑

போல்வால்ட் விளையாட்டில் 32-க்கும் மேற்பட்ட உலக சாதனைகள் புரிந்துள்ள ரஷ்யாவின் ஸெர்ஜி பப்கா என்ற வீரரும் இன்றுதான் (04-12-1963) பிறந்தார்.

❑

டிசம்பர்-5 டிஸ்னிலேண்டு

35-முறை ஆஸ்கார் விருதுகளை வென்ற ஒரே மனிதர் அமெரிக்க நாட்டுக் கார்டூன் பட மன்னன் வால்ட் டிஸ்னி தான். இன்று சிறியோர் முதல் பெரியோர் வரை அறிமுகமான பெயரும் இவருடையதுதான்.

இவர் முதலில் விளம்பர ஓவியராகத்தான் தன் வாழ்வைத் தொடங்கினார். புதுமையாக எதையாவது செய்ய வேண்டும் என்று விரும்பியதால் கார்ட்டூன் படங்கள் பக்கம் தன் எண்ணத்தைப் பதித்து செயல்படத் தொடங்கினார்.

இதில் ‘மிக்கி மௌஸ்’ என்ற படைப்பு உலகில் அனைவரையும் ஈர்த்தது. அடுத்து ‘டொனால்டு டக்கையும்,’ ‘புளூடோ வையும்’ உருவாக்கினார்.

இவரின் சாதனைக்கு ‘ஸ்நோ ஒயிட்டும் ஏழு குள்ளர் களும்’ கதையை முழு நீளக் கார்ட்டூன் படமாக எடுத்ததைக் கூறலாம்.

இயற்கையையும், மனிதர்களையும் யாவரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எடுத்த ‘லிவிங் டெசர்ட்டும், ‘எஸ்கிமோக்களின் வாழ்க்கை பற்றிய படமும் குறிப்பிட்டுச் சொல்லலாம். நகைச்சுவைப் படமான ‘ஆப் செண்ட் மைண்டட் புரொபஸரும்’ அவரது வெற்றிப்படமே.

கார்டூன் படம் என்றாலே டிஸ்னியின் நினைவு மக்கள் நினைவில் நிலைத்து நிற்கும் வகையில் ‘டிஸ்னி லாண்ட்’ என்ற அற்புதமான உலகத்தையே படைத்துவிட்டுச் சென்றிருக் கிறார்.

ஏழைக்குடும்பத்தில் பிறந்த இவர் கோடீஸ்வரராக ஆன பின்பும் மிகவும் எளிமையோடு தன் வாழ்வை அமைத்துக் கொண்ட அற்புத மனிதர்.

‘ஸ்டீம்போட் வில்லி’ என்பதுதான் மிக்கிமௌஸ் தோன்றிய முதல் படைப்பு. இது வெளிப்பட்டபோது டிஸ்னியின் வயது 27.

இந்த அருமையான மனிதர் அமெரிக்காவில் இன்றுதான் (05-12-1905) பிறந்தார்.

❑

டிசம்பர்-6 ருக்மணி லட்சுமிபதி

நம் இந்திய நாட்டின் விடுதலைப் போரில் எண்ணற்ற வீராங்கனைகள், தங்கள் உயிரை துச்சமென மதித்து களம் இறங்கினார்கள.

வேலு நாச்சியார், காமா அம்மையார், தில்லையாடி வள்ளியம்மை, வீரவாஞ்சி பொன்னம்மாள், அன்னை கஸ்தூரிபாய், அன்னிபெசன்ட் அம்மையார், நாகம்மையார், கண்ணம்மாள், கவிக்குயில் சரோஜினியார், டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார், ஜான்சிராணி இலட்சுமிபாய் இப்படி இன்னும் நீளுகின்ற விடுதலைப்போர் பட்டியலில் ருக்மணி லட்சுமிபதியையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

பிரெஞ்சு, இலத்தின் போன்ற மொழிகளில் புலமை பெற்றவர், ருக்மணி. தனது கணவர் அச்சந்தா லட்சுமிபதியால் அரசியலில் ருக்மணிக்கு ஈடுபாடு ஏற்பட்டது. முழுமூச்சாக ருக்மணி தேவியார் விடுதலைப் போரில் பங்கு பெற்றதால், 1923-ஆம் ஆண்டு காங்கிரசில் உறுப்பினராகச் சேர்ந்தார். 1931-இல் வேதாரண்யத்தில் உப்புச் சத்தியாக் கிரகத்தில் ஈடுபட்டதற்காக ஓராண்டு காலம் சிறைவாசம் சென்றார். ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு, ஆறு மாதகாலமும் சிறை தண்டனை பெற்றார்.

1946-ஆம் ஆண்டு பிரகாசம் தலைமையில் அமைச்சரவை அமைத்தபோது, இவர் சுகாதார அமைச்சராகப் பணிபுரிந்தார். திருவல்லிக்கேணி பெண்களுக்கான 'கோஷா' மருத்துவ மனையைத் தொடங்குவதற்குக் காரணமாக இருந்த டி.ராமாராவ் பரம்பரையில் வந்தவர்தான் ருக்மணி லட்சுமிபதி.

இந்த விடுதலை வீராங்கனை இன்றுதான் (06-12-1892) பிறந்தார்.

❑

இந்தியாவில் பணிபுரிந்த வாரன் ஹேஸ்டிங்ஸும் இன்றுதான் (06-12-1732) பிறந்தார்.

❑

அமெரிக்காவின் புகழ்பெற்ற ஜாஸ்பியானிஸ்ட், டான்டேவ் புரூபெக்கும் இன்றுதான் (06-12-1920) பிறந்தார்.

❑

டிசம்பர்-7 மனிதரும் மிருகமும்

கணேஷ் சங்கர் வித்யார்த்தியின் குடும்பம் ஏழ்மை யானது. ஆகவே, உயர் கல்வி கற்க இயலவில்லை. பல்வேறு இடங்களில் பலதரப்பட்ட வேலைகளைச் செய்தார். இறுதி யாக 'பிரதாப்' என்ற பத்திரிகையைத் தொடங்கினார்.

அன்னியரை எதிர்த்து விடுதலைப் போராட்டம் குறித்து அதில் எழுதினார். அவர் எழுதிய சில கட்டுரைகள் குவாலியர் மன்னருக்குப் பிடிக்கவில்லை. அதைப் பற்றி அவர் கவலைப் படவில்லை.

1920-இல் ஒத்துழையாமை இயக்கம் தோன்றியது. கணேஷ் அதனை ஆதரித்து பத்திரிகையில் எழுதினார். அதற்குப் பரிசாக அன்றைய ஆட்சியினர் ஒன்றரை ஆண்டு சிறை தண்டனை வழங்கியது.

விடுதலை பெற்ற சில மாதங்களுக்குள் மீண்டும் சிறை வாசம். இந்தச் சிறைவாசம் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்றுக்காகக் கிடைத்த பரிசு.

சிறையிலிருந்து வந்தவர் 'நர்வாலா சேவாக் கிராமம்' என்ற ஆசிரமம் ஒன்றை அமைத்தார். விடுதலைப் போராட்ட சத்தியாக்கிரகிகளுக்குப் பயிற்சி அளிக்கும் மையமாக அது விளங்கியது.

அங்கு பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான சத்தியாக்கிரகிகள் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டனர்.

நகரில் வகுப்புக் கலவரம் நடந்தபோது, அமைதிப்படுத்தச் சென்று, 'எனது சாவில்தான் துவேஷம் ஒழிந்து, அமைதி பிறக்கும் என்றால், நான் சாகத்தயார்' என்று கைகூப்பி நின்றபோது, அவரது உடலில் ஒரு டஜன் கட்டாரிகள் பாய்ந்தன. கணேஷ் உயிரைத் துறந்தார்.

செத்து விழுந்த பின்பும் அவரது சடலத்தைச் சரமாரியாக அடித்தனர் வெறியர்.

இந்த வீரமகன் இன்றுதான் (07.12.1890) பிறந்தார்.

டிசம்பர்-8 நாம் இந்த பூமியை நேசிக்கிறோம்

பியார்ன்ஸ்டர்ன் பியார்ன்ஸன். இளம் வயதிலேயே கவிதை எழுதும் ஆற்றல் பெற்றிருந்தார். அத்தோடு கையெழுத்துப் பிரதியில் வெளியான ஒரு செய்தித்தாளின் ஆசிரியர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு சிறப்பித்தார். அந்த சிறுவயதிலேயே அரசியல் கட்டுரைகளையும் எழுதி வந்தார். 17-வது வயதில் ஆஸ்லோ பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். பட்டப்படிப்பை முடிக்க இயலாத நிலையில் இழுத்துவிட்டது அரசியல். அரசியலில் ஒரு காலையும், இலக்கியம் நாடகம் என்று காலையும் வைத்துவிட்டார். இரண்டு ஆண்டுகளில் நாடகத்துறையில் பழுத்த அறிவைப் பெற்றதோடு, நாடகத் தொடர்பான விமர்சனக் கட்டுரை களையும் எழுதி வந்தார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் 'இல்லஸ்ட்ரேட்டட் ஃபோக் பிளாட்' என்ற பிரபல இதழின் ஆசிரியர் பொறுப்பையும் ஏற்றார். சில ஆண்டுகளிலேயே அவர் புகழ் ஓங்கியது.

பியார்ன்ஸன் நாடகக் குழுவின் இயக்குநராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அதே நேரத்தில் நாடகம் எழுதுவது, நாவல் எழுதுவது, கவிதை புனைவது என்று இலக்கியப் பணிகளையும் செய்து வந்தார்... அப்போது எழுதிய கவிதை ஒன்று உலகப் புகழ் பெற்றது. 'ஆம், நாம் இந்த பூமியை நேசிக்கிறோம்' என்ற தலைப்பில் 1859-இல் அவர் எழுதிய இக்கவிதை பிற்காலத்தில் தேசிக கீதமாகவே நாடு முழுதும் ஒலித்தது. இவர் நாவல்களை பாடல்வரிகளிலேயே எழுதினார். கவிதை, நாவல் என்று எழுதி வந்தாலும் நாடகம் படைப்பதிலும் முன் நின்றார். சமூக நாவல்களோடு, வரலாற்று நாவல்களையும் எழுதி வந்தார்.

'நமது சக்திக்கு அப்பால் முதல் பாகம்' என்ற நாடகத்தில் வரும் பாதிரியொருவர் மக்களின் நோய்களைத் தீர்க்கவல்லவர் எனப் பேசப்படுகிறார். ஆனால் அதே பாதிரியார் நோய் வந்து தவிக்கும்போது அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லையே என்பதை விளக்கிடும் அற்புத நாடகம் அது. இந்த நாடகம் நார்வேயில் மட்டுமின்றி ஐரோப்பா முழுதுமே நடத்தப்பட்டு, புகழ் பெற்றது.

இந்த இலக்கிய மேதை நோபல் பரிசையும் 1903-இல் பெற்றார். இவர் வடக்கு நார்வேயிலுள்ள வைனி என்ற சிற்றூரில் இன்றுதான் (08-12-1832) பிறந்தார்.

❑

டிசம்பர்-9 விண்ணக நீக்கம்

ஆங்கிலம் இருக்கும் வரை கவிஞர் மில்டனின் கவிதையுமிருக்கும். காரணம் ஆங்கிலம் கற்ற அனைவருக்கும் அவரின் கவிதைகள் வேதமாகும்; விளக்கமாகும் என்பதால் தான்.

மில்டன் செல்வச் செழிபான குடும்பத்தில் பிறந்தார். தக்க வயதில் இவர் தந்தை இலண்டனிலுள்ள புகழ்பெற்ற செயின்ட் பால்ஸ் பள்ளியில் சேர்த்தார். மில்டனும் நன்கு கற்றார். பள்ளிக் கல்வி முடிந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கே முதன்மையாகத் தேறினார். எம்.ஏ.படிக்கும் பொழுதுதான் இவருக்கு கவிதையில் நாட்டம் ஏற்பட்டது.

பட்டப் படிப்பை முடித்ததும், பல்வேறு அறிவு நூல் களைக் கற்றார். ஓராண்டு இரண்டாண்டு அல்ல. ஐந்து ஆண்டுகள் தனிமையில் இருந்து கற்றார்.

இந்த வேளையில் தான் மில்டன் கவிதை எழுதினால் என்ன என்று சிந்தித்தார். இந்த நிலையில் அவரின் தாய் இறந்துபோக - துயரம் தாழாது வெளிநாடு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு, துயரை மறந்தார். மில்டன் அரசியலில் பங்குகொண்டாலும், அவர் மனம் காவியம் ஒன்று படைக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தது.

தாயையும், தந்தையையும் இழந்தார். கட்டிய மனைவியரையும் இழந்தார். துன்பக் கடலில் மிதந்தார். இந்த நிலையில் கண் பார்வையும் குறையத் தொடங்கியது. இப்போது அவருக்கு எந்த வேலை செய்வது என்றாலும் துணை தேவைப்பட்டது.

அதனால் மீண்டும் திருமணம் செய்து கொண்டார். துணையோடு கவிதைகளை எழுதத் தொடங்கினார். பகல் முழுதும் நூல்களை படிக்கச் சொல்லி கேட்பார். இரவில் சிந்திப்பார்; சிந்தித்ததை கவிதைகளாக காலையில் சொல்ல பிறர் எழுதுவார்கள்.

இந்த நிலையில் மில்டன் எழுதிய காவியம்தான் 'விண்ணக நீக்கம்' உலகமகா காவியமாக இன்றும் போற்றப்படுகிறது. 'விண்ணக மீட்பு' என்ற காவியமும் எழுதினார்.

கண்ணொளி இழந்தும் கவிதை மழை பொழிந்த இம்மாக் கவிஞன் இலண்டனில் இன்றுதான் (09-12-1608) பிறந்தார். □

டிசம்பர்-10 உடம்பெல்லாம் மூளை

மற்ற இந்திய தலைவருக்குக் கிடைக்காத பெருமை நம் தமிழ்நாட்டு ராஜாஜிக்கு உண்டு. சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் பதவி வகித்த ஒரே இந்திய தலைவர் என்பதே அது! பேரரசருக்கு ஈடானது அந்தப்பதவி.

சென்னை மாநிலக் கல்லூரி - பெங்களூர் ஆகிய இடங்களில் படித்த ராஜாஜி, சட்டப்படிப்பையும் முடித்து வழக்கறிஞரானார். இளம் வயதிலேயே அறிவுக் கூர்மைமிக்க ராஜாஜி வழக்கறிஞர் தொழிலில் யாரிடமும் ஜூனியராக பணிபுரியாதவர். பிறர் முயன்று படித்து குறிப்பெடுத்து வைப்பதைப் படித்தே வகுப்புகளில் தேறும் அளவுக்கு திறமைசாலி. தத்துவ நூல்கள், பக்தி இலக்கியங்கள் ஆகிய நூல்கள் அனைத்தையும் படித்து அறிவை வளர்த்துக் கொண்டதால், இவரை 'மூதறிஞர்' என்று அறிஞர்கள் பாராட்டினார்கள். வியாசர் விருந்து, சக்ரவர்த்தித் திருமகன், கண்ணன் காட்டிய வழி, பக்தி நெறி, சிறையில் தவம் போன்ற புகழ்மிக்க நூல்களை எழுதியுள்ளார்.

தாதாபாய் நவ்ரோஜி, டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையார், சரோஜினி நாயுடு, காந்தியடிகள் ஆகியோரின் பேச்சும், செயலும் ராஜாஜியை தீவிர அரசியலுக்குள் இழுத்தது. கிரிமினல் வழக்கறிஞர் தேசத் தொண்டரானார். 1919-இல் ரவுலட் சட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்தார். அது முதல் இந்தியாவின் விடுதலைக்காக இறுதிவரை நாட்டிற்காக உழைத்தார். பலமுறை சிறை சென்றார்.

அணு ஆற்றலை தீய செயலுக்கு பயன்படுத்துவதை எதிர்க்கும் குழுவில் பங்கு பெற்று, அமெரிக்காவிற்குச் சென்று கென்னடியை சந்தித்த போது ராஜாஜிக்கு வயது 85. பாரத ரத்னா விருதும் பெற்றார்.

எல்லோருக்கும் தலையில்தான் மூளை. ராஜாஜிக்கு உடம்பெல்லாம் மூளை என்று இவரது மதிநுட்பத்தை பிறர் பாராட்டும் அளவுக்கு தேர்ந்த ராஜதந்திரியாக விளங்கினார்.

இந்த ராஜதந்திரி கிருஷ்ணகிரி தொரப்பள்ளி என்ற கிராமத்தில் இன்றுதான் (10-12-1879) பிறந்தார்.

❑

அமெரிக்க நாட்டுக் கவிஞரான எமிலி டிக்கன்ஸன் என்பவரும் இன்றுதான் (10-12-1830) பிறந்தார்.

❑

டிசம்பர்-11 இளைத்தல் நிகழ்ச்சி

கவிபாரதி ஒருமுறை தையற்காரரை வீட்டுக்கு அழைத்து வந்து, தாம் வாங்கிய துணிகளைக் கொடுத்து, அளவு எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

"தலையில் வைக்கப்படும் குல்லா கிரீடம் போல் இருக்க வேண்டும். நீயே 'டிஸைன்' கண்டுபிடித்துத் தை... கூலியைப் பற்றி அக்கறை இல்லை. அழகாய் பொருத்தமாய் இருக்க வேண்டும்" என்று சொல்லி அனுப்பினார், பாரதியார்.

நான்கு நாள்களில் தைத்துக் கொண்டு வருவதாகச் சொல்லிச் சென்றார், தையற்காரர். அவர் ஓர் அப்பாவி. வேலையிலும் அத்தனை திறமைசாலி அல்லர். கொடுத்த கூலியை வாங்கிக் கொள்வார். பயந்த சுபாவம் உள்ளவர் என்பதால் அவனிடம் தைக்கக் கொடுத்து வந்தார். நான்கு நாள்களில் தைத்த துணிகள் வந்தன.

குல்லாய் உயரமாகக் கோமாளி அணியும் குல்லாய் மாதிரி இருந்தது. எவர் மனமும் புண்படப் பேசாதவர் பாரதி. அவன் கேட்ட கூலியைக் கொடுத்து அனுப்பிவிட்டுத் தம் மனைவி செல்லம்மாவிடம், "செல்லம்மா, இந்தத் தையற்காரருக்குத் தான் என்மேல் எவ்வளவு அன்பு! புதிய ஆத்திசூடியில் நான் பாடியபடி, 'இளைத்தல் இகழ்ச்சி' என்பதை நானே கடைபிடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார் போலும். அதனால் நான் பருமனாக, தொந்தி தொப்பையோடு இருந்தால் எப்படி இருப்பேன் என்ற கற்பனையோடு தைத்திருக்கிறார்" என்று கூறி சிரித்தாராம்.

முறுக்கு மீசையும், முண்டாசு கவிஞருமான பாரதியார் இன்றுதான் **(11-12-1882)** பிறந்தார்.

❑

பாக்டீரியாக்களைப் பற்றி ஆராய்ந்த ஜெர்மானிய விஞ்ஞானி ராபர்ட் கோச் என்பவரும் இன்றுதான் **(11-12-1843)** பிறந்தார்.

❑

பிரெஞ்சு இசை மேதையான ஹெக்டர் பெர்லியோஸ் என்பவரும் இன்றுதான் **(11-12-1803)** பிறந்தார்.

❑

டிசம்பர்-12 குழந்தைகள்

ஜேம்ஸ் கார் பீல்டு, இவர் 20-வது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர். ஆப்ரகாம் லிங்கன் ஜனாதிபதியாக இருந்தபோது இவர் உதவி ஜனாதிபதியாக இருந்தார்.

அவர் இறப்பிற்குப் பின், இவர் ஜனாதிபதியானார்.

ஓகியா பல்கலைக் கழகத்தில் மின்னியல் துறையில் பட்டமும், தனியே சட்டம் படித்துப் பட்டமும் பெற்றார்.

வழக்கறிஞராக வழக்காடத் தொடங்கி இவர், அப்படியே அரசியலிலும் ஈடுபடத் தொடங்கினார். சில ஆண்டுகள் பேராசிரியர் பணியிலும் இருந்தார்.

1863-இல் நடந்த அமெரிக்க நாட்டு மாமன்ற தேர்தலில் ஈடுபட்டு, மாமன்ற பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அப்போது உள்நாட்டுப் போர் தொடங்கவே, அதில் முன்நின்று பணியாற்றினார்.

இவர், குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்து பல்வேறு நலப் பணிகளைச் செய்திருக்கிறார்.

இவர் 18 மாதக் குழந்தையாக இருந்தபோது தந்தை இறந்துபோக, தாயும் தாய்மாமனுமே இவரை வளர்த்திருக் கிறார்கள்.

1858-இல் திருமணம் செய்துகொண்ட இவருக்கு எட்டுக் குழந்தைகள் இருந்திருக்கிறது.

இந்த ஜனாதிபதி ஓகியா நாட்டில் இன்றுதான் (12.12.1831) பிறந்தார்.

❑

டிசம்பர்-13 மனைவிக்கு...

கெனித் பேச்சன், இவர் ஓவியக்கவிஞர்.

இவர் தீட்டும் ஓவியங்களுக்குக் கீழே கவிதைகளை எழுதும் வழக்கம் கொண்டிருக்கிறார்.

வெஸ்கோசின் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார். குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்ததால், படிப்புச் செலவிற்காக மற்ற நேரங்களில் தொழிற்சாலை போன்றவற்றில் வேலை செய்தே பணம் சேர்த்திருக்கிறார்.

இவர், 'மெரியம் ஒகிமஸ்' என்ற பெண்ணை உயிரினும் மேலாக காதலித்தவர். அவரது காதலை தினமும் கவிதைகளாக எழுதி அப்பெண்ணிற்கு அனுப்பி இருக்கிறார். அவரது கவிதைகளில் மனம் தோய்ந்த அப்பெண்ணும் காதலித்துப் பின் அவரது கரம் பற்றி இருக்கிறார்.

திருமணத்திற்குப் பின் இவர் எழுதிய கவிதைகளை எல்லாம் நூல்களாக ஆக்கித் தன் காதல் மனைவிக்கே காணிக்கையாக்கி மகிழ்ந்தும் இருக்கிறார்.

ஜனநாயகத்திற்கு எதிரான செயல்பாடுகளை இவர் கண்டித்தவர். அதே நேரம் இவர் வன்முறையையும் விரும்பவில்லை.

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்கா ஈடுபடுவதை இவர் விரும்பவில்லை. இவரது வன்முறை எதிர்ப்பை கருவாக வைத்து கதைகளாகவும், கவிதைகளாகவும் எழுதியிருக்கிறார்.

1942-இல் இவர் அந்நாட்டில் சிறந்த நாடகயாசிரியரான ஜான்கேஜ் என்பவருடன் இணைந்து பல வானொலி நாடகங்களை எழுதினார்.

இவர் சிறந்த கால்பந்து விளையாட்டு வீரராகவும் இருந்திருக்கிறார்.

இவர், ஒகியோ என்ற நாட்டில் இன்றுதான் ***(13.12.1911)*** பிறந்தார்.

❑

ஜெர்மன் கவிஞரான ஹெய்ன்ரிச் ஹெயின் என்பவரும் இன்றுதான் ***(13.12.1797)*** பிறந்தார்.

❑

டிசம்பர்-14 ‘சேனம்’

கிட் ஹேஸம், இவர் உலகப் பயணம் செய்வதையே பெரிதும் விரும்பியவர்.

குதிரைகளுக்குத் தேவையான சேனம் முதலிய கருவிகளை செய்யும் பட்டறையில இவர் சிறிது காலம் பணி செய்தார். அப்போதுதான் உலகைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் உதயமாயிற்று.

தன் முதல் பயணத்தை மெக்சிகோவை நோக்கித் தொடங்கினார்.

அந்நாட்டிற்குச் சென்ற இவர், பொருளாதாரத்திற்காக, தான் ஊரில் கற்றுக்கொண்ட ‘சேனம்’ செய்யும் தொழிலையேத் தொடங்கினார்.

அந்நாட்டிலுள்ள பழங்குடி மக்களிடமே இவரின் பழக்க வழக்கங்கள் அதிகமாக இருந்திருக்கிறது. காலப்போக்கில் அவர்களோடு ஒருவராகவே ஒன்றி வாழத் தொடங்கி இருக்கிறார்.

இதனாலேயே அந்த மக்கள் இவரை ‘ரோப் த்ரோவர்’ என்று செல்லமாக அழைக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இவர் பாலைவனங்களில் பயணம் செய்யும்போது, பயணிகளை வழிநடத்திச் சென்றிருக்கிறார்.

ஜான் ப்ரிமாண்ட் என்பவர் பூகோள ஆய்வில் சிறந்தவர். இது குறித்து பல நூல்களையும் எழுதியவர். இவருக்கே, இவர் பயண வழிகாட்டியாக இருந்திருக்கிறார். இதனால், இவர் புகழ் நாடு முழுவதும் பரவிற்று.

இவர், இராணுவத்தில் பணியாற்றியபோது ஃபிரிகேடியர் பதவி வரை உயர்ந்திருக்கிறார்.

இந்த உலகம் சுற்றிய மேதை அமெரிக்க நாட்டில் இன்றுதான் (**14.12.1809**) பிறந்தார்.

❑

ஜேம்ஸ் டூலிட்டில் என்பவர் அமெரிக்காவின் புகழ்பெற்ற விமானக் கண்டுபிடிப்பாளர். இவரும் இன்றுதான் (**14.12.1896**) பிறந்தார்.

❑

டேனிஷ் நாட்டு வானாராய்ச்சி அறிஞரான டைகோ பிராஹ் என்பவரும் இன்றுதான் (**14.12.1546**) பிறந்தார்.

❑

டிசம்பர்-15 வீரரும் தீரரும்

மருது பாண்டியர்களின் வீர, தீர செயல்களை கேள்விப் பட்ட சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர், மருது பாண்டியர் சகோதரர்களை, சிவகங்கை நாட்டின் படைத்தளபதிகளாய் நியமித்தனர். அவர்கள் படை நிர்வாகத்திலும் வரலாற்றுப் பெருமையிலும் மருது சகோதரர்கள் சிறப்பிடம் பெற லானார்கள்.

18-ஆம் நூற்றாண்டிலேயே பிரிட்டிஷ் எதிர்ப்பு போரில் மருது சகோதரர்கள் 'ராக்கெட்டுகளை' பயன்படுத்தியுள்ளனர். மேலும் எதிரியை மறைந்திருந்து தாக்கும் 'கொரில்லா போர்' முறையையும் செயல்படுத்தியுள்ளனர். போரில் மருது பாண்டியர்கள் உபயோகித்த ஒரு புதுமையான வளைதடி என்ற வளரி (பூமராங்) வெள்ளையர்களை கதிகலங்கச் செய்தது. காரணம், மருது பாண்டியர் வளரி என்ற ஆயுதத்தை தோளுக்கு மேலே தூக்கி சுழற்றி கும்பினி, படையை நோக்கி எறிந்து, அது அவர்களைத் தாக்கிக் கொன்றுவிட்டு மீண்டும் அவர்கள் கைக்கே திரும்பி வந்துவிடும். பெரிய மருது பரந்த வலிமையான மார்புடன் தன் கைகளால் வேங்கைப் புலியின் வாலைப் பிடித்து உயரத் தூக்கிச் சுழற்றி மயக்க முறச் செய்தது வெள்ளையரை வியப்பில் ஆழ்த்தியது. மேலும் அவரது அசாத்ய புஜ பலத்தைக் கொண்டு தன் கைவிரல்களுக் கிடையில் ஆர்காட் நவாப்பின் வெள்ளி நாணயத்தை வைத்து வளைத்து ஒடித்து இரண்டாக்கிவிடும் அவரது வலிமையைக் கண்டு வியந்து பாபிலோனிய சாம்ராஜ்ய (இன்றைய ஈராக்) மாவீரன் நிம்ராட்டிற்கு சமமாக 'கீழ்த்திசை நிம்ராட்' எனப் புகழ்ந்து பெரிய மருதுவைப் பாராட்டி உள்ளார். 'ஜேம்ஸ் வெல்டி' என்ற கர்னல் ஆங்கில தளபதி தம் இராணுவ நினைவுகள் என்ற நூலில் எழுதியுள்ளார்.

மருது பாண்டியர்கள் தங்கள் ஆட்சியில் கோயில் திருப்பணிகளை நிறைவு செய்தும் தேசிய ஒருமைப் பாட்டினையும் மத நல்லிணக்கத்தையும் இரு கண்களாய்ப் போற்றி மத, ஜாதி, சமய பேதமற்ற முறையில் இந்து இஸ்லாமிய, கிறிஸ்துவ ஆலயங்களின் திருப்பணிகளை சிறப்புடன் நிறைவேற்றினர். அவர்கள் எண்ணற்ற கோயில் திருப்பணிகளை நிறைவேற்றினர்.

இம் மாபெரும் வீரர்களுள் ஒருவரான பெரிய மருது அருப்புக்கோட்டைக்கு அருகிலுள்ள நரிக்குடி முக்குளம் என்ற கிராமத்தில் இன்றுதான் (15-12-1748) பிறந்தார்.

டிசம்பர்-16 11 வயதிலேயே

பதினோரு வயதிலேயே பலவிதமான இசைக்கருவிகளை இயக்கும் பயிற்சியையும் - தேர்ச்சியையும் பெற்றுவிட்டார். பீதோவன். 13-வது வயதில் அவரது முதல் இசைவிருந்து எல்லோர் காதுகளையும் சென்று அடைந்தது. இசை உலகில் ஞானியாக இருந்தபோது அவர் கேட்கும் சக்தியை இழந்துவிட்டார். அப்போது இருந்தே அவர் தனிமையை விரும்பினார்.

எப்போதும் தன் வறுமையைச் சொல்லிக் கொண்டே இருப்பார்; கிழிந்த அழுக்கடைந்த ஆடைகளே அவர் உடலில் இருக்கும். அடிக்கடி கோபக் குன்றேறி நிற்பார். பல பெண்களோடு அவர் பழகியபோதும், அவர் யாரையும் திருமணமே செய்து கொள்ளவில்லை.

ஒருமுறை ஹாப்ஸ்பர்க் அரசி தம்மை வந்து பார்க்கும்படி ஆள் மூலம் தகவல் சொல்லி அனுப்பியிருந்தார். திமிர் அவரோடு பிறந்ததாக இருந்ததே, அதனால் அரசியின் அழைப்பை ஏற்று அவர் உடனே செல்லவில்லை. இப்போது எனக்கு வேலையிருக்கிறது. வர முடியாது என்று கூறி அனுப்பிவிட்டார்.

ஒரு நிகழ்ச்சியில் அவரது இசைக்குழுவினர் வாசித்துக் கொண்டிருந்தனர். சிம்ஃபொனி எனப்படும் இசை மழையில் நான்குவிதமான திருப்பங்கள் இருக்கும். தேவகானமாக வழிந்த இசையில் மக்கள் மனதைப் பதித்துக் கேட்டு மகிழ்ந்தனர். நிகழ்ச்சி முடிந்ததும் எல்லோரும் எழுந்து நின்று உற்சாகமாகக் கை தட்டினார்கள்.

காது கேளாதவர்கள் ஒன்று சேர்ந்து இசைக்குழுவை நடத்த முடியுமா...? இவர் தன் உதவியாளரின் துணையோடு திறமையாக அதே நேரம் அருமையாக நடத்தி முடித்து பல ஆயிரம் மக்களின் கைத்தட்டளைப் பெற்றவர்.

இந்த இசைமாமேதை கடைசியாக சொன்ன வார்த்தைகள்: 'சொர்க்கத்தில் எனக்கு காது கேட்கும்.'

ஜெர்மனி நாட்டில் இன்றுதான் (16-12-1770) பிறந்தார். ❒

ஆங்கில நாவலாசிரியரான ஜேன்ஆஸ்டின் என்பவரும் இன்றுதான் (16-12-1775) பிறந்தார்.

❒

டிசம்பர்-17 சிரிக்க வைக்கும் வாயு

அந்த சிறுவனுக்கு கதை சொல்வது மிகவும் பிடிக்கும். நண்பர்களை அடிக்கடி கூட்டிவைத்துக் கொண்டு கதை சொல்வான். யாரும் இல்லாத வேளையில் தானே தனியே அமர்ந்து கதை சொல்லிக் கொள்வான். பேசும் திறனை இப்படித்தான் அவன் வளர்த்துக் கொண்டான்.

அவரது பெயர் சர்.ஹம்பரிடேவி. சிறுவயதிலேயே தந்தையை இழந்ததால் வீட்டுச் சுமை அவர் தலையில் விழுந்தது. அதனால், மருந்து விற்பனையாளரும், அறுவை சிகிச்சையாளருமான ஒருவருக்கு உதவியாளனாக சேர்ந்தார்.

அவர் மனம் எப்போதும் ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டது. அறுவை சிகிச்சையில் தற்போதுள்ள வலி மறக்கச் செய்யும் முறை அப்போது இல்லை.

கிளிப்டன் நகரில் ஒரு விஞ்ஞானிக்கு உதவியாளர் ஆனார். வாயுக்களை அறுவை சிகிச்சையில் பயன்படுத்தி வலியை மறக்க வைக்க முடியுமா என ஆராய்ந்தார். ஹம்பரிடேவி பல வாயுக்களையும் தானே முகர்ந்து பார்த்தார். வாயுக்களின் தன்மையால் சில சமயம் உடல்நலம் பாதிக்கப்பட்டார்.

நைட்ரிக் ஆக்ஸைடு என்ற ஒரு வாயு, அது சுவாசிக்க இனிதாக இருந்தது. இன்ப உணர்வுகளைத் தந்தது. அதனால் அதற்கு டேவி, 'சிரிக்க வைக்கும் வாயு' என்ற பெயரைச் சூட்டினார். பல விஞ்ஞானிகளின் பாராட்டுதலைப் பெற்றார்.

நிலக்கரிச் சுரங்கங்களில் அடைந்து கிடக்கும் வாயுக்கள் தொழிலாளிகள் கொண்டு சென்ற விளக்கினால் தீப்பற்றிப் பெரிய விபத்தக்களை விளைவித்தன. அடிக்கடி பெரும் உயிர்ச்சேதம். சுரங்க முதலாளிகளின் வேண்டுகோளின்படி புதுவிளக்கு கண்டுபிடித்து தீ விபத்துக்களைத் தவிர்த்தார். இது இன்று காற்று 'பெட்ரோமாக்ஸ் விளக்கு' என்று போற்றப் படுகிறது.

இந்த அறிவியல் மேதை சர்.ஹம்பரிடேவி பெஞ்ன்ஸ் என்ற ஊரில் இன்றுதான் (17-12-1788) பிறந்தார்.

❒

டிசம்பர்-18 'ஹவுண்டு ஆஃப் ஹெவன்

ஆங்கிலக் கவிஞன் தாம்சன் செல்வக்குடியில் பிறந்தவன். தந்தையோ டாக்டர். தாம்சன் பெற்றோர்களுக்குச் செல்லப் பிள்ளையாக வளர்ந்தான். தக்க வயதில் பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள். இரண்டே மாதம் தான் தாம்சன் பள்ளி சென்றான். பிறகு போக மறுத்தான். மாற்றுவழியாக வீட்டிற்கே ஆசிரியரை வரவழைத்து பாடம் நடத்த தந்தை ஏற்பாடு செய்தார். வீட்டிலேயே தாம்சன் படித்தான். பின் கல்லூரிக்கு அனுப்பப்பட்டான். அங்கும் படிப்பு நேரத்தில் படிக்காமல் தனிமை... தனிமை.. நூலகம். அறிவுத் தேடல்... என்றிருந்தான்.

தந்தை எண்ணியதுபோல் தாம்சன் படிக்காததால் அவர் மீது பாசம் வற்றியது... மதபோதகராக ஆகலாம் என்று தாம்சன் எண்ணி, அதற்கான வழியில் இறங்கினார்.

தான் நினைத்ததுபோல் டாக்டருக்குப் படிக்காத மகனுக்கு உதவி செய்வதையும் தந்தை நிறுத்திவிட்டார்.... தாம்சன் வறுமையில் - 'தனிமையில் மாட்டிக் கொண்டார். இந்த நிலையில் இலண்டனுக்குச் சென்றார். அங்கே...

சாப்பாட்டுக்கு வழியில்லை; படுக்க இடமில்லை; நடைபாதை ஓரத்தில் படுத்துக் கொள்வார். இந்தத் துன்பத்தில்கூட அவர் மனம் கவிதைகளையே சுற்றிவட்ட மிட்டது... இவர் படும் துன்பத்தைக் கண்டு, வாழ்வில் வழுக்கி விழுந்த சகோதரிகள் காசு தந்து உதவினார்கள். ஏதாவது ஒரு வேலை செய்து பிழைக்க வேண்டிய நிலைக்கு ஆட்பட்டார். என்ன வேலை செய்வது...? செய்தார்... கூலிவேலை... மூட்டைகளைத் தூக்குவது, நாடக மேடைகளுக்கு அருகில் தீப்பெட்டி போன்ற சிறு பொருள்கள் விற்பது, தெருவில் பத்திரிகைகளை விற்பது... செருப்புக்கடையில் பணி... இப்படி... காலம் நகர்ந்தது... பின் ஒரு பத்திரிகையில் பணி....

பிறகுதான்... கவிதை... கவிதை.... என்று ஏராளமாக எழுதி குவித்தார். 'ஹவுண்டு ஆப் ஹெவன்....' என்ற பாடல் இவரை உலகே திரும்பிப் பார்க்க வைத்தது.... புகழ் ஓங்கியது... அபினின் தீயப் பழக்கத்தால் உடல் ஒடுங்கியது... நோய் முற்றியது... திருமணமே செய்து கொள்ளாத அந்த அருட்கவிஞன்.... "கர்த்தரே என்னை மன்னித்து ஆட்கொள்வீர...." என்ற வேண்டுகோளோடு மூச்சை நிறுத்திக் கொண்டார்.

இந்த மாபெரும கவிஞன் இங்கிலாந்தில் இன்றுதான் (18-12-1859) பிறந்தார்.

டிசம்பர்-19 ஒலி அலையின் நீளம்

ஆல்பர்ட் ஆப்ரஹாம் மைக்கெல்சன், கலிபோர்னி யாவிலே பள்ளிப் படிப்பை முடித்த இவர், உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடிக்க ஸான்பிரான்ஸிஸ்கோவிற்குச் சென்றார். இவர்தம் பதினாறு வயதில் குடும்பம் வெர்ஜினியா சிட்டி எனும் ஊருக்குக் குடியேறியது. கப்பற்படை அகா தெமியில் கற்று வந்த மைக்கெல்சன் 1873இல் தேறி பட்டம் பெற்றார்.

இரண்டாண்டு காலம் கொடிதாங்கி என்னும் அலுவலராக அமெரிக்கக் கப்பற்படையில் பணியாற்றினார். அதற்குப் பிறகு மீண்டும் கடற்படை அகாதெமியில் பௌதிகம், இரசாயனம் பயிற்றுவிக்கும் ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

ஃபூக்கே கண்டுபிடித்த சுழலும் ஆடி முறையையே இவரும் உபயோகித்து ஓர் ஆய்வுக் கருவியைத் தயாரித்து ஒளியின் வேகம் ஒரு நொடிக்கு 1,86,508 மைல் என்பதைக் கண்டுபிடித்தார்.

இந்தக் கண்டுபிடிப்பை 1878-இல் அமெரிக்க விஞ்ஞானப் பத்திரிகை ஒன்றில், 'ஒளியின் வேகத்தை அளக்கும் முறை' என்னும் தலைப்பில் கட்டுரையாக வெளியிட்டிருந்தார். அக்கட்டுரை மைக்கெல்சன் அவர்களுக்கு உலகப் புகழைச் சேர்த்தது.

இதைத் தவிர, ஒளியின் அலை நீளத்தைக் கணக்கிட இவர் செய்த முயற்சிதான் இன்ட்டர் ஃபெரா மீட்டரைக் கண்டு பிடிக்க வழிவகை செய்தது.

இக்கருவியை 1887-இல் இவர் கண்டுபிடித்தபோது, உலகமே வியந்தது. இக்கருவி மூலம் ஒளி அலையின் நீளத்தை அளந்து பார்த்தபோது அது .00006438 4696 சென்டி மீட்டர் நீளம் இருப்பது தெரியவந்தது. இந்தக் கண்டுபிடிப்பைத்தான் விஞ்ஞானிகள் 6438.4696 'ஆங்ஸ்ட்டிரம் அலகுகள்' என்று வழங்குகின்றனர்.

தமது எழுபத்தொன்பது வயது வரை ஓயாது உழைத்து உயர்வு பெற்ற மைக்கெல்சன் ரஷ்ய நாட்டின் ஸ்ட்டிரெல்னோ நகரில் இன்றுதான் (19.12.1852) பிறந்தார்.

❑

டிசம்பர்-20 பெரிய தோட்டம்

அமெரிக்காவின் புகழ்பெற்ற தொழிலதிபர் ஹார்வி ஃபயர் ஸ்டோன்.

உலகின் மிகச் சிறந்த ஃபயர் ஸ்டோன் ரப்பர் கம்பெனியின் நிறுவனர், இவர்.

உலக அளவில் வாகனங்களின் சக்கரங்களை அதிகம் உற்பத்தி செய்யும் கம்பெனி இதுவே.

இவர் இந்த நிறுவனத்தைத் தோற்றுவிக்கும் முன், கொலம்பஸ் பக்கி கம்பெனியில்தான் வேலையில் இருந்தார்.

பின், 1904-இல் பயர் ஸ்டோன் ஹென்றி போர்டோடு சேர்ந்து உற்பத்தியைப் பெருக்கத் தொடங்கினார்.

இவர் தமது தொழிற் வளர்ச்சிக்காக ஒரு மில்லியன் ஏக்கர் நிலத்தில் ரப்பர் மரங்களை வளர்த்திருக்கிறார். உலகில் இந்த ரப்பர் தோட்டமே பெரியது.

புகழ்பெற்ற பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்லுள்ள மிக நீண்ட - பெரிய நூலகம் ஒன்று உண்டு. இந்த நூலகத்திற்கு இவரது பெயரையே சூட்டியுள்ளனர்.

வடஅமெரிக்க பொருளாதாரத்தின் வளர்ச்சியில், இந்த ரப்பர் கம்பெனியின் பங்கு அதிகம்.

இந்தத் தொழில் மேதை, அமெரிக்காவிலுள்ள கொலம்பியானா என்ற ஊரில் இன்றுதான் (20.12.1868) பிறந்தார்.

❑

இருமுறை ஆஸ்திரேலிய நாட்டுப் பிரதமராகப் பொறுப்பேற்ற சர்.ராபர்ட் மென்ஸீஸ் என்பவரும் இன்றுதான் (20.12.1894) பிறந்தார்.

❑

டிசம்பர்-21 நையாண்டிக்காரன்

ஹென்றிக்பூல், ஒரு சிற்பியின் மகனாகத் தோன்றியவர். இவர் பள்ளி பருவத்திலேயே கவிதை சிறுகதை என்று எழுதத் தொடங்கிவிட்டார். இவரது படிப்பு முடிந்த பின்பு, கட்டாயத்தின் பேரில் 1939-இல் இராணுவத்தில் சேர்க்கப்பட்டார். போர் நின்றதும், கோலோன் பல்கலைக் கழகத்தில் பயின்றார். பின், கணக்கெடுப்புத் துறையில் சில நாட்களே வேலை செய்தார். பின் தன் முழு கவனத்தையும் எழுத்துத் துறையில் நாட்டம் செலுத்தினார். இதன் பலனாக....

1949-இல் 'குறித்த காலத்தில் வந்த ரயில்' எனும் நாவல் முதல் படைப்பாக வெளிவந்தது. இந்த நாவல் அவரை நாடறியச் செய்தது.

1959-இல் படைத்த 'ஒன்பதரை மணிக்கு பில்லியர்ட்ஸ்' எனும் நாவல் வேறுபட்ட வெளிச்சப் பாடாய் வெளிவந்தது. இந்த படைப்பு உலக நாவலாசிரியர்களோடு சேர்த்து இணைத்தது. சிற்பி ஒருவரின் குடும்பத்தைப் பின்னணியாகக் கொண்டு இந்நாவல் எழுதப்பட்டிருந்தது. ஒரே நாளில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறுவதாக அமைந்திருந்தது. பலரது கவனத்தை ஈர்த்தது.

இதற்குப் பின் வெளிவந்த நாவல்கள் முந்தய நாவல் யுத்தியில் இருந்து முற்றிலும் வேறுபட்டு இருந்தது. 1963-இல் அவர் படைத்திட்ட 'நையாண்டிக்காரன்' பூலின் படைப்பாற்றலுக்கு எடுத்துக் காட்டாக இருந்தது.

பூல் எழுதிய அனைத்து நாவல்களையும் ஓரங்கட்டி வைத்தது அவர் எழுதிய 'குழுவுடன் மங்கைப் படம்' என்ற நாவல். இவருக்கு 1972-இல் நோபல் பரிசும் கிடைத்தது.

தம் வாழ்நாளில் 40 நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள் மற்றும் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இந்த மாபெரும் நாவலாசிரியர், ஜெர்மனியிலுள்ள கோலோன் எனுமிடத்தில் இன்றுதான் (21-12-1917) பிறந்தார்.

❑

ரஷ்ய நாட்டு சர்வாதிகாரியான ஸ்டாலினும் இன்றுதான் (21-12-1879) பிறந்தார்.

❑

டிசம்பர்-22 மனைவியும் தெய்வம்

இந்தியப் பெண்மணிகளுள் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றவர் சாரதா தேவியார். இவர் இல்வாழ்க்கையில் இருந்து கொண்டு துறவு மேற்கொண்டவர். உலக ரீதியாக பிள்ளைகளைப் பெறாமல் கோடிக்கணக்கான பிள்ளைகள் 'அம்மா' என்று அழைக்கும் சிறப்பைப் பெற்றவர். கணவராலேயே தெய்வமாக வணங்கப் பெற்றவர். இத்தனை சிறப்புமிக்க இவர்தான் ராமகிருஷ்ண இயக்கத்தின் ஆணிவேர்.

தன் கணவரின் சீடர்களைத் தன் பிள்ளைகளாக ஏற்று அவர்களை வழி நடத்தியவர்.

தனது ஐந்தாம் வயதிலேயே 23 வயது ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு வாழ்க்கைத் துணைவியானார். இவர் பருவ மங்கையாகும் வரை பெற்றோர் இல்லத்தில் வாழ்ந்து வந்தார். திருமணம் முடிந்தவுடன் ராம கிருஷ்ணர் தட்சிணேசுவரம் சென்று ஆன்மிக சாதனைகளில் ஈடுபட்டார்.

சாரதாதேவி தந்தையாரின் இல்லத்தில் இருந்த போது, கணவருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று சிலர் பேசிக் கொண்டனர். பதறிப்போனார், சாரதாதேவி.

அந்த நேரத்தில் கங்கையில் நீராட உறவினர் சிலர் கொல்கத்தா சென்றபோது தேவியாரும் அவர்களோடு புறப்பட்டுவிட்டார். அங்கே சென்று தன் கணவரைப் பார்த்ததும் அவருக்குப் பைத்தியம் இல்லை என்பதை அறிந்து மகிழ்ந்தார்.

தேவியைப் பார்த்த ராமகிருஷ்ணர், ''என்னை உலக வாழ்க்கைக்கு இழுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறாயா?'' கேட்டார்.

உடனே, ''நான் ஏன் உங்களை உலக வாழ்க்கைக்கு இழுக்க வேண்டும். உங்களுடைய வழியில் நீங்கள் மேலும் முன்னேற உதவவே நினைக்கிறேன்'' என்றார், சாரதா தேவி.

சாதி, சமய வேறுபாடின்றியும், ஏற்றத்தாழ்வு இன்றியும், வாழும்படி பிறரை வற்புறுத்தியதோடு தானும் அவ்வாறே வாழ்ந்து சிறந்தார்.

கொல்கத்தாவிற்கு அருகிலுள்ள ஜெயராம்பாடி எனும் ஊரில் ஒரு ஏழைக் குடும்பத்தில் இன்றுதான் (22-12-1853) பிறந்தார்.

□

டிசம்பர்-23 பாதாளத்தில் ஒரு விளங்கு

ஜூவான் ஹிமேனத் தனது சிறுவயதில் இயேசு அகாதமியில் தொடக்கக் கல்வியை முடித்துக் கொண்டு செனவல் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து பட்டக்கல்வி படித்தார். படிப்பில் நாட்டம் செல்லாத அவர் இதயம் ஓவியத்திலும் கவிதைகளிலும் ஈடுபடத் தொடங்கியது. ஜெர்மானியக் கவிதைகளும், ஸ்பானிஷ் கவிதைகளிலும் அவரை மிகுதியாகக் கவர்ந்தன. அந்த அடிப்படையில் இவரும் கவிதை புனையத் தொடங்கினார்.

'விடா நுவா' என்ற இவரது முதல் கவிதை 'மேட்ரிட் ரிவியூ' இதழில் மலர்ந்தது. அப்போது அவரின் வயது 17. முதல் கவிதையே அவரை இலக்கிய கலைஞர்கள் மத்தியில் அடையாளம் காட்டிவிட்டது. அந்த உற்சாகப் பெருக்கில் முழுமையாக எழுத்துப் பணியில் இறங்கினார்.

ஸ்பானிஷ் கவிஞர்களில் புகழ்பெற்ற பிரான்சிஸ் வில்லாயெஸ்பெஸா, மற்றும் ரூபன் தாரியா ஆகிய கவிஞர்களும், ஹிமேனத்தின் கவிதைப் புலமையை மெச்சி, அவருக்கு அழைப்பு விடுத்தனர். அவரும் சென்றார். அவர்களின் சந்திப்பினால், 'வயலெட் சோல்ஸ்', 'நீர்த்தாமரை' ஆகிய கவிதைப் படைப்புகள் வெளிவந்தன.

1902-இல் இவரது 'ரைம்ஸ்' கவிதைத் தொகுப்பு வெளிவந்து பெயரையும் புகழையும சேர்த்தது. 1917-இல் ஹிமேனத் எழுதிய 'சமீபத்தில் மணமான ஒரு கவிஞனின் நாட்குறிப்பு' என்னும் பெயரில் வந்தபோது அவரின் புகழ் உலகமெங்கும் பரவச் செய்தது.

'பாதாளத்தில் ஒரு விலங்கு' என்ற கவிதைத் தொகுப்பு அவரின் அறிவாற்றலுக்கு எடுத்துக் காட்டாக அமைந்தது. அதே காலகட்டத்தில் அவருக்கு (1956) நோபல்பரிசு கிடைத்தது.

இந்தப் பாட்டுப்பறவை, ஹுயல்வா மாநிலத்தின் முக்கிய நகரமான மொகியரில் இன்றுதான் (23-12-1881) பிறந்தார்.

❑

பிரிட்டன் நாட்டுக் கண்டுபிடிப்பாளரான ரிச்சர்ட் ஆர்க்ரைட் என்பவரும் இன்றுதான் (23-12-1732) பிறந்தார்.

❑

டிசம்பர்-24 நேதாஜி பாராட்டியவர்

த.நா.குமாரசுவாமி, பச்சையப்பன் கல்லூரியில் 1930-இல் பி.ஏ.முடித்தவர். ஆவலின் காரணமாக வங்கம் சென்று இரவீந்திரநாத் தாகூர் அவர்களுடன் தங்கியிருந்து அவரது அன்பையும் நட்பையும் பெற்ற இவர், தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர், அறிஞர் கி.வ.ஜகன்னாதன் போன்ற பெரியவர்களின் நெருக்கமான அன்பையும் பெற்றவர். பன்மொழிப் புலவரான இவரின் சாதனைகள் பல.

ஏழு நாவல்களும், நான்கு கதை நூல்களும் இருபது திரைப்படங்களுக்கு உரையாடல்களும் போஜ் சரித்திரம் எனும் நாடகமும், சங்கரர் காலம் எனும் ஆய்வு நூலும் எழுதியுள்ளார்.

வங்க மொழியிலிருந்து தாகூரின் 12 நாவல்கள் 420 சிறுகதைகள் மற்றும் தாரா சங்கர், பானர்ஜி, பங்கிம் சந்தர், சரத் சந்திரர் ஆகியோரின் நாவல்களையும் தமிழில் மொழிபெயர்த்து எழுதியுள்ளார்.

வடஇந்திய இலக்கியங்களையும் தாகூரையும் தமிழில் பிரபல்யப்படுத்திய இவர் சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்கள் பலவற்றை வங்க மொழியிலும் மொழி பெயர்த்துள்ளார். வித்வ மனோ ரஞ்சினி எனும் நாடக சபா ஒன்றை அமைத்து அதன் மூலம் பல நாடகங்களை நடத்தியுள்ளார்.

தாகூரின் நூற்றாண்டு விழாவின்போது தாகூரின் விசுவ பாரதி கல்வி நிறுவனம் இவரை அழைத்து கௌரவித்து பெருமைப்படுத்தியது. ரஷ்ய எழுத்தாளர்களின் அழைப் பினை ஏற்று ரஷ்யா சென்று அந்நாட்டில் இரண்டு மாதங்கள் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்தார்.

பத்திரிகையாளரான இவர், வங்கம்-தமிழ் மொழிகளுக்கு இடையே பாலமாக இருந்து, செயல்பட்டமைக்காக நேதாஜி கடைசியில் சென்னை வந்தபோது இவரை நேரில் அழைத்துப் பெரிதும் பாராட்டியிருக்கிறார்.

இந்தப் பன்மொழி மேதை, செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம் தண்டலம் எனும் சிற்றூரில் இன்றுதான் (24-12-1907) பிறந்தார்.

❑

டிசம்பர்-25 வால் நட்சத்திரம்...

அது ஒரு சிறிய கிராமம்.

அங்கிருந்த எல்லோருமே விவசாயிகள்தான். ஒரு நாள் வயல்வெளியில் வேலை செய்தவர்கள்; வரப்பு மேட்டில் நின்றிருந்தவர்கள் எல்லாம் அலறி அடித்துக் கொண்டு, தங்கள் மனைவி மக்களோடு சேர்ந்தே சாகலாம் என்ற நிலையில் தங்கள் வீடுகளை நோக்கி ஓடி வந்தார்கள். இதற்குக் காரணம் வானில் கண்ட ஓர் ஒளியே...!

'இனி நாம் பிழைப்பதற்கில்லை. வானில் வால் நட்சத்திரம் தோன்றிவிட்டது. இது நாட்டுக்கும் மக்களுக்கும் தீய சகுனம். எந்த நோய் வந்து நம்மைக் கொல்லப் போகிறதோ; அள்ளப் போகிறதோ....' என்று பலவாராய் நினைத்து அச்சத்தோடு நடுங்கிப் பதுங்கிக் கொண்டிருந்தார்கள்.

'இந்த ஒளி, வானத்தில் எப்படி எழுந்தது? இது இயற்கையா? இல்லை, இறைவனின் ஏற்பாடா?' இப்படி சிலர் எண்ணினார்கள். இவ்வொளி, இறைவனின் ஏற்பாடுமல்ல; இயற்கையின் புதிருமல்ல என்பது பிறகுதான் அவர்களுக்குப் புரிந்தது...! அப்படி என்றால், ஊர் மக்களே அச்சப்படக் காரணமாக இருந்த அந்த ஒளிதான் எதனால் எழுந்தது; எப்படி வந்தது...?

ஒரு பட்டத்தின் வாலிலே காகித விளக்கொன்றை கட்டி ஓர் இளைஞன் பறக்க விட்டதுதான். அந்த ஒளிக்கீற்று! அந்த உண்மையறிந்த ஊர் மக்கள் நிம்மதி கொண்டனர்.

''இப்படி நம்மை எல்லாம் கலக்கமடைய வைத்து முட்டாளாக ஆக்கிவிட்டானே ஒரு பொடியன்'' என்று நினைத்தார்கள். இதில், வெட்கப்பட்டவர்களும் உண்டு; வேதனைப் பட்டவர்களும் உண்டு; விலாவெடிக்கச் சிரித்தவர்களும் உண்டு.

''விதவைத் தாயை பாதுகாக்காமல், எப்போதும் படித்துக் காலத்தைப் பாழாக்கும் பாவிப்பயல்''

''இவன் அறிவாளிதான்; படிப்பாளிதான். ஆனால். சோம்பேறி அல்ல; முட்டாள் அல்ல...''

இப்படி பலரும் பலவிதமாய் விமர்சனம் செய்தார்கள். அப்படி விமர்சனம் செய்யப்பட்ட சிறுவன் தான் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னே புதிய தொலைநோக்கிக் கருவியைக் கண்டுபிடித்த அறிவியலாளர், சர் ஐசக் நியூட்டன்!

இவர் இன்றுதான் (25-12-1642) பிறந்தார்.

□

டிசம்பர்-26 இரங்கற்பா...

கவிஞர் தாமஸ்கிரே தாயின் செல்லப்பிள்ளையாக வளர்ந்தவர். தாயின் நெறிப்படி நல்லறிவோடும், ஒழுக்கத் தோடும் வளர்க்கப்பட்டார். நல்ல கல்வியையும் தேடித் தந்தார். பள்ளியில் முதல் மாணவராக தாமஸ் விளங்கினார். படிப்படியாக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். அங்கே இலக்கியம், வரலாறு கிரேக்கம் மொழிகளில் புலமை பெற்றார். அறிவு நூல்களை பொழுதும் தேடிப் படித்தார்.

இவருக்கு கவிதையில் ஈடுபாடு ஏற்படக் காரணமானவரே பழம்பெரும் கவிஞர் சுதர்ன்தான். அவர்தான் இவருக்கு கவிதையின் நுட்பங்களையும், அதனை எப்படி எழுத வேண்டும் என்பதனையும் தெளிவு படுத்தினார்.

கிரேவுக்கு எதைப் படித்தாலும் எந்தக் காட்சியைக் கண்டாலும், உடனே குறிப்பு எழுதும் பழக்கம் கொண் டிருந்தார். கேம்பிரிட்ஜில் கல்வியை முடித்துக் கொண்டவர். வழக்கறிஞர் தொழில் பார்ப்பதா, வேறு தொழில் பார்ப்பதா என்ற தடுமாற்றத்தில் மூன்று மாதங்கள் அமைதியாக இருந்தார்.

பின் நண்பர்ரோடு பாரீஸ் சென்றார். அங்கு பல இடங்களைச் சுற்றிப் பார்த்தேதோடு இத்தாலிக்குச் சென்றனர். அப்போது அவர்களது வயது இருபத்தி நான்கு. ஐரோப்பாவில் இருந்தபோதுதான் சிறுசிறு கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

இதற்கிடையில் தந்தையின் இழப்பு, தாயின் உழைப்பில் குடும்பம் என்ற நிலையில் வறுமையில் வாடினார். 'முதுவேனில் பாக்கள்' என்ற கவிதையை எழுதினார். முப்பது வயதிற்குள் ஏராளமான கவிதைகளை எழுதிக் குவித்தார்.

'இரங்கற்பா' - நூற்றி இருபத்தெட்டு அடிகளில் அடங்கிய இச்சிறு கவிதை நூல் ஆங்கில இலக்கியத்தில் தனியிடமும் உலக இலக்கியத்தில் நிலையான இடமும் பெற்றது. 'பாணன்' 'அறிவோர்க்குப் பேசுவன' - போன்ற கவிதை நூல்களும் அவருக்குச் சிறப்புச் சேர்த்தன.

இந்தக் கவிஞர் இலண்டனில் இன்றுதான் (26-12-1716) பிறந்தார்.

❑

டிசம்பர்-27 நாயும் நோயும்

இலக்கியத்திலும், அறிவியலிலும் பட்டம் பெற்றவர், லூயி பாஸ்டியர். இரசாயனம் பயின்றார். 1848-இல் டிஜோன் கல்விக் கூடத்தில் பௌதிகப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார். 1865-இல் பிரெஞ்சு அரசு, பட்டுப்பூச்சிகளைத் தாக்கும் நோயைப் பற்றி பட்டுத் தொழிலைக் காப்பாற்றுமாறு இவரை அழைத்தது.

இவரும் மூன்றாண்டுகளின் உழைப்பால், அந்த நோய்க்கிருமிகளைக் கண்டுபிடித்து அவற்றிலிருந்து பட்டுப் பூச்சிகளைக் காப்பாற்றும் வழிமுறைகளைச் சொன்னார்.

அதன் பிறகு அவரது கவனம் கிருமியல் துறையில் சென்றது. கால்நடைகளுக்கு ஏற்படும் நோயைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டார். இரண்டே ஆண்டுகளில் அதைப் பற்றிய எல்லா விவரங்களையும் வெளிப்படுத்தினார்.

அதன் பிறகுதான் அவர் கவனம் வெறிநாய் கடிக்கு மருந்து தேட வைத்தது. அதன்படி, வெறிநாய்களை அடைத்து வைத்து ஆய்வைத் தொடங்கினார். இந்த நாய்களின் உமிழ்நீர் மனி தன் மீது பட்டாலே அந்த நோய் பரவும்.

கால்நடை களுக்கு மருந்து கண்டுபிடித்த முறையைப் பின்பற்றி ஒரு திரவ மருந்தைக் கண்டுபிடித்தார். அதை ஊசி மூலம் கடிபட்ட நாய்க்கே செலுத்திக் குணமாவதையும் கண்டுபிடித்தார். அதன்படியே வெறிநாய் கடித்த ஒரு சிறுவனுக்கு தன் கண்டுபிடிப்பை செலுத்த, அந்தச் சிறுவன் உயிர் பிழைத்தான்.

இன்று, வெறிநாய்கடியால் பல இலட்சம் பேர் உயிர் வாழ வழிவகுத்த, லூயி பாஸ்டியர் பிரெஞ்சு நாட்டில் இன்றுதான் (27-12-1822) பிறந்தார்.

❑

ஜெர்மானிய வான சாஸ்திர அறிஞரான ஜோனிஸ் கெம்ளரும் இன்றுதான் (27-12-1571) பிறந்தார்.

❑

1894-ஆம் ஆண்டு முதல் 1896 வரை கனடா நாட்டுப் பிரதமராகப் பதவியேற்றிருந்தார். ஸர்.மெக்கன்ஜி பௌல் என்பவரும் இன்றுதான் (27-12-1823) பிறந்தார்.

❑

டிசம்பர்-28 நாட்டின் முன்னேற்றம்

உட்ரோ வில்சன், அமெரிக்காவின் 28-வது ஜனாதிபதியாக இருந்தார்.

இவர் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர். அரசியல் விஞ்ஞானி.

ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இவர், நியூ ஜர்ஸி மாநிலத்தில் 34-வது கவர்னராக (1910-இல்) இருந்தார். 1912-இல் ஜனாதிபதியானார்.

'கூட்டு இட ஒதுக்கீட்டு முறை' என்ற முறையை 1916-இல் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தார்.

முதல் உலகப்போர் முடிந்த பின்னே, 1919-இல் அமைதி ஒப்பந்தத்தைக் கொண்டு வந்தார். அது செனட்டில் தோல்வி கண்டது. அமெரிக்காவின் நிர்வாக அமைப்பில் சில சீர்கேடுகள் இருப்பதாக அறிந்தார். அதைப் போக்க முனைந்தார்.

இதற்கான காரணம், நிர்வாக அதிகாரங்கள் இரு நிலைகளில் பயன்படுத்தப்பட்டது. இதை ஒரே நிலையில் கொண்டுவர முனைந்தார்.

இவர் அரசியல் பொருளாதாரத்தில் பட்டத்தை வெஸிலேவான் பல்கலைக் கழகத்தில் பெற்றார். பின்னர், இதே பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும், பணியாற்றியதோடு, சட்டத்துறை பேராசிரியராகவும் இருந்தார்.

விளையாட்டுத் துறையில் விருப்பமுள்ள இவர், கால்பந்து விளையாட்டில் அதிக ஆர்வம் கொண்டு இருந்ததோடு, கால்பந்து வீரர்களுக்கும் பயிற்சி கொடுப்பாராம்.

இவர் சிறந்த பேச்சாளராக இருந்ததால், பின்னாளில் அத்தகுதி பல நிலைகளில் உயர்த்தி இருக்கிறது.

ஒரு நாட்டின் முன்னேற்றமே விவசாயத்தில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்த இவர், வேளாண்மைக்கு வேண்டிய அனைத்தையும் செய்து வைத்ததோடு, குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பிலும் கவனம் கொண்டார்.

தொழிலாளர்களும் நிர்வாகத்தில் பங்கு பெற வேண்டும் என்று விரும்பினார்.

இந்த ஜனாதிபதி வெர்ஜினியாவில் இன்றுதான் (28.12.1856) பிறந்தார்.

டிசம்பர்-29 உருகாத...

இரும்புப் பட்டறை வைத்திருந்த ஒருவரின் மகனாகப் பிறந்தவர், சார்லஸ்குட் இயர். பள்ளிப் படிப்பில் நாட்டம் இல்லாததால், தந்தையுடன் சேர்ந்து பட்டறையில் பணி செய்தார். தந்தை திடீரென்று இறந்து படவே, தொழில் பொறுப்பு இவர் தலையில் விழுந்தது. தந்தை வாங்கியிருந்த கடனோடு இவரும் புதிதாகக் கடன் வாங்கித் தொழிலில் முடக்கி தொழிலை விரிவுபடுத்தினார். தொழில் தொய்வாக இருந்ததால், கடன் சுமை, இதற்கிடையே திருமணம்.... வறுமை.... குடும்பச்சுமை... மீண்டும் கடன்... கடன் பட்டதால் ஐந்து முறை சிறை.

சிறையிலிருந்த காலத்தில் இரசாயனம் பற்றிய புத்தகங் களை ஆழ்ந்து படித்தார். அப்போது புழக்கத்தில் இருந்த ரப்பர் காலணிகள், ரப்பர் துணிகள் முதலியன கடும் வெயில் காரணமாக உருகி வழிந்தன. குளிர்காலத்திலோ பயன் இல்லாமல் குப்பையில் தூக்கிப் போடப்பட்டன. இந்த நிலையில்... சிறையில் தான் படித்த இரசாயனம் பற்றிய நூல்கள் கொடுத்த நம்பிக்கையினால் நீண்ட நாள் உழைக்கும் வகையிலான ரப்பரை தயாரிக்க என்ன செய்வது என்று சிந்தித்தார், குட்இயர்.

தம் மனதில் அவ்வப்போது தோன்றிய குறிப்புக்களைக் குறித்து வைத்திருந்த குறிப்புகளோடு சிறையிலிருந்து வெளிவந்ததும் - நான்கு ஆண்டுகள் ரப்பரைப் பற்றி பல சோதனைகள் செய்தார். 1839-இல் அவருடைய 39-ஆம் வயதில் ரப்பரும், கந்தகமும் சேர்ந்த கலவை, வெப்பத்தில் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடையது என்பதைக் கண்டுபிடித்தார்.

ஒன்பது ஆண்டுகள் ஆராய்ச்சியில் வெயிலில் உருகாத குளிரில் வெடிக்காத ரப்பரை அவர் கண்டுபிடித்துவிட்டார்... இந்த நேரத்தில் பாரிஸில் நடந்த பொருட்காட்சியில் இடம் பெற்ற இவரது ரப்பர் தயாரிப்புப் பொருள்கள் மிகவும் சிறந்தவை என நடுவர்களால் தேர்வு செய்து பாராட்டப் பட்டது. பெஞ்சமின் பிராங்க்ளினுக்கு இணையானவர் என்று புகழாரம் சூட்டி பிரெஞ்சு அரசரான அப்போதைய லூயி நெப்போலியன் இவருக்கு தங்கப் பதக்கமும் 50 ஆயிரம் டாலர் ரொக்கப் பரிசும் அளித்தார். அப்போது அவர் சிறையிலிருந்தார் என்பதுதான் வேதனையான செய்தி!

இந்த கண்டுபிடிப்பாளர் அமெரிக்காவில் நியூஹெவன் என்னுமிடத்தில் இன்றுதான் (29-12-1800) பிறந்தார்.

டிசம்பர்-30 ஒளியிழந்த விளக்கு

ருட்யார்டு கிப்ளிங் முதலில் எழுதத் தொடங்கியது கவிதான். பின்தான் கவிஞராக இருந்த அவர் நாவலாசிரியராக ஒளி பெற்றார்.

ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட வேளையில் இங்கு வந்து தங்கிவிட்ட ஆங்கிலேயச் சிற்பியின் மகள்தான். கிப்ளிங். மும்பையில் பிறந்த அவர் தனது ஆறாவது வயதில் பள்ளிப் படிப்பைத் தொடங்க இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு பள்ளியில் பட்ட கொடுமைகளை எல்லாம் பிற்காலத்தில் அவர் எழுதிய 'பாபா பிளாக் ஷீப்' என்ற சிறுகதையிலும், 'ஒளியிழந்த விளக்கு' என்ற நாவலிலும் அப்படியே எழுதினார். 1937-இல் எழுதிய தனது வாழ்க்கை வரலாற்றிலும் அக்கொடுமைகளை விட்டுவைக்கவில்லை. கல்லூரியில் படிக்க உபகாரச் சம்பளம் கிடைக்காததால், இந்தியா திரும்பி பெற்றோருடன் சேர்ந்தார்.

அவருக்கு எழுத்தில் இதயம் பதிந்திருந்ததால் லாகூரில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த 'சிவில் மற்றும் மிலிடரி கெஜட்' என்ற இதழில் பணியில் சேர்ந்தார். 1886-இல் முதன் முதலாக ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். விற்பனையில் கொடிகட்டிப் பறந்தது. அப்படியே சிறுகதைத் தொகுப்புகளும் விற்றன.

இந்த நிலையில் அவரது புகழ் இந்தியாவில் மட்டுமின்றி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இதர நாடுகளிலும் பரவியது. 'புதிய எழுத்தாளர் உதயம்' என்ற பெயரோடு வாசகர் வட்டம் விரிவானது.

கிப்ளிங்கிற்கு இந்தியாவில் புகழ் பெறுவதைவிட இங்கிலாந்தில் இருந்தால் உலகம் முழுதும் பரவக்கூடிய வாய்ப்புக்கிட்டும் என்ற நிலையில் அங்கே பயணமானார். அவர் இலண்டன் செல்லும் முன்பே அவரது புகழ் பரவி யிருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். இவர் சிறுவர்களுக்காகவும் நூல் எழுதினார்.

ஆங்கில இலக்கியத்தின் அணையாத ஜோதிகளில் ஒருவராகவும் கிப்ளிங் ஆனார்.

இவர் மும்பையில் இன்றுதான் (30-12-1865) பிறந்தார்.

டிசம்பர்-31 உடலும் உண்மையும்

எட்டு ஆண்டுகள் மனித உடலை ஆய்வு செய்து, 700 பக்கங்களில் உடற்கூறு பற்றிய உண்மைகளைப் புத்தகமாக வெளியிட்டவர் ஆண்ட்ரூஸ் வெஸாலியஸ்.

உலகின் முதல் உடற்கூற்றியல் மருத்துவ நிபுணரும் இவர்தான். உலகில் முதல் உடற்கூற்றியல் புத்தகமும் இதுதான்.

உடற்கூறு பற்றி முதன்முதலாக எந்தவிதத் தவறுமின்றி ஆய்வு செய்து சொன்ன முதல் மருத்துவ மேதையும் இவரே.

இப்படி பல சிறப்புகளைப் பெற்ற மருத்துவர் ஆண்ட்ரூஸ் வெஸாலியஸ் என்பவர், பெல்ஜியத்தில் இன்றுதான் **(31.12.1514)** பிறந்தார்.

☐

கண்ணைப் பறிக்கும் வண்ணத்தில் மிக அழகாகவும், மிக நேர்த்தியாகவும் ஓவியங்கள் வரையும் முறைக்கு ஃபாவிஸ்ட் பாணி ஓவிய முறை என்று பெயர்.

இந்த ஓவிய முறையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் ஹென்றி மாத்தீஸ் என்பவர்தான்.

இந்த ஓவிய மேதை பிரெஞ்சு நாட்டில் இன்றுதான் **(31.12.1869)** பிறந்தார்.

☐

ஜார்க் மார்சல். இவர் அமெரிக்க இராணுவத்தின் முதன்மைத் தளபதியாக இருந்தார்.

இவர் இராஜதந்திரியாகவும் இருந்ததோடு, அமெரிக்க அரசுச் செயலாளராகவும் இருந்தார்.

இவரது தந்தை நிலக்கரி வியாபாரத்தை வெனிசிலேனியா வில் நடத்திக் கொண்டிருந்தார். இவர் தன் மகனை எதிர்காலத்தில் ஒரு இராணுவத் தளபதியாக ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தில், இராணுவப் பள்ளியில் படிக்க வைத்தார். அதன்படியே மகனும் ஆனார்.

இவர் அமெரிக்காவில் இன்றுதான் **(31.12.1880)** பிறந்தார்.

☐

நிறைந்தது.

பெயர்	:	பாபநாசம் குறள்பித்தன் (த.வெ.கண்ணன்)
பெற்றோர்	:	தனம்– வெங்கிடாசலம்
பிறப்பு	:	19.07.1946 – பாபநாசம் (தஞ்சை மாவட்டம்)
படிப்பு	:	புலவர் (தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கம்)

- ❖ 1965–இல் முதன்முதலில் சுதேசமித்திரனில் எழுத்துத் தொடக்கம்
- ❖ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நடத்திவந்த 'தாய்' வார இதழில் துணையாசிரியராக 10 ஆண்டுகள் பணி
- ❖ மற்றும் சில இதழ்களில் பணி

எழுதி வெளிவந்த நூல்கள்

❒ சிறுவர் நூல்கள்	–	23
❒ ஆன்மிகம்	–	7
❒ நாடகங்கள்	–	5
❒ கவிதை நூல்கள்	–	6
❒ பல்துறை நூல்கள்	–	29

பெற்ற விருதுகள்

✧ வி.ஜி.பி. விருது	–	1984
✧ மனித நேய அறக்கட்டளை விருது	–	2001
✧ திருப்பூர் தமிழ்ச் சங்க விருது	–	2002
✧ தமிழக அரசு விருது	–	2002